
அன்பென்ற
மொழியிலே
திருமதி லாவண்யா
அன்பென்ற மொழியிலே ★ திருமதி லாவண்யா
அன்பென்ற
மொழியிலே
திருமதி லாவண்யா

## நூல் விவர அட்டவணை


| | |
|---|---|
| நூலின் பெயர் | : அன்பென்ற மொழியிலே |
| ஆசிரியர் | : திருமதி லாவண்யா |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : ஏப்ரல், 2013 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 252 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.120.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : குமரன் பிரிண்டர்ஸ்,.<br>போன் : 9840464862 |




## முன்னுரை

எல்லோருக்கும் என் இனிய அன்பான வணக்கங்கள். இது திருமதி லாவண்யா எழுதிய மூன்றாவது நாவல். 'காதலின் சாரலிலே' 'அக்கரைச் சீமையிலே' என்ற முதல் இரண்டு நாவல்களைப் போலவே இந்த நாவலும் வாச கர்களைக் கவரும் என நம்புகிறேன்.

இந்த நாவலில் மேலும் மெருகு கூடி உள் ளதை நன்கு உணர முடிகிறது. ஆசிரியர் தேர்ந்த உத்திகளினால் கதையை நகர்த்தும் விதம் மெச் சத்தக்கது. நல்ல திருப்பங்கள். எளிய ஆனால் வலிவான உரையாடல்கள் அன்பை அடிநாத மாகக் கொண்டு அன்பென்ற மொழியின் ஆற்றலைப் பறைசாற்றும் அற்புதமான நாவல்.

கதை மாந்தர்கள் வெவ்வேறு குணாதிசயங் களைக் கொண்டவர்களாகப் படைக்கப்பட்டுள் ளனர். அன்பாலும் பொறுமையாலும் எதையும் சாதிக்க முடியும் என நம்புகிற கவிமதி (கதை நாயகி), அவசரமும் சந்தேகமும் கொண்ட சந்தோஷ் (கதைநாயகன்), எல்லோரும் தன்

னையே புகழவேண்டும் எனப் பேராசைப்படும் சந்தியா என்ற மூவரைச் சுற்றியே கதை நகர்கிறது படிக்கப் படிக்க இதயத்தைப் பிழியும் கவிமதியின் கடிதமும் கவிமதியின் 'தாய்மை' பற்றிய கவிதையும் ஆசிரியரை உயர்த்திப் பிடிக்கின்றன. 'ஆட்டிசம்' என்ற குழந்தை களுக்கு வரும் நோய். இயற்கை வளம் சேமிக்கக் கடைப்பிடிக்கப்படும் 'எர்த் ஹௌர்' முதலான வற்றைப் பற்றிய ஆசிரியரின் விளக்கங்கள் பயனுள்ளவை.

அன்பின் சக்தியையும் அதன் தேவையையும் விவரிக்கும் இந்த நாவலையும் அருணோதயம் என்ற ஆல விருட்சமே வெளியிடுகிறது. மூன்றா வது முறையாக மோதிரக் கையால் குட்டு யாருக் குக் கிடைக்கும் இந்தப் பேறு பதிப்பாளருக்கும் படைப்பாளிக்கும் என் வாழ்த்துக்கள் வாசகர் களுக்கு என்றும் என் அன்பும் நன்றியும்.

**- மு.வேலாயதம்**

விஜயா பதிப்பகம்

# அன்பென்ற மொழியிலே

## 1



பறவைகள் கூட்டணி அமைத்து சுருதி தப்பாது தங்கள் பல்லவியை 'கோரசாக'த் தொடங்க, கதிரவன் தன் காலைப் பணியிலிருந்து பிறழாது செவ்வனே செய்து கொண்டிருக்க, வாகனங்கள் தங்கள் 'ஹாரன்' களை பயங்கரமாக இசைக்க, என்றும் போல் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது சென்னை நகரம்!

மயிலாப்பூரில், ஒரு வீட்டில் இருந்து காதுக்கு ரம்மிய மாக கந்த சஷ்டி கவசம் கசிய, நாசிக்கு சுவாசிக்க சமை யல் மணம் தவழ்ந்து வந்து கொண்டிருந்தது. பொறாமை கொண்ட கவிமதியின் கைப்பேசி, இவைகளுக்குப் போட்டியாக, தன் வேலையைக் காட்டியது!

சமையலறையில் தன் அன்னைக்கு உதவியாக இருந்த கவிமதி, கைப்பேசியில் அழைத்தவரின் எண்ணைப் பார்த்து முகம் மலர, அங்கிருந்து வெளியேறி, அதை இயக்கி, "ஹலோ!" என்றாள் இனிய குரலில்.

"என்ன பண்ணிட்டு இருக்க என் மந்தி... ஐ. மீன், மதி...?" என்றது எதிர்முனை.

"மந்தியா...?" என இடையிட்டுக் கேட்டவளின் கேள்வியை கைப்பேசியின் இடையில் உள்ள தூரத்தில் தொலைத்த சந்தோஷ்.

"மதி! வினோத் சொன்னானா நாங்க ஷாப்பிங் போகப் போறதா? நீயும் எங்க கூட வர்றியா" என்றான் இன்னும் இரண்டு வாரங்களில் கவிமதியை கரம் பிடிக்கப் போகும் மன்னவன்.

"ம்ம்ம்... நீங்க இங்க வந்து சாப்பிட்டுட்டு அப்புறம் கிளம்பறதாச் சொன்னார். உங்களுக்காகத் தான் எல்லோரும் வெயிட் பண்றோம். சீக்கிரமா வாங்க" என்றாள் விஷமச் சிரிப்புடன், அவனைப் போலவே அவன் கேட்ட கேள்வியை மறந்து.

"ஆமா, அங்க வந்தா உன் அண்ணன் உன்னோட பேசவா விடப் போறான்... பெரிய ரம்பமா வச்சு என்னை அறுத்துத் தள்ளுவான்..." என அவன் முடிக்கும் முன்னரே,

"அடப்பாவி! வீட்டுக்கு வா, உடனே உன்னோட எதிர்பார்ப்பை நிறைவேத்திடலாம்" எனக் குரலில் கடினத்தை வரவழைக்க முயன்று, அதில் வெற்றிகரமாகத் தோற்றவனாய் குறுக்கிட்டான் கவிமதியின் அண்ணனும், சந்தோஷின் நண்பனுமான வினோத்.

"மதி ஸ்பீக்கர்லதான் பேசுவான்னு எனக்குத் தெரியும். நாங்க பேசறதை நீ ஒட்டுக் கேக்கறியா என செக் பண்ணினேன்" என வழிந்தவாறே சமாளித்தான் சந்தோஷ்.



கைப்பேசியை உபயோகப்படுத்துவதால் அதிலிருந்து வரும் மின்காந்த அலைகள் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் என்பதால் கவிமதி வீட்டில் இருக்கும் பொழுது முடிந்தவரை 'ஸ்பீக்கரி'ல் போட்டுத் தான் பேசுவாள்.

சந்தோஷ் அழைத்ததும், கவிமதி அதற்கு பதில் கொடுத்த அதே சமயத்தில் தான் வினோத்தும் கீழிறங்கி வந்தான். வந்தவனுக்கு சந்தோஷ் சொன்ன வாக்கியமும் காதில் விழுந்தது. அதனால் தான் உடனே பதிலையும் சொன்னான் வினோத்.

"பிரெண்ட் பேசறதை ஒட்டுக் கேட்கலாம். தங்கச்சிப் பேசறதை ஒட்டுக் கேட்கலாமா? இதுகூட உனக்குத் தெரியலையே" என வினோத் பதிலளிக்க, மறுமுனையில் மௌனம் நிலவியது.

"டேய்! தூங்கிட்டியா? எங்களுக்கு பயங்கரமா பசிக்குது. நீ சீக்கிரமா வராட்டி உன்னை விட்டுட்டு சாப்பிடப் போறோம்" என வினோத் கூற, இவர்களின் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த கவிமதி வாய்விட்டுச் சிரித்தாள்.

கவிமதியின் கலகலவென்ற சிரிப்பில் மௌனமாக மயங்கிய சந்தோஷ், "வரேண்டா சாப்பாட்டு ராமா! உன் கூட சேர்ந்து என் மதியையும் சாப்பாட்டு ராமி ஆக்கிடாதே" என்றான்.

"ரசிச்சுச் சாப்பிடறதை இப்படியா கண்ணு வைப்ப? இனிமேல் உனக்கு முன்னாடி சாப்பிடறதைக் கொஞ்சம் குறைச்சுக்கணும்" என நண்பனிடமும், "கவி! முதல்ல எனக்கு சுத்திப் போடணும்மா" எனத் தங்கையிடமும் தெரிவித்தான் வினோத்.

''இவன் சாப்பிடறதுல கண்ணு வேற வைக்கணுமாக்கும். வேணா என்னோட வாயை வைக்கிறேன். என் வயிறாவது நிறையும்'' எனக் கிண்டலடித்து, கவிமதியை சிரிக்க வைத்த சந்தோஷ்,

''சரி! ரொம்பப் புலம்பாத. அதுக்குத்தான் கூப்பிட்டேன். இன்னும் அரை மணி நேரத்துல அங்கே இருப்பேன்'' என அழைத்ததன் காரணத்தைக் கூறினான்.

''அப்பா - அம்மாவையும் கூட கூட்டிட்டு வரப் போறியா?'' எனக் கேட்டு, கவிமதியின் சிரிப்பில் மயங்கிப் பேசிக் கொண்டிருந்த சந்தோஷை, அலற வைத்தான் வினோத்.

''அய்யய்யோ! அவங்களை எல்லாம் கூட்டிட்டு வரலை. நான் மட்டும் தனி...யா... தான் வர்றேன்'' எனத் 'தனியா'வில் அழுத்தம் கொடுத்து, அவனுக்கு பதிலளித்தவன், ''உனக்கு ஏன்டா இவ்வளவு நல்ல மனசு?'' எனச் சத்தமாக முணுமுணுத்தவாறே பேசியை வைத்தான் சந்தோஷ்.

பெற்றவர்களுடன் ஷாப்பிங் சென்றால், கவிமதியுடன் தனித்துப் பேச முடியாததோடு, அவளை அழைத்துச் செல்லவும் இயலாது. தனியே சென்றால் வினோத்தை ஏதாவது தாஜா செய்து கழட்டி விடலாம் என்று திட்டம் போட்டவனிடம் கேட்கும் கேள்வியா அது?!

பேசியில் உரையாடலை முடித்த சந்தோஷ், வினோத்தின் வீட்டைச் சென்று அடையும் முன் கவிமதி மற்றும் சந்தோஷின் குடும்பங்களைப் பற்றிப் பார்ப்போம்.

கவிமதியின் தந்தை ராமமூர்த்தி, அரசு வங்கி ஒன்றில் மேலாளராகப் பணியாற்றுகிறார். அன்னை தேவகி, அரசுப் பள்ளியில் தலைமை ஆசிரியர். கவிமதியின்



அண்ணன் வினோத், சென்னையில் கட்டிடக் கலைஞராக ஒரு பிரபல நிறுவனத்தில் வேலை செய்கிறான்.

சந்தோஷின் தந்தை, மதியழகன், சென்னையில் ஒரு பெரிய கட்டுமான நிறுவனம் ஒன்றை ஆரம்பித்து பல வருடங்களாக அதை வெற்றிகரமாகவும் நடத்தி வந்தார். தற்பொழுது அவரின் இரண்டு மகன்களும் அதை கவனித்துக் கொள்கின்றனர்.

சந்தோஷின் அன்னை, குடும்பத் தலைவியாக பாசத்துடனும் நேசத்துடனும் இரண்டு மகன்களையும், ஒரு மகளையும் கவனித்துக் கொள்கிறார். பெரிய மகன் விக்னேஷிற்கு திருமணம் முடிந்து ஐந்து ஆண்டுகள் ஆகிறது. அவன் மனைவி சந்தியா, சந்தோஷின் உயிர்த் தோழி! சந்தோஷின் தங்கை ப்ரியங்கா பொறியியல் இறுதி ஆண்டு படித்துக் கொண்டிருக்கிறாள்.

நாம் அவர்களின் குடும்ப நபர்களை அறிமுகம் செய்து கொண்டிருந்த இடைவெளியில், சந்தோஷ் கடக்க வேண்டிய தூரத்தைக் கடந்து கவிமதியின் வீட்டின் முன் காரை நிறுத்திவிட்டு வீட்டினுள் சென்று கொண்டிருந்தான்.

வரவேற்பறையிலேயே சந்தோஷின் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்த வினோத்தின் தந்தை, ராமமூர்த்தி அவனைப் பார்த்தவுடன் முகம் மலர்ந்து, ''வாங்க மாப்பிள்ளை!'' என்றார்.

''உங்ககிட்டே எத்தனை தடவை அங்கிள் சொல்லறது? எப்போதும் போலவே பேர் சொல்லிக் கூப்பிடுங்கன்னு...'' என அவரிடம் அன்பாகக் கடிந்து கொண்டான்.

பின்னர் அருகில் நின்றிருந்த வினோத்திடம், ''நீயாவது சொல்லலாம் இல்லடா'' என நண்பனையும் தன் துணைக்கு அழைத்தான்.

துணைக்கு அழைக்கப்பட்ட நண்பனோ, ''நான் அறுக்கறதுக்கு நல்ல ரம்பமா தேடிக்கிட்டு இருக்கேன்'' என தக்க சமயத்தில் வாரினான்.

''சரிப்பா! முயற்சி செய்யறேன். திடீர்ன்னு என்னையும் அறியாம அப்படி வந்துடுது. வா, போய் சாப்பிடலாம்?'' என்றவாறே உணவருந்தும் அறையை நோக்கிச் சென்றார் ராமமூர்த்தி.

வினோத்தை முறைத்த சந்தோஷ், பின்னர் அதே கண்களால் அவன் மனதுக்கு இனியவளைத் தேடிக் கொண்டு ராமமூர்த்தியைப் பின் தொடர்ந்தான்.

உணவருந்தும் பொழுது, வினோத்தின் தாய் தேவகி பரிமாற, ராமமூர்த்தியும், வினோத்தும் அவனிடம், நேற்று அவன் சென்று வந்த பயணத்தைப் பற்றிக் கேட்டு, நிஜமாகவே அவனை அறுத்துக் கொண்டு தான் இருந்தார்கள். அப்படித்தான் தோன்றியது சந்தோஷிற்கு!

'நான் ஒரு பேச்சுக்கு சொன்னா இப்படியா அறுத்துட்டு இருப்பாங்க? அதுவும் ரம்பமே இல்லாம. இவங்க அறக்கறதை நிறுத்திட்டு, மதியைக் கூப்பிடலாம்... இல்ல, அந்த 'பேக்'காவது இங்கே வரலாம்...' என மனதுக்குள் புகைந்து கொண்டிருந்தான்.

இவன், 'மதி எங்கே?' என வாய்விட்டுக் கேட்கத் தயங்குவதற்கு, பாவம், அவர்கள் என்ன செய்வார்கள்?

கவிமதியோ அவன் புகைச்சலில் வந்த வாசத்தை உணராமல், அவர்கள் சாப்பிட்டு முடிக்கும் வரையிலுமே எட்டிப் பார்க்காமல் அவனை வாட்டி வதைத்தாள். மனதுக்குள் இருப்பதை வெளிக் காட்டாமல் சாப்பிட மிகவும் திண்டாடி விட்டான் சந்தோஷ்.



சாப்பிட்டு முடித்தவுடன் வினோத் தன் பெற்றோரிடம் சொல்லிக் கொண்டு கிளம்ப, சந்தோஷோ அவனுடன் செல்ல மனம் இல்லாமல் தயங்கி நின்று கொண்டிருந்தான். சந்தோஷின் தயக்கத்தைப் பார்த்து ஒரு நமட்டுச் சிரிப்புடன் தன் காரை நோக்கிச் சென்றான் வினோத்.

காரில் ஏறும்வரை அமைதியைக் கடைப்பிடித்த சந்தோஷ், ''வினோத், மதியையும் கூட்டிட்டுப் போகலாமாடா?'' என ஒரு வழியாக மௌனத்தை உடைத்தான்.

''நான் கவிகிட்டே கேட்டப்போ வரலைன்னு சொல்லிட்டா'' என்றான் வினோத். வந்த சிரிப்பை வாய்க்குள்ளேயே கோலி குண்டைப் போல உருட்டி விளையாடியவாறு.

நண்பனின் பதிலைக் கேட்டு, 'நிஜமாவே இவ பேக்கு தான். ஏன் தான் இப்படி உயிரை வாங்கறாளோ? ச்சே! என மனதுக்குள் கவிமதியை அர்ச்சித்துக் கொண்டு, வண்டியின் முன்புறக் கண்ணாடியை முறைத்துக் கொண்டிருந்தான்... என்னவோ அந்தக் கண்ணாடிதான் இத்தனைக்கும் காரணம் என்பதைப் போல!

அப்பொழுது, யாரோ பின் கதவைத் திறந்து மூடும் சத்தம் சந்தோஷின் காதில் விழுந்தாலும் கருத்தில் பதியாமல் தன் முறைக்கும் பணியில் மும்முரமாக இருந்தான்.

''போகலாமாம்மா?'' என வினோத் கேட்டபின் தான் ஏதோ உறுத்த, முறைத்துக் கொண்டிருந்த கண்களைப் பின்னால் படர விட்டவனின் விழிகள், அங்கே அழகிய மயில் கழுத்து வண்ணத்தில் சுடிதார் அணிந்து, தங்க மயில் போல அமர்ந்திருந்த அவன் மதியை ஆசையுடன் தழுவின!

''ஏன்டா! நானோடா ரம்பம்? எப்படி நம்ம கவனிப்பு?'' என்றான் கிண்டலாக வினோத்.

தன்னவளின் மேல் இருந்த விழிகளை அகற்றாமல், ''நீயும் இவனோட சேர்ந்துட்டியா? கல்யாணம் ஆகட்டும், அப்புறம் உன்னைக் கவனிச்சுக்கறேன்'' எனச் செல்லமாக மிரட்டினான் சந்தோஷ்.

வினோத்தோ, ''நீ இப்படி மிரட்டினா, அப்புறம் வேற பொண்ணைப் பார்க்க வேண்டி வரும். சொல்லிட்டேன்...'' என்றான் அவன் பங்கிற்கு.

''சந்தோஷ்! நீ ரொம்பப் பாவம்டா... உன்னைக் கட்டிக்கப் போறவளும் சரியில்ல; உனக்கு அமைஞ்ச 'ப்ரெண்டும்' சரியில்ல...'' என அவனுக்காக அவனே பரிதாபப்பட்டு சத்தமாகப் புலம்பினான் சந்தோஷ்.

அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த கவி மதி கலகலவெனச் சிரிக்க, அந்தச் சிரிப்பில், சந்தோஷ் மீண்டும் தன்னைத் தொலைத்து, தன் வசத்தை இழந்து, தொலைத்ததையும், இழந்ததையும் அவளிடம் தேட முயற்சித்துக் கொண்டிருந்தான்.

அவனைக் கனவுலகத்திலிருந்து மீட்டது வினோத்தின், ''சந்தோஷ்! எனக்கு வெளில கொஞ்சம் வேலை இருக்கு. நீங்க போய் ஷாப்பிங் பண்ணிட்டு இருங்க. நான் அப்புறம் வந்து உங்களோட ஜாயின் பண்ணிக்கிறேன். சரியா?'' என்ற குரல்.

அதைக் கேட்டவுடன், ''சரியான்னு ஒரு பிரெண்ட் கிட்டே கேள்வி எல்லாம் கேட்டுட்டு இருக்கக் கூடாது. நீங்க போங்க, நான் வேலையை முடிச்சிட்டு வரேன்னு உத்தரவு போட்டுட்டு கிளம்பிடணும். அதுதான் ஒரு நண்பனுக்குக் கொடுக்கிற மரியாதை'' என்றான் சந்தோஷ் குறும்புடன்.



''உன்னை நல்ல நண்பன் எனச் சொல்லற மாதிரி சொல்லி ஏதோ ஹிண்ட் கொடுக்கிற போல. நீ என்னோட பிரெண்ட் தான், மறுக்கலே. ஆனா, கவி எனக்கு தங்கச்சியாவும் இருக்காளே. அது தான் பயமா இருக்கு...'' என்றான் வினோத்தும் விடாமல்.

''ஹிண்ட்டை மட்டும் புரிஞ்சிட்டு பேசாமக் கிளம்புடா. உன் தங்கச்சியை நல்லாப் பார்த்துக்குவோம்'' என்றான் சந்தோஷ் மிகவும் சந்தோஷமாக.

திருமணத்திற்கு முன், கரம் பிடிக்கப் போகிறவளுடன் தனித்திருக்கும் சந்தர்ப்பம் கிடைத்தால் சந்தோஷப் படாமல் என்ன செய்வான்? இப்படியே அவர்கள் ஒருவரை ஒருவர் வாரியவாறே தி.நகருக்கு வந்தடைந் தனர்.

வினோத் அவர்களை இறக்கி விட்டுவிட்டு விடை பெற, ''ஒண்ணும் அவசரம் இல்ல. நிறுத்தி நிதானமா வா'' என வழியனுப்பி வைத்தான் அவன் நண்பன்.

வினோத்தும், சந்தோஷும் இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் ஒன்றாக மேற்படிப்பை முடித்து, லண்டனில் இரண்டு வருடங்கள், வெவ்வேறு அலுவலகங்களில் வேலை செய்தனர்.

சந்தோஷ் தங்களின் தொழிலை, அவன் அண்ணன் மற்றும் அண்ணியுடன் சேர்ந்து கவனித்துக் கொள்ள வென ஆறு மாதத்திற்கு முன் இந்தியா வந்து சேர, வினோத் மூன்று மாதங்களுக்கு முன் வரை லண்டனில் தான் இருந்தான்.

வினோத்துக்கும் சென்னையில் ஒரு நல்ல வாய்ப்புக் கிடைக்க, தன் குடும்பத்துக்காகவும், தன் நண்பனின் வற்புறுத்தலுக்காகவும், தன் கனவுகளை நனவாக்கவும்

என்று பல காரணங்களை முன் நிறுத்தி இங்கு வந்து விட்டான்.

வினோத்துக்குச் சொந்தமாக கட்டுமானக் கம்பெனி ஒன்றை ஆரம்பிக்க ஆசை இருந்தது என்றாலும் அதில் உள்ள நெளிவு சுழிவுகளைக் கற்றுத் தர யாரும் இல்லாத தால், முதல் கட்ட நடவடிக்கை எடுக்க தயங்கிக் கொண் டிருந்தான்.

அதனால் தான் இங்கு கிடைத்த வேலையில் சேர்ந்து விட்டான். தற்பொழுது தன் தங்கைக்குத் திருமணம் என்பதனால் அவன் ஆசைகளை எல்லாம் ஒத்தி வைத்து விட்டு திருமண வேலைகளில் மூழ்கி விட்டான்.

தி.நகருக்கு வந்த சந்தோஷ், முதலில் கவிமதியை ஒரு துணிக்கடைக்கு அழைத்துச் சென்றான். கவிமதியும் அவளுக்கு வேண்டியவற்றை விரைவாகத் தேர்வு செய்து கொண்டு பணம் கட்டும் இடத்திற்கு வந்து பணத் தைச் செலுத்த முயன்ற பொழுது, சந்தோஷ் அவளிடம் சண்டைக்கு நின்றான்.

''மதி! நான் இருக்கும்போது நீ எதுக்கு பணம் தருவ? உனக்கு வாங்கிக் கொடுக்க எனக்கு உரிமை இல்லியா?'' என்றான் உரிமை கலந்த கோபத்துடன்.

அவனின் கோபத்தைக் கண்டவள், ஒரு புன்னகை யுடன், ''சந்தோஷ்! இதெல்லாம் கல்யாணத்துக்காகப் பிறந்த வீட்ல வாங்கிக் கொடுக்கிறது. அதனால கட் டாயமா நான் தான் பணம் கட்டணும் என அண்ணா சொல்லி அனுப்பிச்சார்'' என்றாள்.

''அது எல்லாம் முடியாது...'' என உரிமைப் போராட் டம் நடத்த ஆரம்பித்தவனிடம்,



''இனி வாழ்க்கை முழுவதும் நீங்க மட்டும் தானே வாங்கிக் கொடுக்கப் போறீங்க. இப்போ அவங்களோட ஆசைக்குக் குறுக்கே நின்று அவங்களை ஏன் சங்கடப் படுத்தணும்?'' எனத் தன் பெற்றோர் மற்றும் கூடப் பிறந்தவனின் மனதைக் கஷ்டப்படுத்த வேண்டாமே, என்ற செய்தியை உள்நிறுத்தி மொழிந்தாள்.

''உனக்கு என்னை விட அவங்க முக்கியமாப் போயிட் டாங்களா?'' என்றான் இறுகிய குரலில்.

கடையில் வைத்து வீண் விவாதம் எதற்கு என நினைத்து, ''சந்தோஷ்! ப்ளீஸ் எனக்காக...'' எனக் கெஞ்சல் குரலில் கேட்டவள், அவன் பதில் சொல்லும் முன்னரே பணத்தைக் கட்டிவிட்டு வெளியே சென்றாள். முகத்தை உம்மென வைத்துக் கொண்டு கவிமதியைத் தொடர்ந் தான் சந்தோஷ்.

சந்தோஷ் எப்பொழுதும் இப்படித் தான். தனக்குப் பிடித்தவர்களின் மேல் உள்ள அன்பால், அவர்கள் அதைப் புரிந்து கொள்ளவில்லையே என்ற ஆதங்கத் தால், அவர்களுக்கு உணர்த்த முடியவில்லையே என்ற அவசரத்தால், சட்டெனக் கோபத்தை உடுத்திக் கொள் வான். அதே அன்பினால் உடனே அந்தக் கோபத்தைக் கிழித்து உதறியும் விடுவான்.

அதே போல, தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என பேதம் பார்க்காமல் தன் கருத்தை வலியுறுத்துவதில் அவசரத் தனத்தையும், கோபத்தையும் முன்னிறுத்தி விடுவான். பின் நிதானமாக யோசித்து, தான் செய்தது சரியா, தவறா என்ற முடிவுக்கு வருவான்.

அவன் மனதிற்கு, தான் சொன்னது தவறென்று பட்டால் உடனே சென்று உரியவரிடம் மன்னிப்பும்

வேண்டிவிடுவான். அவனைப் பற்றி நன்கு அறிந்தவர்கள் அவனின் குணத்தையும் சேர்த்து அறிந்து வைத்திருந்தார்கள்.

இந்தக் குணத்தினால் அவன் வாழ்க்கையில் இதுவரை எந்த பெரிய சிக்கலும், மனத்தாங்கலும் யாருக்கும் வந்ததில்லை. ஆனால், இனியும் அப்படியே தான் இருக்கும் என்பதற்கு உத்தரவாதமும் இல்லை.

கடைக்கு வெளியில் வந்த பின்பும் சந்தோஷ் உம்மென்று இருக்க, ''சந்தோஷ், ஏதாவது பேசுங்க. நீங்க இப்படி இருந்தா எனக்குக் கஷ்டமாயிருக்கு'' எனக் கவலை தோய்ந்த குரலில் சொன்னாள்.

அவள் சொன்னதற்கு எந்தப் பிரதிபலிப்பும் இல்லாமல் போகவே, ''இப்போ என்ன? நீங்க சொல்லறதை நான் கேட்கணும். சரி! இனிமே நீங்க என்ன சொன்னாலும் கேட்கிறேன்... ப்ளீஸ்...'' என சமரசத்திற்கு முயன்றாள்.

சந்தோஷ் திடீரென்று கண்களில் ஒரு மின்னலுடன், ''பேச்சு மாறமாட்டியே?'' என்றான்.

பதிலாக அவள் தலையாட்ட, ''வீட்டுக்குப் போனதும் போன்ல சொல்றேன். அப்போ நான் சொல்றபடி நட'' என அடுத்த கடைக்குள் கவிமதியுடன் நுழைந்தான்.

## 2



கவிமதி தன் ஆசைக்கு சம்மதம் தெரிவித்த உற்சாகத்தில் சற்றுமுன் நடந்ததையும், தன் கோபத்தையும் நாடு



கடத்தியவனாக, உல்லாசமாக விசிலடித்தவாறே அவளை அழைத்துக் கொண்டு ஒவ்வொரு கடையாக ஏறி இறங்கினான் சந்தோஷ்.

அவனுக்குத் தேவையானதை வாங்கியவன், கடைசியில் கவிமதியை 'தனிஷ்க்' நகைக் கடைக்கு அழைத்துச் சென்று, அவள் எவ்வளவோ மறுத்தும் அவளுக்கு அழகான ஒரு வைர 'நெக்லஸை' வாங்கிப் பரிசளித்தான்.

அதைப் பெற்றுக் கொண்ட கவிமதியின் கண்களிலிருந்து பொலபொலவென கண்ணீர் வருவதைப் பார்த்துப் பதறியவன், ''மதி எதுக்குடா இப்போ அழற?'' என அவள் கண்ணீரைத் துடைத்தான்.

''இது ஆனந்தக் கண்ணீர் சந்தோஷ். கொஞ்ச நாளா தெரிஞ்ச என் மேலே தான் உங்களுக்கு எவ்வளவு அன்பு? அந்த உரிமையில தானே கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி சண்டை போட்டீங்க... 'ஐம் அம் வெரி லக்கி'' என அவனைப் பார்க்க, அவன் கண்கள் வேறு ஏதோ செய்தியைச் சொன்னது.

அதை உணராமல், ''ஆனா சந்தோஷ்! உங்க அன்பை விலை உயர்ந்த பொருட்கள் கொடுத்துத் தான் நிரூபிக்கணும்னு இல்ல. எனக்கு ஒரு முழம் பூ வாங்கிக் கொடுத்தாலே போதும்'' என கரகரத்த குரலில் சொல்லி முடித்தாள்.

அவளைக் காதலுடன் பார்த்தவன், ''மதி, நம்ம கல்யாணம் முடிவானதுல இருந்து உனக்கு ஒண்ணுமே கொடுக்கலே. 'ஸ்பர் ஆஃப் த மொமென்ட்'ல தோணிச்சு அதான் வாங்கினேன். அதுக்காக இப்படியா அழுது என்னை பயமுறுத்துவ?'' என்றான் பாரம் இறங்கிய குரலில்.

அவன் சொன்னதைக் கேட்டு, ''நான் சந்தோஷத்துல உணர்ச்சி வசப்பட்டா என்னையும் அறியாம அழுதுடுவேன். சந்தோஷமா தானே அழறேன். அதனால கவலைப் படாதீங்க'' என்றாள் புன்னகையுடன்.

''நோ மதி! இனிமேல் சந்தோஷமான விஷயமா இருந்தாலும் உன்னோட கண்ல இருந்து கண்ணீர் வரக் கூடாது சொல்லிட்டேன், மதி என் மந்தி...'' - அவனே இன்னும் சில மாதங்களில் அவளை அழ வைக்கப் போகிறான் என்பதை அறியாமல் அவளுக்குக் கட்டளையிட்டுக் கொண்டிருந்தான்.

கவிமதியின் பால் உள்ள அன்பு கரைபுரண்டு ஓடும் பொழுதெல்லாம் அவளை 'மதி என் மந்தி!' என அவன் அழைப்பதை, அவனுடன் பழக ஆரம்பித்த இந்த மூன்று மாதங்களில் தெரிந்து கொண்ட கவிமதி, அவன் சொன்னதற்குத் தலையாட்டிப் புன்னகைத்தாள்.

மேற்கொண்டு இருவரும் பேசும் முன் சந்தோஷின் கைப்பேசி சிணுங்க, அதை எடுத்து வினோத்திடம் பேசியவன் அவனை அருகே இருந்த உணவகத்தில் சந்திக்குமாறு கூறி பேசியை வைத்தான்.

வினோத் பேசியில் தெரிவித்தவாறே அரைமணி நேரத்தில் வந்து சேர, மூவரும் தங்களுக்கு வேண்டிய உணவு வகைகளைச் சொல்லிவிட்டுப் பேசிக் கொண்டிருந்தனர்.

கவிமதி தான் தன் அண்ணனிடம் வாய் ஓயாமல் சலசலத்துக் கொண்டிருந்தாள். சந்தோஷ் வாங்கித் தந்த நெக்லஸைப் பற்றி தன் அண்ணனிடம் பூரிப்புடன் சொன்னவள், அதை வீட்டில் சென்று காண்பிப்பதாகக் கூறினாள்.



தங்கை கூறுவதைக் காது கொடுத்துக் கேட்டாலும், காலை நேரம் முழுவதும் சந்தோஷுடன் செலவழித்ததனால் தன் தங்கையின் முகத்தில் தெரிந்த மலர்ச்சியைப் பார்த்து அந்த அண்ணனின் உள்ளம் நெகிழ்ந்து, நிறைந்து கொண்டிருந்தது.

அவர்கள் சொன்ன உணவும் வந்து சேர, உள்ளம் நிறைந்த வினோத் தன் வயிற்றை நிரப்பும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டான்.

வேலை முடிந்ததும், வினோத் கை கழுவச் சென்றிருந்த சமயத்தில், ''சந்தோஷ்!'' என பக்கவாட்டில் இருந்து அவன் தங்கையின் குரலைக் கேட்டுத் திரும்பிய சந்தோஷ், ''ப்ரியா, நீ எங்க இங்க?'' என்றான் தங்கையிடம் வியப்பாக.

''என் பிரெண்ட் திவ்யாவோட பர்த்டேயைக் கொண்டாட திடீரெனப் பிளான் பண்ணி வந்தோம்'' எனச் சொன்ன ப்ரியங்கா, அவர்களின் அருகில் இருந்த பைகளைப் பார்த்து, ''ஷாப்பிங் போனீங்களா? சொல்லி இருந்தா நானும் வந்திருப்பேன் இல்ல'' என்றாள் ஏமாற்றப் பெருமூச்சுடன்.

ப்ரியங்காவிற்கு ஷாப்பிங் செல்வதில் மிகவும் விருப்பம். யாராவது ஷாப்பிங் கிளம்பினால் போதும், உடனே அவர்களுடன் கிளம்பி விடுவாள்.

சந்தோஷ், தனியே கவிமதியுடன் வெளியில் செல்ல அவன் அரும்பாடு பட்டது அவனுக்குத் தானே தெரியும். இதில் வெத்தலைப் பாக்கு வைத்து, பத்திரிகை அடித்து விட்டு செல்லலாம் இல்லை எனத் தங்கை கேட்டால், பாவம், என்ன பதில் சொல்வான்!

''ஒஹ்... அது திடீர்ன்னு கிளம்ப வேண்டி வந்துடுச்சு'' என சந்தோஷ் சொன்னதைக் கேட்டு கவிமதி ஒரு

நமுட்டுச் சிரிப்பை உதிர்க்க, சந்தோஷ் கண்களில் ஒரு லேசான கண்டிப்புடன் அதை ஒதுக்கியவாறே தன் தங்கையிடம் பேச்சைத் தொடர்ந்தான்.

சந்தோஷுக்கு தன் தங்கையின் குணம் தெரியுமாதலால், அவளுக்கும் சேர்த்து சிலவற்றை வாங்கி இருந்தான்.

தன் தங்கையின் முகம் வாடுவதைப் பொறுக்காமல், வாங்கியதை உடனே அவளிடம் கொடுக்க எண்ணினான். கவிமதியின் நெக்லஸ் அடங்கிய பையை வெளியில் தெரியாமல் இருப்பதற்காக ப்ரியங்காவின் துணிகள் அடங்கிய பையில் வைத்ததை உணராமல், ''ப்ரியா, இந்தா இதெல்லாம் உனக்கு'' என அவசரமாக எடுத்து நீட்டினான்.

அதைச் சந்தோஷமாகப் பெற்றுக் கொண்ட ப்ரியங்கா, ''தேங்க்ஸ் சந்தோஷ்!'' என்றாள். பின்னர் அவசர அவசரமாக எல்லாவற்றையும் கண்களால் அலசிவிட்டு, கடைசியில் வைர நெக்லஸ் அடங்கிய பையைத் திறந்தாள்.

"வாவ்! ரொம்ப அழகா இருக்கு. தேங்க்ஸ் சந்தோஷ்!'' எனக் கூறி, தன் கழுத்தில் மாட்டி அழகு பார்த்தாள்.

அதைப் பார்த்த சந்தோஷ் ஒரு கோபப் பார்வையை கவிமதியிடம் அவசரமாகப் பரிமாறிவிட்டு, தன் தங்கையைப் பார்த்து ஏதோ சொல்ல வாய் திறக்க,

ப்ரியங்காவோ, ''ரிசப்ஷனுக்கு, இதைப் போட்டுக்கறேன். இது மாதிரி ஒண்ணு வாங்க ரொம்ப நாளா நினைச்சுட்டு இருந்தேன்'' என்றாள் குதூகலத்துடன்.

சந்தோஷ் தர்மசங்கடத்துடன் நெளிந்தான். ''ப்ரியா! உனக்கு அது மாதிரி நான் வேற ஒண்ணு வாங்கிக்



கொடுக்கிறேன். அ... அது நான் ம.. மதிக்காக வாங்கினது. தெரியாம உன்னோட பையில வந்திடுச்சு... அதனால...'' எனத் தன் தங்கையிடம் இழுத்தான்.

''அண்ணிக்குத் தானே. வேற வாங்கிக் கொடுத்துக்கோ. எனக்கு இந்த டிசைன் ரொம்பப் பிடிச்சிருக்கு'' என யோசியாமலேயே அதை எடுத்துத் தன் கைப் பையில் வைத்தும் கொண்டாள்.

ஏதோ சொல்ல வந்தவன் கவிமதியின் கை தன் கை மேல் அழுத்தமாகப் படர்வதையும், அர்த்தம் பொதிந்த பார்வையையும் உணர்ந்து, ''உனக்குப் பிடிச்சிருக்கா? ரொம்ப சந்தோசம்'' என 'சந்தோஷம்'மில் அழுத்தம் கொடுத்துச் சொன்னான்.

அதையெல்லாம் ப்ரியங்கா உணராமல் கவிமதியிடம் வளவளவென்று கதை அடித்துக் கொண்டிருந்தாள். கவிமதியும், வெகு விரைவில் ப்ரியங்காவின் கோபத்திற்கு ஆளாகப் போகிறோம் என்பதை உணராமல் தன் வருங்கால நாத்தனாருடன் மலர்ந்த முகத்துடன் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

சந்தோஷ் தான் பாவக்காயுடன், வேப்பங்காயையும் கலந்து செய்த பழச்சாற்றைப் பருகியது போல முகத்தை வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

சில நிமிடங்களில் ப்ரியா அவர்களிடம் இருந்து விடை பெற்றுச் செல்ல, முகத்தில் இருந்த கசப்பு மாறாமலே, ''மதி, எதுக்கு அந்த நெக்லஸை ப்ரியாவோட பையில வச்ச?'' என எரிச்சலாக அவளிடம் பொரிந்தான் சந்தோஷ்.

''சந்தோஷ்! இப்போ என்ன ப்ரியா தானே போடப் போறா?'' என ஒன்றுமே நடவாததைப் போல புன்னகையுடன் கவிமதி பதிலளிக்க,

''முதன் முதலா ஆசையா வாங்கிக் கொடுத்ததை ப்ரியாக்குக் கொடுத்துட்டு அக்கறையே இல்லாம சிரிச்சுட்டே பதில் சொல்லற'' என மீண்டும் படபடவெனப் பொரிந்தான்.

''சந்தோஷ்! நீங்க எப்பவுமே இப்படித் தானா? பண்ணறதை எல்லாம் பண்ணிட்டு, மத்தவங்ககூட சண்டைக்குப் போவீங்களா?'' என்றாள் குறும்புச் சிரிப்புடன்.

அவன் அவளை மௌனமாக முறைக்க, அவன் இன்னும் எரிச்சலைக் கைவிடாமல் இருப்பதைப் பார்த்து, ''நல்லா யோசிங்க, யாரு அந்த நெக்லசை அந்தப் பையில வச்சதுன்னு. தெரியாமத் தானே நடந்தது. அதுக்கு ஏன் இவ்வளவு கோபம்?'' என்றாள்.

அவன் தான் பணத்தைக் கட்டிய பின் அவன் கையில் வைத்திருந்த பைகளில் ஒன்றில் நகைப் பையை திணித்தான் என்பதை மறந்தவனாக அவளிடம் சண்டை போட்டுக் கொண்டிருந்தான். கவிமதி அதை ஞாபகப் படுத்தி அவனைச் சீண்டவும், ஒரு கணம் திருதிருவென விழித்தான்.

கடையில் நடந்தது அவனுக்கு ஞாபகம் வர, ''ஓஹ்... சாரி மதி! நானே வச்சுட்டு மறந்துட்டேன். சீக்கிரம் வா, போய் உனக்கு ஒரு நெக்லஸ் வாங்கலாம்...'' எனப் பரபரத்தான் சந்தோஷ்.

''இப்போ என்ன அவசரம்? அப்புறம் நிதானமா வாங்கலாம். பொறுமையா இருங்க'' என்றவளிடம் அவன் பதில் பேசும்முன் கை கழுவச் சென்றிருந்த வினோத் அங்கு வர, அதற்கு மேல் பேச்சை வளர்க்காமல் கிளம்பி வெளியில் வந்தனர்.



சந்தோஷ் முதல் வேலையாக கண்ணுக்கு அகப்பட்ட பூக்காரம்மாவிடம் கை நிறையப் பூவை வாங்கி கவிமதியிடம் தந்தான்.

பூவை வாங்கிய கவிமதி, சந்தோஷிடம் தன் காதலையும், சந்தோஷத்தையும் ஒரு சேரக் கண்களில் காட்டினாள். இவர்களின் இந்த மௌன நாடகத்தைக் கண்டும் காணாததைப் போல காரை செலுத்திக் கொண்டிருந்தான் வினோத்.

மூவரும் அரட்டையடித்துக் கொண்டே மேலும் வாங்க வேண்டியதை வாங்கி முடித்து மாலையில் தான் வீடு போய் சேர்ந்தனர். சந்தோஷ் அவர்களிடம் விடைபெற்றுச் செல்ல, கவிமதி, முதல் வேலையாகத் தன் அண்ணனிடம் சென்று பேசினாள்.

கவிமதிக்கு சிறு வயதிலிருந்தே ஒரு பழக்கம். பள்ளிப் பருவத்திலும் சரி, கல்லூரிக் காலத்திலும் சரி, அன்றைக்கு நடந்த அனைத்தையுமே தன் அண்ணனிடம் ஒப்பித்து விடுவாள்.

அவள் அண்ணன் கூட, 'கவி! உனக்கு வாயே வலிக்காதா? எப்படிம்மா இப்படி நான் - ஸ்டாப்பா வாய் ஓடிட்டு இருக்கு?' என பலமுறை கேலி செய்துள்ளான் தான். ஆனாலும் அவள் சொல்வதை இன்று வரையிலுமே பொறுமையாகக் கேட்டும் இருக்கிறான்.

வினோத் இங்கிலாந்தில் படிக்கும்பொழுதுகூட அவனுக்குத் தினமும் மின்னஞ்சல் அனுப்பி எல்லாவற்றையும் கொட்டிவிடுவாள்.

கவிமதியின் இந்தப் பழக்கம் அவள் வாழ்வெனும் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலத்தை உருவாக்கிக் கொண்டிருந்ததை அறியாமல் அன்றும்

அதே போல, சந்தோஷ் பணம் கட்ட முயன்றதை, வைர 'நெக்லஸ்' ப்ரியங்காவிற்கு கொடுத்த பைகளில் மாறிப் போய் விட்டதை மேலோட்டமாகத் தன் அண்ணனிடம் ஒப்பித்தாள்.

கவிமதி, நெக்லஸ் கைமாறியதை ஒரு பொருட்டாகவே நினைத்திருக்க மாட்டாள். ஆனால், அவள் தான் ஏற்கனவே வினோத்திடம் நெக்லஸ் வாங்கியதைப் பற்றி சொல்லி விட்டாளே. அவள் வாங்கியவற்றை தன் பெற்றோர்களிடம் கடை விரிக்கும் பொழுது நெக்லஸ் எங்கே என அண்ணன் கேட்டு வைத்தால்?

அப்புறம் பெற்றோர்களிடமும் நடந்ததைச் சொல்ல வேண்டி வரும். தேவையில்லாமல் எதற்கு அவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என நினைத்துத் தான் அண்ணனிடம் நடந்ததைச் சொன்னாள்.

வினோத்தும், சந்தோஷின் முகத்தைப் பார்த்தே ஏதோ நடந்திருக்க வேண்டும் என ஊகித்துக் கொண்டதாகக் கூறி, அதற்காக அவளை வருத்தப்பட வேண்டாம் என்றான்.

ப்ரியங்கா செல்லமாக வளர்ந்த பெண் என்பதால் அவள் தான் பொறுமையைக் கடைப்பிடித்து அவள் வாழப்போகும் இடத்தில் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தி, தங்கையின் தலையைப் பாசமாக வருடிக் கொடுத்தான்.

கவிமதியும், பொறுமையுடன் இருப்பதாக வாக்குக் கொடுத்துவிட்டு தன் அறைக்குள் செல்ல, மறுநிமிடம் அவளைக் கைப்பேசியில் அழைத்தான் அவளின் வருங்கால மணாளன்.

பேசியை எடுத்து, ''ஹலோ'' என்றவுடன், ''மதி, என் மேல கோபமா? நீ ஏன் போனை எடுக்கலே? சாரி மதி! நான் தப்பு பண்ணிட்டு உன்னைத் திட்டிட்டேன்'' என்றான் அவசர அவசரமாக சந்தோஷ்.



''எனக்குக் கோபம் எல்லாம் அவ்வளவு ஈஸியா வராது. போனை என் ரூம்ல வச்சிட்டுப் போயிட்டேன். சந்தோஷ், எனக்கு ஒரு தங்கச்சி இருந்திருந்தா அவளுக்குக் கொடுத்திருப்பேனே. அது மாதிரி தானே ப்ரியா எனக்கு. சியர் அப் சந்தோஷ்!'' என அவனை உற்சாகப்படுத்த முயன்றாள் கவிமதி.

மறுமுனையில் மௌனம் நிலவ, ''நீங்க பூ வாங்கித் தந்ததே எனக்கு இந்த அண்ட சராசரத்தையே கொடுத்த மாதிரி இருக்கு. எனக்கு உங்க அன்பு மட்டும் கடைசி வரை போதும்'' என அவனுக்காக உருகினாள். அவளின் உருகலில் எதிர்முனையில் இருந்தவனும் கரைய ஆரம்பித்தான்.

''மதி! கல்யாணத்துக்கு அப்புறம் நான் கோபப்பட்டு சத்தம் போட்டாலும், உன் மேல இருக்கிற உரிமையில வந்த கோபம் என புரிஞ்சுக்கிட்டு என்னைக் கட்டிப் பிடிச்சி முத்தம் தருவியா?'' என உற்சாகமாக அவளைச் சீண்ட ஆரம்பித்தான்.

அவன் சீண்டலில் புன்னகையை இதழ்களில் உடுத்திக் கொண்ட கவிமதி, செம்மையை கன்னங்களில் பூசிக் கொண்டாள்.

சந்தோஷ் சொன்ன முத்தத்தை விடுத்து, ''அப்போ, கல்யாணத்துக்கு அப்புறம் நிறைய சண்டை போட பிளான் பண்ணிட்டு இருக்கீங்க போல...?'' என அவனை மடக்கினாள்.

வாய்விட்டுச் சிரித்தவன், ''மதி, நீ முத்தம் தந்து என்னை சமாதானம் செய்யறதா இருந்தா கண்டிப்பா

நிறைய சண்டை போடுவேன்'' என சந்தோஷ் அதிலேயே நின்றான்.

சந்தோஷின் பேச்சை திசை திருப்புவதாக எண்ணி அவன் மறந்திருந்ததை ஞாபகப்படுத்தி அவனிடம் வசமாக மாட்டிக் கொண்டாள்!

''சந்தோஷ், நைட் போன் பண்ணறப்போ, என்னமோ கேட்கணும்ன்னு சொன்னீங்க. மறந்துட்டீங்களா?'' என ஞாபக சக்தியில் தான் யானைக்கு நிகரென்று நிரூபித்து, அவனுக்கு எடுத்துக் கொடுத்தாள் கவிமதி.

அவனும், ''மதி! உன் ஞாபக சக்தி வாழ்க! வாழ்க! வாழ்க!'' என கோசமிட்டவன், ''எனக்கு என்ன வேணும்ன்னா...'' என இடைவெளி விட்டான்.

பின்னர், ''நீ முடியாதுன்னு சொல்லக்கூடாது... சரியா?'' என நிறுத்தி உறுதிமொழி கோரினான்.

''சரி! சீக்கிரம் விஷயத்தைச் சொல்லுங்க'' எனத் தூண்டினாள் கவிமதி.

இதுவரைக்கும் அவளிடம் பேசியது, கொஞ்சியது என எதுவும் அவன் நினைவில் தங்காமல், ''மதி, நான் கேட்டதை நீ கொடுக்காட்டி அப்புறம் உன்னோட எப்பவும் பேசமாட்டேன்'' எனப் பெரிய நாணயஸ்தனாய் அவளிடம் தன்னைப் பற்றிக் கூறிவிட்டு, கடைசியில் இத்தனை நாட்களும் மனதில் தேக்கி வைத்திருந்த ஆசைகளைச் சொல்லி, அவனுக்கு வேண்டியதைக் கேட்டு அவளைச் சிவக்க வைத்தான்.

கவிமதி நாணத்துடன் ஒன்றும் பேசாமல் மௌனமாக இருக்க, சந்தோஷ் அவளை மிரட்டி, உருட்டி, பேசியை வைக்கும் முன், அவனுக்கு வேண்டிய முத்தங்களை, ஒன்றில் ஆரம்பித்து, பல எண்களில் பெருக்கி,



கடைசியில், எண்ணிலடங்கா கணக்கில் வாங்கி அவன் பெரிய கணக்குப் புலி என நிரூபித்துக் கொண்டான்.

# 3



கவிமதியுடன் படித்த, சென்னையில் வசிக்கும் கல்லூரித் தோழர் - தோழிகள், கரண், அவந்திகா, தமிழரசி, ராதிகா ஆகியோரும், ஹைதராபாத்தில் வேலை செய்யும் டேனியலும் ஒருவரை ஒருவர் பார்த்துப் பல நாட்கள் ஆகிறது என்றும் திருமணத்திற்கென அனைவரையும் அழைக்க ஒவ்வொருத்தர் வீட்டிற்கும் கவிமதி அலைய வேண்டாம் என்றும் முடிவு செய்து, அனைவரும் ஸ்பென்சரில் சந்திக்கலாம் என்று திட்டமிட்டிருந்தனர்.

அதன்படி சனிக்கிழமை காலை கவிமதி மவுண்ட் ரோட்டிலுள்ள ஸ்பென்சர் பிளாசாவில் காத்திருந்தாள்.

தனியே அமர்ந்திருந்த கவிமதியின் பின்னால் இருந்து யாரோ அவள் கண்களை மூட, கவிமதியும் தன் தோழிகளின் பெயர்களை ஒவ்வொன்றாகச் சொல்லி யாரென்று கண்டுகொள்ள முடியாமல் தோற்றுக் கொண்டிருந்தாள்.

கவிமதியோடு இதுவரை விளையாடியவர், விளையாட்டு போதும் என நினைத்தோ என்னவோ, கைகளை விலக்க, கவிமதி, ''அக்கா நீங்களா!'' என்றாள் மகிழ்ச்சி பொங்க.

''நானே தான். ஆமா, தனியா என்ன பண்ணிட்டு இருக்க?'' என்றாள் சந்தோஷின் அண்ணி சந்தியா.

'''ப்ரண்ட்ஸ்' வரேன்னு சொன்னாங்க. அதான் வெயிட் பண்ணிட்டு இருந்தேன். அவங்க தான் யாரோ என்கிட்டே விளையாடறாங்கன்னு நினைச்சு அவங்க பெயர்களை மட்டும் சொன்னேன். சாரிக்கா!'' என சங்கடத்துடன் பதிலளித்து, சந்தியாவிடம் மன்னிப்பை வேண்டினாள்.

''கவி, இதுல என்ன இருக்கு? டோன்ட் வொர்ரி. நான் ஷாப்பிங் வந்தேன். என்னோட அம்மாவுக்காக வெயிட் பண்ணிட்டு இருந்தப்போ தான் உன்னைப் பார்த்தேன். சரி, உன் பிரெண்ட்ஸை மீட் பண்ணிட்டு அதுக்கப்புறம் ஏதாவது வேலை இருக்கா?''

''இல்லக்கா. அப்புறம் வீட்டுக்குத் போகணும்'' என்றாள் கவிமதி.

''அப்போ அவங்க போனதும் என்னோட கொஞ்ச நேரம் ஒரு இடத்துக்கு வர முடியுமா கவி? ப்ளீஸ்!'' எனக் கெஞ்சினாள் சந்தியா.

'எங்கே?' என மனத்திற்குள் தோன்றினாலும், எடுத்த வுடனே கெஞ்சும் அவளிடம் மறுப்புக் கூற இயலாமல், ''வரேன். ஆனா...'' என அவள் முடிக்கும் முன்னே,

''தேங்க்ஸ்! எங்கேன்னு இப்போ சொல்ல மாட்டேன். அது சஸ்பென்ஸ். இன்னும் கொஞ்ச நேரத்துல மீட் பண்ணலாம். போன் பண்ணு. பை!'' என ஓடிவிட்டாள் சந்தியா.

கவிமதி அதைப் பற்றி அசைபோட்டுக் கொண் டிருக்க, அவள் நண்பர்கள் பட்டாளம் வந்து அவளின் மூளைக்கு சிறிது நேரம் ஓய்வு கொடுத்தார்கள். நண்



பர்கள் பல நாட்கள் கழித்து சந்தித்ததால், நேரம் காலம் தெரியாமல் அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர்.

நண்பர்களை, தன் திருமணத்திற்கு வருமாறு மீண்டும் அழைப்பு விடுத்த கவிமதி, அவர்களுடனே மதிய உணவையும் முடித்துக் கொண்டாள். கவிமதியின் திருமணத்திற்கென, அவளுக்குப் பிடித்தவாறு அன்றே அவளுக்குப் பரிசு வாங்கித் தருவதாகத் தெரிவித்தனர் நண்பர்கள்.

கவிமதியும் அவர்களிடம், ''நீங்க அன்பா 'கிஃப்ட்' வாங்கிக் கொடுக்கும் போது வேண்டாம்ன்னு சொல்லத் தோணலை. ஆனா 'கிஃப்ட்'க்கு பதிலா பணமாகக் கொடுத்தா எங்க கல்யாணத்தன்னைக்கு உங்க பேர் சொல்லி பல ஆதரவற்ற குழந்தைகள் நல்ல சாப்பாடு சாப்பிடுவாங்க. உங்களுக்கு இஷ்டம் இல்லைன்னா பரவாயில்ல'' என்றாள்.

''ஹேய் கவி! இது என்ன புதுசா இருக்கு? நாங்ககூட எப்போதும் போலே உன் ப்ர்த்டேக்கு பண்ணற மாதிரி கையில மண்வெட்டியையும் கடப்பாரையும் கொடுத்து எங்காவது மரம் நடச் சொல்லுவேன்னு நினைச்சோம்'' என்றனர் கிண்டலாக, அவளைப் பற்றி நன்கு அறிந்திருந்த அவளின் தோழர் - தோழியர்.

அவர்கள் சொன்னதைக் கேட்டு முறுவலித்தவள், ''சந்தோஷ் இப்படித் தான் தன்னோட எல்லாம் முக்கிய மான நாட்களையும் கொண்டாடுவதாகக் கேள்விப்பட் டேன். இதுவரைக்கும் நான் அப்படி இல்ல. இனிமேலா வது அப்படி இருக்கலாம்ன்னுதான்'' என பதிலளித்தாள்.

அதைக் கேட்டவர்கள், ''ஒஹ்ஹ்ஹோ...'' எனக் கிண்டல் அடித்தாலும், அவளின் எண்ணம் பிடிக்க,

அதன்படியே நடந்தும் கொண்டார்கள். அவர்கள் கிளம்பிய வுடன் அவளுக்குத் தெரிந்த ஆசிரமத்திற்கு அழைத்து விவரத்தைத் தெரிவித்து வேண்டியதைச் செய்யச் சொன்னாள் கவிமதி.

அதன்பிறகு சந்தியாவிற்கு அழைத்து, தான் காத்துக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்க, அவளும் பதினைந்து நிமிடங்களில் அங்கிருப்பதாகக் கூறினாள்.

கவிமதிக்கு, எப்பொழுதும் படிப்பதில் ஆர்வம் இருந் தால், சந்தியா வரும் வரை சும்மா இருக்கப் பிடிக்காமல் தன் கைப்பையில் இருந்த ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையை எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள்.

சந்தியா வரும் முன், அவளைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்வது நல்லது. சந்தியாவும், சந்தோஷும் பள்ளித் தோழர்கள். அவர்கள் இருவரும் ஒரே வகுப்பில் படித்தாலும் ஆரம்பத்தில் ஒருவருக்கு ஒருவர் பெரிதாக நட்புப் பாராட்டவில்லை.

பள்ளியில் எட்டாவது படிக்கும் சமயத்தில், ஒரு நாள், வயதுக் கோளாறினால் சக மாணவர்கள் சிலர் சந்தி யாவைக் கிண்டலும் கேலியும் செய்ய, அவர்களிடம் எதிர்த்துப் பேசும் திராணியற்று கூசிக் குறுகி நின்றாள்.

ஒரு கட்டத்தில், அந்த மாணவர்கள் சந்தியாவின் அங்கங்களைப் பற்றி சிறிதும் நாகரிகமில்லாமல் வர்ணனை செய்து வரம்பை மீறினார்கள். மீதமிருந்த மாணவ - மாணவியர் நமக்கென்ன என்று ஒதுங்கிக் கொண்டனர்.

ஆனால் இதைப் பார்த்த கோபக்காரனான சந்தோஷுக் குத் தன் தங்கை ப்ரியங்காவின் நினைவு தான் வந்தது. அத்தோடு மூக்கின் மேல் கோபமும் தாண்டவமாடியது.



அதே கோபத்துடன் அந்த மாணவர்களுடன் சண்டை யிட்டு, அந்த சூழ்நிலையில் இருந்து சந்தியாவையும் மீட்டான்.

அதன்பிறகு, ஏதோ இக்கட்டான சூழ்நிலையில் இருந்து அவளைக் காத்தோம் என சந்தோஷ் விட்டு விட்டான். ஆனால், சந்தியாவால் அவ்வளவு எளிதாக விட முடியவில்லை. அன்றிலிருந்து சந்தோஷிடம் நட்பு பாராட்ட ஆரம்பித்தாள்.

சந்தோஷ், அவளைத் தன் தங்கை இடத்தில் நிறுத்திப் பார்த்து வெகுண்டதை அறிந்தவுடன் மனம் கரைந்தது சந்தியாவுக்கு. அன்றிலிருந்து, யாருமே அவளுக்கு உதவ முன் வராத பொழுது, தன்னை மீட்க வந்த சந்தோஷ் தான் தன் மிகச் சிறந்த உயிர் தோழன் என்றும் அவனைப் போன்ற நண்பர்கள் உலகத்தில் யாருக்கும் கிடைக்க மாட்டார்கள் என்றும் அனைவரிட மும் தம்பட்டம் அடித்துக் கொண்டாள்.

சந்தியாவுக்கு சந்தோஷ் மேலிருந்த பிரியத்தைப் பார்த்த அவள் பெற்றோர்கள் கூட அவள் கல்லூரியில் அடியெடுத்து வைக்கும் சமயத்தில், 'சந்தோஷைக் காதலிக்கிறாயா?' எனக் கேட்டு நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டார்கள். அவர்களின் உன்னதமான நட்பை எப்படி கொச்சைப் படுத்தலாம் எனக் கூறி அவர்களிடம் சீறிப் பாய்ந்தாள் சந்தியா.

இளங்கலையில், சந்தோஷ் கட்டிடக் கலையைத் தேர்ந்தெடுக்க, சந்தியா 'அக்கௌண்டிங்' படித்தாள். சந்தியா படித்து முடித்து வேலை தேட, சந்தோஷ் தங்கள் அலுவலகத்தில் வேலை போட்டுக் கொடுக்கச் சொல்லி அவன் அண்ணனிடம் போய் நின்றான்.

சந்தியா புத்திசாலியாக இருந்ததனால் விக்னேஷும் ஒத்துக் கொள்ள, அவள் வேலைக்குச் செல்ல ஆரம்பித்தாள்.

ஒரு நாள் நண்பர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்த பொழுது சந்தியாவின் வீட்டில் அவளுக்குத் திருமணத்திற்கு மாப்பிள்ளைப் பார்ப்பதாகவும் அவளை நன்கு அறிந்த ஒருவன், அதுவும் தங்களின் நட்பைப் புரிந்து கொள்ளும் ஒருவன் தனக்குக் கிடைக்க வேண்டும் என நண்பனிடம் தன் ஆசையைப் பற்றிக் கூறினாள்.

அவள் பேசியதைக் கேட்ட சந்தோஷ் ஒன்றும் பேசாமல் மௌனமாக தலையாட்டிக் கொண்டான். ஆனால், மறுநாளே சந்தியாவின் வீட்டில் போய் நின்றான். தன் பெற்றோர் மற்றும் அண்ணனுடன், சந்தியாவை தன் அண்ணனுக்குப் பெண் கேட்டு.

சந்தியாவின் அழகு ஈர்த்ததா, இல்லை, அவளின் புத்திசாலித்தனம் ஈர்த்ததா அல்லது இரண்டுமா என விக்னேஷுக்கே இன்றுவரை புலப்படவில்லை. சந்தியாவை மிகவும் பிடித்துவிட அவளைத் திருமணம் செய்து கொள்ள மகிழ்ச்சியாகச் சம்மதித்தான் விக்னேஷ்.

சந்தியாவின் உள்ளம் மூன்று காரணங்களுக்காக பூரிப்படைந்தது. முதலாவது, அவளின் நட்பு அவள் ஆயுட்காலம் முழுமைக்கும் கெடாததோடு நண்பனுடன் ஒரே வீட்டில் வாழ்க்கை முழுக்கக் கழிக்கலாம். இரண்டாவது, அவளுக்கும் விக்னேஷை மிகவும் பிடித்திருந்தது. மூன்றாவது, தனக்காக தன் நண்பன் யோசித்துச் செயல் பட்டது.

சந்தியாவும் மகிழ்ச்சியுடன் சம்மதம் தெரிவிக்க அவர்களுக்குத் திருமணம் நடந்தது. நடந்து கிட்டத்தட்ட



ஐந்து வருடங்களும் ஆகின்றது. தற்சமயம், சந்தியா பொருளாதாரப் படிப்பில் முனைவர் பட்டம் பெறுவதில் கடைசிக் கட்டத்தில் உள்ளாள்.

திருமணம் ஆன புதிதில், சந்தோஷிடம் அவன் பெற்றோர்கள், சந்தியாவை அண்ணி என்று அழைக்கச் சொல்ல, சம்மந்தப்பட்ட இருவருமே அதற்கு மறுத்து விட்டார்கள். இன்றுவரை அவளை 'சந்தியா' என்று தான் அழைத்துக் கொண்டிருந்தான். அவளை அண்ணி என்றழைக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதை அப்போதைக்கு அவன் உணர்ந்தானில்லை.

* * *

ஸ்பென்சரில் புத்தகத்தைப் புரட்டியவாறு அமர்ந்திருந்த கவிமதியின் முன்னால் அவள் தோழன் டேனியல் மீண்டும் வந்தமர்ந்தான். ''ஹே டேனி, நீ இன்னும் கிளம்பலையா?'' எனத் தன் நண்பனைப் பார்த்துக் கேட்டாள் கவிமதி.

டேனியலும், கவிமதியும் ஒரே கல்லூரியில் ஒன்றாக பீ.ஈ. படித்தனர். படித்து முடித்து இருவரும் புனேயில் ஒரே நிறுவனத்திலேயே வேலைக்கும் சேர்ந்தனர். கவிமதி கடந்த இரண்டரை வருடங்களாக அங்கேயே வேலை பார்த்தவள், திருமணம் முடிவான பின்னர் அவள் கேட்ட மாற்றலை, இன்று தருகிறேன், நாளை தருகிறேன் என நிறுவனம் இழுத்தடிக்க, வேலையை உதறிவிட்டு வந்துவிட்டாள்.

கவிமதி சென்னைக்கு வந்து ஒரு மாதம் ஆகிறது. டேனியல் இன்னும் அதே நிறுவனத்தில் தான் வேலை செய்கிறான். தோழியைச் சந்திக்கவென புனேயில் இருந்து புறப்பட்டு வந்ததற்கு ஒரு முக்கிய காரணமும்

இருந்தது. இதோ அவனே என்னவென்று சொல்கிறான்... கேளுங்கள்.

சற்று நேரம் மௌனமாக இருந்த அவள் தோழன் டேனியல், பேச வேண்டிய விஷயத்தை எப்படி ஆரம்பிப்பது எனத் தெரியாமல் சந்தோஷைப் பற்றி ஏதேதோ விசாரித்துக் கொண்டிருந்தான். கவிமதியும் மலர்ச்சியுடன் அவனுக்கு பதிலளித்துக் கொண்டிருந்தாள்.

அவள் உற்சாகத்துடன் இருப்பதை உறுதி செய்து கொண்ட டேனியல், பேச்சை ஆரம்பித்தான்.

''கவி, இப்போ உனக்குக் கல்யாணம் வேற முடிவாகி இருக்கு. காதல் எவ்வளவு உன்னதமானதுன்னு இன்னுமா புரியலை? இப்பவாவது என்னோட மனசைப் புரிஞ்சுக்கோ... ப்ளீஸ்...'' என எடுத்தவுடனேயே அவளிடம் மன்றாடினான்.

''நீ இந்த வாரம் மெனக்கெட்டு சென்னை வந்திருக்கும் போதே எங்கடா இவன் இன்னும் ஆரம்பிக்கலையேன்னு நினைச்சேன். ஆரம்பிச்சாச்சா?'' என அவன் சொன்னதற்கு பதிலளிக்காமல் பேசினாள் கவிமதி.

''கவி, நீயே என்னைப் புரிஞ்சுக்காட்டி எப்படி? ப்ளீஸ் கவி! நான் சொல்லறதைக் கொஞ்சம் கேளு'' என மீண்டும் கெஞ்ச,

''டேனி, நான் முன்னாடியே சொன்ன மாதிரி, எனக்கு இதுல சுத்தமா இஷ்டம் இல்ல. எதுக்குத் தான் கால்ல விழுவியோ? நான் இத்தனை சொல்லியும் நீ ஏன் புரிஞ்சுக்க மாட்டேங்கிற? சும்மா என்னைத் தொந்தரவு செய்யறதை விட்டுட்டுப் போய் உருப்படற வழியைப் பாரு'' என நண்பனைக் கடிந்து கொண்டான்.



''உனக்கு என்னோட மனசு புரியவே புரியாதா? என்ன சொல்லிப் புரிய வைக்கிறதுன்னு தெரியலை. கொஞ்சம் யோசி, ப்ளீஸ் எனக்காக!'' எனக் கண்ணீர் கோர்க்க நிறுத்தினான்.

அவன் கண்களில் கண்ணீர் துளிர்ப்பதைக் கண்டவள், ''ஹே டேனி, என்ன இது? அழாத! இதுக்கெல்லாம் அழுவாங்களா? உனக்கு இப்போ...'' என அவள் வாக்கியத்தை முடிக்கும் முன் ''சாரி கவி, நேரமாயிடுச்சு'' என்றவாறே அவளருகில் வந்தாள் சந்தியா.

அதே சமயம் கவிமதியின் பின்னாலிருந்து இரு கைகள் அவள் விழிகளை இருட்டுக்கு இட்டுச் செல்ல, மெல்ல கைகளைத் தடவிப் பார்த்து, ''சந்தோஷ்!'' என உற்சாகமாகக் கூவினாள்.

கவிமதியின் விழிகளை மீண்டும் ஒளியோடு உறவாடவிட்ட சந்தோஷ், ''சந்தியா, எப்படி நம்ம ஆளு? நான் சொல்லலை அவளுக்கு என்னைப் பத்தி எல்லாம் தெரியும்ன்னு'' என பெருமையடித்துக் கொண்டான்.

''கவி, இது அநியாயம்! என்னைக் கண்டு பிடிக்க முடியலை. ஆனா இவனைக் கண்டு பிடிச்சுட்டியே. ம்ம்ம்... நீங்க ரெண்டு பேரும் ஒண்ணு சேர்ந்துட்டீங்க. இதுல இவன்கிட்டே பெட் வேற கட்டினேன். இப்படி ஏமாத்திட்டியே...'' எனப் பொய்யாகக் கோபித்துக் கொண்டாள் சந்தியா.

அவள் சொன்னதைக் கேட்டு முறுவலித்த கவிமதி, ''சந்தோஷ், நீங்க எப்படி இந்நேரத்திற்கு இங்க வந்தீங்க?'' என்றாள் கண்களில் மலர்ச்சியுடன்.

''சந்தியா உன்னை இங்க பார்த்ததா சொன்னவுடனே கிளம்பி வந்துட்டேன்'' என அவளிடம் சொன்னவன்,

டேனியலைப் பார்த்து, ''ஹலோ! நான் சந்தோஷ். மதியைக் கல்யாணம் பண்ணிக்கப் போகும் துரதிர்ஷ்டசாலி. ஐ மீன் அதிர்ஷ்டசாலி!'' என்றவாறே அவனிடம் கையை நீட்டினான் சந்தோஷ்.

பின்னர், ''மதிக்கு வர வர பேசிக் மேனேர்ஸ் கூட மறந்துடுச்சு. உங்களை அறிமுகப்படுத்தவே மாட்டேங்கிறா. அதான் நானே பண்ணிக்கிட்டேன்'' என அவனே தொடர்ந்தான்.

சந்தோஷிடம் பேசி, டேனியலுக்கு சிறிது அவகாசத்தை அளித்த கவிமதியின் எண்ணத்தைப் புரிந்து கொண்ட நண்பனும், அவன் கண்களில் இருந்து வழியும் நீருக்கு உடனே அணை போட்டு, முகத்தைச் சீராக வைத்துக் கொண்டான்.

அதனால் சந்தோஷ் அவனிடம் பேசும் பொழுது மலர்ந்த முகத்துடன் எதிர்கொண்டு, அவனை அறிமுகப் படுத்திக் கொண்டான். மேலும் சற்று நேரம் சந்தியாவிடமும் சந்தோஷுடனும் பேசிக் கொண்டிருந்த டேனியல் அவர்களிடம் இருந்து விடைபெற்றான்.

''நீங்க ஏதோ முக்கியமா பேசிட்டு இருந்தீங்க போல. நான் வேணா அப்புறமா வரேன்'' என சந்தோஷ் டேனியலிடம் தெரிவிக்க,

டேனியல் சிரித்தவாறே, ''உங்க வாய் தான் அப்படிச் சொல்லுது... ஆனா கண்ணோ, 'இங்கிருந்து கிளம்பேண்டா'ன்னு என்கிட்டே மிரட்டுது. எனக்கு பயமா இருக்கு...'' என சந்தோஷைப் பார்த்துக் கூறியவன்,

''காதலர்களான உங்க ரெண்டு பேரையும் பிரிச்ச பாவம் எனக்கு வேண்டாம்டா சாமி!'' என கவிமதியைப் பார்த்துக் கூறிவிட்டுக் கிளம்பினான்.



டேனியலின் பேச்சிலும் பார்வையிலும் இருந்த பொருளை மற்றவர்கள் புரிந்து கொண்டார்களோ இல்லையோ சரியாகப் புரிந்து கொண்ட கவிமதி, அவன் கிளம்பும் முன், ''வீட்டுக்குப் போய் உன்னைக் கூப்பிடறேன்'' எனக் கையசைத்தாள்.

டேனியல் சென்றவுடன், சந்தியா முதலில் அவர்களை ஒரு நகைக் கடைக்கு அழைத்துச் சென்று கவிமதிக்கு ஒரு அழகான வைரப் 'பெண்டன்ட்'டை வாங்கி, தன் திருமணப் பரிசாக அளித்தாள்.

தன் நண்பர்களிடம் கூறியதையே சந்தியாவிடமும் தெரிவிக்கலாம் என நினைத்த கவிமதி, 'சந்தியாவைக் கடந்த மூன்று மாதங்களாகத் தானே தெரியும்... தான் ஏதாவது சொல்லி அவள் தப்பாக நினைத்துக் கொண்டால் என்ன செய்வது?' என எண்ணி, இறுதியில் அவளின் அன்பில் நெகிழ்ந்து அதை வாங்கிக் கொண்டாள்.

சந்தோஷோ, ''சந்தியா! நான் உனக்கு பிரெண்டா, இல்ல, மதியா? எனக்கு என்ன வாங்கிக் கொடுக்கற? சொல்லு... சொல்லு...'' எனத் தன் தோழியை நச்சரித்தான்.

''வேணா உனக்கும் ஒரு நெக்லஸ் வாங்கித் தரேன். போட்டுக்கோ'' எனக் கிண்டலடித்து அவனை அடக்கினாள். சிறிது நேரத்திலேயே மணம் புரிய இருப்பவர்களை, மனம் புரியவென தனித்து விட்டுவிட்டு சந்தியா கிளம்பினாள்.

சந்தியா சென்றவுடன், ''எனக்கு எதுக்கு இதெல்லாம் கொடுத்தாங்க?'' எனக் கவிமதி வினவ, ''அவ எப்போதுமே இப்படித்தான். அவளுக்கு யாரையாவது ரொம்பப்

பிடிச்சிருந்ததுன்னா, அன்பாலேயே கொன்னுடுவா'' என சொல்லிச் சிரித்தான் சந்தோஷ்.

பின்னர், ''மதி, நான் வரும்போது நீ டேனி கூட சீரியஸா பேசிட்டு இருந்த போல. நடுவுல வந்து கெடுத்துட்டேனா? ஏதாவது பிரச்சனையா?'' என கவிமதியிடம் கேட்டான்.

''ஒரு பிரச்சனையும் இல்லைங்க சந்தோஷ். அவனோட லவ்வைப் பத்தி...'' என ஆரம்பித்து, டேனியலின் காதல் கதையைத் தெரிவித்தாள்.

டேனியல் மிகவும் நன்றாகப் பாடுவான். அதனால் கல்லூரியில் இருந்து அடிக்கடி மற்ற கல்லூரிகளுக்குப் பாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள அனுப்பப் படுவான். அப்படி ஒரு தரம் சென்றிருந்த பொழுது தான் ரசிகை என்று ஒரு பெண்ணைப் பார்த்துப் பேசியிருக்கிறான். அவளைப் பிடித்துப் போய் நேசிக்கவும் ஆரம்பித்திருக்கிறான்.

ஆனால் இன்னும் அந்தப் பெண்ணிடம் தன் காதலைச் சொல்லாமல் முதலில் அவன் பெற்றோர்களிடம் பேசி சம்மதம் வாங்கிக் கொண்டபின் அவளிடம் சொல்லலாம் என்று காத்திருக்கிறான். அவன் பெற்றோர்கள், பெண் இந்து என்பதால் ஒத்துக் கொள்ள மறுக்கின்றனர்.

டேனியல் எவ்வளவோ போராடிப் பார்த்துவிட்டுத் தான் தன் தோழிக்குக் காதல் பிடிக்காது எனத் தெரிந்திருந்தும் அவளிடம் தூது போகச் சொல்லிக் கேட்டுக் கொண்டே இருக்கின்றான்.

கல்லூரியில் படித்த காலத்தில், ஒரு நாள் டேனியலின் தந்தைக்கு விபத்து ஏற்பட்டு அவருக்குத் தேவை



யான ரத்தத்தை உடனே தர முன்வந்த கவிமதியினால் அவரின் உயிர் காப்பாற்றப்பட்டது.

அதிலிருந்து அவளை ஒரு குடும்ப உறுப்பினராகத் தான் கருதுகிறார்கள் டேனியலின் பெற்றோர்கள். அதனால் தான் அவளைத் தூது போகச் சொல்லி மன்றாடிக் கொண்டிருக்கிறான். கவிமதியோ கல்யாணத்துக்கு முன்னால் வரும் காதலில் நம்பிக்கை இல்லை என நண்பனிடம் மறுத்துப் பேசினாள்.

கவிமதி சொன்னதை இடைவிடாமல் கேட்டுக் கொண்டிருந்த சந்தோஷ், ''மதி, இது உனக்கு பெரிய பிரச்சனை இல்லையா? நீ போய் பேசித் தான் பாரேன். டேனிக்கும் தைரியம் ஏற்படும்!'' என்றான்.

''என்ன சொல்லறீங்க? நான் போய் பேசணுமா? பார்த்தவுடன் வர்ற காதல்ல நம்பிக்கை இல்லாத நான் அவங்ககிட்ட என்னன்னு சொல்லிப் புரிய வைக்கிறது?''

''உன்னைப் போய் சம்மதம் வாங்கிட்டு வரச் சொல்லலை. சும்மா போய், பேசிப் பாருன்னு தான் சொன்னேன். நீ உதவி செய்வேன்னு நினைச்சுத் தானே உன்கிட்டே வந்து கேட்கிறான். பாவம் இல்ல அவன்?'' என மேலும் வாதாடினான் சந்தோஷ். யாருக்காக?

''இன்னைக்கு எத்தனை காதல்கள் தோல்வியில முடியுதுன்னு பார்க்கறீங்க தானே. வேதனையையும் வலியையும் கேட்டு வாங்கிட்டு, அப்பா - அம்மாவோட மனசையும் காயப்படுத்திட்டு அப்படி ஒரு காதல் தேவையா?

இப்போ நானும் நீங்களும் பெரியவங்க சொன்ன மாதிரி கேட்டு நடந்துக்கறோம். இதுல அவங்களும் சந்தோசமா இருக்காங்க. நாமளும் எவ்வளவு சந்தோஷமா

இருக்கோம். கல்யாணத்துக்கு அப்புறம் வரும் காதல் தான் நிரந்தரமா தொடரும்'' என்றாள்.

அவள் சொன்னதைக் கேட்டு, ''மதி! நீ இன்னும் அதை விடறதா இல்லையா?'' என சந்தோஷ் எரிச்சல் பட, "எதை விடறதா இல்லையா?'' என்றாள் குழப்பத் துடன் கவிமதி.

உடனே அவசரமாக முகத்தைச் சீர்படுத்திக் கொண்டு, "அதான் 'அப்பா - அம்மாவோட மனசைக் காயப்படுத் திட்டு காதல் தேவையா'ன்னு கேட்கறதை விடறதா இல்லையா?'' என விளக்கினான் சந்தோஷ்.

"நான் எப்போ உங்ககிட்டே அப்படிச் சொன்னேன்?'' என்றாள் குழப்பம் தீராமலேயே.

"வர வர நீ என்கிட்டே என்ன பேசினேன்னு மறக்க ஆரம்பிச்சுட்டியா? இப்படி ஒரு ஞாபக மறதிக் கேஸை கட்டிக்கப் போறேனா...'' எனப் போலியாகச் சலித்துக் கொண்டான்.

''கொஞ்ச நாளைக்கு முன்னாடி தான் யாரோ என் னோட 'ஞாபக சக்தி வாழ்க'ன்னு கோஷம் போட்டாங்க. இப்ப அப்படியே பல்டி அடிச்சுட்டாங்களே. இப்படி அடிக்கடி மனசு மாறுகிறவங்க கூட நான் காலமெல்லாம் இருக்கணுமா?'' என் அவளும் போலியாகச் சலித்துக் கொண்டாள்.

பேச்சு வேறு திசையை நோக்கி நகர்வதைக் கண்ட சந்தோஷ், ''மதி, நீ நினைக்கிற மாதிரி எல்லாம் காதல் இல்ல. அது ஒரு சுகமான அனுபவம். பாவம் டேனி! கொஞ்சம் யோசி...'' என மீண்டும் டேனியலுக்காகப் பேசினான்.



''சந்தோஷ், நானும் அதைத் தானே சொல்லறேன். காதலிங்க! ஆனா, கல்யாணத்துக்கு அப்புறம் காதலிங் கன்னு சொல்லறேன்'' என்றாள் அவள் கருத்தில் இருந்து மாறாமல்.

அவளையே சற்று நேரம் விழி அகலாமல் பார்த்தவன், ''சரி! நான் சொல்லறதச் சொல்லிட்டேன். அப்புறம் உன் இஷ்டம்'' என அத்தோடு நிறுத்திக் கொண்டான்.

வெளியில் வருண பகவான் தன் வேலையைச் செய்து கொண்டிருக்க, இன்னும் சற்று நேரம் கவிமதியும் சந்தோஷும் அங்கேயே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந் தனர். குடிப்பதற்கு ஏதாவது வாங்க சந்தோஷ் செல்ல, கவிமதி தன் கைப்பையில் இருந்து ஒரு தாளை எடுத்து எழுத ஆரம்பித்தாள்.

சந்தோஷ் திரும்பி வந்தபொழுது அவன் கோபமாக இருப்பதை உணர்ந்தவள், ''என்ன ஆச்சு?'' என்றாள் மென்குரலில்.

''நான் நூறு ரூபா நோட்டைக் கொடுத்து மீதி சில் லரை கேட்டா, அம்பது ரூபா தான் கொடுத்தீங்கன்னு என்னை ஏமாத்தப் பார்த்தான். அதான் நல்லா சண்டை போட்டுட்டு வந்தேன். பணம் வேணும்ன்னு வாய் விட்டுக் கேட்டா உடனே கொடுத்திடுவேன். ஆனா, என்னை ஏமாத்த முயற்சி செஞ்சா அப்புறம் நான் பொல்லாதவன் ஆயிடுவேன்'' என்றான் சீற்றத்துடன்.

''நீங்க 'பொல்லாதவன்' ஆகுங்க, இல்ல, 'படிக்கா தவன்' ஆகுங்க. எனக்குத் தாகமா இருக்கு. முதல்ல வாங்கினதைக் கொடுங்க'' என அவன் கையில் இருந் ததை வாங்கிக் குடித்தாள்.

அவள் சொன்னதைக் கேட்டு கோபத்தைத் தளர்த்தி முறுவலித்தவனிடம், ''இதைப் படிங்க'' என அவள் எழுதியதை அவனிடத்தில் நீட்டினாள்.

கவிமதியும், சந்தோஷும் கவிதைகள் எழுதுவதிலும் படிப்பதிலும் மிகுந்த நாட்டம் கொண்டவர்கள். ஆனால் இவர்களுக்குள் ஒரே ஒரு வித்தியாசம், சந்தோஷ் காதல் கவிதைகளை விரும்புவான்... கவிமதியோ காதல் அல்லாத கவிதைகளை ரசிப்பாள்.

அவள் மழை பற்றி எழுதிய கவிதையைப் படித்தவன், அதைப் பாராட்டிவிட்டு, ''நீ ஏன் காதல் கவிதை எழுத மாட்டேங்கிற?'' எனக் கேட்டான்.

''நான் எழுதறதை அனுபவிச்சு எழுதறேன். காதலைப் பத்தி எழுதற அளவுக்கு தோண மாட்டேங்குதே'' எனத் தோள்களைக் குலுக்கினாள்.

''இத்தனை நாள் தான் தோணலை. இப்பவாவது எழுதலாமே? எனக்காக... ப்ளீஸ்'' என்றான் கண்களில் மின்னும் ஆர்வத்துடனும் ஆசையுடனும்.

அவன் ஆசை கலந்த ஆர்வத்தைப் பார்த்து, ''சரி! உங்களுக்காக எழுத முயற்சிக்கிறேன்'' என்றாள். ஆனால், அவள் எழுதிய காதல் கவிதைகளில் அவன் படித்த முதல் கவிதை அவன் மனதை வாள் கொண்டு அறுத்தது.

மழை நின்ற பின் வீட்டிற்குச் சென்ற கவிமதி தன் அண்ணனிடம் அன்று நடந்த விஷயங்களான டேனியலின் தவிப்பு, சந்தியாவின் பரிசு மற்றும் சந்தோஷின் திடீர் சந்திப்பு என அனைத்தையும் கடகடவென்று ஒப்பித்தாள்.

அவள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த வினோத், ''மதி, டேனி பாவம் இல்லையா? உன்னை நம்பித் தானே உதவி கேட்கிறான். ஒரு தடவை போய் பேசித்



தான் பாரேன். அப்புறம் என்ன நடக்குதுன்னு பார்க்கலாம்'' என அறிவுறுத்தினான்.

ஏற்கனவே டேனியலின் கலங்கின விழிகளிலும், சந்தோஷின் பேச்சிலும் சிறிது இளகி இருந்தவள், தன் அண்ணனும் அதையே சொல்லவும், பேசிப் பார்த்தால் என்ன என நினைத்தாள்.

உடனே டேனியலை அழைத்து விஷயத்தைக் கூறியவுடன், ''ஹே! கவி! நிஜமாவா சொல்லற? தேங்க்ஸ் கவி!'' என்றவன், ''நன்றி சொல்ல உனக்கு, வார்த்தை இல்லை எனக்கு'' எனத் தன் நன்றியை பாடித் தெரிவித்துவிட்டுத்தான் பேசியை வைத்தான்.

# 4



கடிகார முட்கள் ஓயாமல் துரத்திக் கொண்டிருக்க, நாட்களும் ஒன்றை ஒன்று விரட்டிக் கொண்டு சந்தோஷ் - கவிமதியின் திருமண தினத்தை வந்தடைந்தன.

அதிகாலையில் நெருங்கிய சொந்தங்கள் புடை சூழ, கோவிலில் பெரியவர்களின் ஆசிகளோடு திருமணம் இனிதே நடந்தேறியது. மாலையில் ரிசப்ஷன் நடக்க, சொந்தங்களும், பந்தங்களும், நட்புகளும், தெரிந்தவர்களும் எனத் திருமண மண்டபமே மக்கள் வெள்ளமாகியிருந்தது.

கவிமதியை தன் பாதியாகக் கொண்ட பெருமிதமும், மகிழ்ச்சியும் முகத்தில் போட்டி போட்டுத் தாண்டவ

மாட, மேடையில் வரும் அனைவரிடமும் பேசிக் கொண்டிருந்தான் சந்தோஷ். அவன் அருகில், அழகிய பதுமை போல அமர்ந்து போட்டி போடும் பதியின் பெருமிதத்தையும், மகிழ்ச்சியையும் மௌனமாக ரசித்துக் கொண்டிருந்தாள் அவனின் பாதி.

இவர்களின் நாடகம் மேடையில் அரங்கேறிக் கொண்டிருக்க, அதைக் கண் கொண்டு பார்க்காமல் வேறொரு நாடகத்தை அரங்கேற்றிக் கொண்டிருந்தான் கவிமதியின் நண்பன் டேனியல்!

அவன் எதிர்பாராத வகையில் அவனின் மனதிற்குப் பிடித்தவளை அங்கே பார்த்து முதலில் திகைத்தான். பின் திகைத்த மனதைப் பகைத்து, வெற்றி கொண்டு இன்பமெனும் கொடியை நிலை நிறுத்தினான்.

இவனின் மௌன விளையாட்டைக் கண்ட அவளும் உண்மையைப் புரிந்து கொண்டாள். புரிந்து கொண்டவள், தவறாகக் கணக்கிட்டு, கவிமதியினால் தான் தன் காதல் இன்னும் கைகூடவில்லை என்ற முடிவுக்கு வந்தாள்.

'என் அப்பா - அம்மா என்னோட காதலுக்கு சம்மதிக்கலை ரியா! அவங்க சம்மதிச்ச பின்னாடி அதை நம்ம காதல் ஆக்குவோம். என்னோட காதலுக்காக உன்னை உங்க வீட்ல இருந்து பிரிக்க எனக்கு இஷ்டம் இல்ல. அதே போலத் தான் எனக்கும்.

நான் தனித்துப் போராட வேண்டி இருக்கு. என் தோழி, கவி வந்து பேசினா அவங்க ஒத்துக்குவாங்க. ஆனா, அவ பிடி கொடுக்க மாட்டேங்கிறா, ராட்சசி!

ஆனா, திரும்பவும் சொல்றேன். என் வீட்ல சம்மதம் கிடைக்கற வரைக்கும் அது என் காதல். அப்புறம் தான்



அது நம்ம காதலா மாறும். அதுவரை காத்திருக்கணும்' என டேனியல் என்றோ சொன்னது, இன்றும் தெளிவாக அவள் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது.

'ச்சே! என் காதலை அந்தரத்துல நிக்க வச்சுட்டு இவ மட்டும் சந்தோசமா கல்யாணம் பண்ணிக்கிட்டா' என முதல் முறையாக தன் கோபத்தை கவிமதியின் பால் மெலிதாக படர விட்டாள், டேனியலின் காதலுக்கு உரியவளான சந்தோஷின் தங்கை ப்ரியங்கா!

இவர்கள் தங்களின் மனதில் பேசிக் கொண்டிருப்பதனால் அவர்களை விட்டுவிட்டு, விழாவின் நாயகன் - நாயகியைப் பார்க்க நாம் மேடையேறிச் செல்வோம். இவர்களை வாழ்த்தவென வந்தவர்களிடம் இன்முகத்துடன் பேசிக் களைத்திருந்தனர் இருவரும்.

மணமக்கள் உணவருந்த நேரமாகி விட்டதால் அவர்களை அழைத்துச் செல்லவென வினோத் மேடையேறினான். அதே நேரத்தில் தாமதமாக வந்த சந்தோஷின் நண்பன் ஒருவன், அவனிடம் வாழ்த்துத் தெரிவித்த பின், ''சந்தோஷ், நீ எழுதின கவிதைகளைப் படிச்சப்போ நீ லவ் மேரேஜ் தான் பண்ணுவேன்னு நினைச்சேன்'' எனச் சொல்லி கலாட்டா செய்தான்.

சந்தோஷ் அவனுக்குப் புன்னகையை பதிலாகத் தர, வினோத்தோ, ''இதுவும் காதல் கல்யாணம் தானே...'' என மேலே தொடரும் முன், ''ஏம்பா வினோத், அவங்களை சாப்பிடக் கூட்டிட்டு வரச் சொன்னா நீயும் நின்னு பேசிட்டு இருக்கியா?'' என்றவாறே வந்தார் அவன் தந்தை ராமமூர்த்தி.

வினோத்தின் பதிலில் திகைத்த சந்தோஷ், 'இவனுக்கு எப்படித் தெரியும்? அவன்கிட்டே கேட்கணும்' என

மனதுக்குள் குறித்து வைத்துக் கொண்டான். அன்றே கேட்டிருந்தால் அவன் வாழ்வில் உருவாகிக் கொண்டிருக்கும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் சிறிது வலு இழந்திருக்கலாம்!

* * *

முதலிரவு அறைக்குள் அச்சம் கலந்த நாணத்துடன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள் கவிமதி. அறையில், சந்தோஷின் அரவம் இல்லாமல் கண்களை உருட்டி முழித்துக் கொண்டு சிலையாக நின்றவளை, பின்னாலிருந்து சந்தோஷின் கரங்கள் ஆசையுடன் தழுவின.

தழுவிய கரங்கள், அவள் சங்குக் கழுத்தில் ஒரு வைர மாலையை அணிவிக்க, உதடுகளோ முத்தங்களை மாலையாகக் கோர்த்து சிலைக்கு அணிவித்தன.

அவள் எண்ணி வந்தது என்ன? இங்கு நடப்பது என்ன? சந்தோஷை எப்படி எதிர்கொள்வது, என்ன பேசுவது என்ற படபடப்புடன் வந்தவளை, ஏதாவது பேசி சரி செய்வான் என எண்ணியவாறு வந்தவளை மேலும் படபடக்க வைத்துவிட்டானே!

இந்த திடீர் தாக்குதல் கவிமதியை நிலைகுலைய வைத்து, உளறவும் வைத்தது. ''சந்து, விடுங்க சந்து...'' என்றாள் திணறலாக. இத்தனை நாட்கள் சந்தோஷை, சந்து என செல்லமாக மனதுக்குள் அழைத்து வந்ததை வாய்விட்டு வெளியிலும் சொல்லிவிட்டாள்.

அவள் திணறலை ரசித்தவன், அவள் உளறலை விரும்பினான். ''சந்துவா... நம்ம ரெண்டு பேரோட செல்லப் பேருக்கு ஒரே பொருள் தான் மதி. நம்ம ரெண்டு பேரும் இனி ஒண்ணு தான்னு சிம்பாலிக்கா சொல்லறியா...'' என வெகுவாகக் கிறங்கினான்.



உதடுகள் பேசினாலும் முன்னால் செய்து கொண்டிருந்த வேலையை மட்டும் நிறுத்தவில்லை. அவனின் கரங்களும், இப்போது கூட்டு சேர்ந்து கொண்டு அவள் இடையை வளைத்துப் பிடிக்க, விரல்களோ அங்கே நடனம் பயின்று கொண்டிருந்தன.

''மதி, நான் கொடுத்ததுக்கு எனக்கு ஒண்ணும் பரிசு இல்லையா?'' என இருபொருள் பட அவன் கேட்க, கவிமதி நாணத்துடன் பதில் கூற இயலாமல் தத்தளித்தாள்.

கவிமதியின் கூந்தலில் குடியிருந்த நறுமணம் சந்தோஷை மயக்கி அழைக்க, முகத்தைக் கூந்தலில் புதைத்து வாசம் பிடித்தவன், கவிமதி அவன் மனதில் வாசம் செய்ய ஆரம்பித்த கதையை மெல்லச் சொல்ல ஆரம்பித்தான்.

''மதி, நீ என்னை விரும்பித்தான் கல்யாணம் பண்ணிக்கிட்டியா?''

''ம்ம்ம்...'' - வாயைத் திறக்காமல் காற்றை உதிர்த்தாள் மனைவி.

''எப்போயிருந்து என் மேலே லவ் வந்துச்சு...?'' - நேர்காணல் நடத்தினான்.

''தெ... தெரியலை...'' - திணறினாள் மனைவி.

''ஒரு மூணு மாசமா...'' - அவனே மனைவிக்கு எடுத்துக் கொடுத்தான்.

''ம்ம்ம்...'' மீண்டும் காற்றை உதவிக்கு அழைத்தாள்.

''நான் உன்னைக் கிட்டத்தட்ட ஆறு வருசமா விரும்பறேன் மதி'' - அவள் காதோடு ரகசியம் பேசி, காது மடலில் முத்திரை வைத்தான்.

''என்னது?'' - மனைவியோ திகைத்தாள், கணவனின் பிடியிலிருந்து விலகவும் முயன்றாள்,

''நிஜமடி பெண்ணே...'' - ராகம் பாடியவன், அவளை மேலும் இறுக்கிக் கொண்டான்,

''ஏதோ ஒரு கல்யாணத்துல பா... பார்த்து, பொண்ணு கேட்டு வந்ததா சொ... சொன்னாங்க. அப்பா - அம்மா தயங்கினாங்க, அண்ணன் தான் அவங்களை ஒத்துக்க வச்சாரு. ஆனா, நீங்க...'' - குழப்பத்துடன் நிறுத்தினாள்,

மனைவியைத் தன்புறம் திருப்பியவன், அவள் இதழ்களில் முத்திரையைப் பதித்து, ''ஐ லவ் யூ, மதி... 'மதி என் மந்தி...' ஐயம் வெரி ஹாப்பி...'' - பரவசத்துடன் மிளற்றினான்,

''உன்னைப் பார்த்த நாளிலிருந்து உன்னை மனகக்குள்ளே வைச்சிட்டு, உன்னை அடைய முடியுமான்னு நான் தவிச்சது கடந்த ஆறு வருஷமா மதி'' - கவிமதியைப் பார்த்ததிலிருந்து நடந்ததைக் கூறினான் அவள் ஆசைக் கணவன்,

* * *

சந்தோஷ், அப்போது தான் பீ. ஆர்க் முடித்திருந்தான். அவன் உறவில் நடந்த கல்யாணத்திற்குத் தன் பெற்றோருடன், மணமகளின் சார்பில் சென்றிருந்த போதுதான், அவன் கவிமதியை முதன் முதலில் பார்த்தது.

பார்த்தவுடன் கண்களும் சுவாசமும் அவளிடம் புலம் பெயர்ந்தன. மனமோ அவள் செல்லும் பாதையில் புலம் பெயர புறப்பட்டுக் கொண்டிருந்தது. கவிமதியிடம் பேசிட முயன்றவன் அவள் சாப்பிடச் செல்வதைப் பார்த்தான், ஏற்கனவே உணவுருந்தியிருந்தாலும், மீண்டும் சாப்பிடச் சென்றான்,



கவிமதியை நோட்டமிட்டுக் கொண்டே அவன் இலையில் வைக்கும் பதார்த்தங்களை ஒதுக்க, 'அட என்னப்பா பொண்ணுங்க மாதிரி சாப்பிடற. நல்லா கை நிறைய அள்ளிச் சாப்பிடு' என இலவசமாக ஆலோசனை வழங்கி அவன் இலையை நிரப்பிவிட்டுச் சென்றார் உறவினர் ஒருவர்.

அவன் வயிறு திண்டாடுவதைக் கூட உதாசீனப் படுத்த முடிந்தவனால் அவன் மனது அப்பெண்ணிடம் பேசுவதற்கு அல்லல்பட்டுக் கொண்டிருப்பதை ஏனோ உதாசீனப்படுத்த முடியவில்லை.

அவள் பெயரைத் தெரிந்து கொண்டவன், கைகழுவும் சமயத்தில், அவள் தனித்திருந்த பொழுது அவளிடம் சென்று பேசினான். தன் காதலை அவளிடம் அவசர கதியில் சொல்லவும் செய்தான், அவள் மறுக்கவும் தொடர்ந்து வாதிடவும் செய்தான்.

ஆனால், கவிமதியோ இவன் முகத்தைக் கூடப் பாராமல் மூன்று முக்கிய விஷயங்களை அவனிடம் திடமாக வலியுறுத்தி விட்டுச் சென்றாள்.

முதலில், தனக்கு இன்னும் கல்யாண வயது வரவில்லை என்று. இரண்டாவதாக, புற அழகைப் பார்த்து வரும் காதலில் நம்பிக்கை இல்லை அதனால் பெற்றோர்கள் மனதை வருத்தாமல் அவர்கள் சொல்லும் மாப்பிள்ளையை தான் திருமணம் செய்து கொள்ளப் போவதாக என்று. முடிவாக, இனிமேல் தன்னை எப்போதும் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று.

அவள் சென்றதும் நீண்ட பெருமூச்சை வெளியேற்றி, திரும்பிப் பார்த்த சந்தோஷ் அதிர்ந்தான்.

'அப்பா! அய்யய்யோ நான் கவி கூட பேசினதக் கேட்டுட்டாரா? கடவுளே, என்னைக் காப்பாத்து' என

கடவுளுக்கு அவசரமாக ஒரு மனு எழுதிப் போட்டு விட்டு, தன் தந்தையிடம், ''என்னப்பா, இங்கே?'' என இயல்பான குரலில் கேட்டான்.

''நமக்குத் தெரிஞ்சவர் வந்து, 'என்னங்க பையன் சாப்பிடறதுக்கு இத்தனை யோசிக்கிறான். வளர்ற பையன் இல்ல. நல்லா சாப்பிடச் சொல்லிட்டு வந்தேன்'ன்னு சொல்லிட்டுப் போனார். இப்போ தானே சாப்பிட்டான் அதுக்குள்ளே மறுபடியும் பசிச்சிடுச்சான்னு பார்க்க வந்தேன். சாப்பிட்டியாப்பா?'' என பதிலுக்கு அவர் கேட்டார்.

அவரின் குரலிலிருந்து அனைத்தையும் கேட்டாரா எனக் கண்டு பிடிக்க முடியாமல் திணறியவன்,

''அ... அது அப்பவே ஆச்சுப்பா. பாத்ரூம் போக வந்தேன்ப்பா'' என வரிக்கு வரி 'அப்பா' போட்டுச் சமாளித்தான்.

''நல்லா சமாளிக்கற கண்ணா. அந்தப் பொண்ணு சொன்னதை எல்லாம் கேட்டேன். நாளைக்கு வீட்டுக்குப் போனதும் இதைப் பத்தி பேசலாம். இங்க வச்சு வேண்டாம். யார் காதுலேயாவது விழுந்துடப் போகுது. கொஞ்சம் பொறுமையா இரு'' என நேரடியாக விஷயத்தைப் போட்டு உடைத்தார்.

பின்னர், ''நீ பேசாம வக்கீலுக்குப் படிச்சிருந்தா நல்லா வாதாடியிருப்ப. இது தெரியாம உன்னை பீ.ஆர்க் படிக்க வச்சுட்டேனே'' என்ற போலியான அங்கலாய்ப்புடன் முடித்துவிட்டு நகர, முகத்தில் டன் கணக்கில் அசடு வழிய நின்றான் சந்தோஷ். அவன் செய்தது தந்தைக்குத் தெரிந்துவிட்டதே!



# 5



உறவினரின் திருமணம் முடிந்து வீட்டிற்குச் சென்ற மதியழகன், இளைய மகனை அழைத்து கவிமதியைப் பற்றிப் பேசினார். ''சந்தோஷ், நீ அந்தப் பொண்ணு கிட்டே பேச ஆரம்பிச்சப்பவே வந்திட்டேன். அந்தப் பொண்ணு சொன்னதுல எந்தத் தப்பும் இல்ல.

உனக்கும் இப்போ தான் இருபத்தியொரு வயசாகுது. நீ மேற்கொண்டு வாழ்க்கையில என்ன பண்ணறதுன்னு யோசி. இன்னும் நாலு அஞ்சு வருஷம் போகட்டும். அப்பவும் கவி உன் மனசுல இருந்தா, அப்புறம் முடிவெடுக்கலாம்'' என்றார் எதார்த்தத்தை உணர்த்தும் விதமாக.

சந்தோஷ் ஒன்றும் பேசாமல் தயக்கத்துடன் உட்கார்ந்திருக்க, ''டைம் எடுத்து நல்லா யோசிச்சு ஒரு முடிவுக்கு வா'' என்றார் தந்தை.

''அப்பா... கவிக்கு அதுக்குள்ளே கல்யாணம் ஆயுடுச்சுன்னா...'' என இழுத்தான் மகன்.

அவன் சொன்னதைக் கேட்டுச் சிரித்தவர், ''சந்தோஷ், பார்த்தவுடனே எல்லாம் நமக்கு கிடைக்கணும்ன்னு ஆசைப்படும் மனசு. உன்னோட அவசரப் புத்தி தான் எனக்குத் தெரியுமே. எதையும் யோசிக்காம பேசிடுவேன்னு. நீ கவியோட பேசறதுக்கு முன்னாடி எந்த

அளவு யோசிச்சிருப்பேன்னு அந்தப் பொண்ணுகிட்டே பேசினதுலேயே தெரிஞ்சதே.

இது ஒண்ணும் நாம வாங்கி உபயோகப்படுத்திட்டு வீசற பொருள் இல்ல. ஒரு பொண்ணோட மனசு... வாழ்க்கை. அதனால நீ முதல்ல தெளிவா யோசிச்சு முடிவெடு.

கொஞ்ச வருஷம் கழிச்சு, அப்பவும் உனக்கு இதே நினைப்பு இருந்தா நானே போய் அவங்க வீட்ல பேசறேன். என்னை நம்பு. யார் கிட்டேயும் இதைப் பத்திச் சொல்லிட்டுத் திரியாம இரு'' எனக் கூறி மகன் யோசிப்பதற்குத் தனிமையை கொடுத்துவிட்டு நகர்ந்தார்.

அவன் தந்தை கூறியதையும், கவிமதி கூறியதையும் பற்றி யோசித்த சந்தோஷுக்கு, அவர்கள் இருவரும் சொன்ன விஷயங்களில் இருந்த நியாயத்தை ஒத்துக் கொள்ளத் தான் வேண்டி இருந்தது.

ஒரு வாரம் கழித்துத் தன் தந்தையிடம், அவர்கள் அலுவலகத்திற்கே வருவதாகவும் ஆனால் அதே சமயம் மேற்படிப்புப் படிக்க முயற்சி செய்யப் போவதாகவும் கூறி, அவர்களின் கட்டுமானத் தொழிலைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்தான் சந்தோஷ்.

அவன் தந்தை கூறியதைப் போல இது ஏர்ப்பாக இருக்குமா என ஒரு மனது சிந்திக்க, காதல் கொண்ட மறு மனதோ அவனின் சிந்தனையை நிந்தித்து, ஏனெனில் நிந்தித்த மனமானது, கவிமதியை சந்தித்த உடனேயே ஆசையுடன் அவன் முகத்தை வரைந்து வைத்துக் கொண்டதே!



இப்படியே அவன் தவிப்புக்கும் காதலுக்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருக்க, காலம் மட்டும் எதன் பிடியிலும் சிக்காமல் ஒரு வருடத்தைத் தாண்டியது. மேற்படிப்பு படிக்க இடம் கிடைக்க, அங்கே ஒரு இன்ப அதிர்ச்சி காத்துக் கொண்டிருப்பதை அறியாமல் இங்கிலாந்துக்குப் பயணமானான் சந்தோஷ்!

படிக்கச் சென்ற இடத்தில் தன்னுடன் அறையில் தங்கி இருக்கும் வினோத்துடன் நட்பு கொண்டான் சந்தோஷ். அவன் எம்.பி.யே. படிக்க, வினோத் எம்.எஸ். கட்டடக் கலை படித்தான்.

சில மாதங்களிலேயே தன் நண்பன் வினோத்தின் தங்கை தான் கவிமதி என அவன் காட்டிய புகைப்படத்தில் இருந்து அறிந்து கொண்டவன், லைசென்ஸ் இல்லாமலேயே வானத்தில் பறக்க ஆரம்பித்தான்!

ஏற்கனவே கவிமதியின் அழகினால் வசியம் செய்யப்பட்டவன், அவன் நண்பனின் கைங்கரியத்தால் கவிமதியின் புராணத்தை தினமும் கேட்க நேர, அவன் கவிமதியிடம் முழுவதுமாகவே தஞ்சமடைந்தான். தஞ்சமடைந்ததை வினோத்திடம் மறைத்தும் விட்டான்.

சில சமயங்களில் வினோத் தங்கையுடன் தொலைபேசியில் பேசும் பொழுது ஸ்பீக்கர் மோடில் போட்டு விடுவான். அதுவும் அவன் தங்கை பேசினால் இப்போதைக்கு ஓய மாட்டாள் என அறிந்தவனுக்கு இதைச் செய்ய யோசனை வருவது இயற்கை தானே.

அண்ணன் - தங்கை இருவரும் தொலைபேசியில் உரையாடுவதை, சந்தோஷ் காதில் அணியும் கருவியில் பாட்டுக் கேட்கும் போர்வையில் ஒட்டுக் கேட்டு மகிழ்ந்தான்.

ஒருமுறை கவிமதி தன் அண்ணனிடம் பேசும் பொழுது, "அண்ணா, இன்னிக்கு 'எர்த் ஹௌர்' பத்தி ஒரு ஆர்டிகல் படிச்சேன். நீங்க கேள்விப்பட்டிருக் கீங்களா?" எனக் கேட்க, அண்ணனும், "கேள்விப்பட்டிருக் கேன் கவிம்மா. ஆனா, முழுசா விவரம் தெரியாது" என்றான்.

"எர்த் ஹௌர், 2007 ஆஸ்திரேலியாவில இருக்கிற சிட்னில தான் முதன் முதலா கடைப்பிடிக்க ஆரம்பிச் சாங்க. ஒரு குறிப்பிட்ட நாள்ல எல்லோரும் எட்டரை மணியிலிருந்து ஒரு மணி நேரத்துக்கு எல்லா லைட் டையும் ஆஃப் பண்ணி வச்சாங்களாம். அப்போதி லிருந்து ஒவ்வொரு வருஷமும் அதையே செய்யறாங்க.

இப்போ எல்லா நாடுகளிலேயும் ஃபாலோ பண்ண றாங்க. பூமியில இருக்கிற இயற்கை வளத்தை அழிய விடாம, நம்மளோட எதிர்காலச் சந்ததியினருக்கு, எவ்விதச் சிக்கல்களும் பிரச்சனைகளும் இல்லாத மாதிரி இயற்கை வளங்கள் கிடைக்க உதவும் விதமா இதைக் கடைப்பிடிக்கறாங்க.

எவ்வளவு நல்ல விஷயம் இது. இந்த வருஷம் நானும் அதைச் செய்யலாம்னு இருக்கிறேன்" என குதூகலத் துடன் விவரித்தாள்.

தங்கை சொல்வதை இடையிடாமல் கேட்டுக் கொண் டிருந்தவன், "அது தான் நம்ம ஊர்ல அடிக்கடி அவங் களே கரண்ட்டை கட் பண்ணிடறாங்களே. அப்புறம் நீ புதுசா என்ன பண்ணப் போற கவிம்மா?" என்றான் அண்ணன்.

"அதில்ல அண்ணா! கேட்காம எடுத்துக்கிட்டா எரிச்சல் தான் வரும். அதனால கரண்ட்டை கட் பண்ணினா



நல்லா திட்டுவோம். இதே, நாமளா ஒண்ணை விட்டுக் கொடுத்தா திருப்தியாவும் சந்தோஷமாவும் இருக்கும். அதனால நாளைக்கு நைட், லைட் எல்லாம் ஆஃப் பண் ணிட்டு நம்ம பால்கனியில போய் உட்கார்ந்து நிலவை ரசிக்கப் போறோம்" என்றாள் தங்கை.

ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த சந்தோஷிற்கு அதற்கு மேல் அவர்கள் பேசியது எதுவும் காதில் விழ வில்லை. மறுநாள் இரவு எட்டரை மணிக்காக தவமிருக்க ஆரம்பித்தான். எல்லாம் காதலியின் விருப்பத்தை நிறை வேற்றத்தான்.

மறுநாள் இரவு, வினோத் வகுப்பிற்குச் சென்றிருக்க, சந்தோஷோ விளக்குகளை அணைத்து வைத்தவன், சில மணி நேரங்களுக்கு முன்னர் கவிமதி பேச்சு வார்த்தை நடத்திய வெண்மதியிடம், தன்மதியைப் பற்றி விசா ரித்துக் கொண்டிருந்தான்.

இதைப் போலவே கவிமதிக்கு பிடித்தது என அவள் அண்ணனிடம் சொல்வதை இவன் யாருக்கும் தெரியா மல் கடைப்பிடித்தான். ஆனால், மறந்தும்கூட அவன் புகைப்படம் கவிமதியின் பார்வையில் படாதவாறு பார்த்துக் கொண்டான்.

எங்கே அவன் கண்களில் பட்டு, அவனைப் பற்றிய ஞாபகத்தைக் கிளறிவிட்டு அவனே அவன் காதலுக்கு குழி வெட்டிக் கொள்வானோ என்ற நல்லெண்ணத்தில் தான்!

சந்தோஷ் இந்தியாவிற்கு ஆறு மாதத்திற்கு முன் வந்ததன் முதல் காரணமே, கவிமதியைப் பார்க்க வேண் டும் என்ற ஆசையில் தான். வரும் பொழுதே வினோத் தையும் தன்னுடன் வருமாறு வற்புறுத்தினான். அவனோ சில மாதங்கள் கழித்து வருவதாக வாக்களித்தான்.

வினோத்தைப் பார்க்கும் சாக்கில் அடிக்கடி அவன் வீட்டுக்குச் சென்றால் கவிமதியையும் பார்க்கலாம் என கணக்கிட்டவனின் எண்ணத்தில், நண்பனின் பதில் டன் கணக்கில் மண்ணை வாரி இறைத்தது.

இந்தியா வந்த பின், என்ன தான் தொழிலில் போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்தாலும், சந்தோஷின் வாழ்க்கை பிடிப்பில்லாமலே இருப்பது போலத் தோன் றியது. அச்சமயத்தில் தான் அவன் தந்தையே அவ னிடம் வந்து அவன் திருமணப் பேச்சை ஆரம்பித்தார்.

''சந்தோஷ், உனக்கும் கல்யாண வயசு வந்துடுச்சு... கவிமதி இன்னும் உன் மனசுல இருந்தாச் சொல்லு... போய் பேசறேன்'' எனச் சொல்லி அவனைத் திக்குமுக் காட வைத்தார் மதியழகன்.

''போய்ப் பேசுங்க... அப்பா, கவி யாரு தெரியுமா? என் பிரெண்ட் வினோத்தோட தங்கச்சிப்பா'' என்றான் முகமெல்லாம் சிரிப்புடன்.

''அப்படியா? ரொம்ப வசதியாப் போச்சு. கவிமதி யோட அப்பாவையும் எனக்கு முன்னாடியே தெரியும். நம்ம பர்சனல் பேங்க் அக்கௌண்ட் அவர் வேலை செய் யற பாங்குல தான் இருக்கு'' என விஷயத்தைப் பகிர்ந்து கொண்டார் தந்தை.

அதன்பின் கவிமதியின் தந்தையிடம் சென்று, அவரிடம் பேசி, தன் மகனைப் பற்றிய விவரங்களைக் கொடுத்துவிட்டு, கவிமதியைப் பற்றின விவரங்களை வாங்கி வந்தார் மதியழகன்.

வந்தவர் மகனிடம், ''நீ கவியை லவ் பண்ணித்தான் பொண்ணு கேட்டேன்னு யாருக்கும் தெரியாது. கவியை ஒரு சொந்தக்காரங்க கல்யாணத்தில பார்த்து, பிடிச்சதா



சொல்லி இருக்கேன். நீயும் யார்கிட்டேயும் எதும் சொல் லிடாத. காதல் கல்யாணம்ன்னா அப்புறம் கவி வேண் டாம்ன்னு சொல்லிடப் போறா'' என எச்சரித்தார்.

தந்தை சொன்னதைப் போலவே வரி பிசகாமல், தன் காதலைப் பற்றி யாரிடமும் மூச்சு விடாமல் இருந்தான்... தன் தோழி சந்தியா உட்பட!

சந்தோஷின் புகைப்படத்தைப் பார்த்தவுடனேயே வினோத் அவனை அழைத்துத் தன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள, அதன் பின்னர் வெகு விரைவிலேயே பேச்சு வார்த்தை முடிந்து இருவருக்கும் நிச்சயம் செய்து மூன்று மாதங்கள் கழித்துத் திருமணத்தை வைத்தனர்.

கவிமதிக்கு, எப்போதோ பார்த்த சந்தோஷை சுத்தமாக நினைக்கவில்லை. சந்தோஷின் மனம் கவர்ந்த கவிமதி, தற்பொழுது திருமதி ஆகி முதலிரவு அறையில் முழுமதி யாய் ஜொலித்துக் கொண்டிருந்தாள்!

இதுகாறும் சந்தோஷ் சொன்னதை இடையிடாமல் கேட்ட கவிமதி, உணர்ச்சி வசப்பட்டு ஒன்றும் பேசத் தோன்றாமல் கண்களில் நீர் கோர்க்க கணவனையே பார்த்தாள். கணவனின் கண்களுக்கோ அவளின் கண் ணீர், கரைபுரண்டு வழிந்த காதலை மறைத்து, தப்பாக அர்த்தம் கொள்ள வைத்தது.

''மதி, எனக்குத் தெரியும். உனக்கு காதல் பிடிக்கா துன்னு. முன்னாடியே உண்மை தெரிஞ்சா நீ கல்யாணத் துக்கு ஒத்துக்க மாட்டியோன்னு தான் இதுவரை உன் கிட்டே மூச்சு விடலை. என்னைத் தப்பா நினைச்சுக் காத...'' எனப் பதறினான்.

அவன் பதிலால் பேச்சு வராமல் தவித்துக் கொண் டிருந்தவளின் மௌனம் இவனை திண்டாட வைத்தது.

''உனக்குக் கல்யாணத்துக்கு அப்புறம் வர்ற காதல்ல எப்படி நம்பிக்கையோ அது மாதிரி எனக்கு முன்னாடி வர்ற காதல்ல நம்பிக்கை. எனக்குப் பிடிச்ச மாதிரி உன்னை முன்னாடியே காதலிக்க ஆரம்பிச்சுட்டேன். நீ உனக்குப் பிடிச்ச மாதிரி இனிமேல் என்னைக் காதலி. இதுல ரெண்டு பேரும் ஜெயிச்சுட்டோமே'' என மனைவியிடம் தன் காதலைப் புரிய வைக்க வாதாடினான்.

அவன் வாதத்தைக் கேட்ட மனைவியோ, 'இவன் தந்தை சொன்னதைப் போல இவன் வக்கீலுக்குப் படித்திருக்கலாம். தன் காதலுக்காக, தன்னைப் புரிய வைத்துவிடும் வேகத்தில் மனைவியான காதலியிடமே எப்படி வாதாடுகிறான்' என நினைத்துப் பெருமிதம் கொண்டாள்.

கணவனின் தவிப்பையும் பதற்றத்தையும் உணர்ந்தவள், அதற்கு மேல் அவனைச் சோதிக்காமல் அவனே எதிர்பார்க்காதவாறு அவனை இறுக்கமாக அணைத்துக் கொண்டு, ''சாரி சந்து! எனக்கு உங்களைச் சுத்தமா ஞாபகம் இல்ல. ஆனா, எப்பவோ பார்த்த என்னை இவ்வளவு நாளா நினைச்சுட்டு, கடைசியில என்னையே கல்யாணமும் பண்ணிக்கிட்டீங்க.

உங்க காதலுக்குக் கைமாறா என்ன செய்யப் போறேன்னு தெரியலை. ஆனா, ஒண்ணு மட்டும் நிச்சயம். உங்களை நான் வாழ்க்கை முழுவதும் மூச்சு முட்ட காதலிக்கப் போறேன்'' என கணவனின் கன்னத்தில் முத்தமிட்டாள்.

அவளின் இந்தச் செய்கையை எதிர்பாராத சந்தோஷ் திக்குமுக்காடிப் போனான். ''என் காதலைப் புரிஞ்சுகிட்டதுக்கு தேங்க்ஸ் மதி. இதுக்காக உன்கிட்டே நிறையப்



போராட வேண்டி இருக்குமோன்னு நினைச்சேன். ஆனா அசத்திட்டடா!'' என்றான் கணவன், உல்லாசமாக.

கணவன் சொன்னதைக் கேட்டு முறுவலித்தவளை சீண்டும் விதமாக, ''மதி, நீ என்னை மூச்சு முட்டற அளவுக்கு லவ் பண்ணறதை ஒத்துக்கறேன். அதுக்காக இப்படியா இறுக்கி அணைப்பே? என்னால மூச்சுவிட முடியலை...'' என கவிமதி அவனை இறுக அணைத்துக் கொண்டிருப்பதைக் கிண்டல் செய்தான்.

வெட்கத்துடன் சிரித்தவாறே அவனைச் செல்லமாக மார்பில் அடித்து, ''இதுக்குப் பழிக்குப் பழி வாங்காம விட மாட்டேன் மை டியர் புருஷா...'' எனக் கூறி விலக முயன்றவளை, ''மை டியர் புருஷா' என அவள் ஆசையாக அழைத்ததில் கிறங்கிய சந்தோஷ், விட்டால் தானே!

அவர்களின் செல்லச் சீண்டல்களும், தீண்டல்களும் இனிதே அரங்கேற, அவர்கள் இல்லறத்தை நல்லறமாகத் தொடங்கும் வேளையில், அவர்களுக்குத் தனிமையைக் கொடுத்து நகர்வோம்.

## 6



திருமணம் முடிந்து நான்கு நாட்கள் கழித்துத் தங்களின் குலதெய்வ கோவிலுக்குச் சென்று வரலாம் என்றும் திருமணத்திற்கு வர இயலாத வயதானவர்

களிடம் ஆசிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் சந்தோஷ் - கவிமதியுடன் சேர்ந்து மதியழகனின் குடும்பத்தினர் அனைவரும் பொள்ளாச்சிக்குப் பயணமாயினர்.

ரயில் நிலையத்தில் காத்துக் கொண்டிருந்த கவிமதியின் பெற்றோர்களிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பிய சந்தோஷ், வண்டி நகர்ந்த பின்னும் வினோத் நகராமல், இறங்குவதற்கு எந்த அறிகுறியையும் காட்டாமல் இருப்பதைப் பார்த்தவன் பதறினான்.

''வினோத், வண்டி நகர ஆரம்பிச்சிடுச்சு. சீக்கிரமா கீழே இறங்குடா'' என அவனை துரிதப்படுத்தினான்.

வினோத்தோ அவன் சொன்னதைக் காதில் போட்டுக் கொள்ளாமல், ''நானும் உங்ககூட வரலாம்ன்னு இருக்கேன்'' என நிதானமாக பதிலளிக்க, ''போதும் விளையாடினது. இறங்குடா'' என்றான் சந்தோஷ் கடுமையாக.

''சந்தோஷ், நீதான் என்னை உங்க ஊருக்குக் கூப்பிடலை. ஆனா, எனக்கு மேலிடத்துல இருந்து அழைப்பு வந்துடுச்சு. சாப்பிட ஆசையா கூப்பிடறப்போ மறுப்புச் சொல்ல முடியுமா? அதான் உடனே கிளம்பிட்டேன்'' எனச் சிரித்தவாறே சொன்னான் நண்பன்.

நண்பர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த கவிமதியும் வினோத்துடன் சேர்ந்து சிரிக்க, கவிமதி தான் அழைப்பு விடுத்திருக்கிறாள் என நினைத்துக் கொண்டான் சந்தோஷ்.

திருமணம் முடிந்தவுடனே கவிமதி தனித்துச் செல்லும் முதல் பயணம். அதுவும் புதியவர்களான இவர்களின் நடுவில் அவள் பிறந்த வீட்டு ஆட்கள் இருந்தால் கவிமதிக்கு கலக்கம் சிறிது குறையும் என மருமகளின் மனநிலைமையை மனதில் கொண்டு மதியழகன் தான் வினோத்தின் வீட்டில் அழைப்பு விடுத்திருந்தார்.



நண்பன் மற்றும் அண்ணன் என இரண்டு உறவு முறையை ஒரு சேரக் கொண்டவன் சென்றால் போதும் என்று வினோத்தை மட்டும் அனுப்பினர் கவிமதியின் வீட்டில். இதை அன்றே வினோத் தெளிவுபடுத்தி இருந்தால் உருவாகிக் கொண்டிருந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலத்தின் வலு மேலும் சிறிது குறைந்திருக்கலாம்!

வழி நெடுகிலும், ப்ரியங்கா கவிமதியின் பக்கம் திரும்பவேயில்லை. அவளின் அன்னையும் பெரிதாக கவிமதியிடம் பேசாமல் ஒதுங்கிக் கொண்டதைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தாள். இவர்கள் ஒதுங்கியிருக்க மற்றவர்கள் கதை அடித்துக் கொண்டு ஊர் போய் சேர்ந்தனர்.

மறுநாள் காலையில் விடியலிலேயே எழுந்த கவிமதி பறவைகளின் சத்தத்தில் வெளியில் ஈர்க்கப்பட்டு வெளியில் வந்தவள், அவர்களின் தென்னந்தோப்பில் ஒவ்வொன்றையும் பார்த்து, ரசித்து சின்னக் குழந்தையின் குதூகலத்துடன் உலவிக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்திலேயே, ''ஹாய் மதி செல்லம்ஸ்...'' என்றவாறே வந்து சேர்ந்தான் சந்தோஷ்.

கணவனிடமும் ஊரின் அழகை, இயற்கை ததும்பிய சூழலைப் பற்றி ஆர்ப்பரித்துக் கொண்டாள் கவிமதி. கணவனும் மனைவியும் பேசிக் கொண்டிருக்க, சற்று நேரத்தில் அவர்களைத் தேடிக் கொண்டு சந்தியா அங்கு வந்து சேர்ந்தாள்.

''இங்க என்ன பண்ணிட்டு இருக்கீங்க? உங்களைக் காணாம வீடே தவிச்சுப் போயிடுச்சு'' எனக் கூறி கண்களை உருட்டினாள்.

''வந்துட்டா கரடி! நீ எல்லாம் ஒரு பிரெண்டா. புதுசா கல்யாணம் ஆனவங்க தனியா பேசட்டும்ன்னு விட வேண்டியது தானே?'' என்றவன் கவிமதியை கேடயமாக பயன்படுத்தி மறைந்து கொள்ள முயன்றான்.

''ஹே டோன்ட் சூட் தெ மெசென்ஜர்' நான் வெறும் ஒற்றன் தான். தேடறாங்களேன்னு கூப்பிட வந்தா என்னை சொல்லறியா? தனியா பேசறதை எல்லாம் உங்க ரூம்ல வச்சுக்கோங்க'' என சந்தோஷை அடிக்க முயன்று, தோற்றாள் சந்தியா.

சந்தியா தோற்றுக் கொண்டிருக்க, கவிமதி, சந்தோஷின் முன்னிருந்து சட்டென்று விலகி, சந்தியாவை சந்தோசமடைய வைத்தவள், சந்தோஷை முறைக்க வைத்தாள்.

தோழியிடமிருந்து முதுகில் நன்றாக வாங்கிக் கொண்ட சந்தோஷ், ''நீ எல்லாம் ஒரு வைஃப்பா? இப்படிப் புருஷனை அடி வாங்க வச்சு வேடிக்கைப் பார்க்கறியே. இந்தக் கொடுமை எங்காவது நடக்குமா?'' என்றான் மனைவியிடம்.

''அடிச்ச உங்க பிரெண்டை விட்டுட்டு என்னை சொல்லறீங்களா?'' என கவிமதியும் மல்லுக்கு நின்றாள்.

''சந்தியா, இவங்களை கூப்பிட வந்த நீயும் இவங்களோட சேர்ந்து என்ன பண்ணிட்டு இருக்க? சீக்கிரமா போய் கிளம்புங்க. நேரமாச்சு...'' என அதட்டி அவர்களை ஓட வைத்தான் விக்னேஷ்.

அறைக்குச் சென்ற கவிமதி, ''சந்தோஷ், நீங்களும் சந்தியா அக்காவும் எவ்வளவு லக்கி தெரியுமா? பிரெண்ட்ஸ் ரெண்டு பேரும் ஒரே வீட்ல காலம் முழுக்க இருக்கிற பாக்கியம் யாருக்குக் கிடைக்கும்? உங்களைப்



பார்த்தா எனக்குப் பொறாமையா இருக்கு'' என்றாள் வெள்ளை மனதுடன்.

''ஆமாம் மதி. உண்மையிலேயே சந்தியா எனக்கு அண்ணியா வந்தது என் அதிர்ஷ்டம் தான்'' என்றான் அவனும் மனப்பூர்வமாக.

ஒரு வழியாகக் கிளம்பி, தெய்வத்தை வழிபட்ட பின் தங்களின் உறவினர்களைச் சென்று சந்தித்தனர். திருமணத்திற்கு வர முடியாமல் போனவர்களில் சிலர் கவிமதியைப் பார்த்து, ''மருமகப் புள்ள ரொம்ப அழகா, லட்சணமா இருக்கா. எங்க கண்ணே பட்டுடும் போல இருக்கே. வீட்டுக்குப் போய் ரெண்டு பேருக்கும் சுத்திப் போடுங்க'' என கைகளை வழித்து திருஷ்டி கழித்தனர்.

அவர்களுக்குப் பதிலாக புன்னகையைத் தந்த கவிமதி, புது பெண்ணுக்கே உரிய நாணத்துடன் தலையை குனிந்து கொண்டாள். ஏற்கனவே பூரிப்பில் பூரித்திருந்தாலும் மீண்டும் மீண்டும் மலர்ந்து கொண்டிருந்தான் சந்தோஷ்.

பெரியவர்கள் சொன்னதைக் கேட்ட ப்ரியங்காவோ, 'மூஞ்சி அழகா இருந்தா போதுமா? மனசும் இல்ல அழகா இருக்கணும்'' என ஒருவருக்கும் கேட்காதவாறு, ஆனால், கவிமதிக்கு மட்டும் கேட்கும் வண்ணம் முணுமுணுத்தாள்.

அவள் சொன்னதைக் கேட்டுத் திகைத்த கவிமதி, உடனே தலையை நிமிர்த்திப் ப்ரியங்காவைப் பார்க்க, அவளோ ஏதும் நடவாததைப் போல எங்கோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

'என்னம்மா?' - யாரோ கேட்க, ஒன்றுமில்லை எனத் தலையசைத்த கவிமதிக்குத் தான் ஒரு மாதிரியாகப்

போய்விட்டது. 'ப்ரியா ஏன் இப்படி எல்லாம் பேசறா?' எனக் குழப்பமாக இருந்தது கவிமதிக்கு.

அன்று இரவு சாப்பிடவென்று ஒருவரின் வீட்டிற்குச் சென்றிருந்தபொழுது, அங்கு இருந்த வயதானவர் ஒருவர், ''புதுப் பொண்ணு கண்ணுக்கு லட்சணமா மகா லட்சுமி மாதிரி இருக்காப்பா'' என மதியழகனிடம் வாய் நிறையப் புகழ்ந்தார்.

''இவங்க தான் மெச்சிக்கணும். மகாலட்சுமியாம். மனசெல்லாம் ஒரே குப்பை'' என மீண்டும் கவிமதியின் காதுக்கு மட்டும் கேட்கும் வண்ணம் முணுமுணுத்தாள் ப்ரியங்கா.

இம்முறை தலையை உயர்த்திப் பார்க்காமல் அமைதியாகவே இருந்தாள் கவிமதி. தலையை உயர்த்திப் பார்த்து, ப்ரியங்கா வேறு எங்காவது பார்த்துக் கொண்டிருந்தால் இவள் தான் அசடு வழிய நேரும் என மௌனமாக நின்று கொண்டாள்.

அவளின் இந்தச் செயல் ப்ரியங்காவை எரிச்சலடையச் செய்தது. ஆனாலும், ஏதோ ஒன்றை கவிமதியின் காதில் முணுமுணுப்பதை முழு நேர வேலையாக இல்லாவிடினும் பகுதி நேர வேலையாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் ப்ரியங்கா.

கவிமதியின் குடும்பம், மூன்று நாட்களில் வந்த வேலையை முடித்துக் கொண்டு மனநிறைவுடன் மறுபடியும் சென்னை நோக்கிப் பயணித்தது. கவிமதிக்குத் துணையாக வந்த வினோத்தும் வந்த வேலையை வஞ்சனையில்லாமல் பார்த்துக் கொண்டு வயிறு நிறைய அவர்களுடன் கிளம்பினான்!

அடுத்து வந்த வாரத்தில், கவிமதிக்கு தன் வீடு பழக ஆரம்பித்திருந்தது. சந்தோஷின் அன்னை சாரதா,



அவர்களைப் போல வசதியான குடும்பத்தில் இருந்து கவிமதி வரவில்லை என்பதால் ஒரு ஒதுக்கத்துடனே நடந்து கொண்டார். ப்ரியங்காவும் கவிமதியை விட்டு ஒதுங்கியே இருக்க, சந்தியா மட்டும்தான் ஒரு நல்ல தோழியைப் போலப் பழகினாள்.

சாரதாவுக்கு தன்னைப் பிடிக்கவில்லை என்பதை சில நாட்களிலேயே உணர்ந்து கொண்டாள் கவிமதி. காரணம் தெரியவில்லை என்றாலும், முடிந்தவரை அவரிடம் மரியாதையுடனும், பண்புடனும் நடந்து கொண்டாள்.

அதே போல் ப்ரியங்கா சொல்வதைக் காதில் போட்டுக் கொள்ளாமல், அப்படியே காதில் விழுந்தாலும் எதையும் மனதில் போட்டுக் கொள்ளாமல் முடிந்தவரை அவளிடமும் சகஜமாக பேசவும், பழகவும் முயற்சித்தாள் கவிமதி.

தன் புகுந்த வீட்டிற்கு வந்த கவிமதி, தன் பிறந்த வீட்டில் இருந்த அண்ணனை தினமும் தொலைபேசியில் ஒரு முறையாவது அழைத்துப் பேசிவிடுவாள். இவள் அன்றாடம் இப்படி தன் அண்ணனுடன் பேசுவது ஒரு பிரளயத்தை ஏற்படுத்தப் போவதை அறியாமல் சந்தோசமாக கதையடித்துக் கொண்டிருந்தாள்.

வினோத்தும், எப்பொழுதும் போலவே தன் தங்கை வாயில் இருந்து உதிர்க்கும் அரிதான(?) முத்துக்களை சேகரித்து, அன்பால் கோர்த்துக் கொண்டிருந்தான்!

* * *

தங்கள் வீட்டில் அழகாகப் பொருத்திக் கொண்டு, வேலைக்காரர்களுடன் சேர்ந்து அனைத்து வேலைகளிலும் பங்கெடுத்துக் கொண்டாள் கவிமதி. அவளுக்கு சமையலில் நாட்டம் இருந்ததினாலும், நிறைய நேரம்

கிடைத்ததினாலும், தினமும் ஏதோ ஒன்றை புதிது புதிதாக ஆய்வு செய்து அவளின் சமையல் செய்யும் தாகத்தையும் தணித்துக் கொண்டாள்.

கவிமதியின் நடவடிக்கைகளையும், அவள் செய்யும் செயல்களையும் சாரதா பார்த்தும் பார்க்காதது போல நடந்து கொண்டார். ஆனால், அவளின் வேலை செய்யும் திறனையும் நேர்த்தியையும் மனதுக்குள் பாராட்டிக் கொள்ளவும் தயங்கவில்லை.

ப்ரியங்கா தான் கவிமதியின் மனதை ஏதோ ஒரு வகையில் புண்படுத்திக் கொண்டே இருந்தாள்.

ஒரு நாள் இரவு, ப்ரியங்கா, மதியழகன் மற்றும் சாரதா மட்டுமே உணவருந்திக் கொண்டிருக்க, கவிமதி, சந்தோஷ் வரும் வரை காத்திருப்பதாகக் கூறி அவர்களுக்குப் பரிமாறினாள்.

கவிமதி அன்று செய்திருந்த புது விதமான உணவை ருசி பார்த்த ப்ரியங்காவின் நாக்கு அதன் சுவையில் கட்டுப்பட்டாலும், மனமோ கட்டுக்கடங்காமல் குறை கண்டுபிடித்தது.

கவிமதி தான் சமைத்திருப்பாள் எனத் தெரிந்திருந்தும், அவள் வீட்டில் வேலை செய்யும் அம்மாவை அழைத்து, ''எதுக்கு மரகதம்மா இதைச் செஞ்சீங்க? எனக்கு இதெல்லாம் பிடிக்காதுன்னு தெரியாதா? இனிமேல் ஏதாவது புதுசா செஞ்சீங்கன்னா வீட்ல இருக்கறவங்க கிட்டே முதல்ல கேட்டுட்டுச் செய்யுங்க'' என மறைமுகமாகக் கவிமதியை குட்டினாள் ப்ரியங்கா.

மரகதம்மாவோ கவிமதியைப் பரிதாபமாகப் பார்க்க, மதியழகனோ, ''ஏன் ப்ரியா! நல்லா ருசியாத் தானே இருக்கு?'' என விஷயம் புரியாமல் கேட்டார்.



''ருசியா இருந்து என்ன பண்ணறது? என் உடம்புக்கு ஒத்துக்கணும் இல்லப்பா'' எனத் தன் தந்தைக்கு பதிலளித்தவள், மரகதம்மாவிடம், ''இனிமேல் இப்படி எல்லாம் உங்க இஷ்டத்துக்கு செஞ்சு வைக்காதீங்க'' என்றாள். மீண்டும் மறைமுகப் பேச்சு!

அவர் பதில் சொல்லும்முன், கவிமதி, ''நீங்க போய் உங்க வேலையைப் பாருங்க மரகதம்மா'' என அவரை அனுப்பி வைத்தவள்,

''ப்ரியா, அது நான் செஞ்சது. எல்லோருக்கும் பிடிக்கும்ன்னு நானா முடிவு செஞ்சுட்டேன். என்னை மன்னிச்சிடு. இனிமேல் செய்யறதுக்கு முன்னாடி எல்லோர் கிட்டேயும் கேட்டுடறேன்'' என கவிமதி சரணடையவும், ப்ரியங்காவிற்கு சப்பென்றாகி விட்டது.

மறைமுகமாக கவிமதியை ஏதாவது சொன்னால் அவள் மனம் சங்கடப்படும் எனப் பார்த்தால், குத்தல் பேச்சை நேராக எதிர்கொண்டு தன்னிடமே மன்னிப்புக் கேட்கிறாளே என்றிருந்தது ப்ரியங்காவிற்கு.

கவிமதியிடம் ஒன்றும் சொல்லாமல் தலையை மட்டும் ஆட்டிவிட்டு இடையில் அம்போவென்று விட்டிருந்த உணவை கவனிக்கலானாள் ப்ரியங்கா.

ஆனால் இதைப் பார்த்துக் கொண்டிருந்த மதியழகனோ, ''கவி, நீ எதுக்கு ப்ரியாகிட்டே சாரி கேட்கிறேம்மா?'' என மருமகளிடம் கேட்டவர்,

''ப்ரியா, அது என்ன சாப்பாட்டுல அது சரி இல்ல, இது சரி இல்லன்னு சொல்லற புது பழக்கம் பழகி வச்சிருக்கிறே. நீ போற வீட்ல யாராவது உன்னை இப்படிச் சொன்னா சும்மா இருப்பியா?

எல்லாத்தையும் சாப்பிட்டுப் பழகு. இதைச் சாப்பிட்டா உடம்புக்கு ஏன் ஒத்துக்காது? பிடிக்கலைன்னாலும் கவி செஞ்ச முயற்சிக்காகவாவது அதைப் பாராட்டப் பழகிக்கோ'' என மகளை வார்த்தைகளால் பலமாகக் குட்டினார்.

மதியழகனின் குட்டலை, ஒன்றும் சொல்லாமல் அமர்ந்திருந்த தாயும் ஆமோதிக்கிறார் என உணர்ந்த ப்ரியங்கா, ''சாரிப்பா!'' என முணுமுணுத்தாள்.

'ச்சே! கவியை ஏதாவது மட்டம் தட்ட நினைச்சா கடைசியிலே அது நமக்கே திரும்பி வருது' என சலித்துக் கொண்டவள், 'இனிமேல் தனியா இருக்கும்போதுதான் சொல்லணும்' என முடிவும் செய்து கொண்டாள். ஆனால், அவளுக்கு அந்த சந்தர்ப்பம் தான் கிடைக்கவில்லை.

* * *

திருமணம் முடிந்து ஆறு வாரங்கள் ஓடியதே தெரியாத அளவிற்கு புதுமணத் தம்பதிகள் பரபரப்பாக அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தார்கள்.

சந்தோஷ், தொழிலில் கவனம் செலுத்த ஆரம்பித்ததால், வீட்டில் தனித்திருக்க போர் அடிக்க ஆரம்பித்தது கவிமதிக்கு. சந்தோஷிடம் அதைப் பற்றி பேசலாம் எனக் காத்துக் கொண்டிருந்தவளுக்கு சாரதாவின் சுகவீனம் பற்றி அறிய நேர்ந்து வேலைக்குச் செல்லும் முடிவை தள்ளிப் போடச் செய்தது.

சாரதாவுக்கு, பல மாதங்களாக வாட்டும் வயிற்றுவலி காரணமாக மருத்துவரை அணுக, அவருக்கு கர்ப்பப்பையில் கட்டி வளர்வதாகவும் அதை அகற்றி விடுவதுதான் சிறந்தது என்றும் கூறினார் மருத்துவர்.



அவருக்கு சிகிச்சை நடைபெற, கவிமதி தான் மருத்துவமனை, வீடு என மாற்றி மாற்றி அல்லாடிக் கொண்டு, சாரதாவை கண்ணும் கருத்துமாய்ப் பார்த்துக் கொண்டாள். மேலும் இருபது நாட்கள் ஓடிவிட, கவிமதி மிகவும் ஓய்ந்து போனாள்.

கவிமதியின் சோர்வைப் பார்த்த மதியழகன், ''கவி, நீ ஏம்மா கஷ்டப்படுற? அதுதான் வீட்ல வேலைக்காரங்க இருக்காங்களே. அவங்க பார்த்துக்க மாட்டாங்களா? நீ இப்படி கண்ணு முழிச்சு அவங்களை கவனிக்கணும்ன்னு இல்ல'' என்றார் அக்கறையுடன்.

''பரவாயில்லைங்க மாமா. அத்தையும் எனக்கு ஒரு அம்மா மாதிரி தானே. எங்க அம்மாவுக்கு உடம்பு சரியில்லன்னா வேலைக்காரங்களைப் பார்க்க விட்டுட்டு நான் சும்மா இருப்பேனா? அத்தைக்கு சீக்கிரம் குணமானாப் போதும். அப்புறம் நான் ரெஸ்ட் எடுத்துக்கறேன்'' என அன்புடன் சொன்னாள் கவிமதி.

அவள் சொன்னதை, வீட்டில் உள்ள மூன்று நபர்கள் அவளுக்குத் தெரியாமலேயே கேட்டனர்.

''நான் சொல்லறதை சொல்லிட்டேன் அப்புறம் உன் இஷ்டம்மா'' என அதற்கு மேல் அவளைக் கட்டாயப் படுத்தாமல் பேச்சை முடித்துக் கொண்டார் மதியழகன்.

அந்த மூன்று நபர்களில் ஒருவர், சாரதா. அவர் படுக்கையிலேயே இருப்பது கஷ்டமாக இருந்ததினால், எழுந்து சிறிது தூரம் வீட்டுக்குள்ளேயே நடக்கலாம் என நினைத்து வந்தவர், மாமனாரும் மருமகளும் பேசியதைக் கேட்டு மௌனமாக உள்ளே சென்று மீண்டும் படுத்துக் கொண்டார்.

இவர்கள் பேசுவதைக் கேட்டுவிட்டு மனைவி செல்வதைப் பார்த்த மதியழகன், சாரதாவிடம், ''பார்த்தியா சாரு நம்ம கவியை! அவளை மருமகளாக்கிக்கறதுக்கு உனக்கு அவ்வளவா பிடித்தம் இல்ல. ஆனா, இந்த மாதிரி தங்கமான பொண்ணு எங்க தேடினாலும் கிடைப்பாளா சொல்லு?'' எனத் தன் மருமகளை குறித்துப் பெருமிதப் பட்டுக் கொண்டார்.

கவிமதியின் அடக்கத்தையும், பொறுமையையும், நல்ல குணத்தையும் பார்த்து மனதுக்குள் நெகிழத் தொடங்கியிருந்த சாரதா, கவிமதியின் கவனிப்பிலும், அன்பிலும் முற்றிலுமே மாறியிருந்தார்.

சற்று முன்னர் கவிமதி பேசியதைக் கேட்டவர், 'கவியை இனிமேல் மகள் போல நினைத்துக் கொள்ள வேண்டும்' என முடிவும் செய்திருந்தார்.

அதே சமயத்தில் மதியழகனும் கவிமதியைப் பற்றி புகழ, ''ஆமாங்க. நான் தான் கவியோட குணம் தெரியாம இருந்துட்டேன். எனக்கு உடம்பு சரியில்லைன்னு தெரிஞ்சதும் நம்ம ப்ரியா பதட்டப்பட்டதை விட கவி தான் ரொம்பவுமே கவலைப்பட்டுட்டா'' என்றவர், அன்றிலிருந்து கவிமதியை தன் அன்பால் குளிப்பாட்டினார்.

எது செய்தாலும், 'எதுக்கும் கவிகிட்டே ஒரு வார்த்தை கேட்டுடலாம்' என ஒரு இடைச் செருகல் வேறு வந்தது அவரிடமிருந்து.

கவிமதி சொன்னதைக் கேட்ட மற்றொரு நபர் சந்தோஷ். தந்தையும் மனைவியும் பேச ஆரம்பித்த பொழுது தான் வீட்டிற்குள் நுழைந்தான். கவிமதி கூறியதைக் கேட்ட அவன் மனம் உருகி வழிந்தது. காதலில்! நிரம்பித் தளும்பியது, பெருமிதத்தில்!



மூன்றாவதாக அவர்களின் வீட்டில் இருக்கும் வேறொரு நபர், கவிமதி சொன்னதைக் கேட்டு மனதுக்குள் பொருமிக் கொண்டிருந்ததை வேறு யாரும் அறியவில்லை! அந்த நபர் யாரென்று வாசகர்களின் யூகத்திற்கே இப்பொழுது விட்டு விடுகிறேன்...

* * *

சாரதாவிற்கு உடம்பு குணமாகிவிட, கவிமதிக்கு வேலைக்குச் செல்லும் எண்ணம் மீண்டும் தலை தூக்கியது.

வெளியூர் சென்றுவிட்டு திரும்பி வந்த சந்தோஷிடம், ''சந்து, நீங்க அடிக்கடி வெளியூருக்குப் போயிடறீங்க. எனக்கு வீட்ல சும்மா இருந்தா என்னோட மூளைத் துருப் புடிச்சிடும் போல இருக்கு. நான் வேலைக்குப் போகட்டுமா?'' எனக் கேட்டாள் கவிமதி.

''மதி, அது எல்லாம் இருக்கறவங்க கவலைப்படணும். உனக்கு என்னடா வந்தது?'' என சம்மந்தமில்லாமல் கேட்டவனைப் பார்த்தவள், அவன் குறும்பாகச் சிரிக்கவும், ஓரிரு நிமிடங்கள் குழம்பி, பின் அவள் மூளையைத் தான் அவ்வாறு சொல்கிறான் எனக் கண்டு கொண்டாள்.

''ஜோக்கா? இது பழைய ஜோக், மை டியர் புருஷா! அதனால எனக்கு சிரிப்பு வரலை'' என அவன் முதுகில் தன் கையெனும் ஆயுதத்தால் செல்லமாகப் போர் தொடுத்தாள் அந்த வீர மகள்.

போர் தொடுத்த ஆயுதத்தை அழுந்தப் பற்றி அருகே இழுத்தவன், ''உன்னை புனேல இருந்து சென்னைக்கு வேலையை மாத்திக்கத் தான் சொன்னேன். ஆனா நீ தான் வேலையை விட்டுட்டு வந்துட்டே. உனக்கு என்ன பண்ணத் தோணுதோ அதைப் பண்ணுடா மதி என்

மந்தி!'' எனச் சொல்லி அவள் தலையில் செல்லமாக நங் என முட்டினான்.

''அதில்ல சந்து... மாமாவும் அத்தையும் என்ன சொல்லுவாங்கன்னு யோசிக்கிறேன். அதான்...'' எனத் தன் தயக்கத்துக்கான காரணத்தை விளக்கினாள்.

''அப்பாவும், அம்மாவும் கண்டிப்பா ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. உன்னோட திருப்திக்காக நாளைக்கே அவங்ககிட்டே கேட்கலாம்'' என்றவன் சொல்லி முடிக்க, மனைவி மீண்டும் ஏதோ சொல்ல வாயைத் திறந்தாள்.

''மதி, நாலு நாள் வெளியூர் போயிட்டு வந்திருக்கிற என்னைக் கவனிக்காம, சும்மா என்ன வளவளன்னு பேசிட்டு'' என அவளை அணைத்து, மலரத் துடித்த அவள் இதழ்களில் இதழ் பதித்து, மலர்வதை தற்காலிக மாக ஒத்தி வைத்தான்.

* * *

மறுநாள்! தாய் - தந்தையிடம் கவிமதியின் விருப் பத்தைக் கூற, சாரதா, அவள் விருப்பப்படி எது வேண்டு மானாலும் செய்து கொள்ளட்டும் என ஒதுங்கி விட்டார்.

மதியழகனும், ''தாராளமா போம்மா! ஆனா, நீ வேற எங்கயோ வேலைக்குப் போறதுக்குப் பதிலா நம்ம கம்பெனியிலேயே சந்தியா கூட சேர்ந்து கணக்கு வழக்குகளைப் பார்த்துக்கோ. நீ என்னப்பா சொல்லறே சந்தோஷ்?'' என ஆலோசனை வழங்கி, பின் தன் இளைய மகனின் கருத்தையும் கேட்டார்.

''நீங்க சொன்னா சரியா தான்ப்பா இருக்கும்'' என் றான் குதூகலத்துடன் இளையவன்.

''ரொம்ப தேங்க்ஸ் மாமா!'' என்றவளைப் பார்த்து, ''தேங்க்ஸ் எல்லாம் எதுக்கும்மா? ஆனா, வேலைக்குப்



போனாலும், தினமும் இல்லன்னாலும், அப்பப்போ உன் னோட ஸ்பெஷல் சமையலை செஞ்சு எங்க வயித்துக்கு வஞ்சனையில்லாம பார்த்துக்கோ. சொல்லிட்டேன்'' என மருமகளுக்கு அன்பாகக் கட்டளையிட்டார்.

''கண்டிப்பா மாமா!'' எனப் பெரியவரிடம் வாக்களித் தவள், ''நான் போய்க் கிளம்பி இப்பவே உங்க கூட வரேன்'' எனக் கணவனிடம் தெரிவித்துவிட்டுத் தன் அறைக்குச் சிட்டாகப் பறந்தாள்.

அவளைச் சிறைப்பிடிக்க வேடனாக மாறிப் பின்னா லேயே ஓடிய கணவன், ''சரி! சரி! அப்பாகிட்டே பேசி சம்மதம் வாங்கினதுக்கு எனக்கு தேங்க்ஸ் கிடையாதா?'' என அவனே போராடி சம்மதம் வாங்கித் தந்ததைப் போலே கவிமதியுடன் பேரம் பேசினான்.

வேடனிடம் பேச்சு வார்த்தை நடத்தியவள், ஒரு வாறாக பேரத்தையும் முடித்துக் கொண்டு அலுவலகம் கிளம்பிச் சென்றாள்.

வீட்டிலேயே கிஷோரிடமும், சந்தியாவிடமும் தெரி வித்திருந்ததால், அலுவலகத்தில் கவிமதியின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். அவர்களை அதிக நேரம் காக்க வைக்காமல் வந்த கவிமதியை, சந்தியா, தான் பார்த்துக் கொள்வதாகக் கூறி அழைத்துச் சென்றாள்.

அங்கிருக்கும் கணக்கு வழக்குகள் எல்லாம் சந்தியா வின் மேற்பார்வையில் தான் இருந்தன. கவிமதிக்கு எல்லாவற்றையும் திறம்படச் சொல்லிக் கொடுக்க, கவி மதியும், முட்டி மோதாமல் அனைத்தையும் வெகு விரைவி லேயே கற்றுக் கொண்டாள்.

கவிமதி, வேலைக்குச் சென்றாலும் மதியழகன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அவளால் முடிந்த

பொழுதெல்லாம் அவள் கைவண்ணத்தை சமையலிலும் காட்டினாள்.

வீட்டிலும், வேலை அலுவலகத்திலும் கவிமதி அனைவரிடமும் நன்மதிப்பைப் பெறப் பெற, அங்கே வேறொருவர் உள்ளத்தில் வெறுப்பின் அளவு காட்டாற்று வெள்ளம் போல கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தது.

## 7



கவிமதி வேலைக்குச் செல்ல ஆரம்பித்து ஒரு மாதம் ஆகிவிட்டிருந்தது. இதற்கிடையே வினோத்தும் நம்பிக்கையுடன், சிறு மனைகளைக் கட்டும் வேலையைப் பகுதி நேர வேலையாக மேற்கொண்டிருந்தான்.

ஒரு கட்டுமானக் கம்பெனியை ஆரம்பிப்பதற்கு பதிலாக, கிடைக்கும் இடத்தை வாங்கி அதில் சிறு மனைகளைக் கட்டி சிறிது லாபத்திற்கு விற்கலாம் என முடிவு செய்து, சில கல்லூரி நண்பர்களுடன் கூட்டணி அமைத்துக் கொண்டான். சந்தோஷும் அவனின் இந்த முயற்சியை ஊக்குவித்து உற்சாகப்படுத்தினான்.

கவிமதியும், வினோத்தும் அவரவர் வேலைகளில் மும்முரமாக இருந்ததால் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துப் பல நாட்கள் ஆகி இருந்தது. அதைப் போலவே கவிமதி அலுவலகத்தில் சேர்ந்த பின் கடந்த ஒரு மாதமாக பணியில் மூழ்கிவிட, டேனியலின் காதலைப்



பற்றி அவன் பெற்றோர்களிடம் பேசுவதைப் பற்றியும் மறந்திருந்தாள்.

அன்று விரைவிலேயே வேலை முடிய, டேனியலின் பெற்றோர்களிடம் பேசிவிட்டுப் பின்னர் தன் அண்ணனைப் பார்த்து வரலாம் என நினைத்த கவிமதி, சந்தோஷை அழைத்தாள். சந்தோஷ் வேலை விஷயமாக யாரையோ பார்க்கவென்று சென்றிருந்தவன், கைப்பேசியை எடுக்கவில்லை.

சந்தியாவிடம் தன் வீட்டிற்குச் செல்வதைப் பற்றிக் கூறி சந்தோஷிடம் தெரிவித்து விடுமாறு கேட்டுக் கொண்டு கிளம்பினாள்.

கவிமதி சென்ற சற்று நேரத்தில் அவளைத் தேடி வந்த சந்தோஷிடம், ''கவி அவ அண்ணனைப் பார்க்கப் போயிருக்கிறா. உன்கிட்டே முன்னாடியே சொல்லலையா?'' என விவரத்தைக் கூறி கேள்வியும் கேட்டாள்.

''இல்ல... ஏதோ திடீர்ன்னு தோணியிருக்கும் கிளம்பியிருப்பா'' என்ற பதில் வந்தது.

''தினமும் போன்லேயும் பேசறா, இப்படி நேர்லேயும் பார்க்கப் போயிடறா. அப்படி என்ன தான் பேசுவாளோ? சரியான பாசமலர்கள்! எனக்கும் வந்து சேர்ந்திருக்கானே ஒரு அண்ணன்? ம்ஹ...'' எனப் பெருமூச்செறிந்து சலித்துக் கொண்டாள் சந்தியா.

சந்தோஷும், ''உண்மைதான். நானும் ப்ரியாக்கு ஒரு நல்ல பிரெண்டா இருக்க நினைக்கிறேன். ஆனா, நான் அவள் அண்ணன் என்கிறதை விட்டு வெளியே வரமாட்டேங்கிறா...'' என அவன் தன் பங்கிற்குத் தன் தங்கையை நினைத்து ஆதங்கப்பட்டான்.

''கவியும் வினோத்தும் சின்ன வயசுல இருந்தே அப்படி வளர்ந்துட்டாங்க போல. ஆனா, கல்யாணத்துக்கு அப்புறம் பெண்களுக்கு கணவன், கணவனோட குடும்பம் தான் முதல்ல. அப்புறம் தான் மத்தவங்க. என்னோட உலகம், சந்தோசம் எல்லாமே என் விக்னேஷ் தான்.

இவ்வளவு ஏன்? அவர் தான் எனக்கு பெஸ்ட் பிரெண்ட்.. அப்பறம் தான் நீ என் பிரெண்ட். அவர்கிட்டே எதையும் மறைக்க மாட்டேன்'' எனத் தன் கருத்தையும் தெரிவித்தாள் சந்தியா.

சந்தியா தன் கருத்தைத் தெரிவிக்கிறேன் பேர்வழி என்று சந்தோஷின் மனதில் ஒரு பெரும் புயலைக் கிளப்பி விட்டிருந்தாள். 'சந்தியா சொன்ன மாதிரி மதிக்கு நான் பெஸ்ட் பிரெண்ட்டா, இல்லை, வினோத்தா?' - முதன் முதலாக சந்தேக வித்து அவன் மனதில் ஊன்றியது!

கவிமதி தன் சொந்தத்திற்கு உரியவள்; அவளை யாரும் பங்கு போட்டுக் கொள்ளக் கூடாது என காதல் கொண்ட நெஞ்சம் நினைத்தது. அவள் தனக்கு எல்லாமுமாக இருப்பதைப் போல அவளுக்கும் தான் தான் எல்லாமுமாக இருக்க வேண்டும் என நினைத்தான சந்தோஷ்.

அவன் மௌனமாக இருந்ததைப் பார்த்த சந்தியா, ''ஏய் சந்தோஷ், ஏன் அமைதியாயிட்ட? கவி உனக்கு ஒரு போன்கூட பண்ணலையா?'' எனக் கேள்வி கேட்டு சந்தோஷைப் பேச வைத்தாள்.

ஞாபகம் வந்தவனாக தன் கைப்பேசிக்கு உயிர் கொடுத்தவன், ''நான் போனை ஆப் பண்ணி வச்சிருந்தேன் சந்தியா. கூப்பிட்டிருப்பா போல'' என பதிலளித்தவன், ''சரி எனக்கு வேலை இருக்கு. கிளம்பறேன்'' எனக் கூறி கிளம்ப முயன்றான்.



நண்பனின் முகத்தில் சிந்தனை ரேகை படிவதைப் பார்த்த சந்தியா, ''சந்தோஷ், ரொம்ப நாளா உன்கிட்டே ஒரு விஷயம் சொல்ல நினைச்சிட்டு இருக்கேன்...'' எனத் தயங்கியவளைப் பார்த்து,

''என்கிட்டே சொல்லறதுக்கு என்ன தயக்கம்? சொல்ல வந்ததைச் சொல்லு'' எனத் தன் தோழியை ஊக்குவித்தவாறே மறுபடியும் அமர்ந்தான்.

''இந்த டாபிக் பேச ஆரம்பிச்சதுனால தான் சொல்லறேன். நான் சொன்னவுடனே நீ கவிகிட்டே போய் கேட்கக்கூடாது. உன்னோட அவசரத் தனத்தைக் காண்பிக்க மாட்டேன்னு ப்ராமிஸ் பண்ணு, அப்புறம் சொல்லறேன்'' எனப் பீடிகையுடன் நிறுத்தினாள்.

''சரி! நான் கவிகிட்டே கேட்கலை. என்ன விஷயம்னு சொல்லு முதல்ல'' என வாக்களித்தான்.

''நம்ம வீட்டு விஷயம் வெளிய நாலு பேருக்குத் தெரிஞ்சா, அது நமக்கு நல்லதில்ல. அதான் உன்கிட்டே சொல்லி வைக்கணும்னு தோணுச்சு'' என விஷயத்தைக் கூறாமல் மேலும் அவனைக் குழப்பிவிட்டு நிறுத்தினாள்.

''சந்தியா, சொல்லறதைக் கொஞ்சம் தெளிவா சொல்லேன். எதுக்கு சிம்பு மாதிரி இப்படி வார்த்தைகளைக் கடிச்சு கடிச்சு முழுங்கற?'' என்றான் கேலியாகச் சிரித்தவாறே.

தோழி அவனை வெறிக்க, ''சரி! சரி! உனக்கு இப்போ சிம்புவைப் பிடிக்கும் என்பது மறந்து போச்சு'' என்றான் மீண்டும் கிண்டல் குரலில்.

அவனின் கிண்டலில் துணுக்குற்றவள், ''சந்தோஷ் பீ சீரியஸ்!'' எனக் கடிந்து கொண்டு, ''கவி, வினோத் தோட எவ்வளவு வேணா பேசட்டும். அதுக்காக நம்ம வீட்ல நடக்கற எல்லா விஷயத்தையும் தினமும் போன்ல ஒப்பிக்கணுமா? ஒரு 'ப்ரைவசியே' இல்லாமப் பண்ணிட்டா. சரி குடும்ப விஷயம் தானேன்னு விட்டா இப்போ நம்ம கம்பெனி விஷயத்தையும் சொல்ல ஆரம்பிச்சுட்டா.

நமக்கு வர்ற ப்ராஃபிட்ல இருந்து நம்ம மொத்த சொத்தின் மதிப்பு வரை எல்லாத்தையும் விலாவாரியாகச் சொல்லறா. வினோத் உன் பிரெண்ட் தான் இருந்தாலும் இதெல்லாம் சொல்லணுமா? என் மனசுல பட்டதைச் சொன்னேன். நான் ஏதாவது தப்பாச் சொல்லி இருந்தா என்னை மன்னிச்சுடு'' என ஒருவழியாக விஷயத்தைக் கூறி முடித்தாள்.

''இது என்ன புதுசா மன்னிப்பெல்லாம் கேட்டுட்டு? உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா? நம்ம குடும்ப நலனுக்காகத் தானே யோசிக்கற. நான் இதைப் பத்தி கவிகிட்டே சொல்லி வைக்கறேன்...'' எனத் தன் தோழியை சரியாகப் புரிந்து கொண்டு பதிலளித்தான்.

''மறைமுகமாகச் சொல்லு. ஆனா, நான் தான் இந்த விஷயத்தைச் சொன்னேன்னு தெரிய வேண்டாம். இதுனால பின்னாடி எந்தப் பிரச்சனையும் வரக்கூடாதுன்னு தான் இப்பவே உன்கிட்டே சொல்லி வச்சேன்'' என மீண்டும் அவள் சொன்னதன் காரணத்தை வலியுறுத்திவிட்டு வேலையைக் கவனிக்கச் சென்றாள்.

சந்தியா சொன்னதை அசை போட்டுக் கொண்டே தன் அலுவலக அறையில் அமர்ந்திருந்த சந்தோஷின்



அறைக்குள் கதவைத் தட்டிவிட்டு வந்தாள் அவன் தங்கை ப்ரியங்கா.

''ப்ரியா, என்னம்மா இங்கெல்லாம் வந்திருக்க?'' என ஆச்சர்யமானான் அண்ணன். இப்பொழுது தானே சந்தியாவிடம் தன் தங்கையைப் பற்றி குறைபட்டுக் கொண்டிருந்தான். அதற்குள்ளே இவள் இங்கே வந்து நிற்கிறாளே என வியப்பாக இருந்தது.

'ஒருவேளை நான் சொன்னதை அதுக்குள்ளே கேட்டுட்டாளோ? அப்படின்னா இனிமே அடிக்கடி மைண்ட்ல பேசிக்கணும்' என மனதிற்குள் நினைத்து சிரித்துக் கொண்டான் சந்தோஷ்.

''உன்கிட்டே ஒண்ணு சொல்லணும்...'' என்றவாறே அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தாள்.

''ஏதாவது குடிக்கிறியா?'' எனக் கேட்டு அவள் இசைவாகத் தலையசைக்க, பழரசம் எடுத்துக் கொடுத்தவன், ''சொல்லு, என்ன விஷயம்?'' என்றான் அண்ணன் பரபரப்பாக.

''என்னை எங்காவது பார்த்தா உன் ப்ரெண்ட் வினோத்தைப் பேசாம போகச் சொல்லறியா? எப்போ, எங்க பார்த்தாலும் என்னமோ அவர் தான் பேர் வச்ச மாதிரி 'ப்ரியா', 'ப்ரியா'ன்னு கூப்பிட்டுப் பேசறாரு. பிரெண்ட்ஸ் எல்லாம் என்னை அவரோட சம்மந்தப்படுத்தி, கிண்டல் பண்ணறாங்க. கொஞ்சம் கூட சகிக்கலை'' என்றாள் எரிச்சலை முகத்தில் காட்டியவாறே.

''உன் பிரெண்ட்ஸ் கிட்டே அப்படிப் பேசாதீங்கன்னு சொல்ல வேண்டியதுதானே?'' என உடனடியாக ஒரு தீர்வை சந்தோஷ் சொல்ல,

''ஒரு தடவைன்னா கேட்பாங்க. அடிக்கடி நடந்தா அவங்க சும்மா இருப்பாங்களா? வினோத் வேணும்ன்னே என்னை பாலோ பண்ணற மாதிரி தெரியுது'' எனப் பொரிந்தாள். ப்ரியங்கா, கவிமதி மேல் இருந்த எரிச்சலையும் சேர்த்து வினோத்தின் தலைமேல் ஏற்றினாள்.

''ப்ரியா, வினோத் அந்த மாதிரி கிடையாது...'' என நண்பனுக்காகப் பரிந்து பேச முயன்றவனை, ''உன் பிரெண்டுக்கு சப்போர்ட்டா... அப்போ நான் என்ன பொய்யா சொல்லறேன்?'' எனக் கோபத்துடன் இடை வெட்டினாள் தங்கை.

அவளின் கோபத்தை உணர்ந்தவன், ''சரி ப்ரியா. நான் அவன்கிட்டே பேசறேன். நீ இப்போ வீட்டுக்கா போறே?'' என பேச்சை மாற்றி அவளின் கோபத்தைத் தணிக்க முயன்றான்.

''இல்ல. ஒரு ப்ராஜெக்ட் விஷயமா வெளில போகணும். போயிட்டு ஒரு மணி நேரத்துல வீட்டுக்கு வரேன். உன் பிரெண்ட் கிட்டே சொல்லி வை'' என வந்த காரியத்தை வெற்றிகரமாக முடித்தவள், அங்கிருந்து கிளம்பினாள்.

ப்ரியங்கா கிளம்பியவுடன், சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தான் சந்தோஷ். 'வினோத்துக்கு நிஜமாவே அது மாதிரி எண்ணம் இருக்குமோ?' எனக் குழம்பியவன், பின், 'ச்சே! அப்படி இருந்தா அவன் என்கிட்டே வந்து சொல்லுவானே' என தெளிவடைந்தான்.

ஆனால் அவன் தெளிவடைவதை விரும்பாத அவன் மனமோ, 'ஆமா, நீ மட்டும் கவிமதி அவன் தங்கைன்னு தெரிஞ்சதும் வினோத்கிட்டே சொன்னியா? அமுக்கினியாத் தானே இருந்தே?' என இடித்துரைத்தது.



'ஆனா, வினோத்துக்கு நான் மதியைக் காதலிச்சது தெரிஞ்சிருக்கு. மதி தான் ஏதாவது சொல்லி இருக்கணும். சந்தியா சொல்லற மாதிரி எல்லாத்தையும் அவன்கிட்டே உளறி வச்சிருவா போல. முதல்ல மதியிடம் இதைப் பத்திப் பேசணும்' என அலசி, ஆராய்ந்து மிகத் தெளிவாக ஒரு முடிவெடுத்து விட்டதாக நினைத்து வீட்டுக்குக் கிளம்பினான்.

வீட்டிற்குச் சென்றவன், கவிமதியின் அரவம் இல்லாமல் இருக்க, 'இன்னும் மதி வரலையா?' என எண்ணியவாறே அவளின் கைப்பேசிக்கு அழைத்தான். கைப்பேசி அடித்து ஓய, எரிச்சலுடன் தங்கள் அறைக்குச் சென்றான்.

தங்கள் குளியலறையில் இருந்து தண்ணீர் சத்தம் வர குதூகலமானான். தன் மனைவியைக் காண ஆவலுடன் அலுவலகம் சென்றால் அவள் அங்கு இல்லாமல் தன் அண்ணனைப் பார்க்கச் சென்று விட்டாள் என அறிந்ததும் ஏமாற்றமடைந்தான்.

ஏமாற்றத்துடனே வீடு வந்தவன், கவிமதி இன்னும் வரவில்லை எனத் தப்பாக ஊகித்து எரிச்சல் கொண்டான். கவிமதிக்கு சிறிதேனும் கணவனைக் காண ஏக்கம் இருந்திருந்தால் இந்நேரம் வீடு திரும்பியிருப்பாள் என ஏக்கம் கொண்ட அவன் மனமும் வாடியது.

ஆனால் தங்கள் அறையில் கவிமதியின் அரவத்தைக் கேட்டதும் மனதில் உற்சாகம் எழுச்சியுற, குளியலறைக் கதவைத் தட்டக் கை ஓங்கினான். அதே சமயத்தில் கதவை திறந்து கொண்டு வந்த கவிமதி அவனை சற்றும் அங்கு எதிர்பார்க்காமல் பயந்து அலறினாள்.

''ஏய், ஏன்டா! நான் தான், நம்ம ரூமுக்கு வேற யார் வருவா?'' என அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

அவள் படபடப்பு சற்று அடங்கியவுடன் தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றவாறே, ''போங்க சந்து! இப்படியா சொல்லாம வருவீங்க'' என ஆசுவாசமடைந்தாள்.

ஆனால் சந்தோஷோ அவளை விடாமல் கணவன் பார்வை பார்க்க, ''சரி! சரி! குளிச்சிட்டு வாங்க. டின்னர் சாப்பிடலாம்'' என்றாள் இயல்பாக.

''மதி, காலையில இருந்து உன்னைப் பார்க்காம ஆசையா ஆபீஸுக்கு ஓடி வந்தா ஆளைக் காணோம். இப்பவும் என்கிட்டே இருந்து ஓடப் பார்க்கிற'' எனப் பிடியில் இருந்து அவளை விடுவிக்காமல் கேட்டான்.

''உங்களைக் கூப்பிட்டுப் பார்த்தேன். நாட் ரீச்சபிள்ன்னு வந்தது. இன்னைக்கு வேலை சீக்கிரமா முடிஞ்சதுனால போய் டேனியோட அப்பா - அம்மாகிட்டே அவன் காதலைப் பத்திப் பேசிட்டு, அப்படியே அம்மா வீட்டுக்குப் போயிட்டு வந்தேன்'' என அவள் சென்றுவிட்டு வந்த விவரத்தைக் கூறினாள்.

கவிமதி, தன் நண்பனுக்காக சென்று பேசினாள் என்ற மாற்றத்தைக் கண்டு வியப்படைந்தவனின் மனதில் சூழ்ந்திருந்த கருமேகமும், சகுனம் சரியில்லை என எண்ணிக் கலைந்தது! மனதில் விழுந்த சந்தேக விதையும் வளர நீரின்றி ஆழத்தில் அமுங்கிப் புதைந்தது.

''வாட்? டேனிக்காக போய்ப் பேசினியா. வாவ்! என்ன சொன்னாங்க?'' என்றான் முடிவைத் தெரிந்து கொள்ளும் ஆவலில்.

''டேனி நினைச்சா தனியா அவனே போய் கல்யாணம் பண்ணிக்கலாம். ஆனா, அப்படிப் பண்ணாம இன்னுமே அந்தப் பொண்ணுகிட்டேயும் காதலைச்



சொல்லாம திண்டாடிட்டு இருக்கான். உங்களை வேதனைப்படுத்தக் கூடாதுன்னு நினைக்கிற அவனோட மனசைப் புரிஞ்சுக்கோங்கன்னு சொல்லி, யோசிக்க டைம் கொடுத்துட்டு வந்திருக்கேன்'' என்றாள்.

''நீயா இப்படிப் பேசின? எனக்கு ஆச்சரியமா இருக்கு'' எனக் குதூகலமாகத் துள்ளியவன், ''அது சரி! பொண்ணு வீட்ல ஓகேவா?'' எனக் கேட்டான்.

''இவன் இன்னும் பொண்ணுகிட்டேயே ஒழுங்கா காதலைச் சொல்லலை. அப்புறம் எப்படி பொண்ணு அவங்க வீட்ல சொல்லி இருப்பா. அதுவும் இல்லாம எனக்கு இன்னுமே பொண்ணு யாருன்னு தெரியாது'' என உதட்டைப் பிதுக்கினாள் மனைவி.

மேலும் சிறிது நேரம் டேனியலைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தவர்கள், சந்தோஷ் வயிற்றுக்குள் பசி என்னும் அலாரம் இடைவிடாது ஒலிக்க, கீழே சென்றனர். வெளியில் சென்றிருந்தவர்கள் அனைவரும் வர, ஒன்றாகச் சாப்பிட அமர்ந்தார்கள்.

உணவின் பொழுது, மதியழகன், அவரின் நண்பர்களுடன் சேர்ந்து சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து சுற்றுலாப் பயணம் செல்வதைப் பற்றிக் கூறி, அவரும் சாரதாவும் இருபது நாட்கள் சென்று வருவதாகத் தெரிவித்தார்.

உணவை முடித்துக் கொண்ட சந்தோஷ், தன் அறையில் அமர்ந்து, மாலையில் சந்தியா சொன்னதைப் பற்றி மனைவியிடம் கேட்பதா, வேண்டாமா என மனதில் சடுகுடு ஆடிக் கொண்டிருந்தான். அவ்வேளையில் அவன் கைப்பேசி ராகம் பாட, இயக்கி, ''சொல்லு வினோத்'' என்றான்.

வினோத்தும், சந்தோஷுடன் பேசி பல நாட்களாகி விட்டதனால் பேசலாம் என அழைத்ததாகக் கூறினான். பேசியை வைக்கும் முன்னர் வினோத், சந்தோஷின் பெற்றோர்கள் செல்லவிருக்கும் உல்லாசப் பயணத்தைப் பற்றிக் கேட்டு, சந்தோஷின் சடுகுடு ஆட்டத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தான்.

வேறொரு சமயமாக இருந்திருந்தால் சந்தோஷ் அதை எப்படி எடுத்திருப்பானோ? அன்று மாலையில் சந்தியா சொன்னதை மனதிற்குள் அசை போட்டுக் கொண்டிருந்தவன், இதைக் கேட்டதும் துணுக்குற்றான்.

'அதுக்குள்ள இதையுமா மதி இவனிடம் ஒப்பிப்பா? ச்சே!' என நினைத்தவன், வினோத்திடம் ஏதோ ஒரு பதிலை சொல்லிவிட்டுப் பேசியை வைத்தான்.

அவன் அறியாதது, மதியழகன் இந்தப் பயணத்தைப் பற்றி முடிவு செய்யும் முன்னர் வினோத்தின் தந்தையை அழைத்து அவரையும், அவர் மனைவியையும் உடன் வருமாறு அழைத்தது. அவர்கள், உடனடியாக அத்தனை நாட்கள் விடுப்பு எடுக்க முடியாது எனக் கூறி மறுத்து விட்டனர்.

பேசியை வைத்த சந்தோஷின் கண்களில் கவிமதி 'அண்ணன்' என்ற தலைப்பில் எழுதியிருந்த கவிதை வேறு பட்டு அவனை மீண்டும் துணுக்குறச் செய்தது. காதலைப் பற்றி எழுதச் சொன்னால் இவள் அண்ணனைப் பற்றி எழுதி வைத்திருக்கிறாளே!

அதே சமயம் தங்களறைக்கு வந்த கவிமதி, ஏதோ யோசனையில் இருந்த கணவனிடம், ''என்ன யோசனை சந்து?'' என்றவாறே அவன் தலைமுடியைக் கோதினாள்.



''ஒண்ணுமில்லை'' என மறுப்பாகத் தலையாட்டியவன், ''மதி, நீ காதல் கவிதை எழுதறேன்னு சொல்லி எத்தனை நாளாச்சு. இன்னும் ஒண்ணுமே தோணலையா?'' என மறைமுகமாகக் கேட்க நினைத்த விசயத்திற்குப் பிள்ளையார் சுழி போட்டான்.

''நான் இன்னும் அதைப் பத்தி யோசிக்கவேயில்ல. சீக்கிரமா யோசிக்கிறேன்'' என வெகுளியாய் பதிலளித்தாள்.

சந்தோஷிற்குத் தன் நண்பன் மேலிருந்த பொறாமையா, அல்லது துணைவியின் பால் இருந்த அதீத அன்பா, அல்லது, தன் தோழி சந்தியா கிளப்பி விட்ட புயலா என வரையறுக்க முடியாமல் கவிமதியை மேலும் கேள்விகள் கேட்டுக் கலங்கடித்தான்.

கவிதையை அப்படியே விட்டுவிட்டு, ''மதி, உனக்கு யார் பெஸ்ட் பிரெண்ட்?'' என்றான் திடீரென்று.

''என்னோட அண்ணன் தான். அவர்கிட்டே தான் எல்லாத்தையும் ஷேர் பண்ணிக்குவேன்'' என யோசிக்காமல் வெள்ளையாய் கவிமதி பதிலளிக்க, கணவனின் மாலையில் கலைந்த கருமேகம் மீண்டும் கூடியது. கணவனுக்கு வேண்டிய பதில் அதுவல்லவே!

"அப்போ உனக்கு நான் பெஸ்ட் பிரெண்ட் இல்லையா? நீ என்னை அப்படி நினைக்கலையா?'' என அவசரமாகக் கேள்வி மின்னல் வெட்டியது.

கவிமதி ஒரு புன்னகையுடன், ''சந்து, உங்களையும் ஒரு பிரெண்டாத் தான் நினைக்கறேன்'' என கணவனின் மனக் குழப்பத்தைப் பற்றி அறியாமல் சொல்ல,

''ஒரு பிரெண்டாத் தான் நினைக்கற. பெஸ்ட் பிரெண்டா இல்ல. ம்ம்ம்... உனக்கு கொஞ்சமாவது என்மேல காதல்

இருந்தா இப்படிச் சொல்லுவியா?'' என உறுமலாய் இடி இடித்தது.

தீவிரமான முகபாவனையுடன் கேட்டவனைப் பார்த்து, ''சந்து, ஏன் இப்படி எல்லாம் கேட்கறீங்க?'' என்றாள் புயலின் தாக்கத்தை தாக்குப் பிடிக்க இயலாமல், அகமும், மனமும் சுணங்கியவளாய்.

''இல்ல... யார்கிட்டேயும் சொல்ல முடியாததை அவங்க 'பெஸ்ட் பிரெண்ட்' கிட்டே தான் ஷேர் பண்ணிக்குவாங்க. அதான் நான் உன் 'பெஸ்ட் பிரண்டா'ன்னு கேட்டேன். ஆனா, நீ என்னை விட வினோத்தைத் தான் அப்படி நினைக்கிற.

உன் மனசுல எனக்கு எந்த இடத்தைக் கொடுத்திருக்கிறேன்னு புரிஞ்சிடுச்சு'' என வேர்விட்டு முளைக்க ஆரம்பித்த சந்தேக விதையின் தளிரை மனைவியிடம் காட்டினான்.

களையாக முளைத்ததைக் களைய எண்ணிய கவிமதி, ''சந்து, உங்களுக்கு என்ன ஆச்சு? இத்தனை நாளா என்னோட அண்ணனை அப்படி நினைச்சிருந்தேன். அந்த அர்த்தத்துல தான் சொன்னேன்'' எனத் தன் பதிலுக்கான ஆதாரத்தை வழங்கினாள்.

ஆனால், கணவனுக்கோ திரட்டிய ஆதாரம் போதவில்லை போலும். அவள் சொன்னதைக் கேட்டு புருவத்தைச் சுளித்தவாறு அமர்ந்திருந்தான்.

அவன் புருவச் சுளிப்பில் சிக்கித் தவித்த கவிமதி, ''ஒரு வேளை என் காதல் மேல உங்களுக்கு நம்பிக்கை இல்லாம தான் இப்படிப் பேசறீங்கன்னு நினைக்கிறேன். உங்களை என் உயிரா நேசிக்கறேன் சந்து. உங்களுக்கு அப்புறம் தான் எனக்கு மத்தவங்க.



சின்ன வயசுல இருந்து அண்ணன் எனக்கு ஒரு பிரெண்டா இருந்ததுனால அப்படிச் சொன்னேன். அதை இப்படியா அர்த்தம் பண்ணிக்குவீங்க? நீங்க இல்லாம என்னால இனி ஒரு நிமிஷம் கூட வாழ முடியாதுங்கிற நிலைமைக்கு நான் எப்பவோ வந்துட்டேன். அதை நீங்க எப்பவோ புரிஞ்சுக்கிட்டீங்கன்னு நினைச்சேன் ஆனா...'' எனக் கரகரத்த குரலில் சொல்லி முடிக்க முடியாமல் திணறினாள் கண்ணீருடன்.

கணவனின் மனதில் தோன்றிய புயல் மனைவியின் கண்களில் கண்ணீராகப் பொழிய, ''ச்சே! நான் தான் தேவை இல்லாமக் குழம்பி, இவளைக் கலங்க வச்சு, நோகடிச்சுட்டோம் போல. இனிமேல் இது மாதிரி எல்லாம் அசட்டுத் தனமா கேட்கக் கூடாது' என முடிவு செய்தான் சந்தோஷ்.

முடிவைக் கடைப்பிடிக்கும் விதமாக அவளை இழுத்து இறுக்கி அணைத்து முகமெங்கும் முத்தமிட்டு, ''சாரிடா மதி! ஏதோ ஒரு அவசரத்துல யோசிக்காமப் பேசிட்டேன்'' எனத் தன்னிலை விளக்கமும் தந்தான், ஏதோ அவன் எதற்குமே அவசரப்பட்டதில்லை என்பதைப் போல!

அவன் விளக்கத்தில், மார்பில் வந்து ஒன்றியவளை மேலும் இறுக்கிக் கொண்டு, ''மதி, சந்தோஷமா இருந்தா மட்டும் தான் அழுவேன்னு சொல்லிட்டு இப்போ எதுக்கு அழற? நான் உன்னோட பேசினாலே உனக்கு சந்தோஷமா இருக்கா?'' எனக் கேலியாகக் கேட்டு அவளைச் சிரிக்க வைத்து இயல்பாக்க முயன்றான்.

கருமேகம் கலைந்து, பிறைநிலவைப் போன்ற கீற்றுப் புன்னகையை வரவழைத்தது இருவரின் முகத்திலும்,

அதை வளர்பிறையாக மாற்றித் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என் மனதில் நினைத்துக் கொண்டான் சந்தோஷ்.

ஆனால், நினைத்ததற்குப் புறம்பாக, கூடிய விரைவிலேயே அவனின் கோபக்கணைகளால் மனைவியின் மனதை பெரிதும் நோகடித்தான். அவன் மனதில் விழுந்த சந்தேக விதை உறக்க நிலையில் இருப்பதை, பாவம், இருவரும் அறியவில்லை.

* * *

மறுநாள் டேனியல் கவிமதியை அழைக்க, ''ஹேய் டேனி! இப்போ சந்தோசமா?'' எனக் குதூகலத்துடன் ஆரம்பித்தாள்.

''ரொம்ப சந்தோசம். ஆனா, இனிமேல் என் காதலை நானே பார்த்துக்குறேன்'' எனச் சொல்லி கவிமதியை அளவே இல்லாமல் குழப்பினான் நண்பன்.

''டேனி என்ன ஆச்சு? உனக்காகத் தானே நான் அங்கிள் - ஆன்ட்டியோட பேசி, அவங்க மனசை கொஞ்சம் கரைச்சு வச்சுட்டு வந்தேன். இப்போ வந்து பல்டி அடிக்கற?'' என்றாள் குழப்பத்துடன்.

''உன்னோட நல்லதுக்குத் தான் சொல்லறேன். இத்தோட இந்தப் பேச்சை விடு'' என சிடுசிடுத்தான் அந்தப் புறம் இருந்தவன்.

''என்னோட நல்லதுக்கா. என்ன சொல்லற? எனக்கு இப்போ கோபம் வருது. சும்மா இருந்தவளைப் போய் பேசச் சொல்லித் தொந்தரவு செஞ்சிட்டு, பேசிட்டு வந்ததுக்கு அப்புறம் எதுக்கு இப்படிப் பண்ணற?'' எனக் கோபத்தை கைபிடிக்க முயல,



''கவி, உன் கோபத்தைப் பார்க்க ஆசையா இருந்தது. உன்னை இதுவரைக்கும் அப்படிப் பார்த்ததே இல்ல. எங்கே கோபப்படு பார்க்கலாம்'' எனப் பேச்சை திசை திருப்ப முயன்றான் நண்பன்.

''டேனி, ஒழுங்கு மரியாதையா இரு. என் கோபத்தைப் பத்தி அப்புறம் பார்க்கலாம். முதல்ல பொண்ணைப் பத்தின விவரங்களைச் சொல்லு'' என விடாமல் அதிலேயே நின்றாள்.

''அதெல்லாம் உன்கிட்டே சொல்ல முடியாது. எனக்கு இப்போ வேலை இருக்கு. அப்புறமா பேசலாம்'' என அரைகுறையாய் பேச்சை முடித்துப் பேசியை வைக்கப் போனவனிடம் ஒரு கேள்வி கேட்டு அவனைச் சினமுறச் செய்தாள் கவிமதி.

''ஏன் டேனி? என்னமோ தெய்வீகக் காதல், அது இதுன்னு சொல்லிட்டுத் திரிஞ்ச. அப்போ நீயும் எல்லோர் மாதிரி மனசு மாறிட்டியா? அதுக்குள்ள இந்தப் பொண்ணு போர் அடிச்சுப் போய் வேற ஒரு பொண்ணைப் பார்த்துட்டியா?'' என அவள் முடிக்கும் முன்,

''போதும் கவி. என்னோட காதலைப் பத்தி விமர்சனம் பண்ண உனக்குக் காதலைப் பத்தி என்ன தெரியும்? வேற பொண்ணைப் பார்த்துட்டாங்களாம்...'' எனக் கோபமாகக் கத்தினான்.

''டேனி, என் கோபத்தைப் பார்க்க ஆசையா இருக்குன்னு சொல்லி கடைசியிலே உன் கோபத்தையே நீ பார்த்துட்டியே. கில்லாடிடா நீ!'' எனத் தோழி சொல்லிச் சிரிக்க,

அவள் தன்னைச் சீண்டவே அவ்வாறு கூறினாள் எனத் தாமதமாகப் புரிந்து கொண்டவன், ''சாரி கவி!

இந்த வீக் எண்டு நான் அங்கே வரேன். அப்போ இதைப் பத்தி தெளிவாப் பேசலாம்'' என அவனும் இறங்கி வந்தான்.

''அது... அந்த பயம் இருக்கட்டும். சரி! எங்க வீட்டுக்கு வா. இங்க வச்சுப் பேசலாம்'' என அழைத்தவளிடம், அவசரமாக மறுத்து, ''வீட்ல வச்சு எல்லாம் இதைப் பத்திப் பேச முடியாது கவி. அதனால வெளியில மீட் பண்ணலாம்'' என இடத்தையும் முடிவு செய்து பேசியை வைத்தான்.

டேனியல் தெரிவித்தவாறே அந்த வாரக் கடைசியில் சென்னைக்கு வந்தவன் தன் தோழியை 'ஸ்கை வாக்'கில் சந்தித்தான். வழக்கமான உபசரிப்பு வார்த்தைகளைப் பற்றி பேசிக் கொண்டிருந்தவன் மறந்தும் கூட தன் காதலைப் பற்றின பேச்சை எழுப்பவில்லை.

பொறுத்துப் பார்த்த கவிமதியும் கடைசியில், ''உன்னோட இதே ரோதனையாப் போச்சு டேனி. பேச வந்த விஷயத்தைப் பேசறதுக்கு எதுக்கு இப்படி சுத்தி வளைச்சிட்டு இருக்க? ஒழுங்கா விஷயத்துக்கு வா'' என அவனை மிரட்டினாள்.

சற்று நேரம் தன் விரல் நகங்களை ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தவன், ''நீ சொன்னா சரியாத் தான் இருக்கும். அதனால் யோசிக்கறோம்ன்னு அம்மா - அப்பா சொன்னாங்க. அதனால இனி நானே பார்த்துக்கறேன்'' என்றான்.

அவன் சும்மா இருந்திருந்தாலாவது கவிமதி சரியென்று விட்டிருப்பாளோ என்னவோ. டேனியல் அவளைப் பேச வேண்டாம் எனத் தடுக்கத் தடுக்க கவிமதிக்கு காரணம் அறிய வேண்டியிருந்தது.



''ஏன் வேண்டாம்ன்னு காரணத்தைச் சொல்லு? நான் வந்து அம்மா - அப்பாகிட்டே பேசினதுக்கு உன்னை ஏதாவது திட்டினாங்களா, இல்ல, என்னைத் திட்டினாங்களா? எதுவா இருந்தாலும் உண்மையைச் சொல்லு'' எனக் காரணத்தை அறிய முயன்றாள் கவிமதி.

'நான் காதலிக்கறது உன்னோட நாத்தனாரை. உன் வீட்ல தெரிஞ்சா உனக்கு வீணா பிரச்சனை வரும். பேசாம சொல்லறதைக் கேட்டுட்டு கேள்வி கேட்காம போயேன்' என மனத்தில் பேசிக் கொண்டவன்,

''அவங்க, அவங்க காதல்ல அவங்களே தான் போராடணும். தேவையில்லாம மத்தவங்களை இதுல இழுக்கக் கூடாது'' என்றான்.

''சரி நான் உனக்கு மத்தவங்களாவே இருந்திட்டுப் போறேன். ஆனா, இத்தனை நாளா தோணாத ஞானோதயம் இப்போ திடீர்ன்னு எப்படி வந்தது?''

''கவி, தெரியாம உன்கிட்டே என் காதலைப் பத்தி சொல்லி நல்லா மாட்டிட்டு முழிக்கிறேன்'' என்றான் டேனியல் எரிச்சலுடன்.

''சரி! நீ மாட்டிட்டு முழி. யாரு வேண்டாம்ன்னு சொன்னாங்க. முதல்ல பொண்ணைப் பத்தின விவரத்தைச் சொல்லு'' என அவள் பிடிவாதமாய் நின்றாள்.

'வீணா இவளோட வாழ்க்கையில குழப்பம் ஏற்படுத்த வேண்டாம்ன்னு பார்த்தா கேட்க மாட்டேங்கிறாளே. பிடிவாதக்காரி... இவளை என்ன சொல்லி விரட்டறது?' என யோசித்த நண்பன்,

''நான் பொண்ணைப் பத்தின விவரங்களைச் சொல்லறேன். ஆனா, இத்தோட இந்தப் பேச்சை விட்டுடணும்.

சரியா?'' என அவனும் அவன் பிடியிலேயே நின்றான். சம்மதமென கவிமதி தலையசைக்கும் வரை டேனியல் வாயைத் திறக்கவில்லை.

''பொண்ணு பைனல் இயர் பி.ஈ. படிக்கிறா, பேரு 'ரியா' - அப்பா ஒரு பிஸினெஸ்மேன். ரெண்டு அண்ணன்கள்'' என அவளின் நாத்தனார் பற்றிய விவரங்களைத் தெரிவித்தான்.

''பொண்ணு வீட்ல எப்படி? ஒத்துக்குவாங்களா?'' எனத் துளியும் சந்தேகப்படாமல் கவிமதி வினவ, ''எனக்குத் தெரியலை. பயமாத்தான் இருக்கு. அப்பா - அம்மாகிட்டே சொல்லித் தான் அவங்க வீட்ல பேசச் சொல்லணும்'' என்றான்.

''அப்புறம் ஏன் என்னைப் போய் பேச வேண்டாங்கற? நீ இன்னுமே உன்னோட அம்மா - அப்பாகிட்டே பொண்ணைப் பத்தின விவரத்தைச் சொல்லலையாமே. பொண்ணைப் பத்தின விவரங்களைச் சொன்னா ஒரு வேளை ஒத்துக்கலாம் இல்லையா?'' என்றாள் கவிமதி.

''இல்ல கவி! பொண்ணைப் பத்திச் சொல்லி அவளோட மத்த விஷயங்களை வச்சு முடிவு பண்ணறது எனக்கு சுத்தமா இஷ்டம் இல்லை. அவளை அவளுக்காக ஏத்துக்கிட்டா எல்லோருமே சந்தோசமா இருக்கலாம்'' என்றான் அவள் தோழன்.

''டேனி, உன்னை மாதிரி பசங்க இருந்துட்டா பெண்களுக்கு கஷ்டமே வராது. உன்னோட காதல் நிச்சயமாகை கூடும்'' என மனமாரச் சொன்னவள், 'இவனுக்கு மனசுல ஏதோ ஒரு குழப்பம் போல. கொஞ்சம் விட்டுப் பிடிக்கலாம்' என நினைத்து அதற்குப் பின் அவனை வற்புறுத்தவில்லை.



கவிமதி அவனிடம் பேசிச் சென்றவுடன் ஷாப்பிங் வந்த ப்ரியங்கா, டேனியலைப் பார்த்தவுடன் அவனிடம் சென்று பேச அவன் வாயடைத்துப் போனான். இப்படி வெளியிடத்தில், தைரியமாக அதுவும் தனியாக வந்து பேசுகிறாளே என்று!

## 8



கவிமதி, டேனியலைச் சந்தித்து இரண்டு வாரங்கள் ஓடிவிட, அந்த வார இறுதியில் சந்தோஷ் அலுவல் விஷயமாக கோயம்புத்தூருக்குச் சென்றிருந்தான்.

செல்லும் முன் கவிமதியையும் உடன் அழைக்க, அவளோ, தன் தோழியின் திருமணத்திற்குச் செல்ல வேண்டும். அத்தோடு அவன் பெற்றோர்கள் சுற்றுலா பயணம் கிளம்புவதற்கு உதவ வேண்டும் என மறுத்து விட்டாள்.

தோழி அவந்திகாவின் திருமணத்திற்கென தன் அண்ணனுடன் செங்கல்பட்டிற்குச் சென்றாள் கவிமதி. ஆனால், கடைசி நேரத்தில் கிடைக்க வேண்டிய பணம் கைக்கு வராமல் அவந்திகாவின் பெற்றோர்கள் செய்வதாகச் சொன்ன சீர்முறைகளை சரிவர செய்ய முடியாமல் போனது.

அவந்திகாவைக் காதலித்துக் கரம் பிடிக்கக் காத்திருக்கும் மணமகன் தன் தந்தையுடன் சேர்ந்து கொண்டு

பணம் கொடுத்தால் தான் திருமணம் நடக்கும் என்று குதித்தான். விஷயம் அறிந்து, கவிமதி, வினோத் மற்றும் டேனியல் உதவ முன்வர, அவந்திகா அதை ஒத்துக் கொள்ளவில்லை, திருமணத்தையும் ஒப்புக் கொள்ள வில்லை.

கவிமதி செங்கல்பட்டிலிருந்து வந்து இரண்டு நாட்கள் கழித்துத் தான் சென்னை திரும்பியிருந்தான் சந்தோஷ். வந்தவுடன் அலுவலகத்தில் அவசர வேலை இருந்ததால், உடனே அங்கு செல்ல, அவனிடம் அவந்திகாவின் திருமணம் தடைபட்டதை கவிமதியினால் கூற முடியவில்லை.

அன்று மாலையில் மதியழகன் தம்பதியினர் இவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு சுற்றுலாப் பயணம் கிளம்ப, கவிமதி உடனிருந்து அவர்களை வழி அனுப்பி வைத்தாள்.

இரவு, சந்தோஷ் வீடு திரும்ப நேரமானதில் ஒன்றும் செய்யத் தோன்றாமல் அமர்ந்திருந்த கவிமதிக்கு, செங்கல்பட்டில், திருமண மண்டபத்தில் நடந்த நிகழ்வுகள் மனதில் படமாக ஓடியது.

'பணம் பணம்ன்னு இப்படியும் அலைகிறார்களே' எனப் புகைந்து கொண்டிருந்தவள், பொருமலை அடக்க முடியாமல் அவளின் கையேட்டில் வரதட்சணை என்ற தலைப்பில் கீழ்கண்டவாறு எழுதினாள்.

''என் வாழ்வில் நீ நுழைய,
வரதட்சணையாக
நுழைவுக் கட்டணம் நான் செலுத்தி,
நீ தன்னுபடி செய்த மீதித் தொகையை
நான் வாழ்நாள் முழுவதும் சந்தா கட்டி வாழ



என் வாழ்வு என்ன உனக்காக உன்னிடம் நான் எடுக்கும்
ஆயுள் காப்பீட்டுத் திட்டமா?''

அவள் அதை எழுதியதும் வினோத் அழைக்க, எழுதியதை அவனிடம் படித்துக் காண்பித்தாள். சற்று நேரம் தன் தங்கை சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த வினோத், ''நீ அவந்திகா கூட பேசினியா?'' என்றான்.

''ம்ம்ம்... காலையில தான் பேசினேன். ஷி இஸ் ஓ.கே...'' என பதிலளித்தவளிடம், ''நீ அவந்திகாவைப் பத்தி என்ன நினைக்கிறே?'' என்றான் மொட்டையாக.

''இது வரைக்கும் நாம் நினைச்சுகிட்டு இருந்த மாதிரி, யார் என்ன சொன்னாலும் தலையை ஆட்டி கேட்டுட்டு இருக்கிற பொண்ணு இவ இல்லன்னு புரிஞ்சிடுச்சு'' என்றாள்.

''ஆமா கவி! நான் பார்த்தவரைக்கும் இருந்த அவந்திகாவுக்கும் இவளுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு. அவளோட தைரியம் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. அவளையும் பிடிச்சிருக்கு. அப்பா அம்மாகிட்டேயும் சொல்லிட்டேன்'' என்றான்.

''என்ன...?'' தன் அண்ணன் சொன்னதை சரியாகத் தான் புரிந்து கொண்டாளா?

''ஆமாம்மா. இத்தனை வருஷமா தோணாத எண்ணம் அவள் வீர-தீரலட்சுமியா மாறினதும் வந்திடுச்சு. அப்பா - அம்மாவுக்கு எந்த ஆட்சேபணையும் இல்ல'' என்றான் சிரித்தவாறே.

இதற்கு மேல் அவளுக்கு விளக்கம் எதுவும் தேவையிருக்கவில்லை. ''அண்ணா! நிஜமாவா சொல்லறீங்க?'' என சந்தோஷத்தில் தலை கால் புரியாமல் துள்ளினாள்.

''உன்கிட்டே பொய் சொல்லவா மெனக்கெட்டு போன் பண்ணினேன். நிஜமா தான் சொல்லறேன்ம்மா. நீ தான் ஹெல்ப் பண்ணனும்'' என்றான் மீண்டும் சிரித்தவாறே வினோத்.

''இப்போ என்ன? நான் அப்பப்போ அவந்திகாகிட்டே பேசி அவ மனசை மாத்த ட்ரை பண்ணனும் அவ்வளவு தானே... டன்!'' என அவன் கேட்க வருவதை மிகச் சரியாகக் கணித்தாள் தங்கை. அவள் அண்ணன் ஒன்றைக் கேட்டு இல்லை என்று சொல்வாளா என்ன?

''என் தங்கச்சி செம ஷார்ப்புன்னு அப்பப்போ நிரூபிச்சுடறா'' என்றான் அவனும் பெருமையாக.

சற்று நேரம் அவந்திகாவின் திருமண தினத்தன்று நடந்ததை தன் அண்ணனிடம் அசைபோட்டு, 'ச்சே! மனதைப் பார்க்காமல் பணத்தை மட்டுமே பெரிதாகக் கருதுபவர்கள் எல்லாம் என்ன மனிதர்களோ?' எனக் குமுறியது.

''இந்தக் காலத்துல மனசு எல்லாம் முக்கியம் இல்ல. பணம் தான் பெருசு. ம்ம்ம்...'' என்று வார்த்தைகளாக வெளி வரவைத்தது அவள் அண்ணனிடம்.

அவள் ஆதங்கத்துடன் சொன்னது அப்பொழுது தான் வீட்டுக்குள் வந்த சந்தோஷின் காதுகளிலும் விழுந்தது. மனைவி யாருடன் பேசிக் கொண்டிருக்கிறாள் என உன்னிப்பாகக் கவனித்தான்.

''.....''

''ஓஹ்... ம்ம்ம்... சரி! வீடு கட்டற வேலை எப்படிப் போகுது?''

''......''

''சரிண்ணா! உங்க விஷயத்தைப் பத்தி ஒண்ணும் கவலைப்படாதீங்க. நான் உதவி செய்யறேன். சந்தோஷ்



வர நேரம் ஆச்சு. நாம இதைப் பத்தி அப்புறமாப் பேசலாம்'' என வினோத் கேட்ட, 'சந்தோஷ் வந்துட்டானா?' என்ற கேள்விக்கு பதில் அளித்து பேசியை வைத்தாள் கவிமதி.

கவிமதியுடன் தனிமையில் பேசி சில நாட்களாகிறது என்று மீதமிருந்த வேலையை அன்று சீக்கிரமே முடித்து வீடு திரும்ப எண்ணிய சந்தோஷின் உற்சாகம் சந்தியா அவனிடம் வந்து பேசும் வரை தான் நீடித்தது.

குழப்பத்துடனே வீடு திரும்பியவனுக்கு கவிமதி தன் அண்ணனுடன் பேசியது முகம் சுளிக்க வைத்தது.

'பொறுமை... பொறுமை..' எனத் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டு மனைவியிடம், ''மதி, யாரு போன்ல?'' என ஏதும் அறியாததைப் போல கேட்டான்.

''வினோத் அண்ணன். அதைப் பத்தி அப்புறம் பேசலாம். வாங்க நீங்க.. பசியோட இருப்பீங்க'' எனக் கூறி கீழே சென்றாள்.

கவிமதிக்கு என்னவென்றால் வெளியூர் பயணத்தை முடித்துக் கொண்டு வந்த கணவன் வெளியூரில் ஒழுங்காகச் சாப்பிட்டானோ என்னவோ, அதனால் கணவனிடம் பேசுவதை எல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தாள்.

அத்தோடு இவன் பேச ஆரம்பித்தால் வாய் மட்டும் பேசாது. கைகளும் சேர்ந்து அல்லவா பேச ஆரம்பித்து விடும். பின்னர் அவனிடமிருந்து விடுபட போராட வேண்டும் என நினைத்து, எதிர்பார்ப்பிருந்தாலும் அவசரமாக அங்கிருந்து நழுவினாள்.

ஆனால், அவசரக்காரனான சந்தோஷோ, கவிமதி எதையோ மறைக்கத் தான் பேச்சை மாற்ற கீழே ஓடி விட்டாள் என நினைத்து சினந்து கொண்டான்.

சாப்பிடும் பொழுதும், கடந்த ஐந்து நாட்களாக கணவன் சென்று வந்த பயணம் பற்றியும், அலுவல் வேலையைப் பற்றியும் தான் வாய் ஓயாமல் கேள்விகள் கேட்டுக் குடைந்து கொண்டிருந்தாள் கவிமதி.

ஏனோ தானோ என்று பதில் அளித்து அடிக்கடி யோசனையில் ஆழ்ந்தவனைப் பார்த்த கவிமதி, ''ஏன் இவ்வளவு டல்லா இருக்கீங்க? உடம்பு சரியில்லையா?'' என கணவனின் நெற்றியைத் தொட்டுப் பார்த்து, ''உடம்பெல்லாம் சூடா இல்லை.. என்ன ஆச்சு சந்து?'' எனக் கவலையுடன் கேட்டாள்.

அவள் கையை விலக்கிவிட்டு, ''அலைஞ்சதுல கொஞ்சம் அசதியா இருக்கு. நான் மேல போறேன்'' எனப் பட்டும் படாமல் பதிலளித்து அவர்களின் அறைக்குச் சென்றான்.

அசதி தீர குளியல் போட்டுவிட்டு எதையோ எடுக்க கவிமதியின் பொருட்கள் இருந்த இடத்தில் தேடினவனின் கண்களில் துணிகளுக்கு இடையில் உள்ள ஒரு பையில் கட்டுக் கட்டாக பணம் இருப்பது பட்டது.

பணத்தைப் பார்த்தவனுக்கு ஏதோ புரிவதைப் போல இருந்தது. 'ஒருவேளை சந்தியா சொன்னது போல மதி தான் அந்தப் பணத்தை எடுத்து வச்சிருக்காளோ? அவளிடம் கேட்கலாமா?' என மனதில் சடுகுடு ஆடிப் பார்த்தான்.

அளவில்லாக் குழப்பத்தில் யோசித்தால் ஏதாவது ஏடாகூடமாகப் பேசி விடுவோம். சந்தியா சொன்னது போல பொறுமையாக இருப்போம் என இறுதியில் முடிவு செய்து கொண்டான்.

கவிமதி வந்தால் ஏதோ ஒன்று சலசலத்துக் கொண்டே இருப்பாள். பின் அவளிடம் தன் மனதை மறைக்க



முடியாமல் கோபப்பட்டுவிட்டால் என்ன செய்வது என நினைத்து, அவள் வருவதற்குள் தூங்க முயற்சி செய்தான். அவனால் முயற்சி மட்டுமே செய்ய முடிந்தது!

அவன் தூங்கிவிட்டதாக எண்ணிய கவிமதி, 'பாவம் ரொம்ப டயர்டா இருந்திருப்பார் போல... சரி! நான் பேச நினைச்சதை அப்புறமாப் பேசலாம்', என நினைத்தவாறே அவனைத் தொந்தரவு செய்யாமல், மெதுவாக அவன் நெற்றியில் இதழ் பதித்து விட்டுப் படுத்தவள் உடனே உறங்கியும் விட்டாள்.

அவள் இதழ் பதித்த வினாடியில், அவளை அணைக்கத் துடித்த கரங்களை கடினப்பட்டுக் கட்டுப்படுத்தியவன், சிறிது நேரம் உறங்குவதற்குப் போராடிக் கொண்டிருந்தான். கவிமதி ஆழ்ந்த நித்திரையில் இருக்க, சத்தம் இல்லாமல் எழுந்து பால்கனிக்குச் சென்று, அன்று மாலை நடந்தவற்றை மறுபடியும் அசை போட்டான்.

* * *

கோயம்புத்தூரில் இருந்து திரும்பி வந்தவுடனே ஒரு முக்கிய பிரமுகருக்கு கட்டிக் கொடுக்கும் பணியில் நடந்த சிறு குளறுபடியைச் சரி செய்ய காலையிலிருந்து பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தான் சந்தோஷ்.

ஒருவழியாக அன்று மாலைக்குள் வேலையை எவ்வித சிக்கலும் இல்லாமல் முடித்தவன், கவிமதியுடன் சிறிது நேரம் செலவழிக்கலாம் என நினைத்து உல்லாசமாக விசில் அடித்தவாறே கிளம்பினான்.

அவன் கிளம்ப ஆயத்தம் செய்து கொண்டிருந்த சமயம் அறைக் கதவை யாரோ தட்ட, 'இந்நேரத்துல யாரு?' எனக் கடுப்புடன் நினைத்தவன், 'எஸ்... கம் இன்' என்றான்.

உள்ளே வந்த சந்தியாவைப் பார்த்து, ''வா வா வந்து உட்காரு கரடி'' என உற்சாகத்திற்குத் தாவியவன், அவள் வரவைக் குறித்து ஆச்சர்யப்பட்டும் கொண்டான்.

தொழில் விஷயமாகப் பேசவென்றால் அவன் அண்ணனின் அறையில் தான் குழுமுவார்கள். சொந்த விஷயங்களைப் பற்றி அலுவலகத்தில் இதுவரை இருவரும் பேசியதில்லை, அன்று கவிமதியைப் பற்றித் தன் கருத்தை சந்தியா தெரிவித்ததைத் தவிர. அதனால் சந்தியா அவன் அறைக்கு வந்தது, அதுவும் அவள் மடிகணினியுடன் வந்தது அவனுக்கு அதிசயமாகத் தான் இருந்தது.

அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தவாறே, ''சந்தோஷ், நாம பேசப் போற விஷயம் விக்னேஷுக்குத் தெரியக் கூடாது'' என நண்பன் மனதில் ஆச்சர்யப்பட்டதுக்கு, நிஜத்தில் பதில் தந்தாள் சந்தியா.

அவள் குரலில் உற்சாகம் சிறிதளவும் இல்லாமல் இருப்பதைக் கேட்டவன், ''என்ன விஷயம் சொல்லு. ஏதாவது பேங்க்கை கொள்ளை அடிக்கப் பிளான் பண்ணியிருக்கியா?'' என்றான் அவனும் சீரியசாக, கிசுகிசுப்புக் குரலில். அப்படியாவது தன் தோழி சிரிக்க மாட்டாளா என்ற எதிர்பார்ப்புடன்.

''நான் சொல்லறதைக் கேட்டு அவசரப்பட்டு எடுத்தேன் கவிழ்த்தேன்னு ஏதாவது பண்ணி வைக்காதே'' என்றாள் அவன் சொன்னதை சட்டை செய்யாமல்.

''போதும் குழம்பினது. முதல்ல விஷயத்தைச் சொல்லு'' என்றான். அப்பொழுது கூட அவன் பெரிதாக ஒன்றையும் எண்ணிவிடவில்லை. ஆனால் அவள் சொன்ன விஷயங்களைக் கேட்டதும், சில நாட்களுக்கு முன்னர்



அவன் மனதில் ஊன்றிய சந்தேக விதை உறக்க நிலையிலிருந்து வெளிவந்து தளதளவென்று வளர ஆரம்பித்தது.

## 9



சந்தியா சொல்ல வந்த விஷயத்தை நேரடியாகக் கூறாமல் சுற்றி வளைத்துச் சொல்ல ஆரம்பித்தாள்.

''நம்ம கம்பெனி அக்கௌண்ட்ஸ் பத்தி கவிக்கு ஒரு தடவை சொன்னாலே நல்லா புரிஞ்சுக்கறா. வேலை விஷயத்துல ரொம்பவுமே திறமைசாலி'' எனக் கவிமதியைப் பாராட்டி சந்தியா நிறுத்த,

''எல்லாம் சகவாசதோஷம்'' எனப் பெருமையுடன் தன் சட்டைக் காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டான் சந்தோஷ்.

அவன் சொன்னதை இம்முறையும் கண்டுகொள்ளாமல், ''ஆனா, பண விஷயத்துல கொஞ்சம் குளறுபடி நடந்திருக்கு. முதல் தடவை நடந்தப்போ நான் தான் மறந்து போயிட்டேன்னு நினைச்சு எப்படியோ சரி செஞ்சேன். ஆனா, அதுவே தொடர்ந்திட்டு இருக்கு...'' என விஷயத்தைக் கூறாமல் அவனை பொறுமை இழக்க வைத்தாள்.

''சந்தியா, கொஞ்சம் தெளிவாச் சொல்லறியா? எனக்கு ஒண்ணும் புரியலை'' என்றான் மூண்ட எரிச்சலை மறைத்தபடி.

''பணத்தை பேங்க்ல போட்டு எடுக்கற டீடைல்ஸோட, பேங்க்ல நடந்த ட்ரான்சேக்சன் டீடைல்ஸ் ஒத்துப் போக மாட்டேங்குது. அடிக்கடி பேங்க்ல இருக்கிற பணம் ஐம்பதாயிரம், ஒரு லட்சம்ன்னு குறைஞ்சிருக்கு. அப்பறம் வேற டேட்ல அந்தப் பணத்தைக் கட்டி சரி பண்ணிட்டாங்க'' எனத் தன் மடிகணினியில் இருந்ததை தேதிவாரியாகக் காண்பித்தாள்.

புருவத்தைச் சுளித்தவாறே அதன் மீது பார்வையை ஓட்டியவன், ''நீயும் கவியும் மட்டும் தானே செக் போட்டுக் கொடுக்க முடியும். அவசியம்ன்னா மட்டும் தானே நானோ அண்ணனோ கொடுப்போம்? கவிகிட்டே கேட்டியா?'' என்றான்.

''கவி பழகறதுக்காக கொஞ்ச நாளா அவ தான் பேங்குக்குப் போற வேலையையும் கணக்குகளையும் பார்த்துட்டு இருக்கா. ஆடிட்டிங் வரப் போறதுனால ரெண்டு நாளா அக்கௌண்ட்ஸ் எல்லாம் பார்த்தப்போ தான் இது தெரிஞ்சது.

பேங்க்ல செக் எல்லாத்தையும் கவி தான் போட்டு எடுத்திருக்கா. எடுத்த பணத்தையும் கொஞ்ச நாள்ல திருப்பியும் போட்டிருக்கா. அதைப் பத்தி ஆபீஸ்ல ஒரு ரெகார்ட்ஸும் இல்ல'' என விளக்கினாள்.

''அவ்வளவு தானே சந்தியா. கவிகிட்டே கேட்க வேண்டியது தானே?''

''இப்போ தான் எனக்குத் தெரிஞ்சது. கவி இன்னைக்கு வேலைக்கு வரலை. அதான் உன்கிட்டே சொல்லலாம்ன்னு நினைச்சு வந்தேன். அதுவுமில்லாம...'' என இடைவெளிவிட்டு,

''ரெண்டு வாரத்துக்கு முன்னாடி என் ரூம்ல வச்சிருந்த நம்ம கம்பெனி பணம் இருபதாயிரம் காணாமப்



போயிடுச்சு. நான்தான் ஞாபகமறதியா எங்காவது வச்சிருப்பேன். இல்ல, வேற ஏதாவது பண்ணிட்டு மறந்திருப்பேன்னு நினைச்சு, என் அஜாக்கிரதையினால் தான் இப்படி ஆச்சுன்னு விக்னேஷுக்குக் கூடச் சொல்லாம என்னோட அகௌண்ட்ஸ்ல இருந்து எடுத்துக் கட்டிட்டேன்'' என விளக்கினாள்.

''ரூம்ல இருந்த பணத்தை யாரு சந்தியா எடுத்தது? ஆபீஸ்ல இருக்கிறவங்களா? முதல்ல போலீஸ்ல ஒரு கம்ப்ளைன்ட் கொடுத்துடலாம்'' என இடையிட்டான் சந்தோஷ் சற்றே உயர்ந்த குரலில்.

''கோவப்படாம பொறுமையாக் கேளு, சந்தோஷ். பணம் காணாமப் போனது என் ரூம்ல. அங்க நம்ம வீட்டு ஆளுங்களைத் தவிர வேற யாருக்கும் அனுமதி கிடையாது. வீட்டு ஆளுங்க யாராவது எடுத்திட்டு சொல்ல மறந்திருந்தா அப்புறம் போலீஸ்ல கம்ப்ளைன்ட் பண்ணி நமக்குத் தான் அசிங்கம்.

தேவையில்லாம வேலை செய்யறவங்க மேலே சந்தேகப்பட்ட மாதிரியும் ஆயிடும். அதுவும் இல்லாம தொழில் பண்ணற இடத்துல போலீஸ் வந்து விசாரிச்சிட்டு இருந்தா நல்லா இருக்குமா?'' என விளக்கம் தந்து நண்பன் யோசிக்கட்டும் என அமைதியானாள்.

அவள் சொல்வதில் இருந்த நியாயத்தை ஒத்துக் கொள்ள வேண்டி இருந்தது சந்தோஷுக்கு. அதனால் சற்று அமைதி அடைந்தவன், ''நீ சொல்லறதும் சரி தான். இனிமேல் ஜாக்கிரதையாக இருப்போம் சந்தியா'' என்றான்.

ஆனால் சந்தோஷின் மனதிற்குள், 'பணத்தை யார் எடுத்திருப்பாங்க?' என்ற எண்ணம் சிறகடித்துப் பறந்து கொண்டு தான் இருந்தது.

''இப்போ பணத்தை பத்திரமா பூட்டித் தான் வைக்க றேன். அப்புறம் கவிகிட்டே இதைப் பத்தி எப்படி கேட்கறதுன்னு ஒரே குழப்பமா இருந்தது. அதான் உன்கிட்டே சொல்ல வந்தேன். நான் சொல்லறதைக் கவி வேறு விதமா எடுத்துக்கிட்டா...'' என நிறுத்தினாள் சந்தியா.

அவள் சொல்வதை இடையிடாமல் கேட்டுக் கொண்டிருந்தவன், ''இதுல குழம்ப என்ன இருக்கு?'' என்றான்.

''அது வந்து.. கடந்த ஒரு மாசமாகத் தான் இது நடந்திருக்கு. இப்போதைக்கு கொஞ்சம் பணம் குறையுது. கொஞ்ச நாள்ல கவியே திரும்ப போட்டுடுவான்னு நினைக்கிறேன்.

ஒண்ணு, என் ரூம்ல இருந்த பணம் மிஸ் ஆகாம இருந்து அக்கௌண்ட்ஸ் டாலி ஆகலைன்னா கவிகிட்டே நேரடியாக கேட்டிருப்பேன். இப்போ போய்க் கேட்டா அவ மேலே குற்றம் சுமத்தறதா தப்பா நினைச்சுக்கக் கூடாதே.

அடுத்தது, நீ அடிக்கடி வெளியூர் போறதுனால அவசரச் செலவுக்காக, நம்ம வீட்டுப் பணம்ன்னு உரிமையோட கவி எடுத்திருந்தா, அதைக் கேட்டு அவளைச் சங்கடப்படுத்த விரும்பலை'' எனத் தன் குழப்பத்திற்கான காரணங்களை அடுக்கினாள்.

''சரி நீ கேட்க வேண்டாம். நான் கேட்கிறேன்'' என சொன்ன சந்தோஷிடம்,

''உன்னோட அவசரத்தனத்துனால கேட்க வேண்டியதை எக்குத் தப்பா கேட்டுட்டேன்னு வை, 'உரிமையோட எடுத்ததை குற்றவாளி மாதிரி ஆக்கிட்டானே, என்னைத் தப்பா நினைச்சுட்டானே'ன்னு கவி உன் மேலே சங்கடப்பட்டுட்டா... அப்புறம் வீணா உங்களுக்குள்ளே



மனக் கசப்பு வர சான்ஸ் இருக்கே...'' என அதற்கும் ஒரு காரணம் சொன்னாள்.

'மதி அப்படி நினைப்பாளா?' என எண்ணத் தொடங்கியவனுக்கு, 'ச்சே! ச்சே! மதி அப்படி எல்லாம் நினைக்க மாட்டா. நான் தான் ஏதாவது சொல்லி அவளை அப்செட் ஆக்கிடுவேன்' என அவனை நினைத்தே பயந்தான் சந்தோஷ்.

அவன் யோசனையைத் தடை செய்யும் விதமாக, ''கவிக்கு என்ன அவசரத் தேவையோ? ஒரு வேளை வினோத்துக்கு அவசரமோ என்னமோ?'' எனக் கூறி நடப்புக்குக் கொண்டு வந்தாள் சந்தியா.

''அப்படி பணம் வேணும்ன்னா அவங்க என்கிட்டே கேட்டிருப்பாங்களே. நான் கவிகிட்டே கேட்டுப் பார்க்கிறேன்'' என அப்பொழுதும் சந்தோஷ் சமாதானமடையாமல் சொன்னான்.

''நீ கவிகிட்டே கேட்டா, நான் சொல்லித் தான் உனக்குத் தெரியும்ன்னு நினைச்சு என்னைத் தப்பாப் புரிஞ்சுக்குவா. ப்ளீஸ். இப்போதைக்கு ஒண்ணும் கேட்காத. நீ அடிக்கடி வெளியூர் போயிடறதுனால கவிக்கு சொல்ல முடியாமப் போயிருக்கும். கொஞ்ச நாள் பாரு. அவளே வந்து உன்கிட்டே சொல்லுவா.

உன்கிட்டே இதைப் பத்தி சொல்ல நினைச்சேன். அவ்வளவு தான். நீ போய் கவிகிட்டே விசாரிக்கணும்ன்னு எல்லாம் இல்லை. அதனால தான் விக்னேஷ்கிட்டே கூடச் சொல்லலை. இதுவே இனியும் தொடர்ந்தா அப்புறம் பார்க்கலாம். இப்போதைக்கு என் முடிவு இது தான்'' என உறுதியாகச் சொல்லி முடித்தாள் சந்தியா.

''கவி அப்படி எல்லாம் பணத்தை எடுக்க மாட்டா. அப்படியே எடுத்திருந்தாலும் வேற ஏதோ காரணத்துக்காகத்தான் இது மாதிரி நடந்துட்டு இருப்பா. சரி! இந்தத் தடவை நான் ஒண்ணும் கேட்கலை'' எனத் தோழி எதிர்பார்த்துக் காத்திருந்த பதிலைச் சொன்னான்.

''அப்புறம் ஒரு விஷயம் கேள்விப்பட்டேன். நம்ம கிட்டே வீடு கட்ட வந்த சில கிளையன்ட்ஸ் எல்லாம் வினோத்கிட்டே போயிருக்காங்க. அவங்களைப் பார்த்தப்போ, 'நீங்க சிபாரிசு செஞ்ச பையன், வினோத் வேலையில் ரொம்ப சுத்தம்'ன்னு பாராட்டினாங்க. கவியைத் தவிர வேற யாரு ரெகமண்ட் பண்ணி இருக்க முடியும்?'' என அவளுக்குத் தெரிந்த விவரத்தைப் பகிர்ந்து கொண்டாள்.

சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்து, ''சரி நான் பார்த்துக்கிறேன். அப்புறம் நீ போட்ட உன் பணத்தை நான் என் அக்கௌண்ட்ல இருந்து கொடுத்துடறேன். மறுக்காம வாங்கிக்கணும்'' எனச் சொன்னவனிடம் மறுப்பாக, ''இல்ல சந்தோஷ்'' என சந்தியர் ஆரம்பிக்கும் முன்னரே,

''நீ சொன்னதுக்காக நான் கவியிடம் கேட்கலைன்னு சொன்னேனே, அதுக்காக நான் சொல்லறதை நீ கேட்டுத் தான் ஆகணும். மறுக்காதே... ப்ளீஸ்...'' என்றான்.

சந்தியாவும், ''சரி சந்தோஷ்! ஆனா, எதையும் நிதானமா யோசிச்சுச் செய். நான் தான் உனக்கு இந்த விஷயத்தை சொன்னேன்னு எக்காரணம் கொண்டும் யாருக்கும் தெரியக்கூடாது'' எனக் கேட்டுக் கொண்டாள் சந்தியா.

''சரி சந்தியா!'' என அவன் உறுதியளித்த பின்னர், ''விக்னேஷோட பிரெண்ட் ஒருத்தரை மீட் பண்ணிட்டு



நைட் லேட்டா வருவோம்'' எனக் கூறிவிட்டுக் கிளம்பினாள்.

''சரி! முதல்ல இங்க ஒரு செக்யூரிட்டி கேமரா மாட்ட ஏற்பாடு செய்யணும்'' என முடித்தான் சந்தோஷ்.

சந்தியா சென்றவுடன் அவனுக்குத் தனியாக யோசிக்க வேண்டி இருந்ததால் கவிமதிக்கு அழைத்து வீட்டிற்கு வரத் தாமதமாகும் எனச் சொன்னவன், கவிமதியிடம் கேட்பதா வேண்டாமா என ஒரு முடிவுக்கு வர முடியாமல் திணறினான்.

'நான் மதிகிட்டே கேட்டு, அவ ஏதாவது ஒரு நியாயமான காரணம் சொல்லி, உங்களுக்கு எப்படித் தெரியும்ன்னு கேட்டா, நான் சந்தியாவை காட்டிக் கொடுக்க முடியாது.

அப்படியே உண்மையைச் சொன்னாலும், ஒண்ணும் இல்லாத விஷயத்துக்காக அவங்களுக்கு நடுவுல வீணா ஒரு மிஸ்அண்டர்ஸ்டாண்டிங் ஆயிடும்' என்று யோசித்தவன், இதனால் அவனுக்குத் தன் துணையின் மேல் வரும் மனஸ்தாபத்தைப் பற்றி யோசிக்க மறந்துவிட்டான்.

'சந்தியா சொன்ன மாதிரி பொறுமையாத்தான் இருக்கணும். பண விஷயம். சென்சிடிவ் மேட்டர். அதனால இப்போதைக்கு இப்படியே விட்டுவிடலாம். மதி வந்து சொல்லறப்போ பார்ப்போம்' என்ற முடிவுக்கு இறுதியில் வந்தான்.

கவிமதியிடம் கேட்பதைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்தவனால் காணாமல் போன பணம் என்னவாயிற்று என யூகிக்க முடியவில்லை.

'ஒரு வேளை வினோத்துக்கு பணம் தேவையோ? அதனால் தான் பிரெண்ட்ன்னு என்னைக் கேட்காம எடுத்துக் கொடுத்திருப்பாளோ மதி?' என ஒரு கணம் நினைத்தவன்,

'ச்சே! ச்சே!.. நானே மதியைப் பத்தி தப்பா நினைக்கக் கூடாது' என உடனே தன் மனதைக் குட்டிக் கொண்டான். 'ஆனா, நமக்கு வந்த கிளையன்ட்ஸ் எப்படி வினோத் கிட்ட போனாங்க?' என மீண்டும் குழம்பினான்.

மேலும் சற்று நேரம் யோசித்தவனுக்கு விடை கிடைக்காமல் தலைவலி வந்தது தான் மிச்சம். அதே சமயம் அவனின் வெளியூர் பயணத்தினால் அவன் வினோத்திடம் பல நாட்களாகப் பேசாதது உறைத்தது.

'வினோத்திடம் பேசலாம் என முடிவு செய்து நண்பனின் அலைபேசிக்கு அழுத்தினான். அவனோ யாருடனோ பேசிக் கொண்டிருந்தான்.

'வீட்டுக்குப் போய் பேசலாம்' என முடிவு செய்து, தெளிவடைந்து விட்டதாக எண்ணி அங்கிருந்து கிளம்பி வீடு வந்த சந்தோஷின் காதில் தான் கவிமதி, தன் அண்ணனுடன் பேசும் 'மனதை விட பணம் தான் முக்கியம்' என்ற வாக்கியம் விழுந்தது.

அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பதைப் போல, அவளைத் தப்பாக நினைக்கக் கூடாது என எண்ணி வந்தவன் மனதில் உள்ள சஞ்சலத்தால் அவள் சொன்னதை வேறு விதமாக எடுத்துக் கொண்டான்.

அத்தோடு, அவன் வினோத்துடன் பேச அழைக்கும் பொழுதெல்லாம் அவன், இவன் மனைவியுடன் பேசிக் கொண்டிருந்தான் என்ற நினைப்பே அவனுக்குக் கசப்பாக இருந்தது. அதனால் தான் கவிமதியிடம் அவன் ஒழுங்காகப் பேசவில்லை. இதை யாவும் அறியாத கவிமதியோ நிம்மதியாக ஒரு குழந்தை போல உறங்கிக் கொண்டிருந்தாள்.



பால்கனியிலிருந்து திரும்பி உள்ளே வந்த சந்தோஷ், அரவம் வராமல் கவிமதியின் அருகில் படுத்து, அவள் கன்னங்களை வருடியவன் அவளைப் பார்த்தவாறே சிறிது நேரத்திலேயே கண்ணயர்ந்தான்.

* * *

மறுநாள் காலை, நேரம் கழித்து எழுந்தவன், கவிமதி கீழே சென்றுவிட்டாள் என்றுணர்ந்து, 'மதிகிட்டே விளக்கம் கேட்காம, உன்னோட செல்ஃப்ல பணம் இருக்குதுன்னு சொல்லிப் பார்ப்போம்' என்ற முடிவுடன் கீழே இறங்கிச் சென்றான்.

அவன் கீழே வந்த சமயம் கவிமதி சமையலறையில் பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தாள். அவர்கள் வீட்டின் வேலையாள் அன்று விடுப்பு எடுத்திருந்ததால் தான் அத்தனை பரபரப்பு.

சந்தோஷைப் பார்த்தவுடன் அவனுக்குக் காபி கலந்து கொடுத்தவள், ''வெளியூருக்குப் போற இடத்துல சரியா சாப்பிடறீங்களா இல்லையா? ஆள் கொஞ்சம் இளைச்ச மாதிரி இருக்கே'' என உண்மையான அக்கறையுடன் கேட்டாள் கவிமதி.

''அதெல்லாம் கரெக்ட்டாத் தான் சாப்பிடறேன் மதி! ஒருவேளை நீ வந்து சமைச்சுப் போட ஆரம்பிச்சதுல இருந்து தான் இப்படி ஆயிட்டேனோ என்னவோ'' என்றான் நகைத்தவாறே.

அவன் வாய் அவளைச் சீண்டவென்று பேசினாலும் மனதோ, 'இப்போ கேளு, இல்லை, இன்னும் கொஞ்சம்

பேசிட்டு அப்புறம் கேளு' என அவனுக்கு மாறி மாறி கட்டளையிட்டுக் கொண்டிருந்தது.

அவன் சொன்னதைக் கேட்டு அவனை முறைத்தவள், ''ஏன் சொல்ல மாட்டீங்க.. நான் செஞ்ச சாப்பாட்டை சாப்பிட்டுத்தான் அண்ணன் சாப்பாட்டு ராமன் ஆயிட்டார்ன்னு அப்பப்போ என்னைத் திட்டுவார். நீங்க என்னடான்னு உல்டாவாச் சொல்லறீங்க'' என்றாள்.

'மீண்டும் அண்ணனா? வாயைத் திறந்தாலே அவன் புராணம் தானா?' என எரிச்சல் வந்தாலும் அதை ஒதுக்கியவாறு, ''அவன் சொன்னது கரெக்ட் தானே? நீ வாயில வைக்க முடியாத மாதிரி செஞ்சு போடறதை யாரும் சாப்பிட மாட்டாங்க. வீணாப் போகுமேன்னு எல்லாத்தையும் உள்ளே தள்ளுவான் போல'' என மனைவியை மேலும் சீண்டினான்.

''உங்களுக்கு இன்னைக்கு யாரும் கிடைக்கலையா வம்பு வளர்க்க. நான் தான் கிடைச்சேனா?'' எனச் சிணுங்க, முறுவலித்தவாறே, சுற்றும் முற்றும் பார்த்தான். அங்கே, யாரும் அவர்களுக்கு அருகில் இல்லை என்பதை உறுதிபடுத்திவிட்டு வாயைத் திறந்து பேச்சை ஆரம்பிக்கும் முன்,

கவிமதி ஞாபகம் வந்தவளாக, ''சந்து, அத்தையும் மாமாவும் போன் பண்ணினாங்க. நேத்தே சிங்கப்பூர் போய் சேர்ந்துட்டாங்களாம். ஜர்னி நல்லா இருந்ததுன்னு சொல்லச் சொன்னாங்க'' என்றாள் வேலை செய்து கொண்டே.

''அப்படியா!'' என அவள் சொன்னதற்கு செவி சாய்த்தவன், ''மதி, கேட்கணும்ன்னு நினைச்சேன். உன்னோட



செல்ஃப்ல பணம் இருந்துச்சே...'' என ஒருவாறாக கேட்க நினைத்ததைக் கேட்டான்.

''ஓ அதுவா? அது அண்ணனுக்குச் சேர வேண்டிய பணம். மா...'' என பதில் கொடுக்கும் போதே அடுப்பில் வைத்த குக்கர் சத்தம் எழுப்ப, ''சந்து! எனக்கு இன்னும் தலைக்கு மேல வேலை இருக்கு. நாம நிதானமா இன்னிக்கு நைட் வந்து பேசலாம். ப்ளீஸ்.. நீங்க போய்க் கிளம்பி வாங்க'' என அவசரமாக சமையலறையை நோக்கி ஓடினாள்.

அவள் அவசரமாக சென்றதைப் பார்த்தவன், 'வினோத்தோட பணமா? நான் வேற ஏதாவது கேட்டுடுவேன்னு ஓடிட்டாளா?' என ஏற்கனவே குழப்பத்திலிருந்தவனின் மனம் அவசரமாக மேலும் குழப்பத்துடன் உடன்படிக்கை நடத்தியது.

கிளம்பி, கவிமதியுடன் அலுவலகத்திற்குச் செல்ல, செல்லும் வழியில், சந்தோஷ் வேறு விதமாக பேச்சை ஆரம்பித்தான்.

''மதி, நீ நிஜமாவே என்னை லவ் பண்ணறியா? நீ என்னோட காதலை புரிஞ்சுக்கிட்டயா?'' என காரைச் செலுத்தியவாறே கேள்விக் கணைகளைத் தொடுக்க,

''சந்து, உங்களுக்கு எதுக்குத் திடீர்ன்னு இப்படி எல்லாம் சந்தேகம் வருது. உங்களை நான் நிஜமாத்தான் லவ் பண்ணறேன். வேணா ஒரு ஸ்டாம்ப் பேப்பர்ல கையெழுத்துப் போட்டுக் கொடுக்கட்டுமா?'' என இலகுவாக பேச்சை நகர்த்தினாள் மனைவி.

அவள் புறம் திரும்பி ஒரு பார்வையைச் செலுத்தி, ''அப்படின்னா என்கிட்டே நீ எதையும் மறைக்கலையே?'' எனக் கேட்டான் சந்தோஷ்.

''உங்ககிட்டே மறைக்க என்ன இருக்கு? கல்யாணத்துக்கு முன் வரும் காதல்ல நம்பிக்கையில்லைன்னு முதல்ல சொன்னேன் தான். அது உங்களைப் பத்தி தெரியறதுக்கு முன்னாடி. இப்போ நான் அப்படியில்லையே'' எனச் சொன்னவள், அவன் அருகில் நெருங்கி அவன் கன்னத்தில் முத்தம் ஒன்றைப் பதித்தாள்.

பின் தொடர்ந்து, ''உங்களுக்கு மனசுல ஏதாவது நெருடல் இருந்ததுன்னா உடனே என்கிட்டே பேசித் தீர்த்துக்கோங்க. எதையுமே பேசிட்டா எல்லா சஞ்சலங்களும் காணாமல் போயிடும்.

என் அண்ணனை நான் பெஸ்ட் பிரெண்ட்ன்னு சொன்னது உங்களுக்கு உறுத்திட்டே இருக்கு. மறுபடியும் அதை நினைச்சுத்தான் நேத்து நைட்ல இருந்து நீங்க சரியாவே இல்லையா? என்கிட்டே அப்பவே கேட்டிருக்கலாமே?

சந்து, ஒண்ணும் மட்டும் புரிஞ்சுக்கோங்க. உங்களுக்கு எப்படி சந்தியா அக்காவோ அப்படித் தான் என்னோட அண்ணனும். சந்தியா அக்காவுக்கு நீங்க முக்கியத்துவம் கொடுக்கறீங்கன்னு நான் சண்டை போட முடியுமா?

எனக்குத் தெரியும் நீங்க உங்க மனசுல எனக்கு எந்த இடத்தைக் கொடுத்திருக்கீங்கன்னு. அதே மாதிரி தான் நானும்'' என 'இப்பொழுது, இந்த இடத்தில் சந்தியாவைப் பற்றின வாக்கியம் அவசியமா?' என யோசிக்காமல் விளக்கம் சொன்னதற்கு, பின்னாளில் வருந்தப் போகிறாள் என்பதை அறியாமல் சந்தோஷைப் பார்த்து புன்னகைத்தாள் மனைவி.

சந்தோஷ் அவளைப் பார்த்து முறுவலிக்க, ''ஷ்... அப்பாடா! எவ்வளவு பேச வேண்டி இருக்கு. பேசிப்



பேசி டயர்ட் ஆயிடுச்சு. ஜில்லுனு இளநி குடிக்கணும் போல இருக்கே'' என்றாள் கவிமதி.

மனைவி பேசிய விதத்தில், அவன் மனதில் இருந்த சஞ்சலங்கள் கலைய, ''அதில்ல. உன்னோட நிறைய டைம் ஸ்பென்ட் பண்ண முடியலைங்கற எரிச்சல்ல அப்படிக் கேட்டுட்டேன். சாரிடா!'' என அவள் கையைப் பற்றினான்.

''மை டியர் புருஷா! என் கையைப் பிடிச்சது போதும். கரெக்டா கியர் மாத்துங்க'' எனச் சிரித்தவாறே கூறி அவன் கையை நகர்த்தியவள்,

''நீங்க வெளியூர் போயிட்டா போனை எடுக்கறதே இல்ல. கேட்டா சார்ஜ் பண்ண மறந்துட்டேன்; சிக்னல் இல்லன்னு சொல்வீங்க. அப்புறம் சரியா டைம் ஸ்பென்ட் பண்ண முடியலைன்னு வருத்தப்படுங்க'' என அவன் கைப்பேசியை எடுக்காததைக் குறை கூறினாள்.

''என்னப் பார்க்கறீங்க? நீங்க கோவையில இருந்தப்போ உங்களைக் கூப்பிட்டுப் பார்த்தேன் சந்து. அப்போ உடனடியா கொஞ்சம் பணம் தேவைப்பட்டது.. அப்புறம் நாங்களே பார்த்துகிட்டோம்...'' என அவள் அவந்திகாவின் திருமணத்தன்று பணம் தேவைப்பட்டதை நினைத்துச் சொல்ல, சந்தோஷுக்கு நிம்மதியாக இருந்தது.

நிம்மதியடைந்தவன் சிந்தனையில் உழல ஆரம்பித்து விட்டான். அதனால், 'அப்புறம் தான் பணம் தேவையே இல்லாமப் போயிடுச்சு' என்று மனைவி சொன்ன வாக்கியம் அவன் காதில் புகவில்லை. அத்தோடு அருகில் சென்ற ஹாரன் சத்தமும் அதற்கு பெரிதும் துணை நின்றது.

'ஏதோ ஒரு தேவைக்குத் தான் பணம் எடுத்திருக்கா. நல்லவேளை நான் அவசரப்பட்டு எதுவும் கேட்கலை. அவளே வந்து வைக்கட்டும், இல்ல, அவளே சந்தியா கிட்டே சொல்லிக்கட்டும். நாம இதுல தலையிடக் கூடாது' என நிம்மதி அடைந்தான்.

சந்தோஷ் யோசனையில் உழன்று கொண்டிருக்க, கவிமதியே தொடர்ந்தாள். ''சந்து, ஒருத்தர் கூட எவ்வளவு நேரம் செலவழிக்கறோம்ங்கறதைப் பொறுத்து நம்ம அன்பு பெருகும்ன்னு இல்ல. நான் இப்படித் தான்னு நீங்களும், நீங்க இப்படித் தான்னு நானும் ஒருத்தரை ஒருத்தர் நல்லாப் புரிஞ்சுக்கிட்டாலே போதும்'' என்றாள்.

மனைவி சொன்னதைக் கேட்டவன் ஒரு புன்முறுவலுடன் அவளை நோக்கினான். பதிலுக்குப் புன்னகைத்தவள், ஞாபகம் வந்தவளாக, ''உங்க...'' எனச் சொல்ல ஆரம்பித்தவளின் குரலை சந்தோஷின் பேசி தடை செய்ய, அவன் அதை கவனிக்கச் சென்றான்.

'உங்க பிரெண்டுக்கும் கல்யாண ஆசை வந்துடுச்சு' என்ற வாக்கியத்தைத் தான் தடை செய்தது கை(யாலாகா)ப் பேசி.

''சொல்லு சந்தியா...'' என அழைத்த தோழியிடம் சந்தோஷ் கேட்க, ''நேத்து ஒரு பிரச்சனையை முடிச்சுக் கொடுத்தியே, அவர் இப்போ இங்கே வந்திருக்கிறார். 'நேத்து ஏதோ டென்ஷன்ல சந்தோஷ் தம்பியைத் திட்டிட்டேன். அதான் மன்னிப்பு கேட்டுட்டுப் போகலாம்'ன்னு வந்திருக்கார். சீக்கிரமா வா'' என அழைத்ததன் விவரத்தைச் சொன்னாள்.

''அவர் போய் என்கிட்டே மன்னிப்பெல்லாம் கேட்டுட்டு. பக்கத்துல வந்துட்டேன். காரை நிறுத்திட்டு



வரேன்'' என்றவன் பேசியை வைத்துவிட்டு விஷயத்தை தன் மனைவியிடம் கூறவும், அலுவலகம் வரவும் சரியாக இருக்க அவரவர்கள் வேலையை கவனிக்கச் சென்றனர்.

# 10



அந்த வாரக் கடைசியில், சந்தியா தன் உறவில் ஏதோ ஒரு விசேஷம் என விக்னேஷுடன் கிளம்பிவிட்டாள்.

சனிக்கிழமை காலை, சந்தோஷ் அலுவலகத்திற்குக் கிளம்பிக் கொண்டிருக்க, கவிமதி தன் வீட்டிற்குச் சென்றுவிட்டு மாலையில் திரும்பி வருவதாகக் கூறினாள். சந்தோஷும் கவிமதிக்கு அலுவலகத்தில் பெரிதாக வேலை ஒன்றும் இல்லாததினால் சம்மதித்தான்.

வேலை முடிந்து மதியம் வீட்டிற்கு வந்த வினோத், தன் தங்கையைப் பார்த்த சந்தோஷத்தில் குதித்தான். மதிய உணவிற்குப் பின், அவந்திகாவைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்க, அவர்களுக்கு நேரம் போனதே தெரியவில்லை.

சிறிது நேரம் சென்ற பின் தான் கவிமதிக்கு தன் அண்ணனிடம் சேர்ப்பிக்குமாறு தன் மாமா, மதியழகன் கொடுத்த பணம் தன்னிடம் இருப்பது ஞாபகம் வர, அதை எடுத்து வர இருக்கையில் இருந்து எழுந்தாள்.

அவள் கையைப் பற்றி இழுத்து மறுபடியும் அவளை உட்கார வைத்தவன் அப்புறம் வாங்கிக் கொள்வதாகக் கூறிவிட்டு, ''நான் மாமாகிட்டே எவ்வளவோ

சொல்லியும் கேட்காம, உங்களோட கல்யாணத்துக்கு செலவானதுல பாதிப் பணத்தை கொடுத்தே தீர்வேன்னு உன்கிட்டே கொடுத்து விட்டுட்டாரா? நீயாவது சொல்லு கவி'' என்றான் வருத்தமாக.

அதைக் கேட்ட கவிமதி வியப்புடன், ''அதுக்குத் தான் இந்தப் பணமா? இது உனக்கும் மாமாவுக்கும் நடுவில் இருக்கும் விஷயம். அவர் யோசிச்சு ஒரு முடிவு எடுத்திருக்கார்ன்னா, அதுக்கு நான் மதிப்பு கொடுத்துத் தான் ஆகணும். நான் அதில் தலையிடமாட்டேன்'' என அத்தோடு முடித்து விட்டாள்.

கவிமதியின் பிடிவாதத்தைப் பற்றி அறிந்திருந்த வினோத்தும் அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை. இறுதியில் கவிமதிக்கு கிளம்ப நேரமாகி விட்டதால் பணத்தைக் கொண்டு வந்து வினோத்திடம் தந்தாள்.

அலுவலகத்திற்குச் சென்ற சந்தோஷுக்கு எதிர்பார்த்ததை விட வேலை சீக்கிரமாக முடிய, தானே சென்று கவிமதியை அழைத்து வரலாம், அத்தோடு வினோத்திடமும் பேசி வெகுநாட்கள் ஆகிவிட்டதே என நினைத்து வினோத்தின் வீட்டிற்குக் கிளம்பினான்.

அவன் வந்து சேர்ந்த அதே சமயத்தில் தான் கவிமதி தன் அண்ணனிடம் பணத்தைக் கொடுத்தாள். வீட்டினுள் நுழைந்த சந்தோஷும் இந்தக் காட்சியைப் பார்த்தான்.

பார்த்தவனின் மனம், 'மதி எதுக்கு வினோத்துக்குப் பணம் கொடுக்கிறா? ஒருவேளை சந்தியா சொன்ன காணாமல் போன பணம் இது தானா?' என மீண்டும் தெளிவாகக் குழம்பினான்.

சந்தோஷின் வரவை எதிர்பாராத வினோத் குதூகலமானான். வினோத்தின் பெற்றோர்கள் சந்தோஷை



கவனியோ கவனி என்று கவனிக்க அவனால் மனைவியிடம் எதுவும் கேட்க முடியாமல் போனது.

அத்தோடு என்னவென்று கேட்பது? பொறுமையாகத் தான் செயல்பட வேண்டும் என முடிவும் செய்து கொண்டான் சந்தோஷ்.

இரவு உணவை முடித்துக் கொண்டு தான் செல்ல வேண்டும் என்று கவிமதியின் அன்னை, தேவகி அடம் பிடிக்க, சந்தோஷும் கட்டுப்பட்டான்.

''டேய் சந்தோஷ், நீ சாப்பிடாம கிளம்பினா, எனக்கு சாப்பிட நிறைய கிடைக்கும்ன்னு நினைச்சேன். இப்படி மண்ணை அள்ளிக் குமிச்சிட்டியே'' என போலியாக நொந்து கொண்டான் வினோத்.

''அதான் அப்பவே கிளம்பறேன்னு சொன்னேன்'' என சந்தோஷ் காரமாக பதிலளிக்க,

''சரி! பரவாயில்ல! பகிர்ந்துண்ணுவோம்ன்னு எல்லோருமே சொல்லறாங்களே. அதனால போனா போகுதுன்னு உன்னை ஆட்டத்துக்கு சேர்த்துக்கறேன்'' என நண்பனின் பதிலில் இருந்த காட்டத்தை உணராமல் பதிலளித்தான் வினோத்.

அனைவரும் அமர்ந்து பேசியவாறே உணவை முடிக்க, சீக்கிரமே கவிமதியுடன் கிளம்பிவிட்டான் சந்தோஷ். தன் வீட்டிற்குச் செல்லும் வழியில், கவிமதி தான் ஏதோ சலசலத்துக் கொண்டு வந்தாள். அவனோ தீவிரமான முகபாவனையுடன் காரைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

'வினோத்துக்கு பணம் தேவையா இருந்தா என் கிட்டே கேட்க வேண்டியதுதானே? நான் தானே அவனுக்கு பிரெண்ட். ச்சே! இது என்ன அவஸ்தை? இந்த

மதியாவது உண்மையைச் சொல்லலாம்' எனப் பல வாறாக எண்ணிக் கொண்டே வீடு வந்து சேர்ந்தான்.

வீட்டிற்குச் சென்றவுடன் வினோத் அவனைத் தொலை பேசியில் அழைத்து, ''சந்தோஷ், கேட்கணும்ன்னு இருந்தேன். நீ இங்க வந்தப்போ மறந்துட்டேன். ஏதோ ஒரு இடம் பூந்தமல்லி பக்கத்துல இருக்குதுன்னு கேள் விப்பட்டேன். அது இன்னும் விலைக்கு இருக்கா?'' எனக் கேட்டு அவனைத் துணுக்குறச் செய்தான்.

''ஓஹ்... அந்த இடமா? இன்னும் எங்க கையில் தான் இருக்கு. அதைப் பத்தி நாளைக்கு சொல்லறேன். ஏன், நீ வாங்கறதா இருக்கியா?''

''ஆமாம்டா! நான் முதல்ல வாங்க நினைச்சேன். அப்போ பணம் கைக்கு வரலை. இப்போ தான் பணம் வந்து சேர்ந்தது. சரி நேரம் கிடைக்கறப்போ மத்த டீடைல்ஸ் சொல்லு'' எனப் பேசியை வைத்தான் வினோத்.

சற்று நேரம் பேசியையே பார்த்துக் கொண்டிருந்தான் சந்தோஷ், ஏதோ அதற்குத் தான் எல்லா விடைகளும் தெரியும் என்பது போல. அதை ஓரமாக வைத்துவிட்டு அன்றிரவும் கவிமதி அறைக்குள் வரும் முன்னர் விரை வாகப் படுத்துக் கொண்டு யோசனையில் மூழ்கினான் அந்த அவசரக்காரன்.

'மதிக்கு என்னை விட வினோத் பெரிசா போயிட் டானா? என்னை க்ளோஸ் பிரெண்டா அவ நினைக்கவே இல்லை' என தன் மனைவி மேல் கொண்ட கண் மூடித்தனமான அன்பினால், நண்பன் மேல் பொறாமை கொண்டு கண்மூடி யோசித்தான் அந்தப் பாசக்காரன்.

'வீட்ல நடக்கற எல்லாம் வினோத்கிட்டே சொல்லி யிருக்கா. அப்பா-அம்மா ட்ரிப் போறோம்ன்னு சொல்லி



முடிக்கறதுக்குள்ளே அவனுக்குச் சொல்லிட்டா. நமக்கு வந்த பிஸினெஸைக் கூட அவனுக்கு மாத்தி விட் டிருக்கா. இப்போ அந்த இடம் விலைக்கு வந்ததைப் பத்திக் கூட அவ தான் சொல்லி இருக்கணும்' எனக் குழப் பத்தினூடே துயிலில் ஆழ்ந்தான் அந்த கோபக்காரன்.

மேலும் ஒரு வாரம் ஓடியிருக்க, சந்தியா, சந்தோஷிடம் வந்து, கடைசியாகக் குறைந்த பணம் மீண்டும் சரி யாகிவிட்டது என்றும் இப்போதைக்கு எந்தப் பிரச்சனை யும் இல்லை என்றும் கூறினாள்.

அவனும், சரி இனிமேல் இதைப் பற்றி ஒன்றும் கிளற வேண்டாம். இனி மேற்கொண்டு ஏதாவது நடந்தால் பார்த்துக் கொள்ளலாம் என நிம்மதி அடைந்தான்.

* * *

அந்த வாரத்தில் ஒரு நாள் டேனியலின் அன்னை கவிமதியை அழைத்து மகன் விரும்பும் பெண்ணைப் பற்றிய விவரங்களைக் கேட்டு, அவர்கள் பெண்வீட் டிற்கு செல்லும் பொழுது அவளையும் உடன் வருமாறு அழைத்தார்.

''ஆன்ட்டி, பொண்ணைப் பத்தி டேனிகிட்டேயே கேளுங்க. நான் சொன்னா அப்புறம் பொண்ணைப் பத்தி சரியா வர்ணிக்கலைன்னு சண்டைக்கு வருவான்'' என அவளுக்குத் தெரியாத விஷயத்தைக் கேட்ட அவர் களிடம், அவ்வாறு கூறித் தப்பித்தாள்.

மேலும் சற்று நேரம் பேசிவிட்டு டேனியலின் தாய் பேசியை வைக்க, கவிமதி உடனே டேனியலுக்கு அழைத்தாள். அவன் இரண்டு நாட்களில் சென்னை வருவதாகச் சொல்லி பேச்சை வளர்க்காமல் வைத்துவிட் டான்.

இரண்டு நாட்கள் கழித்து சென்னைக்கு வந்த நண்பனை வெளியில் சந்தித்த பொழுது, ''கங்கிராட்ஸ் டேனி! எவ்வளவு நாளா இதற்காகக் காத்துட்டு இருந்த!'' என அவன் கையைப் பிடித்து வாழ்த்தினாள்.

அவர்கள் மேற்கொண்டு பேசுவதற்கு முன்பே, ''அண்ணி!'' என்றவாறு அங்கே ப்ரியங்கா உதயமானாள். ப்ரியங்காவின் குரலைக் கேட்டு, அதுவும் அவளின் அண்ணி என்ற அழைப்பில் திகைத்து விழித்தாள் கவிமதி.

''இங்க என்ன அண்ணி பண்ணிட்டு இருக்கீங்க?'' என இன்முகத்துடன் பேசி கவிமதியை மேலும் திகைக்க வைத்தாள்.

திருமணத்திற்கு முன் அண்ணி என அழைத்தவள், அதன் பிறகு இவள் இருந்த பக்கமே பாராது சத்யாகிரகம் நடத்தியவள், இன்று வெளியிடத்தில் இவளை அண்ணி என்று அழைப்பதை என்னவென்று எடுத்துக் கொள்வது?

''அண்ணி! எங்கே பதிலைக் காணோம்? சரி அதை விடுங்க. இவர் யாரு உங்களோட பிரெண்டா?'' எனக் கேட்டு டேனியலைப் பார்த்தவள், ''ஹலோ! என் பேரு ப்ரியங்கா!'' என்றாள் ஒரு நமட்டுச் சிரிப்புடன்.

ப்ரியங்காவைப் பார்த்துத் திகைத்தவன், திரு திருவென முழிக்கும் போட்டி வைத்தால் கவிமதியை வென்று விடும் அளவிற்கு முழித்துக் கொண்டிருந்தான்.

ப்ரியங்கா அவனிடம் அறிமுகப்படுத்திக் கொண்டவுடன், ''நா... நான் டேனி! கவியோட பிரெண்ட்'' என வாய் பதிலளிக்க, கண்களோ, காட்டிக் கொடுத்துவிடாதே எனக் கெஞ்சின.



தன் சிந்தனையில் உழன்று கொண்டிருந்த கவிமதியோ டேனியலின் தடுமாற்றத்தைக் கவனிக்கவேயில்லை.

ப்ரியங்கா அதே புன்னகையுடன், ''அண்ணி, வாங்க ஏதாவது சாப்பிட்டுட்டே பேசலாம்'' என அவர்களை அழைத்துச் சென்றாள். சிற்றுண்டி அருந்தும் வரை ப்ரியங்கா ஏதோ ஒன்றைப் பேசிக் கொண்டிருந்தாள்.

டேனியல், மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் திணற, ப்ரியங்கா அதை வெகுவாக ரசித்தாள். பின்னே! அவளை எத்தனை நாட்கள் தவிக்க வைத்தான்?

அப்பொழுது, அங்கு வந்த சந்தியா, ''நீங்க ரெண்டு பேரும் இங்க தான் இருக்கீங்களா? நானும் உங்களோட ஜாயின் பண்ணிக்கட்டுமா?'' என அங்கு அமர்ந்தாள். சந்தியா வந்தவுடன் அதன்பின் டேனியலின் காதலியைப் பற்றிய பேச்சு எழாமல் போனது.

மறுநாள்! இரண்டு வாரங்களுக்கு முன் கோயம்புத்தூருக்குச் சென்ற அதே வேலைக்காக மீண்டும் கோவை சென்றுவிட்டு அன்று தான் திரும்பி இருந்தான் சந்தோஷ்.

சந்தோஷே அலுத்துக் கொள்ளுமாறு நிறைய வெளியூர்ப் பயணங்கள் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தன. ஆனால், தொழில் என்று வந்துவிட்டால் உடையவர் தானே கவனிக்க வேண்டும்.

அதுவுமில்லாமல், இது அவனாக முதல் முதலாக ஏற்று, தனித்துச் செய்யும் வேலை. அதைக் குறிப்பிட்ட நேரத்தில் மிகவும் நேர்த்தியாக முடித்துக் கொடுத்ததில் அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சி. கூடவே பெருமையும்!

அதே மகிழ்ச்சியுடன், கிடைத்த இந்த இடைவெளியில் நடந்த சம்பவங்களை எல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு சந்தோசமாக அலுவலகத்திற்கு வந்தான்.

அலுவலகத்திற்கு வந்தவன் சிறிது நேரம் தன் அண்ணனிடம் சென்று அவனின் பயணத்தைப் பற்றிக் கூறிவிட்டு, கவிமதியைத் தேடி அவள் அறைக்குச் சென்றான்.

வேலையில் ஆழ்ந்திருந்த கவிமதி, சந்தோஷைப் பார்த்தவுடன் அகமும் முகமும் மலர்ந்து நின்றாள். ஆனால், அங்கே சந்தியாவும் இருப்பதனால் அமைதியாக, ''வாங்க சந்தோஷ்! போன வேலை நல்லபடியா முடிஞ்சதா?'' எனக் கேட்டாள்.

சந்தியாவும், ''வா சந்தோஷ்! பயணம் எல்லாம் எப்படி இருந்தது? இந்த ரெண்டு மூணு மாசமா நிறைய அலைச்சல் உனக்கு'' என ஆதங்கப்பட்டுக் கொண்டாள்.

''நம்ம கம்பெனிக்காகத் தானே அலையறேன். இதெல்லாம் ஒரு கஷ்டமா சந்தியா'' என அவளிடம் கூறியவன், கவிமதியைப் பார்த்து, ''மதி, நீ சாப்பிட்டாச்சா? எனக்குப் பசிக்குது'' என்றான்.

''இப்போ தான் சாப்பிட்டேன்'' என மனைவி சொல்ல, ''ஆமா இன்னைக்கு என்ன ஸ்பெஷல்? நான் சாப்பிடற வரைக்கும் கம்பெனி தா'' என்றவாறே சந்தியாவிடம் விடைபெற்றுக் கொண்டு கவிமதியுடன் வெளியேறினான்.

அவன் அலுவலறைக்கு வந்தவுடன், ''ஏண்டி! வெளியூருக்குப் போயிட்டு வரேன், எனக்காக காத்திருக்காம என்னை விட்டுட்டுச் சாப்பிட்டிட்டியா? இது தான் நீ புருஷனை கவனிக்கும் லட்சணமா?'' என அவளை இறுக்கி அணைத்துக் கொண்டான்.

''ஐயோ... விடுங்க! என்னதிது? அதுவும் 'ஆபீஸ்ல' வச்சு. யாராவது வந்திடப் போறாங்க. சீக்கிரமா சாப்பிடுங்க. நான் போகணும்'' எனச் சொல்லியவாறே



சாப்பாட்டைப் பரிமாற, அவனோ அவளுக்கு முத்தங்களைப் பரிமாறினான்.

கணவனிடமிருந்து விடுபட்டவள் அவனைச் சாப்பிடவும் வைத்தாள். சந்தோஷும் சாப்பிட்டவாறே அவன் தனித்து எடுத்து செய்த வேலையைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தான்.

சாப்பிட்டு முடித்தவன், ''மதி, நீ என்னை மிஸ் பண்ணவே இல்லையா?'' என்றான் ஏக்கத்துடன்.

அவளும் விளையாட்டாக, ''இல்லவே இல்லை. எனக்கு டைம் போனதே தெரியலை. நல்லா ஜாலியா இருந்தேன்...'' என்றாள்.

அவன் வாய் திறந்து பதில் அளிக்கும் முன், 'கேட்கிற கேள்வியைப் பாருங்க?' என அவள் முணுமுணுத்தது, அறையில் இருந்த தொலைபேசியின் அலறலில் அமுங்கிப் போனது.

அதை எடுத்துப் பேசிய சந்தோஷ், ''அண்ணா, சாப்பிட்டுட்டு இருக்கேன். இதோ வந்திட்டேன்'' எனக் கூறி வைத்தான்.

''மதி, அண்ணா என்னைச் சீக்கிரமா வரச் சொன்னார். ஏதோ பிரச்சனை போல. நான் கிளம்பறேன். நீயே கிளீன் பண்ணிடும்மா... ப்ளீஸ்'' என எழுந்து அவசரமாகக் கை கழுவச் சென்றான்.

''சரிங்க சந்து! நான் ஈவ்னிங் சீக்கிரமாக் கிளம்பறேன். ஒரு முக்கியமான விஷயமா என் பிரெண்டைப் பார்க்கணும். மிச்சத்தை வீட்ல பேசிக்கலாம்'' எனச் சொன்னவள், அவன் சாப்பிட்ட இடத்தை ஒழுங்குபடுத்திய பின் அவளின் அறைக்குச் செல்ல, சந்தியா அங்கு இல்லை.

வித்தியாசமாக ஒன்றும் தோன்றாததனால் தன் வேலையில் ஆழ்ந்தாள்.

வேலை முடிந்து மாலை ஐந்து மணி அளவில் சந்தோஷுக்கு அழைத்தாள் கவிமதி. அவன் கைப்பேசி 'சுவிட்ச் ஆப்' செய்யப்பட்டிருக்க, 'இன்னும் வேலை முடியலை போல' என எண்ணிக் கொண்டு அங்கிருந்து உல்லாசமாகக் கிளம்பினாள்.

பாவம், கடந்த சில மாதங்களாக மெதுவாக உருவாகிக் கொண்டிருந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம், அன்றிரவு புயலாகக் கரையைக் கடக்கப் போகிறது என்பதை அறியாமல்!

# 11



அலுவலகத்தில் இருந்து கிளம்பிய கவிமதி, தன் தோழியைச் சந்தித்து வேண்டியதை உறுதிப்படுத்திய பின் அளவில்லா மகிழ்ச்சியுடன் தன் கணவனின் வரவிற்காக வீட்டில் காத்திருக்கலானாள்.

அன்று ஏனோ அவளுக்குக் கடிகார முட்கள் சண்டித்தனம் செய்வதைப் போலத் தோன்றியது. ஒரு நிமிடத்திற்கு ஒரு தரம் கடிகாரத்தையே பார்த்திருந்தவள், ஏழு மணிக்கு மேல் தாங்கமாட்டாமல் சந்தோஷின் அலைபேசிக்கு மறுபடியும் அழைத்தாள்.

அப்பொழுதும் அவன் எடுக்காமல் கவிமதியின் பொறுமையை மிகவும் சோதிக்கவே, 'ச்சே! இன்னும்



என்ன பண்ணிட்டு இருக்கிறார்?' எனச் சலித்துக் கொண்டாள்.

அதே சமயம், 'சந்தியா அக்காவும், விக்னேஷ் மாமாவும் வேற இன்னும் வரலை. ஒரு வேளை ரொம்பப் பெரிய பிரச்சனையோ? நான் தான் இப்படிப் பொறுப்பே இல்லாம கிளம்பி வந்துட்டேனோ?' என சட்டென்று நினைத்தாள்.

சந்தியாவிற்கு அழைக்கலாம் என எண்ணி அதையே செயலாற்றினாள். அவள் அழைத்தவுடன் மறுமுனையில் வந்த சந்தியா, ''சொல்லு கவி?'' என்றாள்.

''நீங்க யாரும் வீட்டுக்கு வரலை. இன்னும் ஆபீஸ்லேயா இருக்கீங்க அக்கா? சந்தோஷ் செல்லுக்கு, கூப்பிட்டா அவர் எடுக்கலை'' என அழைத்ததன் காரணத்தைச் சொன்னாள்.

''விக்னேஷும், நானும் வேலை முடிஞ்சு இப்போ தான் வெளில ஒரு வேலையாக் கிளம்பினோம். நாங்க இன்னைக்கு என் வீட்டுக்குப் போறோம். வர ரெண்டு நாள் ஆகும். நாங்க கிளம்பும் போது சந்தோஷ் இன்னும் ஆபீஸ்ல தான் இருந்தான்'' என அவள் கேட்டதுக்கு பதிலளித்து, ''சரி! அப்புறம் பார்க்கலாம்'' என உடனே பேசியை வைத்தும் விட்டாள்.

'திடீர்ன்னு ஏன் அவங்க வீட்டுக்குப் போகணும்? ஏதாவது முக்கியமான விஷயமா இருக்கும் போல' என்று கவிமதியே ஒரு முடிவுக்கும் வந்தாள்.

பொறுமையின்றி மீண்டும் சந்தோஷிற்கு. அவனின் அலுவலக எண்ணிற்கு அழைத்தாள். இம்முறை அவளின் எதிர்பார்ப்பை வீணாக்காமல், பொறுமையை

யும் சோதிக்காமல் தொலைபேசியை எடுத்தவன், ஒரே வார்த்தையில், ''என்ன?'' என்றான்.

அவள் இருந்த பரபரப்பில், அவன் குரலில் இருந்த சினத்தையோ, அவன் ஒரே வார்த்தையில் கேள்வி கேட்டதையோ கவனிக்காமல், ''அப்பாடா! இப்பவாவது போனை எடுத்தீங்களே. வர நேரம் ஆகுமா? உங்ககிட்டே முக்கிய மான விஷயம் ஒண்ணு சொல்லணும். சீக்கிரமா வாங்களேன் சந்து!'' என கடகடவென்று கேள்வியையும், வேண்டுகோளையும் ஒரு சேர அடுக்கி வைத்தாள்.

அவனோ சுரத்தே இல்லாத குரலில், ''கிளம்பி வரேன்!'' எனப் பேசியை வைத்தான்.

கவிமதிக்கோ அதன் பிறகு வந்த நிமிடங்கள் முன்பை விட மெதுவாக ஊர்வது போல இருந்தது. அவள் கவிதைகள் எழுதும் கையேட்டில் அவள் மனதில் தோன்றிய முதல் காதல் கவிதையை எழுதினாள்.

ஆனால், அவள் துரதிர்ஷ்டம், சந்தோஷ் இக்கவிதையைப் படிக்கும் முன்னரே வேறொரு கவிதையைப் படிக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டான்.

அப்பொழுது தொலைபேசி அழைக்க, ப்ரியங்காவின் எண்ணைப் பார்த்ததும் முகத்தில் ஒரு பெரிய கேள்விக் குறியுடன் பேசியை எடுத்தாள் கவிமதி.

நேற்று டேனியலைச் சந்திக்கச் சென்ற பின், நடந்தது அனைத்துமே கவிமதிக்கு ஆச்சர்யமாகத் தான் இருந்தது. இத்தனை நாட்களும் ப்ரியங்கா ஏன் அது போல நடந்து கொண்டாள் என அவளுக்குப் புரியவில்லை. இப்பொழுதும் எப்படி மனம் மாறினாள் என்றும் விளங்கவில்லை.



ஏதோ ஒன்று! இதுவே கவிமதிக்கு மகிழ்ச்சி விளைவிக்கக் கூடியதாக இருந்ததால் மேற்கொண்டு ஆராயாமல் விட்டுவிட்டாள். இன்று காலையில் தான் கல்லூரிச் சுற்றுலா பயணம் கிளம்பியிருந்தாள் ப்ரியங்கா.

''சொல்லு ப்ரியா! ட்ரிப் எப்படியிருக்கு?'' என்றாள் இயல்பான குரலில்.

''அண்ணி, என்னை மன்னிச்சுடுங்க!'' என ப்ரியங்கா ஆரம்பிக்க, கவிமதியோ, மீண்டும் அண்ணி என்கிறாளே என வாயடைத்துப் போனாள்.

''இத்தனை நாளா உங்களைப் பத்தி நான் தப்பா நினைச்சுட்டு இருந்தேன். அதனால தான் உங்களை ஏதேதோ சொல்லிட்டேன். இப்போ தான் எனக்கு உண்மை தெரிஞ்சது. அதான் உடனே மன்னிப்பு கேட்கணும்னு நினைச்சேன்'' என மன்னிப்பை வேண்டினாள் ப்ரியங்கா.

ப்ரியங்காவின் மன்னிப்பிலும், பதிலிலும் ஒன்றும் விளங்கவில்லை என்றாலும், ''ப்ரியா, அதெல்லாம் ஒண்ணுமில்லை...'' என அவளைச் சமாதானப்படுத்த முயன்றாள் கவிமதி.

''நீங்க என்ன தான் சொல்லுங்க... நான் கொஞ்சம் 'சில்லி'யாகத் தான் நடந்துகிட்டேன். ஆனா, நான் என்ன சொன்னாலும் அதை ஒரு சிரிப்போட கேட்டுட்டு பேசாம இருந்துட்டீங்க. நான் பேசறது எனக்குச் சுயநலமாத் தான் படுது. ஆனா, என்னால சொல்லாமலும் இருக்க முடியலை'' என நிறுத்தினாள்.

''ப்ரியா, எனக்குப் புரியற மாதிரி சொல்லேன்.''

''அதுவா...'' என இழுத்தவள், ''அண்ணாகிட்டே பேசி எப்படியாவது என் காதலைச் சேர்த்து வைக்கணும்'' எனக் கெஞ்சினாள்.

பின்னர், இத்தனை நாட்களாக கவிமதியினால் தான் தன் காதல் நிறைவேறவில்லை எனத் தப்பாக அர்த்தம் கொண்டு தான் அவ்வாறு நடந்து கொண்டதாக அவள் சிறுபிள்ளைத்தனமான செய்கைக்கு விளக்கம் தந்து, இப்பொழுது தான் டேனியலின் மூலம் உண்மை தெரிந்ததாகவும் சொல்லி மீண்டும் மன்னிப்பை வேண்டினாள்.

நேற்று, கவிமதி டேனியலிடமும் அவன் பெற்றோர்களிடமும் பேசியில் பேசியதை ஒட்டுக் கேட்டதையும் சேர்த்துச் சொன்னாள்.

ப்ரியங்கா டேனியலின் பெயரை உச்சரிக்க ஆரம்பித்தவுடனே அதிர்ச்சியில் தள்ளப்பட்ட கவிமதிக்கு உண்மை உறைக்க, சுயநினைவுக்குத் திரும்பி வாயை திறந்தாள். ''வாட்? டேனி லவ் பண்ணறது உன்னையா?''

''ஆமாங்க அண்ணி! அந்த ரியா நான் தான். உங்களை இதுல இழுக்க வேண்டாம்ன்னு தான் டேனி விலகிக்கச் சொன்னார். நம்ம வீட்ல தெரிஞ்சா உங்களுக்கு வீணா பிரச்சனைன்னு பயந்து தான் உங்ககிட்டே சொல்லலையாம்.

அப்புறம் நான் வேற ஒரு குளறுபடி பண்ணி வச்சுட்டேன். வினோத் என்கூடப் பேசினதை, அவருக்கு என் மேலே ஆசைங்கற மாதிரி அண்ணன்கிட்டே சொல்லிட்டேன். சாரி அண்ணி! இதையும் நீங்களே அண்ணன்கிட்டே சொல்லிடுங்க.. அண்ணனைக் கூப்பிட்டுப் பார்த்தேன் போனை எடுக்கலை'' என்றாள் கரகரத்த குரலில்.

அதுவரை ப்ரியங்கா சொன்னதை செவிமடுத்துக் கேட்டவள் ஓரளவுக்கு இயல்புநிலைக்குத் திரும்பியிருந்தாள். ''சந்தோஷ்கிட்டே நான் பேசறேன். நீ கவலைப்படாம டூரை என்ஜாய் பண்ணிட்டு வா'' என சமாதானப்படுத்திப் பேசியை வைத்தவுடனே டேனியலுக்கு அழைத்து சுடச் சுடத் திட்டினாள்.



''என்கிட்டே எப்போ இந்த விஷயத்தை சொல்லறதா இருந்தே? கடைசியில என் நாத்தனாரைப் பத்தியே நான் போய் எனக்குத் தெரியாம உன் வீட்ல பேசிட்டு வந்திருக்கேன். ஏன்டா உன்னை என்ன பண்ணலாம்ன்னு நீயே சொல்லு?'' என படபடவென்று நண்பனிடம் பொரிந்தாள்.

''கவி, நான் முன்னாடியே சொல்லி இருக்கணும். உங்க கல்யாணத்தப்போ தான் ரியா யாருன்னே எனக்குத் தெரிஞ்சது. நான் காதலிக்கற பொண்ணு உன் நாத்தனார்ன்னு தெரிஞ்சா உன்னோட ரியாக்சன் எப்படி இருக்கும்ன்னு தெரியலை. அதான் ஒரே குழப்பமா இருந்தது. சாரி கவி!'' என அவன் உடனே தணிய, கவிமதிக்குத் தான் என்ன செய்வதென்று புரியவில்லை.

ஒரு பக்கம் தன் நாத்தனார், இன்னொரு பக்கம் தன் தோழன். இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் மனதார விரும்புகிறார்கள். தெரிந்தோ தெரியாமலோ இதில் தான் காலை வைத்தாகிவிட்டது.

மேற்கொண்டு, தான் தான் சந்தோஷிடம் பேசி இதற்கு ஒரு தீர்வு காண வேண்டும் என உண்மை நிலையை அலசி கோபத்தைத் தணித்தவள், ''சரி டேனி! இதைப் பத்தி நான் சந்தோஷ்கிட்டே பேசறேன்'' என ஆறுதலளித்துப் பேசியை வைத்தாள்.

'சந்துகிட்டே முதல்ல சந்தோஷமான விஷயத்தைச் சொல்லிட்டு, அப்புறம் ப்ரியாவைப் பத்தி சொல்லலாம்.

அவரும் காதலிச்சிருக்கிறாரே' என எண்ணி சற்று தைரியமடைந்தாள்.

ஒரு வழியாக வீட்டிற்கு வந்த சந்தோஷிடம், ''சந்து, சீக்கிரம் வாங்க சாப்பிடலாம். எனக்கு ரொம்பப் பசிக்குது'' என கணவனை அழைத்தாள்.

''எனக்குப் பசிக்கலை. நீ போய் சாப்பிடு'' என அவன் மறுத்தும் அவனைச் சாப்பிட வற்புறுத்தினாள் மனைவி. வேலைக்காரர்கள் முன் அதற்கு மேல் அவனால் பிகு செய்து கொள்ள முடியவில்லை.

சாப்பிட்ட பின்னர் அறைக்குச் சென்றதும் சந்தோஷ் உடனே குளியலறைக்குள் புகுந்து கொண்டான். அதே சமயம் கவிமதியின் அலைபேசி அடிக்கவும் அதை ஸ்பீக்கர் மோடில் போட்டு, ''சொல்லுங்க அண்ணா. எப்படி இருக்கீங்க?'' என்றாள் கவிமதி.

''கூப்பிட்டிருந்தியாம்மா.. கொஞ்சம் பிஸியா இருந்தேன்'' என்றான் வினோத் எதிர்முனையில்.

''சந்தோஷ் வர நேரமாச்சு. போர் அடிச்சதா... அதான் கூப்பிட்டிருந்தேன்.''

''அப்படியா.. கவி, இன்னைக்கு அவந்திகாவை ஒரு புக் ஸ்டோர்ல பார்த்துப் பேசினேன். அவளும் என்கூட தயக்கமில்லாமத் தான் பேசினா'' என்றான் உற்சாகமாக மறுமுனையில் இருந்தவன், என்னவோ அது தான் உலக மகா அதிசயம் போல.

''பேசாம என்ன பண்ணுவா? நீங்க தான் இன்னும் விஷயத்தைச் சொல்லலையே. ரொம்ப அலட்டிக்காதீங்க அண்ணா! எல்லாம் நான் பார்த்துக்கறேன். நான் எதுக்கு இருக்கேன்?'' என கிண்டலாக ஆரம்பித்து, பின்னர் தன் அண்ணனுக்கு உதவிக்கரம் நீட்டினாள்.



சற்றுநேரம் அவந்திகாவைப் பற்றிய சில விஷயங்களை தங்கையிடம் கேட்டுத் தெரிந்து கொண்டவன், அவனும் சில விஷயங்களை அவளிடம் பகிர்ந்து கொண்டான்.

அண்ணன் சொன்னதைக் கேட்டுக் கொண்டவள், சந்தோஷ் குளியலறையில் இருந்து வெளிவரும் அரவம் கேட்கவும், ''சரிண்ணா, நாம அப்புறம் பேசலாம். இப்போ தான் சந்தோஷ் வந்தார்'' என்றாள்.

வினோத்தும், ''சரிம்மா'' என்று சொல்லி பேசியை வைத்தான்.

கடைசியில் கவிமதி சொன்னதை மட்டும் கேட்டவாறே அறைக்குள் வந்த சந்தோஷ், அதுவரை பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்தவன், ''என்னவாம் உன் அண்ணனுக்கு? நாள் முழுக்கப் பேசினது பத்தலையா?'' என எரிச்சலுடன் கேட்டான்.

அவன் கிண்டலாகக் கூறுகிறான் என நினைத்த மனைவியோ, ''ஒஹ்.. பேசி நாளாச்சு. அப்படியே அவர் ஒரு பொண்ணைப் பத்தி ரொம்பத் தீவிரமா விசாரிச்சார். அதை நான் அப்புறம் சொல்லறேன். முதல்ல நான்...'' என கவிமதி ஆவலுடன் மேலும் தொடரும் முன்,

''ஏன் இப்போ சொன்னா என்னவாம்? எனக்கு உண்மை தெரிஞ்சுடும்ன்னு பயப்படறியா?'' என அதே எரிச்சலுடன் இடையில் புகுந்தான்.

அப்பொழுதும் தவறாக ஏதும் எண்ணாமல், ''என்ன உண்மை வக்கீல் சார்?'' என விளையாட்டாகக் கேட்டு, புன்னகையுடன் சந்தோஷை நெருங்கினாள் மனைவி.

மனைவியிடம் கேட்கக் கூடாது என பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்தவன், கவிமதியின்

விளையாட்டுத்தனமான பேச்சைக் கேட்டு, அவள் அவனை திசைத் திருப்ப முயல்வதாக எண்ணினான்.

"நீ எவ்வளவு தான் மறைச்சாலும் நடந்ததெல்லாம் எனக்குத் தெரியும். ப்ரியாவை எப்படி மடக்கலாம்னு தானே கேட்டுட்டு இருந்தான் வினோத். நீயும் அதுக்கு உதவறேன்னு சொன்ன தானே?'' - பொறுமையை அவனது அவசரத்தனம் முந்திச் செல்ல, அதற்கு மேல் தாங்க முடியாமல் எல்லைகளைக் கடந்தான்.

"வாட்! ப்ரியாவை அண்ணன் மடக்க நினைச்சாரா? அவர் வேற ஒரு பொண்ணை விரும்பறாரே. அதைப் பத்தி...'' என அவன் சொன்னதை நம்ப முடியாமல் அவள் விளக்கம் அளிக்கும் முன் இடையிட்டு,

''ஏன், ப்ரியாவை விட வேற ஒரு பணக்காரப் பொண்ணு கிடைச்சுட்டாளா?'' என அதற்கும் ஒரு தப் பர்த்தம் கண்டுபிடித்தான்.

திகைத்து விழித்தவளைப் பார்த்து, ''போதும் கவி நடிச்சது. உனக்கு என்னை விட உன் அண்ணன் தான் முக்கியமாப் போயிட்டான். எப்பப் பார்த்தாலும் அவனைப் பத்தி தான் பேசற. இல்ல, அவன்கிட்டே தான் பேசற'' என்றான்.

சில நாட்களுக்கு முன்னால் அவன் மனதில் கலைந்து போன கருமேகம் இப்பொழுது எழுச்சியுற்று, முழுவடிவம் கொண்டு, பலத்த உறுமலுடன் அவன் மனக்கரையை கடந்து, மனைவியின் மேல் வார்த்தை அம்புகளாய் இறங்கியது.

''நான் உன்னை லவ் பண்ணிக் கல்யாணம் பண்ணினது தெரிஞ்சதும் நீ அதை எவ்வளவு சாதாரணமா எடுத்துக்கிட்டே? உனக்கு என் மேல துளி கூட காதல் இல்லை. அப்படி இருந்திருந்தா நான் அதைச் சொன்னப்போ கொஞ்சமாவது கோபப்பட்டிருப்பே'' எனத் தன் மனக் குமுறலைக் கொட்ட ஆரம்பித்தான். அவன் காதலை கோபம் வென்றது!



'ஏன் இப்படி அபத்தமாகப் பேசுகிறான்? அப்படியே கோபம் இருந்திருந்தாலும் திருமணம் முடிந்த பின் அதைக் காட்டி என்ன செய்ய?' என கவிமதி நினைக்க,

''என் மேலே காதல் இருந்திருந்தா, நான் உன்னை கோயம்புத்தூருக்கு போகும்போது கூப்பிட்டப்போ என்னோட வந்திருப்ப'' என அளவு கடந்த காதலினால் உரிமைப் போராட்டத்தில் சிக்கித் தவித்தவன், தன் ஆருயிர் மனைவியை, அவள் தன்னைக் காதலிக்கவே இல்லை எனச் சாடினான்.

''சந்து! நான் ஏன் வரலைன்னு...'' என மனைவி தொடரும் முன்,

''இங்கிருந்தா வினோத்தோட சேர்ந்து பிளான் பண்ண வசதியா இருக்கும். உங்க பிளான் எல்லாம் எனக்குத் தெரியும். நம்ம கல்யாணம் முடிஞ்சு ஊருக்குப் போகும்போது அவனையும் கூட வர வச்சு, ரெண்டு பேரும் ப்ரியாவோட மனசைக் கலைக்கப் பார்த்திருக் கீங்க.

வினோத் அவளை அடிக்கடி பாலோ பண்ணறதா ப்ரியா என்கிட்டே சொன்னா'' என இடையிட்டு மீண்டும் சிடுசிடுத்தான். நட்பையும் சினம் வென்றது!

அவன் இடையிட்டுச் சொன்னதை இடையிடாமல் கேட்டுக் கொண்டிருந்தவள், அவன் நிறுத்தியதும், ''சொல்லறதைக் கொஞ்சம் தெளிவாச் சொல்லுங்க

சந்து'' என அவன் சொன்னதற்கு அமைதியாகவே ஆனால் குழப்பத்துடன் கேட்டாள்.

இவன் ஏதோ தப்பாகப் புரிந்து கொண்டிருக்கிறான்... இவனிடம் பேசிப் புரிய வைத்துவிடலாம் என எண்ணிய வளுக்கு, ப்ரியங்கா சற்று முன் சொன்ன, 'வினோத் என் னோட பேசறதை அண்ணன்கிட்டே தப்பான அர்த்தத்துல சொல்லிட்டேன்' என்ற வாக்கியம் ஞாபகத்திற்கு வந்தது.

''சந்து, ப்ரியா தான் ஏதோ தெரியாம உங்ககிட்டே தப்பாச் சொல்லிட்டதா சொன்னா...'' என அவள் மேலே தொடரும் முன்,

''பொய் சொல்லாத... நம்ம கிளைன்ட்ஸை எல்லாம் வினோத்கிட்டே அனுப்பி வச்சிருக்க. அவனுக்காக நீ பண்ணின குளறுபடி எல்லாம் தெரிஞ்சும், சந்தியா சொன்னதுக்காகப் பேசாம இருந்தேன். ஆனா, நீ.. ச்சே! கோவத்தை வரவழைக்காதே'' என எரிந்து விழுந்தான்.

இப்பொழுது மட்டும் கோபம் இல்லாமலா பேசிக் கொண்டிருக்கிறான் என கவிமதியினால் எண்ணாமல் இருக்க முடியவில்லை. ஆனாலும் அதை வாய்விட்டுச் சொல்லாமல், ''என்ன சொல்லறீங்க?'' எனத் தீராத குழப்பத்தில் இருந்து மீளாமல் நின்று கொண்டிருந்தாள் கவிமதி.

''நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சது அன்பினால் இல்லாம வினோத் சொன்னதுக்காகத் தான்னு இப்போ தான் இந்த மரமண்டைக்குப் புரியுது.

பெரிய பணக்கார வீட்டுப் பையன், நினைச்ச நேரம் உங்க வீட்டுப் பணம் மாதிரி பணத்தை எடுத்து செலவு செய்யலாம். அதோட அவன் பிஸினெஸும் நல்லா டெவலப் ஆகும்ன்னு நினைச்சுத் தானே? அவனுக்கு



உதவி வேணும்ன்னா என்கிட்டே நேரடியா கேட்டிருக்க லாமே?''

இதற்கு மேல் இவனிடம் பேசிப் புரிய வைக்க முடியாது. அவன் சொல்ல வருவதை எல்லாம் சொல்லி முடிக்கட் டும். பிறகு பேசலாம் என அமைதி காத்தாள் கவிமதி.

''இங்க வீட்ல நடக்கறதை, நம்மகிட்டே எவ்வளவு சொத்து இருக்குங்கிறதை எல்லாம் அவன்கிட்டே சொல்லியிருக்க. அதையாவது மன்னிச்சுடலாம்.

ஆனா, நம்ம பெர்சனல் மேட்டர், கல்யாணத்துக்கு முன்னாடி நான் உன்னைக் காதலிச்சதைக் கூட அவன் கிட்டே சொல்லியிருக்க. சை!'' என கவிமதிக்கு உண்மை தெரியும் முன்பே வினோத், 'இதுவும் காதல் கல்யாணம் தான்..' என சொன்னதை மறந்து, கவிமதி தான் அவ னிடம் தங்கள் காதலைப் பற்றி சொன்னாள் என அதற் கும் சேர்த்து அவளைக் குற்றம் சாட்டினான்.

சந்தோஷ் காதலித்த பொழுது தவமிருந்து ஒட்டுக் கேட்ட அண்ணன்-தங்கையின் தொலைபேசி உரையாடல் கள், காதல் கை கூடிய பின் தடம்புரண்டு போனதன் மர்மம் தான் மனைவிக்குப் புரியவில்லை.

அவள் பேசுவதற்கு வார்த்தைகளைத் துழாவித் தடவிக் கொண்டிருக்க, கணவனோ அவளுக்கு சந்தர்ப் பமே தராமலேயே, ''நீயே உன் வாயால சொன்னியே, உன் அம்மா-அப்பா தயங்கினாங்க ஆனா, வினோத் தான் அவங்களை சம்மதிக்க வைச்சான்னு.

அது மட்டுமில்லாம மனசை விட பணம் தான் முக்கியம்ன்னு நீ சொன்னதையும் கேட்டேன். உனக்கு மனசை விட பணம் தான் பெருசாப் போச்சு. ஆனா, நான் தான் காதல்ன்னு முட்டாள்தனமா இருந்துட்டேன்'' என

அதுவரை கவிமதி சொன்ன வாக்கியங்களை எல்லாம் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கொய்து, அழகிய மாலையாக நெய்து, அவனே தன் காதலைக் கொலை செய்து, அதற்கு மாட்டியும் விட்டான்.

''சந்து?!''

''முதல்ல என்னை அப்படிக் கூப்பிடறதை நிறுத்து. நான் தான் ஒண்ணும் தெரியாம, காதல் ஊதல்ன்னு அவசரப்பட்டுட்டேன். உனக்கு பெஸ்ட் பிரண்ட் யாருன்னு கேட்டா, உன் அண்ணன் தான்னு சொல்லற.

காதலைப் பத்தி கவிதை எழுதச் சொன்னா, அண்ணனைப் பத்தி எழுதற. கல்யாணத்துக்கு முன்னாடி வர்ற காதல்ல நம்பிக்கை இல்லன்னு நினைச்சுட்டு இருந்த உனக்கு என் காதலைப் புரிய வச்சுட்டேன்னு நினைச்சேன். ஆனா, நீ புரிஞ்ச மாதிரி நடிச்சிருக்க.

உனக்கு என் மேல காதல் இருந்திருந்தா, இப்படி பண்ணறதுக்கு முன்னாடி என் மனசைப் பத்தி கொஞ்சமாவது கவலைப்பட்டிருப்பே. உனக்கு என்னோட மனசு, காதல் இதெல்லாம் எங்கே புரிஞ்சது?''

அவன் காட்டும் காதலை மனைவி அவனிடம் பிரதி பலிக்கவில்லை என்று குற்றம் சுமத்தினான். குற்றம் சாட்டப்பட்ட மனைவியோ தன்னைப் பாதுகாத்துக் கொள்ளத் தெரியாமல் நிராயுதபாணியாக நின்றிருந்தாள்.

''எவ்வளவு தைரியமா கம்பெனி பணத்துல கை வச்சிருக்க? நீ நாளையில் இருந்து ஆபீஸுக்கு வந்தாலும் ஒரு வேலையும் செய்ய வேண்டாம்'' எனச் சொல்ல வந்ததை அளவுக்கு அதிகமான வார்த்தைகளைப் பிரயோகித்துச் சொன்னான் சந்தோஷ்.



'எதைப் பண்ணறதுக்கு முன்னாடி? என்ன பணம்?' என புரியாமல் கவிமதி வாயைத் திறக்க,

மனைவி ஏதோ சொல்ல வருவதைப் பார்த்து, மேலும் சினம் தலைக்கேறியவனாய், ''ஒண்ணுமே புரியாத மாதிரி நின்னா, நான் நம்பிடுவேனா? அதுக்கெல்லாம் நான் பழைய சந்தோஷ் இல்ல. இதுவரைக்கும் நீ எப்பப்போ பணத்தை எடுத்திருக்கேன்னு தெரியும்.

உன் அண்ணனோட தேவைக்கு எங்க வீட்டுப் பணம் தான் கிடைச்சதா? நாங்க என்ன பேங்க்கா வச்சு நடத்து றோம் அவனோட பிஸினெஸுக்கு லோன் கொடுக்க? நீ பண்ணின காரியத்துனால விக்னேஷ் அண்ணன் மேல போலீஸ் கேஸ் ஆயிருக்கும். நல்லவேளை! தெரிஞ்சவங்க இருந்ததுனால தப்பிச்சோம்'' என ஒரு வழியாக விஷயத்தைச் சொன்னான்.

'அண்ணனோட தேவை...', 'எங்க வீட்டுப் பணம்...', 'நாங்க என்ன பேங்க்கா...' போன்ற கூரிய வார்த்தைகள் இம்முறை அன்பினால் அல்லாமல் அம்பாக மாறி கவிமதியின் மனத்தைப் பதம் பார்த்தது. ஆனாலும், வாய் மட்டும், ''போலீஸ் கேஸா... எதுக்கு?'' என்றது.

''வினோத்துக்கு நீ கம்பெனி பணத்தை எடுத்துக் கொடுக்கலை? நீ கொடுக்கறதை நானே போன வாரம் பார்த்தேனே. என்கிட்டே கேட்டிருக்கலாமே? எனக்குத் தெரியாம, அதுவும் உன் அண்ணன் இடம் வாங்கறதுக்கு எங்க கம்பெனி பணம் தான் கிடைச்சதா?

நீ யார்கிட்டேயும் சொல்லாம பணத்தை எடுத்தது தெரியாம அண்ணன் மூணு பேருக்கு செக் கொடுத்திருக்கார். அதை எடுத்துட்டு ஒருத்தர் இன்னைக்கு பாங்க்குக்குப் போயிட்டார்.

நல்லவேளை! நமக்குத் தெரிஞ்ச ஆள் இருந்ததுனால நமக்குச் சாதகமா முடிச்சுட்டோம். நீ எடுத்த பணத்தை எங்கேயும் எழுதிக் கூட வைக்கலை. நமக்குத் தெரிஞ்சவர் மட்டும் அங்க இல்லைன்னா இப்போ கம்பெனி மானத்தோட சேர்ந்து குடும்ப மானமும் போயிருக்கும்'' என அவன் சினத்துக்கான காரணத்தை இறுதியாகச் சொன்னான்.

''அதான் ஒண்ணும் ஆகலையே சந்து. ஆனா, அந்தப் பணத்தை எடுத்து இங்க வீட்ல தான் வச்சிருக்கிறேன். இந்தச் சனிக்கிழமை பேங்க் லீவுங்கறதுனால பணத்தை எடுத்து வைக்கச் சொன்னது சந்தியா அக்கா தான்'' என மனைவி பணம் எடுத்ததன் காரணத்தை விளக்க,

''உனக்கு ஏதாவது நடந்து வேறே இருக்கணுமா? கொஞ்சமாவது என் வீட்டு ஆளுங்க மேலே அக்கறை இருக்கா? இவ்வளவு பணத்தை இப்பவே வீட்டில எடுத்து வைக்கச் சொல்வாளா சந்தியா? அவளுக்குத் தெரிஞ்சிருந்தா அப்பவே சொல்லி இருப்பாளே.

பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லு. அப்போ என்னடான்னா ப்ரியா மேலே பழியைப் போட்ட. இப்போ மாட்டிக்கிட்டோம்ன்னு சந்தியா மேல பழியப் போடாத. உன்னைத் தவிர எல்லோரும் பொய் சொல்லறாங்க இல்லை...

நீங்களும் சந்தியாவும் க்ளோஸா இருக்கறதுக்காக சண்டை போட முடியும்ன்னு கேட்டப்போ சும்மா விளையாட்டா சொல்லறேன்னு நினைச்சேன்.

அப்புறம் கூட ஏதோ சொன்னியே. ஆ... உங்களையும் சந்தியாவையும் பார்த்தா பொறாமையா இருக்குன்னு. சந்தியா மேல உனக்கு ஏன் இத்தனை



பொறாமை?'' என அழகானதொரு காரணத்தைக் கண்டு பிடித்து, படபடவென்று துப்பினான் அந்தத் துப்பறியும் சிங்கம்.

''சந்து!?'' என பேச முடியாமல் விக்கித்து நின்றாள் மனைவி. அவள் சொன்னது எந்த அர்த்தத்தில்? ஆனால், இவன் அதற்கு எதிர்மறையான அர்த்தத்தில் அல்லவா எடுத்துக் கொண்டான்.

''போதும்! மேலும் மேலும் பேசி நீ உன்னையே தாழ்த்திக்காதே... உன்னைப் போய் காதலிச்சு கல்யாணம் பண்ணிக்கிட்டேன் பாரு... என்னைச் சொல்லணும்... வைக்கற பொருளை வைக்கற இடத்துல வச்சாத் தான் அதற்கு மரியாதை.

என் காதலை வைக்கற இடத்துல வைக்காம காதலோட அருமை தெரியாத உன்மேலே வச்சது என் முதல் தப்பு. போ... இனிமேல் என் கண் முன்னால் நிற்காதே...'' என்றான் சந்தோஷ்.

மதியம் நடந்த விஷயங்களில் இருந்த கடுப்பில், அவன் அவசரத்தனத்தையும் சேர்த்து, என்ன பேசுகிறோம் என ஆராயாமலேயே வாய்க்கு வந்ததை வெளியில் கொட்டி, மனைவியைப் பொரிந்து தள்ளிக் கொண்டிருந்தான் அவள் ஆசைக் கணவன்?!

இதுவரை அவனிடம் பேசிப் புரிய வைத்துவிடலாம் என்று தான் எண்ணினாள் கவிமதி. ஆனால், சந்தோஷ் பேச விட்டால் தானே, பேசவிடவும் இல்லாமல் அவளைக் காதலித்ததே தவறு என்ற முடிவுக்கு வேறு வந்து விட்டானே!

'இனி பேசித் தான் என்ன பயன்? காதல் காதல் என்கிறானே, காதலோடு நம்பிக்கையும் பின்னி பிணைந்

திருக்க வேண்டாம்? வாய் விட்டுச் சொல்லித் தான் இவனுக்குத் தன் மேல் நம்பிக்கையை வரவழைக்க வேண்டுமா?' என எண்ணி மருகினாள் கவிமதி.

கவிமதி மருகுவதை உணராத சந்தோஷ், அவள் 'கப்போர்டில்' இருக்கும் பணத்தை எடுத்து பத்திரப் படுத்தி விட்டு, "நான் பக்கத்து 'ரூம்'ல படுக்கப் போறேன். என்னைத் தொந்தரவு செய்யாத..." எனக் கோபத்துடன் அறையில் இருந்து வெளியில் சென்றான்.

இருந்த கோபத்தில் கையில் வைத்திருந்த தண்ணீர் பாட்டிலை விசிறி அடித்துவிட்டு, பக்கத்து அறையில் புகுந்து கதவை அறைந்து சாற்றித் தாளிட்டுக் கொண்டான்.

இவ்வனைத்தையும் செய்வதறியாது திகைத்து, வாயடைத்து, கண்களில் கண்ணீருடன் பார்த்துக் கொண்டிருந்தாள் கவிமதி. என்னவெல்லாம் சொல்லிவிட்டான்? ஒரு வார்த்தை, இது எல்லாம் உண்மையா எனக் கேட்டிருக்கலாமே?

விக்னேஷும் சந்தியாவும் ஏன் திடீரென்று சந்தியாவின் வீட்டிற்குச் சென்றார்கள் என இப்பொழுது தெள்ளத் தெளிவாகப் புரிந்தது அவளுக்கு. இவை அனைத்தும் போதாதென்று, சந்தியாவையே வேறு அழைத்துப் பேசியதை நினைத்து, கூசிக் குறுகினாள்.

* * *

மறுநாள் வெள்ளிக்கிழமை காலை எப்பொழுதும் போல சந்தோஷின் கைப்பேசியில் வைத்திருந்த பறவைகளின் ***கீச்... கீச்...*** அலாரம் அவனை எழுப்பி விட்டது. கண்களைத் திறக்காமலேயே ஒரு கையை மட்டும்



உயர்த்தி அதை அணைத்தவன், மறுகையால் அவன் மதியை அணைக்க முயன்றான்.

முயற்சியின் முடிவில் அவள் கைகளில் அகப்படாமல் போகவே கண்ணைத் திறந்து பார்த்தவன், பின் தான் உணர்ந்தான் எங்கே உறங்குகிறான் என்பதை. உணர்ந்தவனுக்கு உடனே முந்தைய இரவு நடந்தது அனைத்தும் நினைவிற்கும் வந்தது.

கோயம்புத்தூருக்குச் சென்று தூங்க நேரமில்லாமல் இரண்டு நாள் வேலை அவனை அலைக்கழிக்க, அதை முடித்துக் கொண்டு இங்கே வந்தால், இங்கேயும் தொடர்ந்து வந்த பிரச்சனைகளை சமாளிக்க வேண்டியிருந்ததால் நேற்றிரவு மிகவுமே சோர்ந்திருந்தான்.

அதனால் மழுங்கி இருந்த அவனின் சிந்தனையும் மனமும், தூங்கி எழுந்த பின் சற்று தெளிவாக இருப்பதை உணர்ந்தன. நேற்று இரவு இருந்த கோபம் கண்ணுக்குத் தெரியாமல், காணாமல் போய் அவன் மூளையையும் சிறிது சிந்திக்க வைத்தது.

'ச்சே! இருந்தாலும் மதியை ஒரு வார்த்தை பேச விடாம கண்டபடி திட்டி இருக்கக்கூடாது. சாரி மதிம்மா! என்னோட அவசரத் தனத்தை எதால அடிக்கறது?

அப்பா இதைத் தான் படிச்சுப் படிச்சு சொல்லுவார். "சந்தோஷ்! உன் மூளை யோசிக்கறதுக்கு முன்னாடியே உன் வாய் பேசிடுது. அது சொந்த வாழ்க்கையிலும் சரி, தொழிலிலும் சரி ரெண்டுக்குமே நல்லது இல்ல. நிதானமா இருக்கப் பழகுப்பா'ன்னு.

இப்போ மதியை என்ன சொல்லி சமாதானப்படுத்தறது' என நினைத்தவாறே கட்டிலில் இருந்து இறங்கிய

அதே சமயம், யாரோ தடதடவென்று கதவைத் தட்டும் ஓசை கேட்டது. அவசரமாகக் கதவைத் திறந்தவனை எதிர்கொண்டார் அவன் வீட்டில் வேலை செய்யும் மரகதம்மாள்.

''ஐயோ! இங்க வந்து படுத்திருந்தீங்களா? சின்னம்மா மாடிப் படில உருண்டு தலையில இருந்து ரத்தம் வருது. எனக்கு என்ன பண்ணறதுன்னு தெரியலை... சீக்கிரமா வந்து என்னன்னு பாருங்க.

நினைவே இல்லாமக் கிடக்கறாங்க... வீட்ல வேற யாருமே இல்லையே... யாரோ தண்ணியை சிந்தி இருப் பாங்க போல. இறங்கும் போது அதுல கால் வழுக் கிடுச்சு...'' என விஷயத்தைச் சொன்னவள், புலம்ப ஆரம் பித்தாள்.

அவன் நேற்றிரவு தண்ணீர் பாட்டிலை வீசி எறிந்த செய்கையை நினைத்து நொந்தவாறே, கீழே சென்ற பொழுது அதற்குள் கவிமதியை அவர்கள் வீட்டில் பணி புரியும் ஓட்டுனர் காரினுள் படுக்க வைத்திருந்தார். சந்தோஷ் கீழே சென்றவுடன் மருத்துவமனைக்குப் பறந்தான்.

காரில் செல்லும் பொழுதே தங்களுக்குத் தெரிந்த மருத்துவரை அழைத்து விஷயத்தைக் கூற, அவனை மருத்துவமனை வாசலிலேயே எதிர்கொண்டவர் கவிமதியை உடனே கவனிக்கவும் செய்தார்.

சற்று நேரம் கழித்து சந்தோஷ் அவருடன் சென்று பார்த்தபொழுது கவிமதி நினைவில்லாமல் தான் இருந்தாள். ''சாரி சந்தோஷ்! நாங்க எவ்வளவோ முயற்சி செஞ்சோம். ஆனா, எந்த முன்னேற்றமும் இல்ல. போய்ப் பாருங்க...'' எனச் சொல்லிவிட்டுச் சென்றார் மருத்துவர்.



உள்ளே சென்றவன், கட்டிலில் கிழிந்த நார் போலக் கிடந்த கவிமதியிடம், ''மதிம்மா! ப்ளீஸ்டா... கண்ணைத் திற... நான் உ... உன்னை தி... திட்டினது தப்புதான்... இனிமேல் அப்படி எல்லாம் திட்ட மாட்டேன்டா... 'ப்ளீஸ்'டா... என்னை விட்டுட்டுப் போயிடாத'' எனக் கோர்வையாக வார்த்தைகள் வெளிவராமல் சண்டித்தனம் செய்ய, கெஞ்சினான்.

அவளோ, இவனின் ஒரு வார்த்தையைக் கூட கேட் காமல், அசைவின்றி படுத்திருந்தாள். சந்தோஷ் புலம் பிக் கொண்டிருக்கும் பொழுதே அவள் இதயத் துடிப்பின் வேகம் குறைய இவனின் துடிப்பு மேலேறியது.

''மதி, வேண்டாம்... ப்ளீஸ்... நான் உன்னை இனி ஒண்ணுமே சொல்ல மாட்டேன். போகாதே மதி! நீ இல் லாம நான் மட்டும் தனியா இங்க என்ன பண்ணுவேன்? இல்லைன்னா நானும் உன்னோட வரேன்... போகாதே... இரு...'' என சத்தமாகக் கதற ஆரம்பித்து, பின் ''மதீஈஈஈஈ... மதூஊஊஊஊ...'' என்றவாறே அலறி எழுந்தான்.

அப்பொழுது தான் அவனுக்குப் புரிந்தது அவன் தங்கள் வீட்டில் தூக்கத்தில் இருந்து எழுந்திருக்கிறான் என்று.

'ஓஹ் காட்! ச்சே... என்ன கனவு இது? மதியை அழ வைச்சதுக்கு என் உயிரைக் கசக்கிப் பிழிஞ்சு எடுக்கற மாதிரி இந்தக் கனவு எனக்குத் தேவை தான். பாவம் மதி! சாரிடா!' என எழுந்து கவிமதியைப் பார்க்க தங்களின் அறைக்கு அவசரமாக ஓடினான்.

செல்லும் முன், கனவில் கவிமதியைப் பேசவிடாமல் திட்டியதைப் பற்றி நொந்து கொண்டதை நிஜத்திலும் நிறைவேற்றிவிட்டு, நேற்று அவன் சிந்திய கண்ணீ

உலர்ந்து விட்டதா என பார்த்து விட்டுத் தான் சென்றான். ஆனால்; அவன் சென்ற பொழுது மனைவியின் மடல் தான் அவனைக் காற்றுடன் சேர்த்து படபட வென்று வரவேற்றது.

## 12



தங்கள் அறைக்குச் சென்ற சந்தோஷ், கவிமதியின் அரவம் இல்லாமல் வெளியில் செல்லத் திரும்ப எத்தனிக்க, நான்காக மடிக்கப்பட்டு, 'சந்தோஷ்' என கவிமதியின் கையெழுத்தில் வைத்திருந்த காகிதம் அவன் பார்வையில் சிக்கியது.

அதைப் பார்த்ததும் வயிற்றுக்குள் ஏதோ ஒன்று பிசைவதைப் போல உணர்ந்தான். நடுங்கும் கைகளால் அவசரமாக அதைப் பிரித்து வாசிக்க ஆரம்பித்தவனின் கண்களில் இருந்து கட்டுப்பாடின்றி கண்ணீர் கசிந்தது.

*சந்தோஷ்,*

*உங்ககிட்டே சொல்லாம லெட்டர் எழுதி வச்சிட்டுப் போறதுக்கு என்னை மன்னிக்கவும். நான் என் அம்மா வீட்ல போய் கொஞ்ச நாள் இருக்கிறேன். எனக்கு வேற எங்கே போறதுன்னு தெரியலை. எனக்கு மனசுக்குக் கொஞ்சம்... கொஞ்சம் என்ன, நிறைய கஷ்டமா இருக்குது. இங்கே இருந்தா மூச்சு விடவே சிரமமா இருக்கு.*



*உங்களிடம் நேர்ல பேசினா எங்கே நான் என் கட்டுப்பாட்டை இழந்து, அழுது, அப்புறம் நான் சொல்ல வேண்டியதைச் சொல்ல முடியாமப் போயிடுமோன்னு நினைச்சுத் தான் இப்படி எழுதி வச்சிட்டுப் போறேன்.* ('என்ன வார்த்தை சொல்லறே மதி? போயிட்டு வரேன்னு சொல்லும்மா) என அவள் அங்கிருப்பதாக நினைத்து அவளின் கடிதத்தைப் படிக்கப் படிக்க இடையில் பேசிக் கொண்டிருந்தான் குற்றம் புரிந்தவன்!

*அதுவுமில்லாம நான் சொல்ல வர்றதை நீங்க பொறுமையா கேட்பீங்களான்னு, நேற்றிரவுக்கு அப்புறம் எனக்குச் சந்தேகமா இருக்கு.* ('தப்புதாம்மா! என்னை மன்னிச்சுடு!') *நான் சொல்ல வந்ததைத் தான் கேட்கலை அட்லீஸ்ட் எழுதினதையாவது தூக்கிப் போடாம பொறுமையா படிங்க. என் வார்த்தைகள் உங்களுக்கு உணர்த்த முடியாததை, எழுத்துக்களாவது உணர்த்து தான்னு பார்க்கலாம்!*

*நேற்று இரவு நான் உங்க வரவை ரொம்பவுமே எதிர்பார்த்து ஒரு சந்தோஷமான விஷயத்தைச் சொல்ல எவ்வளவு ஆசையா காத்திருந்தேன்னு உங்களுக்குத் தெரியாது. ஆனா, நடந்தது? நீங்க கடைசி வரை... இல்லை... இப்போ வரைக்குமே என்ன சொன்னீங்கன்னு எனக்குப் புரியலை.*

*நான் எந்தப் பணத்தை எடுத்து வினோத்திடம் கொடுத்தேன்? நம்ம கம்பெனி பணத்துக்குத் தான் ரெகார்ட்ஸ் இருக்குமே. அதைப் பார்த்தாலே புரிஞ்சிருக்கும். அதை நான் எடுக்கலைன்னு ஒருவேளை எல்லாத்தையும் அலசி ஆராய்ச்சிப் பண்ணிட்டு, என்னைக் குற்றம் சொல்லணும்ன்னே இந்த முடிவுக்கு வந்தீங்களோ என்னவோ?* ('இல்லடா!')

எது எப்படியோ? எனக்கு ஒன்னு மட்டும் நல்லாப் புரியுது. உங்களுக்கு முதல்ல இருந்தது போலே என் மேல இருக்கும் காதல் மட்டும் இப்போ இல்லைன்னு. ('அப்படி எல்லாம் சொல்லாதடா!'). அப்படி உங்களுக்கு என் மேலே இன்னும் காதல் இருந்திருந்தா என்னைப் பேசவிடாம, ஒரு விளக்கமும் கேட்காம நீங்களே பேசி முடிச்சிருப்பீங்களா? ('தப்பு தான்! ஏதோ ஒரு கோவத்துல பண்ணிட்டேன் மதி')

நீங்க என்னை நல்லா புரிஞ்சுக்கிட்டீங்க, என்னோட மனசை தெரிஞ்சுக்கிட்டீங்கன்னு நினைச்சேன். ஆனா??? எல்லா கணவன் மனைவிக்குள்ளேயும் சில பல 'மிஸ் அண்டர்ஸ்டாண்டிங்', வரத்தான் செய்யும். இல்லைன்னு சொல்லலை. ஆனா, அதைப் பத்திப் பேசி முடிவு எடுக்காம நீங்களா ஒரு முடிவுக்கு வந்ததுமில்லாம என்னைத் திட்டினதைத் தாங்க முடியலை. (ஆமாம்! பேசித் தீர்த்திருக்கலாம். நான் தான் அறிவில்லாம அப்படி நடந்துக்கிட்டேன்.)

உங்களுக்கு என்னைப் பார்த்தவுடனே வந்த காதல், இப்போ உங்க கூட இருக்கும்போது காணாமப் போயிடுச்சா? (இல்லடா!) காதல்ன்னாலே வலிகளும் இருக்கும்ன்னு நான் நினைச்சது சரி தான் போல. அது கல்யாணத்துக்கு அப்புறம் வந்தாலும் சரி பின்னாடி வந்தாலும் சரி, ரொம்பவுமே வலிக்குது எனக்கு. நான் எவ்வளவு கர்வத்துல இருந்தேன்னு உங்களுக்குத் தெரியாது. எனக்கு தான் அதிக அக்கறையுள்ள, அன்பான காதலன் - கணவன் கிடைச்சிருக்கார்னு.

என்கிட்டே இருந்து எதையும் எதிர்பார்க்காம அன்பை மட்டுமே மூலதனமா வச்சு என்னை வாழ்க்கை முழுவதும் சந்தோஷமா வச்சிருக்கிற கணவன் கிடைச்சிருக்கார் என ரொம்ப



சந்தோஷப்பட்டேன். நான் உங்களோடான என் (நம்) வாழ்க்கையில இப்படி எல்லாம் அழுவேன்னு நினைச்சதேயில்லை. ஆனா, அப்படி கர்வம் கொள்ளாதடி பெண்ணேன்னு நல்லா நச்சுன்னு தலையில அடிச்சுச் சொல்லிட்டீங்க. ரொம்ப நன்றி! ('இல்லடா')

ஆனா, நீங்க இவ்வளவு வலி ஏற்படுத்தி சொல்லியிருக்க வேண்டாம். ('டேய் என்னை மன்னிச்சிடுடா!). நான் முன்பே சொன்ன மாதிரி முகத்தைப் பார்த்து வர்ற காதலுக்கு ஆயுள் கம்மி தான் போல. கல்யாணத்துக்கு முன்னாடி வர்ற காதல் நிலையானது இல்லைன்னு நான் சொன்னதை மறுத்து என்னோட கருத்தை மாத்திட்டு, இப்போ அதுதான் உண்மைன்னு எனக்குப் புரிய வச்சிட்டீங்க. என்னோட கருத்துல நான் உறுதியா இருந்திருந்தா கூட இவ்வளவு வலிச்சிருக்காது. இப்போ ரொம்பவுமே வலிக்குது... (ப்ளீஸ்... அப்படி எல்லாம் நினைக்காதடா)

நீங்க இத்தனை நாள்ல முழுசா இல்லைன்னாலும் அட்லீஸ்ட் என்னோட அடிப்படையான குணத்தை யாவது தெரிஞ்சுருப்பீங்கன்னு நினைச்சேன். நான் அதை உங்களுக்குப் புரிய வைக்க எங்க தவறினேன்னு சத்தியமா புரியலை. ('நீ தவறலைடா!)

பணம் எனக்கு முக்கியமாப் போச்சுன்னு நீங்களா நினைச்சட்டீங்க. அதுவும் எதுக்கு? என் அண்ணனுக்குக் கொடுக்கறதுக்கு. நீங்க காதலுக்குத் தான் மரியாதை கொடுக்கலை, நட்புக்குமா? அதை நினைச்சாத்தான் எனக்கு இன்னும் வேதனையா இருக்கு. காதல்ல கூட சந்தேகம் வரலாம் ஆனால் நட்பில்? ('தப்புதாம்மா! ஏதேதோ தொடர்ந்து நடந்த விஷயத்துல நிறையக் குழம்பிட்டேன். வினோத்தையும் தப்பா நினைச்சுட்டேன்.')

என் அண்ணனோட நான் தினமும் வாய் ஓயாமப் பேசுவேன் தான். ஆனா, எங்களோட பேச்சுல நான் உங்களைப் பத்தியோ இல்லை மத்தவங்களைப் பத்தின தகவல்களை ஒருபோதும் சொன்னது இல்லை. அவரும் அதைப் பத்திக் கேட்டுக்கிட்டதும் இல்லை. அதெல்லாம் உங்களின் தனிப்பட்ட விஷயம். அதை ஏன் நான் அவரிடம் சொல்லப் போகிறேன்? என்னைப் பத்தி, அதுவும் சொல்லக் கூடிய விஷயங்களை மட்டும் தான் பகிர்ந்துக்குவேன்.

பாதி நேரம் அண்ணன் சாப்பாட்டைப் பத்திப் பேசியே நேரத்தை ஓட்டிடுவார். நீங்க லண்டன்ல இருந்தப்போ நான் என் அண்ணனோட பேசினதை ஒட்டுக் கேட்டதாச் சொன்னீங்களே. அப்படிக் கேட்டிருந்தா நாங்க எந்த மாதிரி விஷயங்களைப் பேசுவோம்ன்னு உங்களுக்குத் தெரிஞ்சிருக்குமே. இதையெல்லாம் உங்களுக்கு விளக்கமா சொல்லணும்ன்னு நினைக்கறப்போ எனக்குக் கவலையா இருக்கு.

நம்ம காதலுக்கு அடையாளமா எனக்குள்ளே ஒரு சின்னம் வளர்ற இந்த நேரத்துல நீங்க நேத்து நடந்துகிட்டது எனக்கு பெரும் அதிர்ச்சியைத் தந்தது. ('என்னது... என்ன சொன்ன... நம்ம காதலின் சின்னமா?') எனக்கு இதுக்கு மேல ஒண்ணும் சொல்லத் தோணலை. இதை சொல்லத்தான் நைட் உங்களுக்காக நான் ஆசையா காத்திருந்தது. ('நான் சரியான மடையன்! எல்லாத்தையும் இப்படிக் கெடுத்துட்டேனே').

எப்படி எல்லாம் சொல்லணும்ன்னு நினைச்சேனோ அதற்கு நேர்மாறா இக்கடிதம் மூலம் உங்களுக்குத்



தெரியப்படுத்த வேண்டி இருக்குது. என்னோட இந்த நிலைமை வேற யாருக்கும் வரக்கூடாது. இந்த அதிர்ச்சியிலிருந்து மீளும்வரை நான் என் பெற்றோர்களுடன் இருந்துவிட்டு வருகிறேன்.

நீங்க என்னைப் போன்னு சொன்னது நேத்து மட்டுமா இல்லை உங்கள் வாழ்க்கையில் இருந்தான்னு எனக்குத் தெரியலை. ('என் வாழ்க்கையிலிருந்து உன்னைப் போகச் சொல்லிட்டு நான் என்ன பண்ணுவேன்?')

இப்படி எல்லாம் எழுதி உங்க மனசை சங்கடப் படுத்தணும் என்பது என் நோக்கமில்லை. நான் எப்படி உணர்றேன் என உங்களுக்குப் புரிய வைக்கத் தான் இதை எழுதினேன். ஏதாவது தப்பாக எழுதி இருந்தால் என்னை மன்னிக்கவும். ('நீதான் என்னை மன்னிக்கணும் மதி').

கடைசியில், நீ ரொம்ப நாளாக் கேட்டுட்டு இருந்தது.

*''நீ என்னைக் காதலித்து,*
*கற்றுக் கொடுத்த காதலை*
*நீ மறந்தும் என்னால்*
*மறக்க முடியவில்லை!'*

(இல்லடா. இல்ல... நான் மறக்கலைடா! நான் எப்படி என் காதலை மறக்க முடியும்!)

இப்படிக்கு,
கவிமதி.

**பின்குறிப்பு:** நான் அத்தைக்கும் மாமாவுக்கும் காலையிலேயே போன் பண்ணி நான் கர்ப்பமான விஷயத்தைச் சொல்லி, அம்மாகூட கொஞ்ச நாள் இருந்துவிட்டு

வர்றேன்னு சொல்லியிருக்கிறேன். டிரைவர் அண்ணாவைக் கூட்டிட்டு உங்க காரில் போய் காரைத் திருப்பி அனுப்பிடறேன். உங்ககிட்டே கேட்காம உங்கக் காரை எடுத்ததுக்கு என்னை மன்னிக்கவும். (உங்க காரா? நைட் தூங்காம எல்லாத்தையும் மனசுல போட்டுக் குழப்பி, என்னவெல்லாம் யோசிக்க எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பா... நான் மட்டும் நல்லாத் தூங்கிட்டு இருந்திருக்கேன். ச்சே!)

கடிதத்தில் ஆங்காங்கே எழுத்துக்கள் நவீன ஓவியத்தைப் போல காட்சி அளித்து கவிமதி கண்ணீர் சிந்தியதைப் பறைசாற்றியது.

கடிதத்தைப் படித்து முடித்தவனின் கண்களிலிருந்து கட்டுக்கடங்காமல் கண்ணீர் வழிய, 'ச்சே... அவள் தாயாகிற விஷயத்தை என்னிடம் சொல்ல சந்தோஷமாகக் காத்திருந்ததைக் கெடுத்ததுமில்லாம, அறிவு கெட்டத்தனமா அவளை அழ வச்சு, ஒரு வார்த்தை கூட பேச விடாம செஞ்சுட்டேன்' என அவன் மனம் அரற்றியது.

ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என இப்போ உணர்ந்து என்ன செய்ய? சந்தோஷமான தருணத்தைக் கெடுத்ததை நினைத்து இப்போ புலம்பித் தான் என்ன செய்ய? நேற்றே யோசித்திருந்தால் தேவையில்லாத சங்கடங்களையும் வலிகளையும் தவிர்த்திருக்கலாம்!

புலம்பியவாறே அவசரமாக கவிமதியின் அலைபேசிக்கு அழைத்தான். அவளின் அலைபேசியின் இனிய கீதம் அவர்கள் அறையில் இருந்தே வந்தது. 'நான் கூப்பிடுவேன்னு இங்கேயே வச்சிட்டுப் போயிட்டாளா?' என முணுமுணுத்தவன், கவிமதியின் வீட்டுக்கு அழைத்தான்.



பேசியை எடுத்த வினோத், "டேய் சந்தோஷ் கங்கிராட்ஸ்! என்கிட்டே இந்த விஷயத்தை மறைச்சிட்ட இல்லே. என் தங்கச்சி சொல்லித் தான் தெரிய வேண்டி இருக்குது. நீ எல்லாம் ஒரு பிரெண்டாடா?" என மகிழ்ச்சியில் நண்பனைப் பேச விடாமல் பேசிக் கொண்டே போனான்.

'வினோத்! எனக்கே இப்போ தான்டா தெரியும். நான் சரியான முட்டாள். உன்னையும் தப்பா நினைச்சுட்டேன், என் மதியையும் தப்பா நினைச்சுட்டேன்' என அவன் மனம் தன் போக்கில் புலம்பிக் கொண்டிருக்க, அவன் வெட்கப்பட்டுத் தான் பேசாமல் இருக்கிறான் என நினைத்தான் வினோத்.

"டேய் சந்தோஷ்! ரொம்ப வெட்கப்படாத. நீ சொன்னா என்ன? கவி சொன்னா என்ன? எனக்கு ரொம்ப சந்தோசமா இருக்குடா. கூடிய சீக்கிரம் நான் மாமா ஆகப் போறேன். தேங்க்ஸ் சந்தோஷ்!" என அவன் நண்பனுக்கு ஆத்மார்த்தமாக நன்றி உரைத்தான்.

வினோத்தின் உண்மையான அன்பில் நெகிழ்ந்தவன், "நான் தான் உனக்கு தேங்க்ஸ் சொல்லணும் வினோத். என்னை நம்பி உன் தங்கச்சியைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்ததுக்கு" என்றான் கரகரத்தக் குரலில்.

"டேய்! என்ன இது? இப்படி எல்லாம் டயலாக் பேசி என்னை அழ வச்சுடுவ போல இருக்கே. சரி! இப்போ தானே கவி இங்கே வந்தா. அதுக்குள்ளே உனக்குப் பொறுக்கலையா" என்றான் சந்தோஷை கலகலப்பாக மாற்றும் விதத்தில்.

"மதி அவளோட செல்போனை விட்டுட்டு வந்துட்டா. அதான் ஆபீஸ் போறப்போ வந்து கொடுத்துட்டுப் போக நினைச்சேன். அதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன்."

''என்னது. அதைச் சொல்லத்தான் கூப்பிட்டியா? அப்பவும் நீ அப்பாவாகப் போற விஷயத்தைச் சொல்லக் கூப்பிடலையா? அநியாயம்டா நீ பண்ணறது'' எனப் போலியாக கோபித்துக் கொண்டான் வினோத்.

'இவனைப் போய் எப்படி தப்பாக எடுத்துக் கொள்வது?' என நொந்து கொண்ட சந்தோஷ், ''அதை சொல்லிட்டு அப்படியே போனைக் கொடுக்கறதுக்கு வரேன்னு சொல்லக் கூப்பிட்டேன். சொல்லாம கொள்ளாம வந்து நின்னா அப்புறம் உன்னோட சாப்பாட்டுல பங்குக்கு வந்துட்டேன்னு நீ எனக்குச் சாபம் கொடுத்துடுவியே'' என இம்முறை நண்பனை வம்பிற்கு இழுத்தான் சந்தோஷ்.

இதற்கு மேல ஊமைக் கோட்டானாக இருந்தால் தேவையில்லாத ஊகங்களுக்கு இடம் கொடுத்ததைப் போல ஆகிவிடுமே என நினைத்த சந்தோஷுக்கு மனதில் வேதனை மண்டிக் கிடந்தாலும், தன் நண்பனுக்கு ஈடு கொடுக்கும் வகையில் கலகலப்பாகப் பேச முயன்றான்.

''ஆமா, ஆமா! நல்ல வேளை சொன்னே. எனக்கு இந்த சாப்பாட்டைப் பங்கு போடற வேலையே ஆகாது. சொத்துல பங்கு கேட்டாலும் கொடுத்துடுவேன்... சாப்பாட்டுல கையை வச்சா எனக்குக் கெட்ட கோபம் வரும்'' என பதிலளித்தவன்,

''ஆமா நானும் உன்னைப் பார்த்து ரொம்ப நாளாச்சு. உங்க பேர் சொல்லி அம்மாகிட்டே ஸ்பெஷலா சமைக்கச் சொல்லி இருக்கேன். அதனால வந்தா நீயும் நல்லா ஒரு பிடி பிடிக்கலாம். சீக்கிரமா வா'' எனச் சொல்லி பேசியை அணைத்தான் வினோத்.



சந்தோஷ் கிளம்பி, காரில் அமர்ந்தவுடன் அவன் கைப்பேசி அழைக்க, கவிமதி தான் அழைக்கிறாளோ எனப் பரபரப்பாக எடுத்தான். ஆனால் அவனின் பரபரப்பு உடனே அமுங்கியது. அழைத்தது அவன் தங்கை ப்ரியங்கா!

உற்சாகம் வடிய கைப்பேசிக்கு உயிர் கொடுத்தவன், ''சொல்லு ப்ரியா! ட்ரிப் எல்லாம் எப்படி இருக்கு?'' என்றான்.

'நல்லா இருக்கு அண்ணா!' என பதில் வர, 'அண்ணாவா?' எனத் திகைத்தான்.

அவன் பேசும் முன், ''அண்ணி எல்லாம் சொல்லி இருப்பாங்க. நான் தெரியாமத் தான் அண்ணியையும் வினோத்தையும் தப்பா நினைச்சுட்டேன். நான் சொன்னதை எதையும் மனசுல வச்சுக்காதீங்க அண்ணா!'' என மன்னிப்பை வேண்டினாள் ப்ரியங்கா.

தன் தங்கையும் அவனைப் போலவே அவசரக் குடுக்கை என உணர்ந்து, 'இப்படி சொல்லி என்னையும் பொறுமையில்லாதவனா மாத்திட்டியே ப்ரியா' என மனத்திற்குள் நினைத்துக் கொண்டு அமைதியாக இருந்தான்.

''அண்ணிக்கு கூப்பிட்டா ரிங் போய்ட்டே இருக்கு. அவங்க எங்கே?''

கவிமதி தாய்மை அடைந்ததைப் பற்றிக் கூறி அவள் தாய் வீட்டுக்குச் சென்றிருப்பதைத் தெரிவித்தான்.

அதைக் கேட்டுத் துள்ளியவள், ''ஓஹ் அப்படியா! கங்கிராட்ஸ் அண்ணா! நான் நேத்து போன் பண்ணினப்போ அண்ணி என்கிட்டே சொல்லவே இல்ல. அவங்க கிட்டேயே கேட்டுக்கிறேன்'' என சந்தோஷமாய் பேசியை வைத்தாள் ப்ரியங்கா.

அதன் பின்னர் எவ்வளவு விரைவாக வினோத்தின் வீட்டிற்குச் செல்ல முடியுமோ அவ்வளவு விரைவாகச் சென்றான் சந்தோஷ். வீடு வந்தவனை வினோத்தும் அவன் தந்தையும் வரவேற்றுப் பேசினர். அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு வாய் பதில் அளித்தாலும் மனமும், கண்களும் கவிமதியைத் தேடி வலம் வந்து கொண்டிருந்தன.

சமையலறையில் இருந்து வந்த தேவகி அவனை வரவேற்று, ''கவி அசதியா இருக்குன்னு வந்தவுடனேயே படுக்கப் போயிட்டா. நீங்க சாப்பிட வாங்க'' என உபசரித்தார்.

அவருக்கு மனதில் கோடி முறை நன்றி கூறியவன், ''கவி இன்னும் சாப்பிடலையா? நான் போய் கூட்டிட்டு வரேன்'' அவர்களின் பதிலுக்காகக் காத்திராமல் மாடிக்குச் செல்லும் படிகளை இரண்டிரண்டாகத் தாவி கவிமதியின் அறைக்குச் சென்றான்.

உள்ளே சென்றவன், கவிமதி படுக்காமல் 'பே விண்டோ' மீது அமர்ந்து வெளியே வெறித்துக் கொண் டிருப்பதைப் பார்த்து உள்ளம் உருக, அவளை அணைக் கத் துடித்த மனதிற்கு கடிவாளமிட்டு அடக்கினான்.

அவன் கவிமதியிடம் சொல்ல வேண்டியது, தெளிவு படுத்த வேண்டியது இன்னும் நிறைய இருக்கிறதே. முதலில் அதைப் பார்க்கலாம் என்ற எண்ணத்துடன் மெல்ல அவளிடம் நெருங்கியவன், ''ம்... மதி...'' என்றான்.

திரும்பிப் பார்த்த கவிமதி, 'இங்கே எதுக்கு வந்தீங்க?' என கண்களாலேயே விரட்டி அடித்தாள்.



''மதி சாரிடா! நான் அறிவில்லாம நடந்துகிட்டேன். உன்னைத் திட்டினதுமில்லாம உன் மேலே குற்றம் வேற சுமத்தி... என்னை மன்னிச்சிடு ப்ளீஸ்!'' என அவள் கைகளைப் பற்றிக் கொண்டான்.

அவள் ஒன்றும் பேசாமல் எழுந்து நிற்பதைப் பார்த்து, ''இப்படி ஒரு வார்த்தையில என்னை மன்னிச்சுடுன்னு சொன்னா நான் பேசினது எல்லாம் இல்லன்னு ஆயிடாது. உன்கிட்டே அதைப் பத்திப் பேசலாம்ன்னு தான் நேத்து வீட்டுக்கு வந்தேன்.

எப்படி ஆரம்பிக்கறதுன்னு தெரியாம தடுமாறிட்டு இருந்தப்போ தான் வினோத் போன் பண்ணினானா, நான் என் கட்டுப்பாட்டை இழந்துட்டேன்...'' என்றான் முகம் கன்றியவனாய். மனைவியோ சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை.

''நீ எவ்வளவு ஆசையா காத்துட்டு இருந்திருப்ப? நான் எல்லாத்தையும் என் அவசரத்தனத்துனால கொட்டிக் கவிழ்த்துட்டேன். எப்பாடுபட்டாவது அந்த சந்தோஷத்தை அள்ளி மறுபடியும் உன்கிட்டே சேர்க்கிறேன் மதி. நீ அதை ஏத்துக்கணும் மதி, ப்ளீஸ்டா!'' என்றவன், நின்ற இடத்திலேயே மண்டியிட்டு அவளை வயிற்றோடு அணைத்து, வயிற்றில் முத்தமிட்டான்.

இப்பொழுதும் மனைவி அசையவில்லை. அவளை விடுவித்து, ''மதி, என்னை வெறுத்திடாதே. நீ என்னை வெறுத்திட்டா என்னால அதைத் தாங்க முடியாது'' - எங்கே நேற்று நடந்து கொண்ட விதத்தில் கவிமதி தன்னை வெறுக்க ஆரம்பித்து விட்டாளோ என எண் ணிப் புலம்பினான்.

அவளின் மௌனம் நீடிக்கவே, ''மதி, ப்ளீஸ்... ஏதாவது பேசு. இல்லை, நல்லாத் திட்டு. அதுவும் பத்தலையா?

"நல்லா அடி" என அவள் கைகளை எடுத்து அவன் கன்னத்தில் அடித்துக் கொண்டான்.

"நீ பேசிட்டே இருந்தா வாய் வலிக்காதா என நானே உன்கிட்டே கேட்டிருக்கேன். ஆனா, நீ பேசாம இருந்தா என் மனசோட சேர்ந்து ஒவ்வொரு அணுவும் வலிக்குது மதி" என மனதில் உள்ள வலிகளைச் சொல்லிக் கொஞ்சினான்.

அவன் பேசப் பேச, அவள் கண்களில் இருந்து கண்ணீர் திரண்டு வருவதைப் பார்த்துப் பதறியவன், "நீ அழாத மதி. உன்னைத் திட்டினதுக்கு நான் தான் அழணும்" என கண் கலங்கியவாறே மனைவியின் கண்ணீரைத் துடைத்து விட்டான்.

"நான் நேத்து அப்படி நடந்துகிட்டது தப்புன்னு உணர்ந்து உன்னைப் பார்க்க காலையிலே நம்ம ரூமுக்குப் போனா, உன்னோட லெட்டர் தான் இருந்தது" என அவள் எழுதிய கடிதத்தை எடுத்து அவள் முன் நீட்டி,

"மதி, என்னை எழுப்பி இதையெல்லாம் நேர்ல சொல்லி இருக்கலாமேம்மா. உனக்கு என்கிட்டே இல்லாத உரிமையா? நல்லாச் சண்டை போடு மதி! ஏதாவது பேசும்மா..." என்றான் பிசிறடித்த குரலில்.

அதுவரை அமைதியைக் கவசமாகக் கொண்டவள், "பணம் எப்படிப் போச்சுன்னு கண்டுபிடிச்சீங்களா?" எனக் கவசம் களைந்தாள்.

"மதி, நான் என்ன பேசிட்டு இருக்கேன், நீ என்ன பேசற? அந்தப் பணத்தைப் பத்தி நான் அப்புறம் விசாரிக்கிறேன். எனக்கு அதைவிட நீதான் முக்கியம்" என அவன் சொல்ல, "நான் முக்கியமா, இல்ல, நம்ம பிள்ளை



முக்கியமா?" என்றவளை அடிபட்ட பார்வையுடன் பார்த்தான் சந்தோஷ்.

கவிமதியோ விடாமல், "இந்தப் பிரச்சனைக்கு ஒரு தீர்வு தெரியற வரைக்கும் நேத்து நைட் நடந்ததைப் பத்திப் பேச வேண்டாம். என்னால இன்னொரு தரம் இந்த மாதிரி வலியைத் தாங்க முடியாது. அதுவுமில்லாம இப்போ நான் நம்ம வாரிசை சுமக்கறதுனால, நீங்க மனசு இளகிப் போயிருப்பீங்க. அதனால உணர்ச்சி வசப்பட்டு உடனே மன்னிப்பும் கேட்கறீங்க" என்றாள் முடிவாக.

"மதி, ஏன் இப்படிப் பேசற? நான் பேசினது எல்லாமே தப்புன்னு உன் லெட்டரைப் படிக்கறதுக்கு முன்னாடியே உணர்ந்துட்டேன். அதை எப்படி நிரூபிக்கறதுன்னு எனக்குத் தெரியலை. ஆனா..." என அவன் மேலே தொடரும் முன் அவனின் அலைபேசி இம்சித்தது.

"வினோத், இதோ வந்துட்டே இருக்கோம்" எனப் பேசி வைத்தான்.

அவன் வினோத்திற்கு பதில் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே கவிமதி அறையை விட்டு வெளியேறுவதை ஒன்றும் செய்ய முடியாமல் பார்த்துக் கொண்டிருந்தவன், வேறு வழியில்லாமல் கீழே சென்றான்.

உணவருந்தும் பொழுது மற்றவர்களிடம் சகஜமாகப் பேசிய கவிமதி, சந்தோஷிடம் பேசவேயில்லை. ஏன், தப்பித் தவறி அவனைப் பார்க்கக் கூட இல்லை. இதைப் பார்த்து அவன் மனது ஊமையாய் கண்ணீர் வடித்தது.

மற்றவர்களின் மனதில் குடியேறிய சந்தோஷத்தில் இவர்களின் இந்தப் பனிப்போரை கவனிக்காமல் சலசலத்துக் கொண்டிருந்தனர். சந்தோஷ் எவ்வளவோ முயன்றும் மனைவியை இயல்பாகப் பேச வைக்க

முடியாமல் கனத்த மனதுடன் அலுவலகத்திற்குக் கிளம்பினான்.

அவசரத்திற்கும் கோபத்திற்கும் பெயர் போன சந்தோஷ் தன் பிடிவாதக்கார மனைவியை எவ்வாறு நெருங்குகிறான் என பார்ப்போம்! விதியை மதியால் வெல்லலாம் என்பார்கள். ஆனால் இவன் தன் மதியை எதால் வெல்வான்? பார்ப்போம்!

# 13



அலுவலகத்தில் பணக் கணக்கை எடுத்து ஆராய்ந்தால் ஏதாவது தெளிவு பிறக்கும் என்ற எண்ணத்தில் கணக்கு வழக்குகளைப் பார்த்தான் சந்தோஷ். ஆனால், தெளிவு தான் கிடைக்கவில்லை.

'எதற்கும் சந்தியா வந்ததும் அவகிட்டே பேசிப் பார்க்கலாம்' என்ற முடிவுக்கு வந்தவனின் மனதில் நேற்று அவன் கோவையிலிருந்து திரும்பி வந்தவுடன் நடந்த விஷயங்கள் நினைவிற்கு வந்தது.

அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது அவசரமாக வரச் சொன்ன விக்னேஷ், சந்தோஷையும் சந்தியாவையும் அழைத்துக் கொண்டு வெளியில் கிளம்பினான்.

காரில் செல்லும் பொழுது, ''கொஞ்சம் கூட பொறுப்பே இல்லாம கவி என்ன வேலை பண்ணியிருக்கா பாரு?



பேங்க்ல இருந்து பணத்தை எடுத்துட்டு, அதை நோட் கூட பண்ணலை. இது தெரியாம நாம மூணு பேருக்கு செக் எழுதிக் கொடுத்துட்டேன்'' என்றான் விக்னேஷ்.

''என்ன சொல்றீங்க?''

''சொல்லறேன் சுரக்காய்க்கு உப்பு பத்தலைன்னு... நான் கொடுத்த செக்கோட தாமோதரன் பேங்குக்குப் போயிருக்கிறார். நமக்குத் தெரிஞ்ச மேனேஜர் தான் அக்கௌண்ட்ல பணம் இல்லைங்கறதைப் பார்த்துட்டு உடனே தகவல் சொன்னார்.

தாமோதரனை, கம்ப்யூட்டர் வேலை செய்யலைன்னு சொல்லி, கொஞ்ச நேரம் கழிச்சு வரச் சொல்லிட்டு நமக்காக வெயிட் பண்ணறார். அவரைப் பத்து நிமிஷம் எப்படியாவது பிடிச்சு வைக்கச் சொல்லி இருக்கிறேன்'' என சந்தோஷிடம் சொன்னவன்,

சந்தியாவிடம், ''நம்ம கம்பெனியோட மத்த அக்கௌண்ட்ல எவ்வளவு பணம் இருக்கு?'' எனக் கேட்டான். சந்தியா பதில் தர, எங்கிருந்து எவ்வளவு பணம் எடுத்துப் போட வேண்டும் என பேசியபடியே மீதிப் பயணம் கழிய, வங்கியும் வந்தது.

அவர்கள் வங்கிக்கு வந்த பொழுது தாமோதரன் வங்கியிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தார். அவர் கட்டுமானப் பொருட்களை மொத்தமாக வாங்கி சகாய விலையில் விற்கும் ஒரு வியாபாரி.

விக்னேஷும் சந்தியாவும் வங்கிக்குச் செல்ல, தாமோதரனை எதிர்கொண்டு தொழில் சம்மந்தப்பட்ட பேச்சைப் பேசி அவரை திசை திருப்பினான் சந்தோஷ். அவன் அவரை சாப்பிட அழைக்க, அவரும் பணத்தை மறந்தவராக தொழில் பேச்சு சுவாரசியத்தில் அவனுடன் சென்றார்.

வங்கியில் வேலையெல்லாம் முடிந்த பின் அலுவலகத்திற்கு சென்ற மூவரும் விக்னேஷின் அறையில் கூடினர்.

''சந்தோஷ்! கவியை அவ படிச்சதுக்குத் தகுந்த மாதிரி வேலை தேடிக்கச் சொல்லு. இவ்வளவு பணம் புழங்கற இடத்துல இனிமேல் அவ வேலைக்கு வரவேண்டாம். சந்தியா எல்லாம் சொன்னா... வினோத்தோட பணத் தேவைக்கு நாம என்ன பேங்க்கா வச்சு நடத்தறோம்'' என கவிமதியை நேரடியாகக் குற்றம் சாட்டினான் விக்னேஷ்.

சந்தோஷ் பதிலளிக்கும் முன், ''மன்னிச்சுடு சந்தோஷ்! நடந்ததை என்னால மறைக்க முடியலை'' என சந்தோஷிடம் சொன்ன சந்தியா, கணவனிடம், ''திடீர்னு கவியை வேற வேலை தேடிக்கச் சொன்னா மாமா என்னன்னு கேட்பார். நாம நடந்ததைச் சொல்லி அவரையும் ஏன் சங்கடப்படுத்தணும்?'' என்றாள்.

''நீ சொல்லறதும் சரி தான். சரி, கவி தொடர்ந்து வரட்டும். ஆனா, கணக்கு வழக்குகளை சந்தியா மட்டும் பார்க்கட்டும். நல்லவேளை... பெருசா பிரச்சனை ஆகறதுக்கு முன்னாடி பேங்க் மேனேஜர் காப்பாத்திட்டார். இல்லன்னா இவ்வளவு நாள் சம்பாதிச்சு வச்சிருந்த நல்ல பேரு என்னாகிறது?

ஏதாவது போலீஸ் கேஸ் ஆகியிருந்தா, அப்புறம் கோர்ட் கேஸ்ன்னு நான் தான் அலைஞ்சிருக்கணும். கம்பெனி மானத்தோட சேர்ந்து குடும்ப மானமும் போயிருக்கும். கவி பண்ணின காரியத்துக்காக நான் ஜெயில்ல போய் கம்பி எண்ணிட்டு களி திங்கணுமா?'' என மிகுந்த ஆவேசத்துடன் கத்தினான் விக்னேஷ்.



''அண்ணா, நான் கவிகிட்டே விசாரிக்கிறேன்'' என சந்தோஷ் கவிமதியை அழைக்க முயல,

''அதுதான் தெளிவா இருக்கே. கவி தான் பணத்தை எடுத்திருக்கான்னு. இனி என்னத்தை விசாரிக்கப் போற? அவளைப் பார்த்தா நான் இருக்கிற கோபத்துல ஏதாவது கண்டபடி திட்டிடுவேன். இப்போ கூப்பிடாதே'' என்றான் அண்ணன்.

விக்னேஷ் பேசப் பேச மனைவி விசும்புவதைப் பார்த்தவன், ''சந்தியா, நீ எதுக்கு அழறே? அது தான் ஒண்ணும் ஆகலையே...'' என அவளை அன்புடன் கடிந்து கொண்டான்.

சந்தோஷிடம், ''பாருடா... உன் தோழிக்கு என்ன சமாதானம் சொல்லறது? கவியை இனிமேல் கம்பெனி விஷயத்துல தலையிடாமல் பார்த்துக்கோ. அப்படி முடியலைன்னா அப்புறம் நாம தனித் தனியா பிஸினெஸை பார்த்துக்க வேண்டி வரும்'' என முடித்தான் விக்னேஷ்.

''அண்ணா, ஏன் இப்படி எல்லாம் பேசறீங்க?''

''பின்ன, யாரோ பண்ணற தப்புக்கு நான் பொறுப்பாளியாக முடியாது. பேசினது போதும். நாங்க சந்தியாவோட வீட்டுக்குப் போய்ட்டு ரெண்டு நாள் கழிச்சு வரோம்'' என்று கிளம்ப முயன்றான் விக்னேஷ்.

''நான் கவியை இப்பவே கூப்பிடறேன்'' என அவள் அறை எண்ணிற்கு அழைத்தான். அவள் சீக்கிரமாக சென்று விட்டாள் என்பதை மறந்து.

அவள் பதிலளிக்காமல் போக, விக்னேஷோ, ''இப்படி அடிக்கடி சீக்கிரமா வீட்டுக்குப் போயிட்டா 'பிசினெஸ்' விளங்கின மாதிரி தான்'' என முணுமுணுத்தவாறே

எழுந்தவன், ''நாங்க வரோம். இப்போ பேசறதுக்கு எங்களுக்குக் கொஞ்சமும் இஷ்டம் இல்லை'' எனக் கூறி அங்கிருந்து சந்தியாவுடன் வெளியேறினான்.

அந்தத் தாக்கத்தில் இருந்து முழுவதுமாக விடுபடும் முன்பே வீட்டிற்குச் சென்ற சந்தோஷ், இரவு மனைவியிடம் அதைத் திறந்து கொட்டினான், தேளைப் போல.

நேற்றைய நினைவுகளிலிருந்து நிகழ்காலத்திற்கு வந்தவனுக்கு இந்தப் பிரச்சனையை எப்படிக் கையாள்வது என விடை தெரியாமல் தடுமாறி, முதலில் செய்து முடிக்க வேண்டிய வேலைகளில் ஆழ்ந்தான்.

வேலையில் ஆழ்ந்தாலும், பலமுறை கவிமதியை அழைக்கவும் மறக்கவில்லை. ஆனால், அழைத்த கைப்பேசி, அந்தப்புறம் கவனிப்பாரற்று கிடந்தது. கவிமதியின் கைப்பேசி மௌனத்தைக் கடைபிடிக்க, சந்தோஷோ, அவ்வப்பொழுது அலுவல் வேலையை விட்டு விட்டு தன் எண்ணங்களை மனதில் போட்டுக் கொண்டு மருகினான்.

'மதி, நானே என்ன பண்ணறதுன்னு புரியாம முழிச்சிட்டு இருக்கேன். நீயும் இப்படிப் பேசாம இருந்தா நான் யார்கிட்டே போய்ச் சொல்லுவேன்' என ஒருதரம் தன் தவிப்பைச் சொன்னான்.

மறுமுறை, 'நான் என்னோட அவசரத் தனத்தை உன்கிட்டே அப்படிக் காட்டியிருக்கக் கூடாது. அண்ணன் திட்டினதுல கொஞ்சம் அப்செட் ஆகி, அந்தக் கோபத்தை உன் மேலே கொட்டிட்டேன். ஐ அம் வெரி சாரி!' என மானசீகமாக மன்னிப்பை வேண்டினான்.

'நீ சந்தோஷமா இருக்கிற இந்தத் தருணத்தை நானே அழிச்சிட்டேன். உன்னை இனி வாழ்நாள் முழுமைக்கும்



நான் திட்டவே மாட்டேண்டா!' என ஒருமுறை உறுதி மொழி எடுத்துக் கொண்டான்.

'உன்கிட்டே நான் நடந்துகிட்டதுக்கு எனக்கு மன்னிப்பே கிடையாது மதி! ஆனா, நீ என்னை மன்னிக்கிற வரைக்கும் ஆபீஸில என்ன நடந்ததுன்னு நான் கண்டு பிடிக்கப் போறதில்லை.

அப்போ தான், நான் உன் மேலே வச்சிருக்கும் நம்பிக்கையை உனக்குப் புரிய வைக்க முடியும். நேத்து நடந்தது என் அறிவுகெட்ட செயலினால். அதற்கும் என் மனசுக்கும் சம்மந்தம் இல்லைன்னு உனக்கு உணர வைக்க முடியும்' என முடிவாக முடிவு செய்து கொண்டான்.

அன்று அலுவலகத்திற்கு வந்த விக்னேஷும், சந்தியாவும் கவிமதி அங்கில்லை எனத் தெரிந்தும் சந்தோஷிடம் ஒன்றும் கேட்கவில்லை. ஆனால், சந்தோஷ் தான் கவிமதி கர்ப்பமடைந்த விஷயத்தை அவர்களிடம் சொன்னான்.

அதைக் கேட்டவர்கள், 'கங்கிராட்ஸ்' என்று கூறி வேலையை கவனிக்கச் சென்றனர் அவ்வளவு தானா என்றிருந்தது சந்தோஷிற்கு.

சற்று நேரம் கழித்து, கவிமதி எடுத்து வைத்திருந்த பணத்தை சந்தியாவிடம் தந்து வங்கிக் கணக்கில் சேர்த்து விடுமாறு கூறி, அவளிடம் தனியாகப் பேச முயன்றான் சந்தோஷ்.

சந்தியாவோ அன்று முழுவதும் தனித்து வேலை செய்யாமல் விக்னேஷின் அறையிலேயே தவம் கிடந்தாள். சந்தோஷிற்குத் தான் என்ன செய்வது என பிடிபடவில்லை.

தன் அண்ணன் முன்னால் பேசினால் அவர் ஏதாவது சொல்லிவிடுவார் என நினைத்துத் தன் சந்தியாவிடம் தனித்துப் பேச நினைத்தான். இப்பொழுது அதற்கும் வழியில்லாமல் போய் விட்டதே.

பின்னர், ஏற்கனவே முடிவு செய்ததைப் போல முதலில் மனைவியைச் சமாதானப்படுத்தலாம். அதன் பின்னர் பணக் கணக்கைப் பார்க்கலாம் என எண்ணி சந்தியாவிடம் பேசுவதைக் கைவிட்டான்.

* * *

மாலையில் வினோத்தின் வீட்டிற்குச் சென்ற சந்தோஷ், நண்பனிடமும் மற்றவர்களிடமும் சகஜமாகப் பேச முயன்றாலும், கவிமதி இயல்பாக இல்லாமல் அவனுடன் பேசுவதையே தவிர்த்து வந்ததைக் கண்டு மனதுக்குள் சுக்கு நூறாக உடைந்தான்.

அவனுக்கு யாரோ பெயர் தெரியாதவர் எழுதி, அவன் எப்பொழுதோ படித்த பழமொழி தான் ஞாபகத்திற்கு வந்தது. 'ஸ்பைட்புல் வேர்ட்ஸ் கேன் ஹர்ட் யுவர் பீலிங்க்ஸ் பட் சைலன்ஸ் ப்ரேக்ஸ் யுவர் ஹார்ட்.'

கவிமதி ஏதாவது திட்டித் தீர்த்தாலும் அவனுடைய உணர்வுகளுக்குத் தான் வலிக்கும். ஆனால், இவளின் அமைதி அவன் இதயத்தை அல்லவா உடைக்கிறது. இதயம் உடைந்ததற்குப் பின் அதற்கு மேல் உணர்வுகள் எங்கேயிருந்து வரும்!?

வினோத், சந்தோஷை அன்றிரவு அங்கே இருக்குமாறு சொன்னவுடன் சம்மதித்தவனை, ''வீட்ல யாரும் இல்லாம பூட்டிட்டு வர்றது நல்லதில்ல அண்ணா'' எனக் கூறி, ''நீ இங்கே தங்குவதில் எனக்கு உடன்பாடில்லை' என்பதை மறைமுகமாக உணர்த்தி கணவனை விரட்டினாள் கவிமதி.



அவன் அங்கிருந்தால், இரவு ஒரே அறையில் தங்க நேரிடுமே! அப்போதிருந்த மனநிலைமையில் கவிமதிக்கு அதில் துளியும் விருப்பமில்லை. வினோத்தும், ''கவி சொல்லறது கரெக்ட். நீ போயிட்டு நாளைக்கு வாடா'' எனத் தன் தங்கையை வழிமொழிந்தான்.

கவிமதியை வெறித்துப் பார்த்த சந்தோஷ், வினோத்திடம், ''அப்போ நான் கிளம்பறேன்'' என கதவுவரை சென்றவன், கவிமதியிடம் திரும்பி, ''மதி, உன் போனை ஆஃப்ல வச்சிருக்கியா?'' எனக் கேட்டான்.

''பிரெக்னன்ட்டா இருக்கும்போது நிறைய யூஸ் பண்ணக் கூடாது. அப்படி பண்ணினா குழந்தைகள் 'ஸ்கூல்' போகிற வயசுல, அவங்க நடவடிக்கைகள் பாதிக்கப்படுத்துன்னு கண்டுபிடிச்சிருக்காங்க. அதான்...'' என விளக்கமளித்தாள்.

அவள் சொன்னது அனைத்தும் உண்மை என்பதால் அவனால் வேறு ஒன்றும் சொல்ல முடியாமல் போக, விடைபெற்றுக் கொண்டு கிளம்பினான்.

அன்றிரவே மதியழகனும் சாரதாவும் தங்கள் சுற்றுப் பயணத்தை நான்கு நாட்கள் முன்னதாக முடித்துக் கொண்டு சென்னை வந்தடைந்தவர்கள், மறுநாள் காலையிலேயே கவிமதியை அவள் பிறந்த வீட்டில் உற்சாகத்துடன் சந்தித்தனர்.

அவர்களின் திடீர் வரவைப் பார்த்து மகிழ்ச்சியடைந்த கவிமதி, முகமெல்லாம் பூரிப்புடன் அவர்களிடம் பேசிக் கொண்டிருந்ததை கண்களில் ஏக்கத்துடன் பார்த்திருந்தான் சந்தோஷ்.

அன்று முழுவதும் கவிமதியுடன் செலவழித்துவிட்டு மாலையில் தான் வீட்டிற்கு கிளம்பினர் சந்தோஷின் பெற்றோர்.

செல்லும் முன் சாரதா கவிமதியிடம், ''கவி, நம்ம வீட்டுக்கு எப்போ வர? அம்மாவோட இருக்க ஆசையாத் தான் இருக்கும். ஆனா, எப்படியும் இங்கே தானே வரப் போற? அதுவரைக்கும் எங்ககூட இருந்தா நாங்க ரொம்ப சந்தோசப்படுவோம்'' என கவிமதியை நெகிழ வைத்தார்.

''உங்க அசதி தீர நல்லா 'ரெஸ்ட்' எடுங்க அத்தை. புதன்கிழமை காலையில வரேன்'' என பதிலளித்து சந்தோஷை டிக்கெட் இல்லாமலேயே சுவிட்சர்லாந்து அனுப்பி வைத்தாள்.

மதியழகன் ஞாபகம் வந்தவராக, ''கவி, வினோத் கிட்டே நான் கொடுக்கச் சொன்ன பணத்தைக் கொடுத் திட்டியாம்மா?'' எனக் கேட்டு சந்தோஷைக் குறுகுறுப் பில் குன்ற வைத்து, சஹாரா பாலைவனத்தில் ஒட்டகத் தில் ஏற்றிச் சுற்ற வைத்தார்.

சந்தோஷ் மறுநொடியே தன்னவளின் கண்களைப் பார்த்து மௌனமாக மன்னிப்புக் கோர, ஒரு நொடி அவள் மீது பார்வையை வைத்திருந்த கவிமதி, பின் அகற்றி, ''அப்பவே கொடுத்துட்டேன் மாமா'' எனக் கேள்வி கேட்டவரிடம் பதிலளித்தாள்.

அதே சமயம் வினோத்தும், ''அங்கிள், நான் தான் வேண் டாம்ன்னு சொன்னேன். எங்க கவிகுட்டிக்கு நாங்க செய்ய லாமா?'' என ஆரம்பித்தான்.

''வினோத், உன் அப்பாகிட்டே வாதாட முடியாம தானே உன்கிட்டே வந்தேன். நீயும் அப்பா மாதிரியே பிடிவாதம் பிடிச்சா நான் எப்படி ஜெயிக்கிறது?'' எனச்



சிரிப்புடன் கூறியவர், ''நானே நேர்ல வந்து உன்கிட்டே கொடுத்திருக்கணும். டூர் போற ஜோர்ல கவிகிட்டே கொடுத்துட்டு கிளம்ப வேண்டியதாப் போச்சு. மன்னிச் சிடுப்பா!'' என்றார்.

''நீங்க பணம் கொடுத்ததே தப்புன்னு சொல்லிட்டு இருக்கேன். நீங்க என்னடான்னா மன்னிப்பெல்லாம் கேட்டுட்டு இருக்கீங்க?'' எனப் பதறினான் வினோத்.

''வினோத், உங்க சந்தோசத்துக்காகத் தான் கல்யாணச் செலவை பாதிக்குப் பாதி பகிர்ந்துக்க ஒத்துக்கிட்டேன். இல்லாட்டி நானே முழுசையும் செஞ்சிருப்பேன். இனி மேல் அதைப் பத்திப் பேசக்கூடாது சொல்லிட்டேன்'' என அந்தப் பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைத்தவர், சந் தோஷின் குற்ற மனப்பான்மையை பெருக்கி வைத்தார்.

''நாங்க தொழில் தொடங்கறதுக்கு நீங்க கொடுத்த உற்சாகமும் ஊக்கமுமே ரொம்பவும் அதிகம். நீங்க சொல்லி விட்டதா ரெண்டு மூணு பேரு வந்தாங்க. ரொம்ப தேங்க்ஸ் அங்கிள்!'' என வினோத் அவரிடம் நெகிழ்ச்சியாகக் கூற, சந்தோஷ் ஒட்டகத்திலிருந்து தலைகுப்புறக் கீழே விழுந்தான்.

''சின்னச் சின்ன ப்ராஜெக்ட்ஸ் தானே செஞ்சிட்டு வந்தீங்க. கொஞ்சம் பெரிசா பண்ணினா நல்லா இருக் கும்ன்னு நினைச்சேன். அதுவும் இல்லாம, அவங்க நம்ம கம்பெனில ஏற்கனவே நிறைய ப்ராஜெக்ட்ஸ் பெண் டிங்ல இருக்குதே'' என பதிலளித்தார் மதியழகன்.

உடனே கவிமதியைப் பார்த்து, கண்களாலேயே மன்னிப்புக் கோர முயன்றான் சந்தோஷ். ஆனால், அவளோ இவனை ஓரக் கண்ணால் கூட பார்க்க வில்லை.

தன் தந்தை தொழிலை கவனிக்கவில்லை என நினைத்துக் கொண்டிருந்த சந்தோஷிற்கோ அவரின் பதில் திகைப்பைத் தந்தது. அவர் இன்னுமே முழுவதுமாகத் தொழிலில் இருந்து விலகவில்லை என்பதை உணர்த்தியது.

'அப்பாவுக்கு பணம் காணாமல் போனதும் தெரியுமோ?' என ஒரு நொடி தடுமாறிய சந்தோஷ், 'தெரிந்திருந்தால் கேட்டிருப்பாரே' என உணர்ந்து நிம்மதியடைந்தான். மனத்திற்குள் இவன் உழன்று கொண்டிருக்கும் பொழுதே அவன் அன்னையும் தந்தையும் விடைபெற சந்தோஷும் கிளம்பினான்.

மறுநாள்! ''அண்ணா, ரொம்ப நாளா கேட்கணும்ன்னு நினைச்சேன். எங்க கல்யாணத்தப்போ, 'இதுவும் காதல் கல்யாணம்தான்'ன்னு ஏன் சொன்னீங்க?'' என வினோத்திடம் கேட்டாள் கவிமதி.

''ஓஹ் அதுவா... கல்யாணத்துக்கு முன்னாடி மூணு மாசமாப் பேசி, ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுகிட்டு காதலிக்க ஆரம்பிச்சிருப்பீங்களே. கரெக்ட்தானே?'' எனச் சொல்லிச் சிரித்தான். தலையை மேலும் கீழும் ஆட்டியவாறே அவனுடன் சேர்ந்து தங்கையும் சிரித்தாள்... வெளியில் மட்டும்!

## 14



புதனன்று தங்கள் வீட்டிற்குச் சென்ற கவிமதி, இனி சந்தோஷுடன் அதிக நேரம் செலவழிக்க வேண்டுமே



என நினைத்துக் கலங்கினாள். அத்தோடு முடியாதே! சந்தோஷ் அவனின் வாதத் திறமையை இவள் விவாதம் செய்ய முடியாத அளவிற்குக் காட்டுவானே.

சற்று நேரம் யோசித்த கவிமதி, ஒரு முடிவுடன் சாரதாவிடம் சென்று, கீழே இருக்கும் படுக்கை அறைக்கு மாற்றிக் கொள்வதாகச் சொல்லி அன்றே வேலைக்காரர்களின் உதவியுடன் தன் பொருட்களை கீழே மாற்றிக் கொண்டாள்.

சந்தோஷின் பெற்றோர்கள் அறைக்கு அருகில் தங்கிக் கொண்டால், சந்தோஷ் அவளிடம் வந்து தன் பேச்சுத் திறமையைக் காட்ட மாட்டான் என்ற நம்பிக்கை அவளுக்கு.

அத்தோடு நில்லாமல் மதியழகனிடம் சென்று குழந்தைப் பிறக்கும் வரை வேலைக்குச் செல்லப் போவதில்லை எனக் கூறி அவர் சம்மதத்தைப் பெற்றுக் கொண்டாள். இல்லையேல், சந்தோஷ் அவளைக் கட்டாயப்படுத்தி அலுவலகத்திற்கு வரவழைத்து விடுவானே.

அதுவரை நடந்தது எல்லாம் கவிமதி நினைத்தபடி தான் நடந்தது. ஆனால் அதன் பின்னர் நடந்ததைத் தான் அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை.

கவிமதி அறையை மாற்றியதை அறியாத சந்தோஷ், வெகு நாட்களுக்குப் பிறகு கவிமதியுடன் தனியாகக் கழிக்கலாம் என்ற எண்ணத்தில் மாலையில் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினான்.

உணவு அருந்தும் பொழுது அனைவரும் பேசிக் கொண்டிருக்க, மற்றவர்கள் கேட்ட கேள்விகளுக்கு மட்டும் பதில் அளித்துவிட்டு அமைதியைக் கடைப்பிடித்தாள் கவிமதி. அவளுக்கு ஒன்று மட்டும் புரிந்தது...

சந்தியா தான் ஏதோ செய்து தன் மேல் பழியைச் சுமத்தி சந்தோஷை நம்ப வைத்துவிட்டாள் என்று. ஆனால் ஏன் என்பதற்கு விடையில்லை!

அதேபோல், இதில் விக்னேஷும் சம்மந்தப்பட்டிருப் பானோ என்ற வினாவும் அவள் மனதில் எழுந்தது. அத னால் பேசாமல் இருப்பதே உத்தமம் எனத் தன் வாய்க்கு அகன்ற பூட்டைப் போட்டுப் பூட்டிக் கொண்டாள்.

இரவு அறைக்குத் தானே வரவேண்டும் என நினைத்த வாறே சாப்பிட்டு முடித்து அறைக்குச் சென்ற சந்தோஷ், ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு வாசிக்க முயன்றான். அவனால் முயற்சி மட்டுமே செய்ய முடிந் தது. ஏனெனில் அவன் முயற்சிகளை அவனின் எண்ணங் களே தவிடுபொடி ஆக்கியது.

கவிமதி வந்தால் என்ன பேசவேண்டும் என்று சதா எண்ணிக் கொண்டே எண்ணங்களால் ஆன கோட் டையைக் கட்டிக் கொண்டிருந்ததினால், கவிமதி அவள் பொருட்களை வேறு அறைக்கு மாற்றியதைக் கூட நோட்டம் விடாமல் கோட்டை விட்டான்.

இரவு வெகு நேரமாகியும் கவிமதி தங்கள் அறைக்கு வராமல் போகவே கீழிறங்கிச் சென்றான் சந்தோஷ். கீழே வந்தவனைப் பார்த்த அவன் அன்னை, ''என்னப்பா, இன்னும் தூங்கலையா?'' என வினவினார்.

''ஆமாம்மா! தூக்கம் வரலை. கவி எங்கம்மா? ஆபீஸ் விஷயம் பத்தி ஒண்ணு கேட்கணும்'' என வாய்க்கு வந்த காரணத்தைச் சொல்லி அவரிடம் வசமாக மாட்டியும் கொண்டான்.

''அவளே ஆபீஸுக்கு வந்தா 'ஸ்ட்ரெஸ் அவுட்' ஆயிடறான்னு தான் இனி வேலைக்குப் போகலைன்னு



அப்பாகிட்டே சொல்லிட்டு இருந்தா. இன்னைக்கு பகல்ல கூட ஏதோ முடிக்க வேண்டிய வேலையைப் பார்த்திட்டு இருந்தா. வீட்லேயே அவளை நீ சும்மா இருக்க விட லைன்னா ஆபீஸ்ல எவ்வளவு வேலை வாங்குவ?'' என மகனைக் குற்றம் சாட்டினார் அன்னை.

அதைக் கேட்டு அதிர்ந்தவனுக்குத் தெரியாதா அவளின் இந்த முடிவுக்கு உண்மையான காரணம் என்னவென்று? அத்தோடு அவள் இன்று முழுவதும் எதை ஆராய்ந்து கொண்டிருந்திருப்பாள் என அடிபட்ட உள்ளத்திற்குப் புரியவும் செய்யாதா?!

தன் எண்ணங்களில் மூழ்கி ஒன்றும் பேசாமல் இருந்த மகனைப் பார்த்த அன்னை, ''இனிமேலாவது அவளைத் தொந்தரவு பண்ணாம இருப்பா. இந்த சமயத்துல அவளோட சந்தோஷம் தான் முக்கியம். சொல்லிட்டேன். நான் படுக்கப் போறேன்'' என்றவர், படுக்கையறையை நோக்கி நகர்ந்தார்.

அவரை இடைமறித்து, ''அம்மா, அதெல்லாம் நான் பார்த்துக்குவேன். இப்போ கவி எங்கே?'' என வினவி யவனை குழப்பத்துடன் பார்த்து,

''உன்கிட்டே கவி சொல்லலையா? அவள் இனிமேல் கீழேயே படுத்துக்கறேன்னு சொன்னாளே'' என கவிமதி யின் முடிவை பற்றிக் கூறி அவனை மேலும் அதிர்ச்சி யடைய வைத்தார்.

அதிர்ச்சியை முகத்தில் காண்பிக்காமல் இருக்க மிக வும் சிரமப்பட்டவன், ''ஓஹ்... ஆமாம்மா! காலையி லேயே மதி சொன்னா. நான் தான் வேலை டென்ஷன்ல மறந்துட்டேன்'' என ஒருவாறாகச் சமாளித்தான்.

அவனின் சமாளிப்பை நம்பியவர், "என்ன புள்ளையோ? நீயும் வேலைன்னு அலையாம கவியை நல்லா கவனிச்சுக்கோ. அவளுக்கு இப்போ அதான் தேவை. நீ கீழே இறங்கி வர்றதுக்கு முன்னாடி தான் படுக்கப் போனா" என அவனுக்கு வேண்டிய தகவலைத் தந்துவிட்டுப் படுக்கச் சென்றார்.

கவிமதி இருந்த அறைக்குள் நுழைந்த சந்தோஷ், விளக்கு அணைக்கப்பட்டிருப்பதைப் பார்த்து கவலை இழையோட கவிமதியின் அருகில் சென்று, "மதி!" எனக் கிசுகிசுத்தான். பதிலில்லாமல் போகவே, "நீ தூங்கலைன்னு தெரியும். ப்ளீஸ்டா... ஏதாவது பேசேன்" என்றான் ஏக்கத்துடன், அதே கிசுகிசுப்பான குரலில்.

அதற்கும் பதிலில்லாமல் போகவே, விளக்குக்கு உயிர் தந்தவன், "மதி, நான் எத்தனை தடவை வேணாலும் மன்னிப்புக் கேட்கிறேன். அது பத்தலைன்னா நான் என்ன செய்யணும்ன்னு நீயே சொல்லு அதை அப்படியே செய்யறேன்" என்றான்.

பின்னர், படுத்திருந்தவளை நெருங்கி அவள் பாதங்களில் கிறிஸ்டல் கால் கொலுசை அணிவித்து, பாதங்களை அழுந்த முத்தமிட்டான்.

அவன் கொலுசை மாட்டிவிடும் வரை தன்னைக் கட்டுப்படுத்திய கவிமதி, அவனின் தொடுகை தந்த சிலிர்ப்பையும், அவள் வார்த்தைகளின் தகிப்பையும் தாங்க மாட்டாதவளாக, அதுவரை தூங்கி விட்டதாக நடித்துக் கொண்டிருந்தவள் எழுந்து அமர்ந்தாள்.

அவள் செய்கையைப் பார்த்து மென்மையாகப் புன்னகையை முகத்தில் தவழவிட்டவன், அவள் அருகில் உட்கார்ந்துகொண்டு, "நாம ரெண்டு பேரும் சந்தோசமா இருக்க வேண்டிய நேரம் இது.



அதனால ஒரு வாரத்துக்கு முன்னாடி நடந்ததை நம்ம வாழ்க்கையில் இருந்து அழிச்சிடலாம். ப்ளீஸ்..." என்றவன் பேசிக் கொண்டே போக, கவிமதியோ கணவன் மாட்டிய கொலுசை கழட்டுவதில் முனைந்திருந்தாள்.

அதைப் பார்த்தவன், அவள் கைகளைப் பற்றிக் கொண்டு, "நீ நடக்கறப்போ சிணுங்கும் கொலுசு ஒலி நம்ம குழந்தைக்குக் கேட்டா நல்லதுன்னு யாரோ சொன்னாங்க. எனக்காக இல்லாட்டியும் நம்ம குழந்தைக்காக மதி ப்ளீஸ்!" என்றான்.

அதற்கு மேல் முரண்டு பிடிக்காமல் கழட்டுவதை கைவிட்டவள், "ஆபீஸ் விஷயம் என்னாச்சு?" எனக் கேட்டாள்.

"நான் என்ன சொல்லிட்டு இருக்கிறேன், நீ என்ன கேட்டுட்டு இருக்க? இங்க பாரு..." என அவள் முகத்தை நிமிர்த்தி, கண்களைப் பார்த்து, "மதி, ஆபீஸ்ல என்ன நடந்ததுன்னு நானே வந்து சொல்லறேனே. ப்ளீஸ்! பொறுமையா இருப்பியா?" என்றான்.

மனதிற்குள் மட்டும், 'நீ என்னோட நல்லாப் பேசற வரைக்கும் நான் ஆராயப் போறதில்ல' என்று முடிவு செய்ததை மறுபடியும் நினைவு கூர்ந்தான். கவிமதியோ, 'நீ என்கிட்டே பொறுமையா நடந்துகிட்டியா' என்ற பொருள் பதிந்த பார்வையை பதிலாகத் தந்தாள்.

அவள் பார்வையில் அனுப்பிய செய்தியை விழிகளால் படித்தவன், "நானும் அப்படி பொறுமையா இருந்திருக்கணும். 'அவசரத்துல பண்ணிட்டு அவகாசத்துல அழு'ன்னு இருக்கு என் நிலைமை.

என்னைச் சுத்தி என்ன நடக்குதுன்னே எனக்கே தெளிவாப் புரியமாட்டேங்குது. நீயாவது என்னைப் புரிஞ்

சுக்கோ ப்ளீஸ். உன் மேல இருக்கும் கண் மூடித்தனமான அன்பினால் தான், நீ என்னைவிட வினோத் கூட க்ளோஸா இருப்பதாக எனக்குப் பொறாமை வந்துடுச்சு.

அந்த இடத்துல அவன் என் பிரெண்ட்ங்கிறது மறந்து போச்சு, நீயும் என் 'லவ்'ன்னு மறந்து போச்சு. எனக்குள்ள நடந்த உரிமைப் போராட்டத்துல தடம் புரண்டுட்டேன். அதுக்கும் நான் உன் மேலே வச்சிருக்கும் காதலுக்கும், நம்பிக்கைக்கும் சத்தியமா கொஞ்சம் கூட சம்மந்தமில்லை.

கோபத்துல டெம்பரை லூஸ் பண்ணி கத்துவாங்களே அது மாதிரி தான் நடந்துகிட்டேன். இனிமேல் அப்படி அவசரப்பட்டுப் பேசறதை கண்டிப்பா நிறுத்திக்கிறேன் மதி!'' எனக் கமறிய குரலில் தன்னிலை விளக்கம் தர முயன்றான் கணவன்.

அவன் குரலில் இருந்த கமறல் அவளை என்ன செய்ததோ, அவன் கேட்ட அனைத்திற்கும் பதிலாக தலையை மட்டும் மேலும் கீழும் ஆட்டினாள் மனைவி.

''இந்த ஒரு வாரமா... ஒரு வாரமா அது? ஒரு யுகம் போல இருந்தது. நான் தவிச்ச தவிப்பை என்னால வார்த்தைகள்ல சொல்ல முடியாது. என்கூட சண்டையாவது போடு. இப்படிப் பேசாம மட்டும் இருக்காத.

எதுவா இருந்தாலும் பேசித் தீர்த்துக்கணும், சண்டை போ்டறதுல எனக்கு உடன்பாடில்லைன்னு சொல்லுவ தானே மதி? இப்போ நீ மட்டும் இப்படிப் பேசாம என் மேல கோபமா இருக்கலாமா? நான் உன்னைத் திட்டினதுக்கு பதிலா நீயும் என்னைத் திட்டு'' என முன்னுக்குப் பின் முரணாக வாதாடிக் கொண்டிருந்தான்.

அவனின் சிறு பிள்ளைத் தனமான பேச்சுக்கு என்ன சொல்வது என கவிமதி யோசித்துக் கொண்டிருக்க,



கணவனோ, ''நான் இனி எக்காரணம் கொண்டும் உன்னை வார்த்தைகள்ல வதைக்க மாட்டேன். இது தான் முதலும் கடைசியும். இந்த ஒரு தடவை மட்டும் என்னை மன்னிச்சுடுடா'' என்றான் கண்கள் கலங்க.

தன் கணவன் மீண்டும் வக்கீலாக உருமாறி வாதாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தவள் இளக ஆரம்பித்திருந்தாள். ஆனால், மூளையோ அதற்குப் போட்டியாக, இளகிய மனதை மீண்டும் உறைய வைத்துக் கொண்டிருந்தது.

ஆனால், அவன் வக்கீலாக மட்டுமல்லாமல் ஒரு காதலனாகவும் மாறி கண்ணீர்த் துளிகளை வேறு சாட்சியாகக் கொண்டுவர, மனைவி உருக ஆரம்பித்தாள்.

அவன் தவிப்பை உணர்ந்தவள், ''சரி! உங்களோட நான் பேசறேன். ஆனா, நான் சொல்லற சில விஷயங்களுக்கு நீங்க சம்மதிச்சா தான் நானும் சம்மதிப்பேன். முதல்ல, என்னை வேலைக்கு வரச் சொல்லிக் கட்டாயப் படுத்தக் கூடாது.

இரண்டாவது, நீங்க சொன்ன மாதிரி ஆபீஸ்ல எல்லாத்தையும் சரி செய்யற வரைக்கும் இதைப் பத்திப் பேச வேண்டாம். இப்போ பேசினா குழப்பம் தான் மிஞ்சும். மூணாவதா, இப்போ எனக்கு தூக்கம் வருது. நீங்க கிளம்பினா நான் தூங்குவேன். 'குட் நைட்''' எனச் சொல்லி முடித்த கவிமதி இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்தாள்.

என்னதான் உருகினாலும் அதை கணவனிடம் காண்பிக்க மனம் வரவில்லை. அதனால் தான் கறாராகச் சொல்வதைப் போல சொல்லி முடித்தாள் கவிமதி.

''மதி, நீ சொல்லறதுக்கு எல்லாம் ஒத்துக்கறேன். ஆனா, நான் இந்த ரூமை விட்டுப் போகமாட்டேன்.

நானும் இங்க தான் படுத்துப்பேன்'' என சந்தோஷும் அவளருகில் படுத்து, ஒரு கையால் விளக்கை அணைத்தவன், மறு கையால் கவிமதியை அணைக்க முயன்றான்.

அவன் செய்கையில் துணுக்குற்று, ''இடத்தைக் கொடுத்தா, மடத்தைப் பிடிக்கறதுங்கிறது இது தான்'' என முணுமுணுத்த கவிமதி, மெதுவாக நடந்து சென்று 'பே விண்டோ' மேல் போட்டிருந்த குஷனில் காலை குறுக்கிப் படுத்துக் கொண்டாள்.

மீண்டும் விளக்கிற்கு உயிர் தந்தவன், தன் உயிரானவளிடம் சென்று, ''நாம இப்படி எலியும் பூனையுமா இருந்தா அம்மா - அப்பாவுக்கு சந்தேகம் வந்துடும். இங்கே பண்ணற மாதிரி தானே எல்லோர் முன்னாடியும் பண்ணுவ. அப்படி எல்லோருக்கும் தெரியணும்ன்னா இப்படியே இரு'' என்றான், முகத்தை சோகமாக வைத்துக் கொண்டு.

அவன் சொல்வதில் இருந்த நியாயத்தை கவிமதி ஒத்துக் கொள்ளத் தான் வேண்டி இருந்தது. ஏற்கனவே, சந்தோஷின் அன்னை அவளின் சோர்வைப் பார்த்து, 'நீ ரொம்ப பயப்படற கவி! ஒண்ணும் பயப்படாதே. இந்த மாதிரி சமயத்துல, உடம்புல வர்ற மாற்றங்கள் எல்லாமே நார்மல் தான்' என இன்று காலையில் தான் அவளிடம் தெரிவித்திருந்தார்.

'தொடர்ந்து இப்படியே இருந்தால், அப்புறம் சந்தோஷின் பெற்றோர்கள் ஏதோ சரியில்லை என்று கண்டுபிடித்து விட்டால்? அத்தோடு ப்ரியங்காவிற்கு கொடுத்த வாக்கை நிறைவேற்ற, டேனியல் பற்றி கணவனிடம் எப்படியும் பேச வேண்டுமே' என யோசித்து ஒரு முடிவுக்கு வந்தவள்,



''சரிங்க சந்தோஷ்! ஆனா, நீங்க எல்லோர் முன்னாடியும் என்னை அதிகமா சீண்டக் கூடாது'' என்ற கண்டிப்புடன் படுக்கையை நோக்கி நடந்தாள் கவிமதி.

அவள் சொன்னதைக் கேட்டு ஒன்றும் சொல்லாமல் அவளையே ஊடுருவிப் பார்க்க, ''குட்நைட் சந்து! லைட்டை ஆஃப் பண்ணிடறீங்களா...'' என அவன் எதிர் பார்த்ததைப் போலவே அவனை அழைத்து, அவனை இன்ப வெள்ளத்தில் தள்ளியவள், படுக்கையில் விழுந்தாள்.

உடனே அவள் சொன்னதைச் செய்துவிட்டு அவளருகில் வந்தவன் தன் கட்டுப்பாட்டை இழந்து அவளை மெதுவாகத் தன் பக்கம் திருப்பி அணைத்தான்.

ஏற்கனவே உருகி இருந்தவள், இரவு விளக்கின் ஒளியில், இரவின் அமைதியில், அவன் அணைப்பில் அவன் ஒரு யுகமாக பட்ட வலி தெரிந்ததோ, இல்லை, வேறு ஏதாவது செய்தியைப் படித்தாளோ, அவனின் அணைப்புக்கு தடுப்புப் போடாமல் வளைந்து கொடுத்தவள், பின் அவனின் அன்பின் வெள்ளத்தில் மூழ்கினாள்.

அவ்வாறு மூழ்கியவளை வெளிவரச் செய்யாமல் அவனுடனே பயணிக்குமாறு, அவள் நெற்றியில் மனுப் போட்டு, கண்களில் நியாயத்தைக் காட்டி, கன்னங்களில் சாட்சியைத் தொடுத்து, இதழ்களில் நிஜத்தைப் புரிய வைத்து, அவ்ளை சிறையில் அடைக்க முயன்று கொண்டிருந்தான் கணவன். அவளும் அடைபட்டுப் போனாள்.

* * *

கடந்த புதனன்று இரவு நடந்த பேச்சுவார்த்தைக்குப் பிறகு கவிமதி முன்போல் கணவனிடம் கொஞ்சிக்

குலாவவில்லை என்றாலும் எவ்விதப் பின்னடைவும் இல்லாமல் பழகினாள். ஆனால், சந்தியாவும் விக்னேஷும் அருகில் இருந்தால் கவிமதி தன் கூட்டுக்குள் ஒடுங்கிக் கொண்டாள். அதை சந்தோஷும் உணர்ந்து கொண்டான். ஆனால், செய்வதறியாது குழம்பினான்!

மேலும் ஒரு வாரம் சென்றிருக்க, சந்தோஷிடம் ப்ரியங்கா - டேனியலின் காதலைப் பற்றி கூறிவிட எண்ணி கணவனிடம் பேச்சை ஆரம்பித்தாள் கவிமதி.

''சந்தோஷ், உங்ககிட்டே நான் டேனியலைப் பத்தி ஒன்னு சொல்லணும்.''

''மதி, உனக்கு எத்தனை தடவை சொல்லறது? சொன்னது கொஞ்சம் கூட ஞாபகமே இருக்காதா?'' என வேறு ஏதோ பேசினான் கணவன்.

அதைக்கேட்டு, தலையும் புரியாமல் வாலும் புரியாமல் திருதிருவென விழித்தவளை, ஒரு கையால் மென்மையாக இழுத்து, இரு கைகளாலும் அணைத்துக் கொண்டு, ''மதி, உனக்கு அடிக்கடி என்னோட பேரு மறந்திடுமா என்ன? எங்க இப்போ கரெக்டா சொல்லு பார்ப்போம்?'' என அவள் காது மடலில் முத்தம் வைத்தான்.

அவனை எப்பொழுதுமே 'சந்து' என்றழைக்க வேண்டுமென ஆசைப்படுகிறான் என்றும், 'சந்தோஷ்' என்றழைத்தால் அவள் இன்னுமே கோபத்தில் இருக்கிறாள் என நினைத்து தன்னையே வருத்திக் கொள்கிறான் என்றும் உணர்ந்தவள், மனதிற்குள் நெகிழ்ந்தாள்.

''ச... சந்து, உங்ககிட்டே டேனியைப் பத்திச் சொல்லணும்'' என மீண்டும் சொன்னவுடன் தான், ''இப்போ சொல்லு'' என அவளைப் பேச விட்டான் கணவன்.



''வந்து... டேனியோட அப்பா - அம்மா அவனோட காதலுக்கு முழு மனசா ஒத்துக்கிட்டாங்க. அப்புறம் பொண்ணு யாருன்னு எனக்குப் போன வாரம் தான் தெரியும்'' எனக் கூறியவளுக்கு, அன்றிரவு சந்தோஷ் திட்டியது நினைவுக்கு வர, கண் கலங்கினாள்.

அவளின் கலங்கின கண்களையும் பேச்சு தடைபட்டதையும் பார்த்து அவளை மேலும் இறுக்கிக் கொண்டான் கட்டிக் கொண்டவன். சற்று நேரத்தில் அவளே சரியாகி அவனிடம் இருந்து விலகி, ''வந்து... நீங்க தான் அவனோட காதல் கைகூட உதவணும்'' என நிறுத்தினாள்.

''நான் உதவணுமா? சொல்லு உனக்காக என்ன... என்ன வேணா செய்யறேன்'' என விஷயமறியாமல் மனைவியை சந்தோஷப்படுத்துவதற்காக வாக்கு கொடுக்க,

''அவசரப்படாதீங்க வந்து... பொண்ணு யாருன்னா... நம்ம ப்ரியா... தான் டேனி காதலிக்கற பொண்ணு'' என ஒரு வழியாக திக்கித் திணறி சொல்ல வந்ததைச் சொன்னாள்.

''வாட்?'' என நம்பாமல் அவளை மீண்டும் கேட்க, அதற்கு மேல் தந்தி முறையில் விஷயத்தை சொல்லாமல் விரிவாக நடந்தது அனைத்தையும் கடகடவென்று கணவனிடம் சொல்லி முடித்தாள் கவிமதி.

அவள் சொல்வதை இடையிடாமல் கேட்டுக் கொண்டிருந்த சந்தோஷ், வலது கையால் தன் கேசத்தை அழுந்தக் கோதிக் கொண்டு, ''ப்ரியாவுக்கு இதுல சம்மதமா? என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லி இருக்கலாம். நான் யோசிச்சிட்டுப் போய் அப்பாகிட்டே பேசறேன். அவர் என்ன சொல்லுவார்ன்னு பயமா இருக்கு'' என்றான்.

"தேங்க்ஸ்! எனக்கும் முதல்ல பயமா தான் இருந்தது. ஆனா, ப்ரியா என்கிட்டே ஆசையாவும், நம்பிக்கையாவும் கேட்டப்போ மறுக்க முடியலை. அதான்..." என மனைவி இழுக்க, "சரி நான் பார்த்துக்கறேன்" என தைரியமளித்தான் சந்தோஷ்.

"அப்புறம் இன்னொரு விஷயம். அண்ணனுக்கு, என் பிரெண்ட் அவந்திகாவைப் பிடிச்சிருக்காம்" என கல்யாணம் நின்றதிலிருந்து அனைத்தையும் கூறி முடித்தாள்.

"இதைத்தான் அப்போ சொல்ல வந்தியா? அதைக் கூட கேட்காம..." எனக் கலங்கினான் சந்தோஷ். அவன் வேதனைப்படுவதைப் பார்த்த கவிமதி மௌனமாக அவன் கரங்களைப் பற்றி ஆறுதலளிக்க, அவனும் சற்று நேரத்திலேயே இயல்பானான்.

திடீரென்று தன் மனைவியிடம், "மதி, நீ எப்போ லிருந்து காதல்களை ஒன்னு சேர்க்க ஆரம்பிச்ச? என் கிட்டே சொல்லவேயில்லை. சொல்லியிருந்தா நானும் என் காதலுக்காக உன்கிட்டே வந்திருப்பேனே?" எனக் கிண்டலடித்தான்.

அவனின் கிண்டலுக்கு பதில் சொல்லாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தவளிடம்,

"என்னடா அப்படிப் பார்க்கிற?" என்றான்.

"உங்க காதலை உணர்ந்ததுக்கப்புறம் தான், காதலிக்கறவங்களோட உணர்வுகளை, அவங்களோட வலிகளைப் புரிஞ்சுக்க முடிஞ்சது. அதான் காதலிக்கிறவங்களை சேர்த்து வைக்க முடிஞ்சதைச் செய்யறேன்.

நம்ம கல்யாணம் முடிவானதுக்கு அப்புறம் அண்ணன் உங்களைப் பத்தி நிறையச் சொல்லி இருக்கிறார்.



உங்களோட நல்ல குணங்களை, மத்தவங்களுக்காக நீங்க செஞ்ச உதவிகளை, உங்கள் இளகின மனதை... இப்படிப் பல...

நான் உங்களைப் பார்த்துக் காதலிச்சதை விட, பார்க்காத உங்களோட குணத்துக்காகத் தான் விரும்ப ஆரம்பிச்சேன். அத்தோட நம்ம கல்யாணத்துக்கு அப்புறம் நீங்க என்கிட்டே நடந்துக்கிட்டதை வச்சு அந்தக் காதலை வளர்த்தேன்.

உங்களுக்கு ஏன் என் காதல் மேலே சந்தேகம் வந்துச்சுன்னு தெரியலை. ஒருவேளை உங்களை மாதிரி எனக்கு அதை செயல்ல காட்டத் தெரியாததுனால தான் இந்தப் பிரச்சனை வந்துச்சோ என்னவோ? ஆனா, உங்க மேலே நான் கொண்ட காதல் நிஜம்.

இத்தனை நாள்ல இதைப் பத்திச் சொல்ல எனக்கு சந்தர்ப்பம் வாய்க்கலையா, இல்ல, நான் சொன்ன மாதிரி என் காதலை உணர்த்தணும் என எனக்குத் தோணலையான்னு தெரியலை" என கண்கள் கலங்கச் சொன்னாள் கவிமதி.

மனைவி ஒன்றும் பேசாமல் இருக்கும் பொழுதே மெழுகாய் உருகுபவன், அவள் இவ்வளவு நீளமாகப் பேசி தன் காதலை உணர்த்த, சந்தோஷ் முழுவதுமாய்க் கரைந்தான்.

அவள் பதிலில் சிலையாகிப் போனவன், மீண்டும் உயிர்பெற்று அவள் கண்களில் முத்தமிட்டு,

"மதி, நான் பண்ணின மடத்தனத்துக்கு எங்க என்னை வெறுத்து, என் காதலை சந்தேகப்பட்டுட்டியோன்னு பயந்துட்டேன். நீ என்னைப் புரிஞ்சுகிட்டதுக்கு தேங்க்ஸ்... எனக்கு இது போதும்... அத்தோட உன் காதல் மேலே எனக்குத் துளியும் சந்தேகம் இல்லடா..." என்றான்.

கணவனின் வலியைத் தாங்க மாட்டாதவளாக, ''நீங்க அன்னைக்கு இருந்த டென்ஷன்ல அப்படி செஞ்சிட் டீங்க. பதிலுக்கு நானும் லெட்டர்ல எல்லாத்தையும் எழுதிட்டேன். நீங்களே என்ன நடக்குதுன்னு தெரியாம இருக்கும்போது நானும் உங்களை ஏன் சங்கடப்படுத் தணும்? விட்டுடுங்க...'' எனச் சமாதானப்படுத்தினாள் மனைவி.

''மதி, ரொம்ப தேங்க்ஸ்டா!'' என மனைவியிடம் சொன் னவன், 'இனி சீக்கிரமா ஆபீஸ்ல என்ன நடந்ததுன்னு கண்டுபிடிக்கிறேன்' என மனதிற்குள் சொல்லிக் கொண் டான்.

## 15



சனிக்கிழமை காலை! மதியழகன் மெரினா கடற்கரை யில் நடைபயிற்சிக்குச் செல்ல ஆயத்தமாக, தங்கையின் காதலைப் பற்றி அவரிடம் பேசுவதற்கு அது தான் தக்க சமயம் என எண்ணிய சந்தோஷ், என்ன பேசுவது, எப் படிப் பேசுவது என ஒத்திகைப் பார்த்துவிட்டு அவருடன் சென்றான்.

செல்லும் வழியில், அவன் தந்தை தொழிலைப் பற்றி பேசிக் கொண்டு வர, சந்தோஷும் இயல்பாக கேட்பது போல அவனுக்கு இருந்த சில சந்தேகங்களைக் கேட்டு நிவர்த்தி செய்து கொண்டான்.



''அப்பா, நீங்க இப்போ ஆபீஸுக்கு வர்றதே இல்லையே. அப்புறம் எப்படி அங்க என்ன நடக்குதுன்னு கரெக்ட்டா சொல்லறீங்க?''

''நான் அங்க வரலைன்னா, விவரம் என்னைத் தேடி வீட்டுக்கு வராதா மகனே?'' எனக் கிண்டலாகக் கேட்டு, அவரே தொடர்ந்தார்.

''நம்ம கவி வேலை முடிஞ்சு சீக்கிரமா வீட்டுக்கு வந்துட்டா, எனக்கு வேறே என்ன வேலை? அவள் செஞ்சு கொடுக்கறதை வயித்துக்குள்ளே தள்ளிட்டு, அவள் பேசறதை மூளைக்குள்ளே தள்ளறது தானே. கலகலன்னு எந்நேரமும் பேசிட்டே தான் இருப்பா.

நான் தொழில்ல இருந்து விலகினதும் நீங்க என்னைக் கண்டுக்கலை. ஆனா, கவி, 'மாமா, என்ன தான் நீங்க ஒதுங்கிட்டாலும் என்ன நடக்குதுன்னு உங்களுக்குத் தெரிஞ்சிருக்கறது நல்லது. நம்ம கஸ்டமர்ஸுக்கும், உங்க மேற்பார்வையில தான் எல்லாம் நடக்குதுங்கற திருப்தி இருக்கும். பில்டிங் கட்டிக் கொடுக்கிறது மட்டுமா நம்ம குறிக்கோள். அவங்க திருப்தியும் சந்தோஷமும் தானே மாமா.

அதோட தொழில்ல மூக்கை நீட்டாம உங்க பசங்களை சுதந்திரமா செயல்பட விட்ட மாதிரியும் இருக்கும் என சொல்லி, எல்லா விவரங்களையும் புள்ளி விவரத்தோட இல்லைன்னாலும் மேலோட்டமா சொல்லுவா. எப்படி என்னோட மருமக?'' எனப் பெருமைபட்டுக் கொண்டார் மாமனார்.

தந்தை சொன்னதைக் கேட்ட சந்தோஷுக்கோ, 'ச்சே! இப்படி வெகுளியா இருக்கிறவளைப் போய் என்னவெல் லாம் சொல்லிட்டேன்... சாரிடா!' எனத் தனக்குள் பேசிக் கொண்டிருந்தான்.

''என்னப்பா சத்தத்தையே காணோம்?'' என்ற தந்தையின் குரலில் நடப்புக்கு வந்தவன், ''யாரு செலக்ஷன்?'' எனக் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான்.

''உன் செலக்ஷனா இருந்தாலும் நான் தானே தேடிக் கண்டுபிடிச்சேன்'' என அவன் பெருமையில் பங்கு போட்டுக் கொண்டார் தந்தை.

''சரிப்பா! அப்படியே வச்சுக்கோங்க. உங்க ஆசையை நான் ஏன் கெடுக்கணும்?'' என சொல்லிச் சிரித்தவன், ''ஆமா அப்பா! நீங்க வினோத்துக்கு உதவி செஞ்சதை என்கிட்டே சொல்லவேயில்ல?'' என அடுத்த விஷயத்தைப் பற்றிக் கேட்டான்.

''வினோத்தோட ஆசையைப் பத்தி தெரிய வந்தப்போ தான் அவன் தொழில் தொடங்க ரொம்பவுமே யோசிக்கறான்னும் தெரிஞ்சது. காரணம், தங்கையோட கணவனும் அதே தொழில்ல இருக்கிறது தான்.

நான் தான் தைரியம் சொல்லி, அவன் நமக்குப் போட்டியா இல்லைன்னு புரிய வச்சு தொழிலை ஆரம்பிக்கச் சொன்னேன். அப்படியே நம்ம கிளையன்ட்ஸ் கொஞ்ச பேரை வினோத்கிட்டே அனுப்பி வச்சேன்'' எனக் கூடுதல் தகவல் தந்தார்.

''இதை ஏன்பா, என்கிட்ட சொல்லலை?''

''உதவறதை யார்கிட்டேயும் சொல்லித் தம்பட்டம் அடிக்கக் கூடாதுன்னு நீ தானே அடிக்கடி சொல்லுவ. அதான். ஆனா, நான் அனுப்பிச்ச ஆளுங்க வினோத்கிட்டே உண்மையைச் சொல்லிட்டாங்க. வினோத்தும் பல தடவை நன்றி சொல்லிட்டான்.

நான் எப்போவும் ஒரு வழிகாட்டியா இருக்கிறேன். அதனால தயங்காம எந்த உதவியும் என்கிட்டே கேளு...



செய்யறேன். உன் நன்றியை வேலையில காட்டுன்னு வினோத்கிட்டே சொல்லியிருக்கேன்.

நான் சொன்ன மாதிரியே தான் வேலையில அவனோட திறமையைக் காண்பிச்சிட்டு இருக்கான். யார் யாருக்கோ உதவறோம், நம்ம கவியோட அண்ணனுக்கு இதைக் கூட செய்யாமலா?'' என மகனுக்கு விளக்கினார்.

''ஓஹ் அப்படியா?'' என வாய் பேசினாலும், மூளை வினோத்தைத் தப்பாகப் புரிந்து கொண்டதை தட்டிக் கேட்டுக் கொண்டிருந்தது.

பின் சுதாரித்து, ''ஆமாம்பா! நிறைய ப்ராஜெக்ட்ஸ் ஒரே டைம்ல பண்ணினா யாருக்குமே ஒழுங்கா வேலையை முடிச்சுக் கொடுக்க முடியாது. நீங்க பண்ணினது தான் சரி'' என்றான். அவன் மனதில் இருந்த சில குழப்பங்கள் தெளிவடையவும் கடற்கரைக்கு வரவும் சரியாக இருக்க, இறங்கி நடக்க ஆரம்பித்தனர்.

''அப்பா, ப்ரியா இப்போ படிப்பை முடிக்கப் போறா? நீங்க என்ன நினைச்சுட்டு இருக்கீங்க?'' என சந்தோஷ் மெதுவாக தங்கையைப் பற்றிய பேச்சை ஆரம்பிக்க,

''என்ன நினைச்சுட்டு இருக்கேனா? எதைப் பத்தி?'' என்றார் குழப்பத்துடன் தந்தை.

''அதான்பா, அவளை பெங்களூருக்கு வேலைக்கு அனுப்பப் போறீங்களா, இல்ல, கல்யாணம் பண்ணி வைக்க யோசிக்கறீங்களான்னு கேட்டேன்.''

''பரவாயில்லையே, என்னோட பையனுக்கும் தங்கையோட கல்யாணத்தைப் பத்தி பேசற அளவுக்குப் பொறுப்பு வந்துடுச்சே'' என பெருமையிழையோட கிண்டலடித்தார்.

''அப்பா, நான் சீரியஸா பேசிட்டு இருக்கேன்.''

''சரிப்பா! நீ என்ன நினைக்கறேன்னு எனக்குப் புரியுது. வினோத்தை மனசுல வச்சுட்டுத் தானே பேசற? எனக்கும் ரொம்ப நாளா அந்த எண்ணம் இருக்கத்தான் செய்யுது'' என அவர் ஒரு வெடிகுண்டை வீச,

அவசரமாக, ''அப்பா! அப்படி எல்லாம் ஒண்ணும் இல்ல. நான் வேறு ஒரு பையனை மனசுல நினைச்சிருக்கிறேன்'' என வீசிய வெடிகுண்டை செயலிழக்கச் செய்தான்.

''ஓஹ்... யாருன்னு சொல்லுப்பா!'' என்றார் ஏமாற்றமடைந்த குரலில்.

''அப்பா, வினோத் வேற ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ண நினைக்கிறான். அதனால அதை மறந்துடுங்க. நான் சொல்லறது நம்ம ப்ரியாக்குப் பிடிச்ச பையனைப் பத்தி.''

''ப்ரியாக்கு பிடிச்ச பையனா?'' நடந்து கொண்டிருந்தவர் சட்டென நின்று, மகனைப் பார்த்தார்.

''ஆமாம்ப்பா! ப்ரியா! ஒரு பையனை விரும்பறா. உங்ககிட்டே சொன்னா புரிஞ்சுக்குவீங்கன்னு தான் சொல்லறேன். அவ இஷ்டப்படியே கல்யாணம் செஞ்சு வச்சிரலாம்ப்பா'' எனத் தங்கைக்காகப் பரிந்து பேசினான்.

''சின்னப் பொண்ணுன்னு நினைச்சா என் பொண்ணு ரொம்பவும் வளர்ந்துட்டா போல'' என ஆதங்கப் பட்டுக் கொண்டார் தந்தை.

''அப்பா, ப்ரியாக்கு பிடிச்சிருக்கு. அவ்வளவு தான். இன்னும் ரெண்டு பேருமே அவங்க காதலை முழுசா ஒருத்தர்கிட்டே ஒருத்தர் சொல்லிக்கலை. எனக்கு விஷயம் தெரிஞ்சதும், நீங்க வேற முடிவு செய்யறதுக்குள்ள



உங்ககிட்டே சொல்லி மேற்கொண்டு நடக்க வேண்டியதைப் பத்தி பேசலாம்ன்னு நினைச்சேன்'' என்றான் சந்தோஷ்.

''சந்தோஷ், பொண்ணைக் கொடுக்கிறோம். யோசிச்சுத் தான் கொடுக்கணும். பையன் யாருன்னு சொல்லு. விசாரிச்சிட்டு மத்ததை அப்புறம் பார்க்கலாம்.''

''பையன் நல்லா படிச்சிருக்கான். நல்ல வேலைல இருக்கான். ரொம்ப நல்லா பாடுவான். அவனோட அப்பாவும் அம்மாவும் ரெண்டு பேரும் காலேஜ்ல ப்ரோபசரா இருக்காங்க. எல்லாத்தையும் விட ப்ரியாவை கண் கலங்காமப் பார்த்துக்குவான்.''

''எனக்குத் தெரியாம என்னவெல்லாம் நடந்திருக்கு. நீயும் கொஞ்சம் கூட மூச்சு விடாம இருந்திருக்க. ஆமா, நீ பையனைப் பார்த்திருக்கியா?''

''பார்த்திருக்கேன். ஆனா, இவன் தான் பையன்னு ரெண்டு நாளைக்கு முன்னாடி தான் தெரியும்.''

''அப்படியா? யோசிச்சு சொல்லறேன். பையனைப் பத்தின மத்த விவரங்களைச் சொல்லு.''

''பையன் பேரு டேனியல்...'' என அவன் மேற்கொண்டு தொடரும் முன், ''பையன் கிறிஸ்டியனா?'' என யோசனையில் ஆழ்ந்தார்.

''அப்பா, காதல் உங்களுக்குப் பிரச்சனை இல்லைன்னு நீங்க எனக்கு கவியைக் கல்யாணம் பண்ணி வச்சதுலேயே எனக்குப் புரிஞ்சிடுச்சு. இப்போ எதுக்குத் தயங்குறீங்க? நமக்கு ப்ரியா சந்தோசம் தான் முக்கியம்ப்பா.''

''எனக்குத் தெரியும் சந்தோஷ், ப்ரியாவோட சந்தோசம் தான் முக்கியம்ன்னு. சொந்தக்காரங்க எல்லாம்

ஏதாவது சொல்லுவாங்களோன்னு யோசிக்கறேன். அதான்...'' என யோசனையாய் இழுத்தார்.

''அப்பா, அவங்களுக்காக நம்ம ப்ரியாவோட சந்தோஷத்தை அடகு வச்சிறாதீங்க. பையனைப் பார்த்துப் பேசிட்டு அப்புறம் யோசிங்க'' என அவன் தந்தைக்கு ஆலோசனைகள் வழங்கி, அவகாசம் அளித்து, அத்துடன் பேச்சை முடித்துக் கொண்டான் சந்தோஷ்.

* * *

கல்லூரிச் சுற்றுலா சென்றிருந்த ப்ரியங்கா அன்று மாலை திரும்பியவுடன் முதல் வேலையாக கவிமதியைத் தேடி அவள் அறைக்குச் சென்றவள், அவளைக் கட்டிக் கொண்டாள்.

ப்ரியங்காவின் செய்கையைப் பார்த்து வெட்கத்துடன் சிரித்த கவிமதி, ''ட்ரிப் எல்லாம் எப்படி போச்சு?'' என்றாள். அந்நேரம் சந்தோஷும் அங்கிருக்க இவர்களின் பாசப் பிணைப்பைப் பொறாமை கலந்த பெருமையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்!

''ட்ரிப் சூப்பரா இருந்ததுங்க அண்ணி! அதை விடுங்க. உங்களுக்கு இப்போ உடம்புக்கு எப்படி இருக்கு. நல்லா சாப்பிடறீங்களா? டாக்டர்கிட்டே எல்லாம் கரெக்டா போறீங்களா?'' எனப் பெரிய மனுஷியாக மாறித் தன் அண்ணியிடம் கேள்விகளை அடுக்கினாள்.

''எல்லாம் நல்லா இருக்கு ப்ரியா. அப்புறம், உன் அண்ணன்கிட்டே டேனியைப் பத்தி சொல்லிட்டேன். அவரும் மாமாகிட்டே பேசினார்'' என அவளிடம் தெரிவித்து, கணவனைப் பார்த்தாள்.

அதே சமயம் அண்ணனைப் பார்த்த ப்ரியங்கா, ''அண்ணா, உங்களுக்கு ஒண்ணும் கோபம் இல்லையே? அப்பா இதைக் கேட்டதும் ஷாக் ஆயிட்டாரா?'' எனக் கலவரமானாள்.



''ப்ரியா, எனக்குக் கோபம் இருந்தாலும் உன் அண்ணி ரெகமன்டேஷன் பலமா இருக்கும்போது உங்களோட கூட்டு சேர்ந்தா தானே என்னோட பொழப்பு ஒழுங்கா நடக்கும்'' எனக் கூறி கவிமதியை ஓரக் கண்ணால் அளவிட்டான் சந்தோஷ்.

''அண்ணா, ரொம்பவும் சோப்பு போடாதீங்க. ஆனா, அண்ணியைப் பத்தி தப்பா நினைச்சு, அவங்களைத் திட்டினதைக் கூட மனசுல வச்சுக்காம என்னோட எப்போதும் போலே சிரிச்சுப் பேசினாங்க.

அதனால அவங்களோட கூட்டுச் சேர்ந்தா தப்பே இல்ல'' என அவள் அண்ணன் போட்டது பற்றாது என்று அவள் பங்குக்கும் சேர்த்து நுரைக்க வைத்தாள்.

சந்தோஷுக்கு இத்தகவல் புதிதாக இருந்தது. அவன் கவிமதியைப் பார்க்க, அவளோ, ''ப்ரியா, ஒரு நாளைக்கு இத்தனை தடவை சோப்பு போட்டா ஸ்கின் என்னத்துக்கு ஆகும்?'' என ப்ரியங்கா சொன்னதையே கூறி அவளைக் கிண்டல் செய்தாள்.

''அண்ணி!'' எனச் சிணுங்கியவள், கவிமதியிடம் தன் சிறு பிள்ளைத்தனமான நடத்தைக்குப் பலமுறை மன்னிப்புக் கோரிவிட்டு அவர்களின் அறையை விட்டு வெளியேறினாள்.

அதுவரை கவிமதியையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த சந்தோஷ், தங்கை வெளியேறியதும், ''மதி, நீ ஏன் இதை எல்லாம் என்கிட்டே சொல்லவே இல்ல?'' என ஆரம்பித்தான்.

"இதை எல்லாம் எதுக்கு உங்ககிட்டே சொல்லணும்?'' என எதிர்க்கேள்வி கேட்டவளை அடிபட்ட பார்வை பார்க்க,

''என்னை நம்பாமத் தானே நீ என்கிட்ட இதை எல்லாம் மறைச்சேன்னு சண்டைக்கு வராதீங்க. ப்ரியா சின்னப் பொண்ணு. அப்பவும் சொன்னேன், இப்பவும் சொல்லறேன். அவளை என் தங்கச்சியாத்தான் நினைச்சிட்டு இருக்கேன். தங்கச்சியைப் பத்தி யாராவது குறைப் பட்டுக்குவாங்களா?'' என விளக்கமளித்தாள்.

கவிமதியின் உள்ளம் பளிங்காகத் தெரிய, ''மதி, அப்பா கிட்டே பேசினதும் தான் எனக்கு நிறைய விஷயங்கள் தெரிய வந்துச்சு. ஐயம் சாரி!'' என மீண்டும் மன்னிப்பை வேண்டியவன், விவரங்களையும் பகிர்ந்து கொண்டான்.

மௌனமாகக் கேட்டுக் கொண்ட கவிமதி, ''வேறு பேசலாமே'' எனப் பேச்சை மாற்றினாள். அதன் பிறகு அவள் வேலைகளில் மூழ்க, சந்தோஷ் மேலும் சில விஷயங்களைப் பற்றி அசை போட்டுக் கொண்டிருந்தான்.

கவிமதி அலுவலகத்திற்குச் செல்லாமல் இருப்பதனால், சந்தியாவும் விக்னேஷும் அதன் பின் அதைப் பற்றிய பேச்சையே எடுக்கவில்லை. அது வேறு சந்தோஷை சங்கடப்பட வைத்தது. ஏனெனில் அவர்கள் இருவரும் கவிமதி தான் இதற்குக் காரணம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்களே.

அவனுக்கு கவிமதியிடம் மீண்டும் பணத்தைப் பற்றிப் பேசுவதற்கே சங்கடமாக இருந்தது. தெளிவடைய என்று கவிமதியிடம் கேள்விகளை கேட்டு இருக்கும் நல்லிணக்கத்தையும் கெடுத்தக் கொள்ள அவன் விரும்பவில்லை.



அதேபோல சந்தியா - விக்னேஷிடம் அதைப் பற்றிய பேச்சை எடுத்தால், 'செத்தவனுக்கு எதுக்கு போஸ்ட் மார்ட்டம் பண்ணணும்? இனிமே உயிரை பத்திரமா பார்த்துக்கலாம்' என முடிவாகச் சொல்லிவிட்டனர்.

அதற்கு மேல் எவ்வளவு முயன்றும் அவர்களிடம் ஒன்றும் பேச முடியாமல் போய் விட்டது. தற்சமயம் பெரிதாக எந்தப் பிரச்சனையும் இல்லாததால் சந்தோஷும், வேலை விஷயத்தில், கருத்துப் பரிமாறும் பொழுது சந்தியா - கவிமதி இருவரும் ஏதோ தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர் என நினைத்து விட்டு விட்டான்.

## 16



ஒரு மாதம் கழித்து, ''எப்படி இருக்கிற? என் தங்கச்சி என்னோட பேசி மூணு வாரம் ஆச்சு. என் காதலுக்கு உதவறேன்னு சொல்லிட்டு சத்தத்தையே காணோம். அவளோட செல்லுக்குக் கூப்பிட்டாலும் எடுக்க மாட்டேங்கிறா. என்ன மிரட்டி வச்சிருக்கியா?'' என சந்தோஷை அழைத்த வினோத், சீண்டலுடன் பேச்சைத் துவக்கினான்.

நண்பன் சொன்னதைக் கேட்டு அதிர்ந்தவன், பின் சமாளித்து, ''உன் தங்கச்சி என்னை மிரட்டினா பத்தாதா? அவள் இப்போவெல்லாம் என்னையே கண்டுக்க மாட்டேங்கிறா. அம்மா - அப்பாவோட வாக்கிங், ப்ரியாவோட ஷாப்பிங்ன்னு என்னைக் கழட்டிவிட்டுட்டா.

இதுல என்கிட்டே கம்ப்ளைன்ட் பண்ண வந்துட்டான்'' எனத் தன் உண்மை நிலையைச் சொன்னான் சந்தோஷ்.

''நாம மீட் பண்ணி ரொம்ப நாள் ஆச்சுடா. எல்லோரும் எங்காவது ரெஸ்டாரண்ட் போகலாமா? அப்படியே கவியையும் பார்த்த மாதிரி இருக்கும்'' எனக் கேட்டான் வினோத்.

''இரு வினோத். நான் மதிகிட்டே கேட்டுட்டு அப்புறம் சொல்லறேன்.''

''சரி சந்தோஷ்! ஆனாலும், கவிகிட்டே கேட்டுட்டு தான் எல்லாத்தையும் பண்ணற மாதிரி என்ன ஒரு பில்ட் அப்...'' என மீண்டும் அவனைச் சீண்டிவிட்டுத் தான் பேசியை வைத்தான் வினோத்.

அன்றிரவு வீட்டிற்குச் சென்ற சந்தோஷ், தனிமையில் கவிமதியிடம், ''மதி, வினோத் போன் பண்ணினான். பார்த்து நாளாச்சு, இந்த வாரம் மீட் பண்ணலாமான்னு கேட்டான். போகலாமா?'' எனக் கேட்க, அவளோ, ''இல்ல. நான் வ்ரலை. நீங்க மட்டும் போயிட்டு வாங்க'' என நழுவினாள்.

''மதி, நீ என்னை மன்னிக்கறதாவே இல்லையா? இப்போ ஏன் அவன்கிட்டே பேச மாட்டேங்கிற? அவனைப் பார்க்கறதையும் அவாய்ட் பண்ணற? உன் அண்ணனோட நீ க்ளோஸா இருக்கறதைப் பத்தி வாய் தவறிச் சொல்லிட்டேன். அதை மனசுல வச்சுட்டு தானே இப்படிப் பண்ணற?''

''அப்படியெல்லாம் இல்ல சந்தோஷ். எ... எனக்கு வெளியில சாப்பிட்டா சேர மாட்டேங்குது. அதான்'' என சமாளிக்க முயன்றாள் கவிமதி.



''பொய் சொல்லாத மதி! எனக்கு இதுவும் வேணும். இன்னமும் வேணும். ஒருத்தனுக்குப் பொறுமை எவ்வளவு முக்கியம்ன்னு பட்ட பிறகு தானே புரியுது. புரிஞ்சு என்ன பண்ணறது? ச்சை!'' என வலது கையை உதறியவன் ஜன்னல் கம்பியைப் பிடித்துக் கொண்டு வெளியில் வெறித்தான்.

அவன் வேதனைப்படுவதைத் தாங்க முடியாமல், ''அதில்ல சந்தோஷ். ஏற்கனவே என்ன நடக்குதுன்னு புரியாம குழப்பத்துல இருக்கீங்க. அண்ணன்கிட்டே பேசி இன்னும் குழப்பத்தை அதிகப்படுத்த வேண்டாம்ன்னு நினைச்சுத் தான்...'' என விளக்கினாள்.

''மதி, நீ என்னை நிஜமா மன்னிச்சுட்டேன்னா இந்த வாரக் கடைசியில உங்க வீட்டுக்குப் போறோம். இப்பவே போன் பண்ணி வினோத்கிட்டே சொல்லு'' என்றான் பிடிவாதமாக.

அதற்கு மேல் அவனை வதைக்க மனம் வராமல் அவன் சொன்னதை அப்படியே செய்தவள், அந்த வாரக் கடைசியில், சந்தோஷுடன் தன் பிறந்த வீட்டிற்குச் சென்றாள். பெற்றோர்களுடனும், அண்ணனுடனும் மகிழ்ச்சியாக அன்றைய பொழுதையும் கழித்தாள்.

தன் நண்பனிடம் பேசக் கிடைத்த தனிமையில், ''வினோத், உன்கிட்ட ரொம்ப நாளா கேட்கணும்ன்னு இருந்தேன். எங்க கல்யாணத்தன்னைக்கு, 'இதுவும் காதல் கல்யாணம் தான்'ன்னு ஏன்டா சொன்ன?'' என சந்தோஷ் கேட்க,

''கவியும் அன்னைக்கு இதைத் தான் கேட்டா. அவ உன்கிட்டே சொல்லலையா? நீங்க மூணு மாசமா பேசிப் பழகி இருப்பீங்களே. அந்த மூணு மாசத்துல காதல்

வந்திருக்கும் இல்ல. அதான் அப்படிச் சொன்னேன், நான் சொன்னது உண்மை தானே?'' என சந்தோஷிடமே உண்மையை உறுதிபடுத்திக் கொள்ளவென்று கேள்வி கேட்கவும், சந்தோஷிற்குத் தான் என்னவோ போலாகி விட்டது.

அவன் செய்த தவறை நிவர்த்தி செய்ய எண்ணி, ''உண்மை தான் வினோத். ஆனா, எனக்கு இது மூனு மாசமா வளர்ந்த காதல் இல்ல. ஆறு வருஷமா வளர்ந்த காதல்'' எனக் கூறி வினோத்தை திகைக்க வைத்தான். பின் சுருக்கமாக அவன் காதல் கதையையும், தன் தந்தை தவிர ஒருவருக்கும் தெரியாது என்பதையும் நண்பனிடம் சொன்னான்.

''இத்தனை நாள் இதைப் பத்தி மூச்சு விடாததுக்கு என்னை மன்னிச்சிடு'' என மன்னிப்பையும் வேண்டினான் சந்தோஷ்.

அவன் சொன்னதைக் கேட்டு சற்று நேரம் அமைதியாக இருந்த வினோத், பின்னர், ''எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை சந்தோஷ். உன் உணர்வுகளைப் புரிஞ்சுக்க முடியுது. அன்னைக்குக் கல்யாண மண்டபத்துல நடந்ததைப் பத்தி கவி சொல்லி இருக்கான்னு நினைக்கறேன். அவதான் உடனே வந்து ஒப்பிச்சுடுவாளே.

ஆனா, இப்போவெல்லாம் உன்கிட்டே தானே எல்லாத்தையும் ஒப்பிக்கிறா போல... நீ ஆறு வருஷமா காதலிச்சு, காத்திருந்து அவளைக் கல்யாணம் பண்ணிகிட்டியா? உண்மையிலேயே கவி ரொம்பக் கொடுத்து வச்சவடா சந்தோஷ். தேங்க்ஸ்!'' என உணர்ச்சி வசப்பட்டான் நண்பன்.



''இல்ல வினோத்! நான் தான் மதி கிடைக்க கொடுத்து வச்சிருக்கணும்'' என மனதார கூறினான் சந்தோஷ்.

''சந்தோஷ், எனக்கு இப்போ தான் புரியுது. கவி ஒரு மாசத்துக்கு முன்னாடி இங்கே வந்தப்போ ஏன் உம்முன்னு இருந்தான்னு. அப்போ தான் நீ அவளைக் காதலிச்ச விஷயத்தைச் சொன்னியா? அதான் மேடம் அப்செட் ஆயிட்டாங்களா? என்கிட்டே வந்து நான் கல்யாணத் தன்னைக்கு எதார்த்தமா சொன்னதைக்கூட சந்தேகப் பட்டு, எனக்கு முன்னாடியே தெரியுமான்னு விசாரிச்சா.

அதானா இத்தனை நாளா மேடம் என்னோட பேசலை? அவளுக்குத் தான் காதல்ன்னாலே எல்லோருக்கும் கிளாஸ் எடுக்க ஆரம்பிச்சிடுவாளே. எப்படி அவளைச் சமாதானப்படுத்துன?'' எனச் சிரித்தவாறே வினவினான்.

''அது நா... நான்... முன்னாடியே...'' என சந்தோஷ் உண்மையைச் சொல்லத் திணறிக் கொண்டிருக்க,

''எப்படியோ சமாதானம் ஆயிட்டோம். அதையெல்லாம் கேட்டு இப்படியா அவரைத் திணற வைப்பீங்க?'' என இடைமிட்டு அவள் அண்ணனை மடக்கி, கணவனை உண்மை சொல்வதில் இருந்து காப்பாற்றினாள் கவிமதி.

''ஆகா! ரெண்டு பேரும் ஒன்னு கூடிட்டாங்களா...'' எனக் கிண்டலடித்தான் வினோத்.

சந்தோஷும் அதுதான் சமயம் என்று கவியை ஒட்டி நின்று, அவள் தோளை அணைத்துக் கொண்டான். ''எப்படி நம்ம ஆளு?'' என அவள் அண்ணனிடமே பெருமை வேறு பேசினான்.

பல நாட்களுக்குப் பிறகு பல மணி நேரம் பேசி, கிண்டலடித்துச் சிரித்தபடியே பொழுது கழிந்தது.

கணவன் மனைவி இருவரும் தங்கள் வீட்டிற்குக் கிளம்பும் முன், கவிமதி அவந்திகாவிடம் மறுபடியும் பேசுவதாகத் தன் சகோதரனிடம் கூறி விடை பெற்றாள்.

* * *

இரண்டு தினங்கள் கழித்து, அலுவலகத்தில் இருந்த சந்தோஷின் கைப்பேசி இசைக்க, எடுத்தவனின் புருவங்கள் மேலேறின. அழைத்தது சந்தியாவின் அண்ணன் அசோக்!

அசோக்கும் சந்தோஷும் பேசிக் கொள்வார்கள் தான். ஆனால், அவர்களுக்குள் பெரிதாக நட்பென்று சொல்ல முடியாது. அதனால் தான் அவன் எண் திரையில் மிளிர்ந்ததும் வியப்புற்றான்.

மனம் யோசித்துக் கொண்டிருக்க கைகள் தாமாக கைப்பேசியை இயக்கி, ''ஹலோ அசோக். எப்படி இருக்கீங்க?'' எனக் கேட்க வைத்தன.

''சந்தோஷ், நான் உங்களோட கொஞ்சம் தனியாப் பேசணும். நேர்ல மீட் பண்ணலாமா?'' என அழைத்த விஷயத்தை நேரடியாகக் கூறினான்.

''ஷுயர்! எங்கப் பார்க்கலாம், சொல்லுங்க.''

இடத்தையும், நேரத்தையும் கூறியவன், ''சந்தியாக்கு நாம மீட் பண்ணறது தெரிய வேண்டாம். ப்ளீஸ்!'' என்ற வேண்டுகோளுடன் வைத்தான் அசோக்.

அசோக் வைத்தாலும் கைப்பேசியைப் பார்த்து, 'சந்தியாக்கு தெரியக்கூடாதா? ஏன்? ஒருவேளை பிஸினெஸ்ல மீண்டும் ஏதாவது பிரச்சனையா?' என வாய்விட்டுப் பேசிக் கொண்டிருந்தான்.

சந்தியாவின் திருமணத்திற்கு முன்பே அவள் தந்தை இறந்துபோக, குடும்பத் தொழிலை ஏற்று நடத்தி



வந்தான் அவள் அண்ணன் அசோக். ஆனால், திடீரென்று தொழிலில் இறங்கியதால் பல சிக்கல்களைச் சமாளிக்க வேண்டி நேர்ந்ததால் சின்னப் பையனான அவனால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. நஷ்டமும் வந்தது.

சந்தியாவிடமிருந்து அதை அறிந்த சந்தோஷ், தன் தந்தையிடம் கூறி அவர் மூலமாக ஒருவரும் அறியாமல் மறைமுகமாக உதவியும் செய்தான். தற்சமயம் அசோக்கும் வீழ்ச்சியிலிருந்து மீண்டிருந்தான். அதனால் தான் சந்தோஷ், அசோக் தனியே பேச அழைத்தவுடன் அவ்வாறு நினைத்தான்.

ஆனால் அசோக்கை சந்தித்தப் பிறகு தான் தெரிந்தது அசோக் சொன்னது அவன் தொழிலில் உள்ள பிரச்சனையைப் பற்றி அல்ல... தன் வாழ்க்கையில் நேர்ந்த குளறுபடியைப் பற்றி என்று.

அசோக்கிடம் சொன்னவாறு அவனை ஒரு உணவகத்தில் சந்தித்தான் சந்தோஷ். ஆரம்பத்தில் சம்பிரதாயப் பேச்சுக்களைப் பேசிய அசோக், பின் நேரடியாக விஷயத்திற்கு வந்தான்.

''சந்தோஷ், உங்க குடும்ப விவகாரத்துல தலையிடறதா நினைச்சுக்காதீங்க. உங்களுக்கும் உங்க மனைவிக்கும் நடுவுல எதோ பிரச்சனைன்னு எனக்குத் தெரியும்'' என அசோக் சொன்னதைக் கேட்டு அதிர்ந்தான் சந்தோஷ்.

அவன் அதிர்ச்சியை உள்வாங்கிக் கொண்டே அசோக் மேலும் தொடர்ந்தான். ''ஆபீஸ் அக்கௌண்ட்ஸ்ல நடந்த குளறுபடிக்குக் காரணம் கவிமதின்னு நீங்க எல்லோரும் நினைக்கறீங்க. ஆனா அதற்குக் காரணம்... ச... சந்தியா தான்'' எனச் சொல்லி நிறுத்தினான்.

''வாட்?'' என்றான் குழப்பத்துடனும், திகைப்புடனும், குடும்ப விஷயம் வெளியில் தெரிந்துவிட்டதே என தவித்துக் கொண்டிருந்தவனுக்கு சந்தியா தான் இதற்கு எல்லாம் காரணம் என அவள் அண்ணனே சொன்னது மரண அடியாக இருந்தது.

''நானே என் தங்கச்சியைப் பத்தி சொல்லக் கூடாது. ஆனா, அவளால உங்க லைப்ல எந்தச் சிக்கலும் வரக் கூடாது. தொழில்ல எனக்கு நீங்க செஞ்ச உதவியைப் பத்தி எனக்குத் தெரியாதுன்னு நினைச்சுட்டு இருக்கீங்க. எனக்கு எல்லாம் தெரியும். அந்த நன்றியை நான் எப்போதும் மறக்க மாட்டேன்'' எனச் சொல்லி சந்தோஷுக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சியைத் தந்தான் அசோக்.

திகைத்து அமர்ந்திருந்தவனிடம், ''உங்களுக்கு சந்தியாவோட இன்னொரு முகம் தெரியாதுன்னு நினைக்கிறேன். அப்பா இருந்தப்போ அவளுக்கு நிறைய செல்லம் கொடுத்து, கொடுத்து அவ தான் எல்லாத்துலேயும் பெஸ்ட் அப்படிங்கற அகந்தையை வளர்த்து விட்டுட்டார். எல்லாத்துலேயும் அவ தான் ஜெயிக்கணும், முதல்ல இருக்கணும்ன்னு நினைப்பா'' என்றான் அசோக்.

''அது தப்பில்லையே?'' - சந்தோஷ் வாயைத் திறந்தான்.

''தப்பு இல்லை தான். ஆனா, அவளை எல்லோரும் தலையில தூக்கி வச்சுக் கொண்டாடணும், அவ செய்யறதைப் புகழணும், எப்போதும் அவளுக்குத் தான் எல்லோரும் முதலிடம் கொடுக்கணும்ன்னு நினைப்பா.

காம்ப்ளிமெண்ட்ஸ் கிடைச்சா மேலும் மேலும் சாதிக்கத் தூண்டும். ஒத்துக்கறேன். ஆனா, சந்தியா விஷயத்துல பொறாமை மற்றும் ஈகோவை தூண்டிவிட்டுடுச்சு. அவள் புகழ் என்கிற போதைக்கு அடிமையாயிட்டா.



அப்பா இருந்தவரை அவளுக்கு நல்லா கொம்பு சீவிவிட்டு இருந்தாரு. அவர் இறந்ததற்கு அப்புறம் நான் தொழில்ல எதிர்நீச்சல் போட, அம்மா அவளைக் கண்டுக்கவேயில்லை. அதனால இன்னுமே அவளோட குணம் மோசமா ஆயிடுச்சு.''

''நீங்க சொல்லறதைப் போல சந்தியா நடந்துக்கற மாதிரி எனக்குத் தெரியலை...'' - தோழியைத் தாங்கிப் பேசினான் சந்தோஷ்.

''உங்க வீட்ல தான் எல்லோரும் அவள் செய்யறதைப் பாராட்டிட்டே இருப்பீங்களே. அதனால உங்ககிட்டேயிருந்து மறைச்சிருப்பா, இல்ல, நீங்க கவனிக்காம விட்டுருப்பீங்க. ஆனா, இப்போ உங்க மனைவி வந்ததும் அவங்களையும் சேர்ந்து பாராட்டறதுதான் பிரச்சனையே... கவி செய்யற எல்லா விஷயத்துலேயும் எல்லோர்கிட்டே இருந்தும் நல்ல பெயர் வாங்குறதுனால சந்தியா பின்னுக்குத் தள்ளப்பட்டுட்டதா பீல் பண்ணறா.''

சந்தோஷ் இன்னுமே நம்பாமல் அசோக்கைப் பார்க்க, ''நிஜம்! கவிமதி மேலே பல விதங்கள்ல வெறுப்பு வந்திருக்கு சந்தியாக்கு. முதல் காரணம். நீங்க அவங்களை லவ் பண்ணியதை சந்தியாகிட்டே இருந்து மறைச்சது. பெஸ்ட் பிரெண்ட் என்கிட்டே கூடச் சொல்லாம இருந்துட்டானே. அதற்குக் காரணம் கவின்னு அவங்க மேலே எரிச்சல்'' என விளக்க ஆரம்பித்தான் அசோக்.

''ஆனா, இதை நான் யார்கிட்டேயும் சொல்லலையே?''

''அவகிட்டேயும் சொல்லலையே. அதுதானே பிரச்சனைக்குப் பிள்ளையார் சுழி போட வச்சது. அடுத்த காரணமே உங்க கல்யாணத்துக்கு அப்புறம் நீங்க ரொம்ப தூரம் விலகிப் போயிட்டதா நினைக்கிறா. அதுக்கும்

கவிமதி தான்னு நினைச்சு மேலும் மேலும் வெறுப்பை வளர்த்துக்கிட்டா.''

''ஆனா, நான் அப்படி நினைக்கலையே. கொஞ்சம் பிஸியா வெளியூருக்குப் போயிட்டு இருந்ததுனால முன்ன மாதிரி பேசாம இருந்திருக்கலாம்...'' என விளக்கம் கொடுத்தான் சந்தோஷ்.

இப்பொழுது சந்தோஷுக்குக் கோபம் மூக்கின் மேலே நின்று தாண்டவமாட ஆரம்பித்தது. பின்னே, ஏதோ தெரியாமல் செய்து விட்டான் என நினைத்தால், தன் மனைவியின் மேல் குற்றம் சுமத்தச் செய்திருக்காளே?

''உங்க வெளியூர் பயணங்களுக்கும் சந்தியா தான் காரணம். உங்களை வெளியூர் அனுப்பி, உங்களையும் கவிமதியையும் அடிக்கடி பேச விடாமப் பண்ணினா ஆபீஸ் விஷயத்தைப் பத்திப் பேசி தெளிவு பெற சந்தர்ப்பம் கிடைக்காதுன்னு யோசிச்சிருக்கா.''

இதற்கு மேல் அலுவலகத்தில் நடந்த விஷயத்தை ஊகிக்க பெரிய மூளை தேவையில்லை என்பதை சந்தோஷ் உணர்ந்தான். அதே போல, சாரதா தனக்கு ஒரு அம்மா என முன்பு கவிமதி மதியழகனிடம் சொன்னதை ஒட்டுக் கேட்ட அந்த மூன்றாம் நபர் யாரென்று நான் சொல்லாமலே உங்களுக்கு இப்பொழுது புரிந்திருக்கும்!

''அப்புறம் எனக்கு மனைவியா வரப் போற பொண்ணை தான் தான் தேர்ந்தெடுப்பேன் என சந்தியா ஒரே பிடிவாதம். என் சம்மதம் இல்லாம ஒண்ணும் நடக்காது என்கிறதுனால பேசாம இருந்தேன்...'' என மேலும் தொடர அசோக் தயங்கினான்.

''எல்லாத்தையும் சொல்ல வந்துட்டு எதுக்குத் தயங்கறீங்க? மேலே சொல்லுங்க'' என்றான் சந்தோஷ்.



அவனுக்கு எல்லா உண்மைகளும் தெரிய வேண்டி இருந்தது.

''எனக்கு உங்க தங்கையைப் பிடிச்சிருந்தது... அதை சந்தியாகிட்டேயும் சொன்னேன். ப்ரியா அடிக்கடி சந்தியாவோட ட்ரெஸ்ஸிங் சென்ஸ், அவளோட லுக், ஸ்டாக் பத்தின அறிவு, அவளோட இன்டெலிஜென்ஸ் இப்படிப் பலதையும் புகழ்ந்து தள்ளிடுவாங்க போல. அதனால சந்தியாக்கும் ப்ரியாவை ரொம்பப் பிடிக்கும்.

நான் என் எண்ணத்தை சந்தியாகிட்டே சொன்னதும் அவளுக்கு ஒரே குஷி. ப்ரியா வேற ஒருத்தரை லவ் பண்ணறது இப்போ சமீபமாத் தான் தெரிஞ்சது. அதை சந்தியாகிட்டே சொல்லி, ப்ரியாவை எனக்குக் கல்யாணம் பண்ணற ஐடியாவை விட்டுடச் சொன்னேன். அதற்கப்புறம் நான் பிசினெஸ் விஷயமா யூ.எஸ். போயிட்டேன்.

ஆனா, சந்தியா அதை விடலை. ப்ரியாவோட காதலுக்கு உங்க மனைவி உதவறது தெரிஞ்சதும் அவங்க மேலே இருக்கும் கோபம் பன்மடங்காக உயர்ந்துடுச்சு. அதனால தான் ஆபீஸ்ல அவளே எல்லாக் குளறுபடியையும் செஞ்சுட்டு கவிமதி மேலே பழியைப் போட்டுட்டா.

உங்க அப்பா வினோத்துக்கு சேர வேண்டிய பணத்தை கவிகிட்டே கொடுத்ததைப் பார்த்த சந்தியா, அன்னு தான் உங்ககிட்டே ஆபீஸ் பணத்தைக் காணோம்ன்னு சொல்லி இருக்கா. அப்புறம் உங்க குணத்தை அறிஞ்சு எப்போ எங்கே போய் சொல்லணுமோ அங்கே அடுக்கடுக்கா பொய் சொல்லிட்டா...'' என சொல்லி முடித்தான் அசோக்.

''மதி மேலே பழி சுமத்தி என்ன சாதிக்க நினைச்சா?'' எனப் புரியாமல் வினவினான் சந்தோஷ்.

''அப்படிப் பழி சுமத்தினா உங்க மனைவி மேலே நீங்க வச்சிருக்கிற அன்பு குறையும்ன்னு எதிர்பார்த் திருக்கா. அத்தோட, அவங்க பிரெண்ட் டேனியை ப்ரி யாக்குக் கல்யாணம் செய்து தர சம்மதிக்க மாட்டீங் கன்னு நினைச்சிருக்கா'' என அசோக் விளக்கினான்.

''ச்சே! அவ கோபப்பட்டுப் பண்ணின காரியத்தால என் வாழ்க்கை வீணாகியிருக்குமே. அதைப் பத்தி கொஞ்சமாவது நினைச்சாளா? என்ன பிரெண்ட் இவ?''

''சாரி சந்தோஷ்! அதையெல்லாம் அவ உணர்ற நிலை யில இல்ல. குரோதம் அவள் கண்களை மறைச்சிடுச்சு... முதல்ல ப்ரியாவை வினோத்துக்குக் கல்யாணம் பண்ணி வச்சுடுவீங்கன்னு பயந்தா. அதனால தான் வினோத் தையும் இதுல சம்மந்தப்படுத்தினா. அவ மேலே சந்தேகம் வந்துடக் கூடாதுன்னு தான் கவிமதிகிட்டே நல்லவ மாதிரி உங்க முன்னாடி நடந்துகிட்டு இருந்தா...''

''உங்களுக்கு எப்படி இதெல்லாம் தெரியும்?''

''நான் யூ.எஸ்.ல இருந்து வந்ததும் சந்தியாவே என்கிட்டே எல்லாத்தையும் சொன்னா. முடிஞ்ச வரைக் கும் அட்வைஸ் பண்ணிப் பார்த்தேன். கேட்கலை. கவிமதி மேலே புதுசா கோபப்படறதுக்கு இப்போ அவங்க கன்சீவ் ஆன காரணம் கிடைச்சிருக்கு. உங்க வீட்ல முதல் வாரிசு வரப் போகுதுன்னு அவங்களைத் தூக்கி வச்சுக்கறீங்களாம்.

அதனால இத்தனை நாளா அவள் படிக்கறதுக்காகத் தள்ளிப் போட்டிருந்த குழந்தைப் பிறப்பை இனிமேலும் தாமதப் படுத்தப் போறதில்லைன்னு சொல்லிட்டுப் போனா. அப்புறம் பணம் காணோம்னு சொல்லி நீங்க கொடுத்த பணத்துல வைரக் கம்மல் வாங்கியிருக்கா.

இதையெல்லாம் உங்ககிட்டே சொல்லறதுக்கு முக்கிய காரணம் இருக்கு. உங்கள் வாழ்க்கை நல்லபடியா



இருக்கணும்ன்னு நினைக்கிற அதே சமயத்துல கொஞ்சம் சுயநலமும் கலந்து இருக்கு...

இதை இப்படியே விட்டா சந்தியா இன்னுமே ரொம்ப மோசமாப் போயிடுவா. ஒரு அண்ணனா எனக்கு ரொம் பக் கவலையா இருக்கு. இந்த விஷயம் உங்க அண்ண னுக்குத் தெரிஞ்சா சந்தியாவோட வாழ்க்கையும் கேள்விக் குறி ஆகிடுமோங்கிற பயம்.

அதான் அவளோட பெஸ்ட் பிரெண்ட் உங்ககிட் டேயே இந்த விஷயத்தைக் கொண்டு வந்தேன். என்ன பண்ணறதுன்னு நீங்களே முடிவெடுத்துக்கோங்க'' எனச் சொல்லி பிரச்சனையை அவனிடமே தள்ளிவிட்டு விட்டு வந்த வேலையை முடித்துக் கொண்டு கிளம்பி னான் அசோக்.

## 17



வீட்டிற்குச் சென்ற சந்தோஷ், தங்களறையில் தன் மனைவியை மென்மையாக அணைத்துக் கொண்டு, உச்சியில் இதழ் பதித்து, ''மதி, இதைக் கேட்க எனக்குத் தகுதி இருக்கான்னு தெரியலை. ஆனாலும் கேட்கிறேன். என்னை மன்னிச்சிடும்மா...'' என்றான்.

''அதான் ஏற்கனவே கேட்டுட்டீங்களே. எதுக்கு மறுபடியும் கேட்கறீங்க?'' என்றாள் மனைவி.

மனைவியை தன் பிடியில் இருந்து விட்டவன், சற்று நேரம் அவன் விரல்களில் உள்ள நகங்களை ஆராய்ந்து

கொண்டிருந்தான். பின்னர், அசோக் சொன்னதை எல்லாம் ஒன்று விடாமல் மனைவியிடம் தெரிவித்தான்.

கணவன் சொல்வதை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தவள் அவன் பேசி முடித்த பின்னரும் மௌனமாக இருக்கவும், "என்டா! ஒண்ணுமே பேச மாட்டேங்கற?" என்றான் சந்தோஷ் கவலை தோய்ந்த குரலில்.

"சந்தியா அக்கா தான் காரணம்ன்னு நான் ஏற்கனவே ஊகிச்சது தான். ஆனா, ஏன்னு இப்போ தான் புரியுது. நீங்க ரொம்பப் பாவம்! இதை எல்லாம் கேட்டதும் உங்களுக்கு எவ்வளவு கஷ்டமா இருந்திருக்கும்!" என கணவனுக்காகப் பரிதாபப்பட்டாள்.

நடந்ததைக் கேட்டவுடன் மனைவி சந்தியா மேல் கோபப்படுவாள் என்று எதிர்பார்த்ததுக்கு மாறாக தனக்காகப் பரிதாபப்படவும் கணவனின் மனம் குழைந்தது.

"மதி, நீ கோபத்துல திட்டி என்னோட சண்டை போட்டிருந்தாக்கூட என் மனசு ஆறியிருக்கும். அதை விட்டுட்டு எனக்காகப் பரிதாபப்படறியே?" என பலவீனமானான் சந்தோஷ்.

பின்னர், "ஆமாம் மதி! சந்தியா பத்தி தெரிஞ்சதும் எனக்குக் கோபம் வந்தது. அவளை உண்மையான தோழி, அன்பான அண்ணின்னு நினைச்சேன். காதல்ல கூட பொய் சொல்லலாம். ஆனா நட்புல?

சந்தியா சொல்லியிருக்காளே. அதுவும் உன் மேலே பழி சுமத்த. அதை நம்பி, உன்னை என் கோபத்துக்கு வடிகாலா ஆக்கிட்டேனே... ச்சே!" என சலித்துக் கொண்டவனின் கேசத்தை மிருதுவாக வருடிக் கொடுத்தாள் மனைவி.



அவன் கரங்களை இறுகப் பற்றிக் கொண்டவன், "நடந்த எல்லாத்தையும் ஒண்ணாக் கோர்த்து உன்னை தப்பா நினைச்சுட்டேன்டா" என்றான் கரகரத்த குரலில்.

"விடுங்க சந்தோஷ்! கொஞ்ச நாள் ஆறப் போட்டுட்டு அப்புறம் இதைப் பத்தி யோசிச்சுப் பார்த்தா, இது ஒரு பொருட்டாகவே தோணாது. அதுவரைக்கும் இதைப் பத்தித் தெரிஞ்சதா சந்தியா அக்காகிட்டே காட்டிக்காதீங்க" என முறுவலித்தாள்.

"இல்லை மதி. சந்தியாகிட்டே நல்லா நாலு கேள்வி கேட்டாத் தான் என் மனசு கொஞ்சமாவது ஆறுதல் அடையும்."

"மறுபடியும் எதுக்கு உங்களோட அவசரத்தனத்தைக் காட்டறீங்க. நிதானமா நான் சொல்லறதை யோசிச்சுப் பாருங்க. அப்புறம் உங்க இஷ்டம்."

கவிமதி சொன்னதைக் கேட்டு அவளையே சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தவன், "மதி, உனக்கு நிஜமாவே சந்தியா மேலே கோபம் வரலையா?" எனக் கேட்டான் சந்தோஷ்.

"வந்திச்சு. ஆனா, அவங்க வளர்ந்த விதம் அப்படி. அதுவும் செல்லமா வளர்த்த அப்பா திடீர்ன்னு இறந்து போயிட்டாங்க. பாவம் அவங்க. பிறக்கும் போது யாரும் இப்படிப் பிறக்கறது இல்லையே. வளரும் சூழ்நிலை தான் ஒவ்வொருத்தரையும் ஒவ்வொரு விதமா பதப்படுத்துது.

நானே அவங்க வீட்ல பிறந்திருந்தா எனக்கும் ஓவரா செல்லம் கொடுத்து நானும் அப்படி ஆயிருப்பேனோ என்னவோ? அவங்க வளரும்போது கூடவே வளர்ந்த இந்தக் குணத்திலிருந்து வெளிவர நாம தான் வாழறதுக்கு நல்ல சூழ்நிலையைக் கொடுக்கணும்.

நீங்க எப்படி என் மேலே இருக்கிற கண்மூடித்தனமான காதலினால் என்னோட சண்டை போட்டீங்களோ அதே மாதிரி சந்தியா அக்காவும் உங்க மேலே இருக்கிற கண்மூடித்தனமான நட்புனால உங்ககிட்டே மோதாம என்னோட மோதிட்டாங்க. லீவ் இட்...

அத்தோட அவங்க பிளான் பண்ணினதுலேயே தெரியலையா, எவ்வளவு இம்மெச்சூர்டா நடந்துகிட்டு இருக்கிறாங்கன்னு? ஒரே ஒரு தடவை நம்ம ரெண்டு பேரும் இதைப் பத்திப் பேசி இருந்தா அவங்க போட்ட பிளான் எல்லாம் வேஸ்ட்டாப் போயிருக்கும். இதற்குக் காரணம் அவங்க தான்னும் நமக்குத் தெரிஞ்சிருக்கும். அதைக்கூட அவங்க புரிஞ்சுக்கலை'' எனப் பக்குவமாக கணவனுக்கு எடுத்துச் சொன்னாள்.

''முந்திரிக் கொட்டை மாதிரி எல்லாத்துக்கும் அவசரப் படற என் குணத்தையும், மூக்கு மேலே வரும் முன் கோபத்தையும் நல்லா யூஸ் பண்ணிக்கிட்டா சந்தியா. அதை நினைச்சா நான் எவ்வளவு ஏமாளியா இருந் திருக்கேன்னு தோணுது.

ஆனா மதி, நீ சொல்லறதுலேயும் அர்த்தம் இருக்கு. இதைப் பெருசு பண்ணி விக்னேஷ் அண்ணனுக்கு தெரியப்படுத்துறதுல என்ன பிரயோஜனம்? தேங்க்ஸ் மதி, என்னைப் புரிஞ்சுக்கிட்டதுக்கு'' என்றான் கணவன்.

''இதைப் பத்தி இனி மறந்துடலாம். இனிமேல் எதுவா இருந்தாலும் ஒளிவு மறைவு இல்லாம அப்பப்போ பேசித் தீர்த்துக்கிடணும். இப்போ தூங்கலாமா? எனக்குத் தூக்கம் வருது சந்தோஷ்.''

''சரிம்மா... ஆனா, மதி...'' என அவன் மேற்கொண்டு தொடரும் முன்னர், ''ப்ளீஸ் வேணாமே!'' என இடை மறித்தாள்.



''ஆனா, மதி எனக்கு வேணுமே...'' எனக் குறும்புடன் அவளைப் பார்த்துச் சொன்னவன், விளக்கை அணைத்து விட்டு, மனைவியை அணைத்து அவள் இதழ்களில் நீண்ட முத்தமொன்றைப் பதித்தான்.

கணவனும் மனைவியும் ஒருவரின் மேல் மற்றொருவர் வைத்திருந்த காதலை நீண்ட நாட்களுக்குப் பிறகு எவ்விதத் தடையுமின்றி பரிமாறிக் கொண்டனர்! வெகு நாட்களுக்குப் பிறகு முகத்தில் கசியும் புன்னகையுடன் நிம்மதியாகக் கண்ணயர்ந்தனர்!

* * *

உண்மை தெரிந்ததில் இருந்து சந்தியாவுடன் பேசும் சந்தர்ப்பங்களை மிக எளிதாக ஒருவருக்கும் சந்தேகம் வராதவாறு தவிர்த்து வந்தான் சந்தோஷ்.

வீட்டில் அனைவரும் இருக்கும் பொழுது அவள் ஏதாவது கேட்டால், தன் கைப்பேசியில் அப்பொழுது தான் ஏதோ முக்கியமான செய்தி வந்ததைப் போலவும் அதில் ஈடுபாட்டுடன் இருப்பது போலவும் காட்டிக் கொள் வான். அலுவலகத்தில் என்றால் தன் வேலைகளில் மூழ்கி விட்டதாகக் காட்டிக் கொள்வான்.

என்ன தான் கவிமதி ஆலோசனை மழை பொழிந் தாலும் அவசரக்காரனும் கோபக்காரனுமான சந்தோஷ் அந்த மழையில் நனைந்தாலும், அதைக் கடைப்பிடிக்க மிகவுமே தடுமாறினான்.

ஒரு வாரம் போல இதைப் பார்த்துக் கொண்டிருந்த கவிமதி, ''நீங்க சந்தியா அக்காவை அவாய்ட் பண்ணற தைப் பார்த்து யாருக்காவது சந்தேகம் வந்துடும். அவங்களோட இயல்பா பேசறேன்னு சொன்னீங்களே?'' எனக் கணவனை எதிர்கொண்டாள்.

"நீ மட்டும் என்னை மை டியர் புருஷான்னு சொல்லறியா?" என குழந்தைத்தனமாக முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டான். எதற்கும் எதற்கும் முடிச்சுப் போடுகிறான் இவன்!

"அவ்வளவு தானே! மை டியர் புருஷா... புருஷா... புருஷா..." என ஏலமிட்டாள் கவிமதி.

"கூப்பிடச் சொன்னா எதுக்கு ஏலம் விடறே" என அவளைச் சீண்டியவன், "மதி, நான் மறுபடியும் அப்பாகிட்டே டேனி - ப்ரியா பத்தின விஷயத்தைப் பேசப் போறேன். சந்தியா இன்னும் ஏதாவது குழப்பம் பண்ணறதுக்கு முன்னாடி அப்பா எல்லோர்கிட்டேயும் டேனி பத்தி சொல்லிடறது நல்லது" என்றான் சந்தோஷ்.

"நான் வேணா டேனியோட அப்பா - அம்மாவை வரச் சொல்லட்டுமா? வெளில எங்காவது மீட் பண்ணலாம்."

"அதுவும் நல்ல ஐடியாவாத் தான் இருக்கு. அப்பாகிட்டே நாளைக்கே கேட்டுட்டுச் சொல்லறேன்" என இருவரும் திட்டமிட்டனர். மறுநாள் வரப் போகும் அதிர்ச்சியை அறியாமல்.

விடிந்தவுடன், சந்தியா தன் வீட்டில் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தாள். மதியழகனிடம் தன் அன்னையும் அசோக்கும் அங்கு வருவதாகத் தெரிவித்தாள். அவர்களின் வரவை மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் மதியழகன். அவர்களின் வரவை மட்டுமா?!

நேற்று இரவு தான் சந்தியா விக்னேஷிடம், அசோக்கிற்கு ப்ரியங்காவைப் பிடித்திருப்பதாகக் கோடி காட்டினாள். அவனும் தன் தந்தையிடம் பேசுவதாகக் கூற, உடனே உடன் பிறந்தவனுக்கு அழைத்து, விஷயத்தைக் கூறாமல் அவனையும் அவள் அன்னையையும் வீட்டிற்கு வரச் சொன்னாள் சந்தியா.



அசோக்கும் சந்தோஷிடம் உண்மையைச் சொல்லி விட்டதனால் இனி குழப்பம் வராமல் அவன் பார்த்துக் கொள்வான் என்ற நம்பிக்கையில் சம்மதித்தான்.

சமையலறையில் அனைவரையும் விரட்டிக் கொண்டு பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்த சந்தியா, காலையில் எழுந்து வந்த சந்தோஷிடம், "சந்தோஷ், ரொம்ப நாள் கழிச்சு அசோக் இன்னைக்கு வர்றேன்னு சொல்லி இருக்கார்" என்றாள் வரவழைத்துக் கொண்ட சிரிப்புடன்.

சந்தியாவின் இன்னொரு முகத்தைப் பற்றி வெகு நாட்களுக்குப் பிறகு அறிந்து கொண்டவனாயிற்றே... என்ன சொல்வான்? அவன் யோசித்து பதில் சொல்லும் முன் கீழே இருந்த தன் அறையில் இருந்து வெளிவந்த கவிமதியைப் பார்த்த சந்தியா உடனே முகத்தை தொங்கப் போட்டவாறே அங்கிருந்து அகன்றாள்.

அவளுக்கு அலுவலகத்தில் நடந்தது ஞாபகம் வந்து விட்டதாம்! இதைப் பார்த்த கவிமதிக்கு சிரிப்புத் தான் வந்தது. எப்படி இப்படி சிறுபிள்ளைத் தனமாக நடந்து கொள்ள முடிகின்றது என நினைத்து.

அவள் சிரிப்பதைப் பார்த்த சந்தோஷ், அவளை அறைக்குள் தள்ளிச் சென்றவன், "மதி, உனக்கு சிரிப்பு வருதா? எனக்கு வர்ற கோபத்துக்கு அவகிட்டே போய் எனக்கு உண்மை தெரியும்ன்னு கத்தணும் போல இருக்கு" எனப் படபடத்தான்.

"சந்து, ஒருத்தனுக்கு பொறுமை எத்தனை அவசியம்னு இப்போ உணர்றதா சொன்னீங்களே... பொறுமையைக் கத்துக் கொடுக்க உங்களுக்குக் கிடைச்ச ஒரு நல்ல சந்தர்ப்பம்ன்னு நினைச்சு விட்டுடுங்க..." என அவனை அமைதிப் படுத்த முயன்றாள் கவிமதி.

அவள் சொல்வதில் இருந்த உண்மை உரைக்க சந்தோஷும் சற்று நிதானமடைந்தான்.

அன்று சுமார் பதினோரு மணியளவில் வீட்டுக்கு வந்த சந்தியாவின் பிறந்த வீட்டினரை வரவேற்ற சந்தோஷ் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தான். அவர்கள் பேசிக் கொண்டிருந்தபொழுது யாரும் எதிர்பார்க்காத வண்ணம் டேனியல் அங்கு வந்து நின்றான்.

யாரும் எதிர்பார்க்கவில்லை என்று சொல்லவும் முடியாது. ஒருத்தர் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டு இருந்தாரே!

டேனியலைப் பார்த்தவர்கள், வெவ்வேறு விதங்களில் குழம்பினர். அவனைப் பார்த்த சந்தியா, 'இவன் எங்கே வந்தான். ஒருவேளை கவியைப் பார்க்க வந்திருப்பானோ?' என நினைத்துத் திகைத்தாள்.

கவிமதியோ, 'டேனி என்கிட்டே கூட சொல்லாம கொள்ளாம வந்திருக்கான்னா, ஒரு வேளை மாமா வரச் சொல்லியிருப்பாரோ?' எனச் சரியாக ஊகித்தாள்.

இத்தனை நாட்களில் டேனியலின் குணத்தைப் பற்றிப் புரிந்த சந்தோஷும் மனைவியைப் போலவே தான் யோசித்தான். ப்ரியங்காவிற்கோ, படபடப்பாகவும், குழப்பமாகவும் இருந்தது. டேனியலைப் பற்றி அறியாதவர்கள் அவன் யாரென்று பார்த்தனர்.

வீட்டிற்குள் வந்த டேனியலோ இத்தனை பேரை அங்கே எதிர்பார்க்காமல் திகைத்து நின்றான். 'ஒருவேளை கூப்பிட்டு வந்த என்னை அடிக்கப் போறாங்களோ?' என ஒரு கணம் நினைத்தவன், 'ச்சே ச்சே...! கவி வீட்ல எல்லோரும் நல்லவங்க தான்' என் மனம் தெளிந்தான்.



மதியழகனைப் பார்த்து, ''அங்கிள், வரச் சொன்னீங்களே... அப்பாவும் அம்மாவும் காலேஜ்ல ஒரு முக்கியமான வேலையை முடிச்சிட்டு சீக்கிரமா வரேன்னு சொன்னாங்க...'' என இழுத்தவன், மறந்தும் காதலி, மற்றும் தோழியை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

மதியழகன், ''வாங்க தம்பி! வந்து உட்காருங்க!'' என இருக்கையைக் காட்டியவர், ''உங்களைத் தான் எதிர் பார்த்துட்டு இருந்தேன்'' எனக் கூறி அங்கிருந்தவர்களை அவனுக்கு அறிமுகப்படுத்தினார்.

பின்னர், ''நீங்க கவியோட பிரெண்ட்ன்னு தெரிஞ்சதுமே இருந்த கொஞ்ச நஞ்ச தயக்கமும் போயிடுச்சு'' என விஷயத்தைப் போட்டு உடைத்தார்.

விஷயம் தெரிந்தவர்களுக்கு அவர் சொன்ன கடைசி வாக்கியம் முழுவதும் புரிந்தது. புரிந்தவர்கள் அனைவரும் வெவ்வேறு மனநிலைமையில் இருந்தனர். நான்கு பேர்களின் உள்ளங்கள் துள்ளிக் கொண்டிருந்தன. சந்தியாவின் உள்ளத்திலோ வெறுப்பின் தீ கொழுந்து விட்டு எரிந்தது. எது நடக்கக் கூடாது என அரும்பாடு பட்டாளோ அது நடந்தே விட்டது!

"ஏண்ப்பா சந்தோஷ், தம்பி நம்ம கவியோட பிரெண்ட்ன்னு முன்னாடியே சொல்லி இருக்கலாமே? இன்னைக்குக் காலையில அவரோட பேசறப்போ தான் தெரிஞ்சது'' என இளைய மகனைப் பார்த்துக் கேட்க,

''அது அப்பா... கவிக்கே ப்ரியாவோட விஷயம் இப்போ தான் தெரியும். அவளையும் இதுல எதுக்கு இழுக்கணும்ன்னுதான்...'' என இழுத்தான்.

சிரித்தவாறே, ''சாரிப்பா!'' என சந்தோஷிடம் சொன்னவர், டேனியலை அறிமுகப்படுத்தி, ''ப்ரியாக்கும்

டேனிக்கும் ஒருத்தரை ஒருத்தர் பிடிச்சி இருக்கு. ஆனா, இன்னும் ஒருத்தர்கிட்டே ஒருத்தர் அவங்க விருப்பத்தைச் சொல்லிக்கலை. பெரியவங்க நாம அவங்களை ஒண்ணு சேர்த்து வைக்கறதுதானே நியாயம்'' என அனைவரிடமும் பொதுவாகக் கூறினார் மதியழகன்.

பின், ''விக்னேஷ், சந்தோஷுக்கு ஏற்கனவே டேனியைத் தெரியும். எனக்கும் அவர் கூட பேசினதுல ரொம்பவும் பிடிச்சுப் போச்சு. அதான் அவரோட அப்பா - அம்மாவையும் வரச் சொன்னேன். நீ என்னப்பா சொல்லற?'' என மூத்த மகனிடம் அபிப்ராயம் கேட்டார்.

''ப்ரியாக்கு இஷ்டம்ன்னா நான் என்ன சொல்லப் போறேன்? அவளோட சந்தோசம் தான் நமக்கு முக்கியம்'' எனக் கூறி அவன் மனைவியின் மனதில் எரிபொருளை ஊற்றினான்.

அவன் பதிலில் மகிழ்ச்சியடைந்த தந்தை, ப்ரியங்காவை தன்னருகில் அழைத்து, ''என்னமா? இப்போ சந்தோஷமா?'' என்றார்.

தந்தையின் கேள்விக்கு வாயால் பதில் சொல்லாமல் தலையால் பதில் சொன்னவள், தன் சின்ன அண்ணியிடம் திரும்பி, ''தேங்க்ஸ் அண்ணி!'' என்றாள் வெட்கத்துடன்.

கவிமதிக்கே நடந்து கொண்டிருப்பது அனைத்துமே கனவில் இருப்பதைப் போல இருக்க, அவளும் புன்னகையுடன் தலையாட்டினாள்.

மதியழகன், ''சந்தோஷ் டேனியைப் பத்தி சொன்னவுடனே நிறைய தடவை அவர்கிட்டே பேசினேன். பேசின வரைக்குமே எனக்கு திருப்தியா தான் இருந்தது. கவி மாதிரி தானே அவ பிரெண்டும் இருப்பார். நியாயமா நான் தான் அவங்களைப் போய் பார்த்திருக்கணும்.



ஆனா, அவங்க இன்னும் பொண்ணைப் பார்க்கலைன்னு தெரிஞ்சதும் இங்கே வரச் சொன்னேன். சரி எல்லோருக்கும் ஆச்சர்யமா இருக்கட்டும்ன்னு நினைச்சுத் தான் யார்கிட்டேயும் சொல்லலை. என்னோட மனைவியைத் தவிர'' எனக் கேலியாகப் பேசிக் கொண்டிருந்தார்.

அவர் பேசுவதைக் கேட்டுத் தைரியமடைந்த டேனியல், ''கவி, உன்கிட்டே சொல்லலாம்ன்னு செல்லுக்குக் கூப்பிட முயற்சி பண்ணினேன்...'' எனத் தன் தோழியிடம் விளக்கமளிக்க,

''சாரி டேனி! சுவிட்ச் ஆப் பண்ணியிருந்தேன்'' எனச் சொல்லி, ''கங்கிராட்ஸ்!'' என நண்பனை மனதார வாழ்த்தினாள்.

டேனியலின் பெற்றோர்களும் வர, ப்ரியங்கா படித்து முடித்து, கவிமதிக்கும் குழந்தை பிறந்த பின்னர் திருமணத்தை வைத்துக் கொள்ளலாம் என முடிவு செய்தனர்.

மிகுந்த சந்தோஷத்தில் இருந்த மதியழகன் டேனியலிடம் பாட்டுப் பாடுமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

டேனியல் என்ன பாட்டு பாடுவது என யோசித்துக் கொண்டிருக்கையிலேயே, சந்தோஷ், ''டேனி, 'மாமா மாமா உன் பொண்ணைக் கொடு மாமா'ன்னு, பாஸ் என்கிற பாஸ்கரன் படத்துல வர பாட்டைப் பாடு'' என எடுத்துக் கொடுத்தான்.

சந்தோஷுடன் சேர்ந்து அனைவரும் டேனியலைத் தூண்ட, அவனோ மறுத்துக் கொண்டிருந்தான். மதியழகன், ''மரியாதை எல்லாம் மனசுல இருந்தா போதுங்க தம்பி! இப்போ நீங்க அந்தப் பாட்டைப் பாடியே ஆகணும்'' என அவனை வற்புறுத்தினார்.

''நான் அந்தப் பாட்டைப் பாடறேன். ஆனா, ஒரு கண்டிஷன். நீங்க உங்கப் பிள்ளைகளைக் கூப்பிடற மாதிரி என்னையும் பேர் சொல்லிக் கூப்பிடணும்'' என அவர் வற்புறுத்தலுக்கு மேலே ஒரு கோரிக்கையை வைத்தான்.

அவரும் கோரிக்கையை நிறைவேற்றுவதாகக் கூற, அவர் வற்புறுத்தலை டேனியல் நிறைவேற்றினான்.

ப்ரியங்காவின் முகத்தில் இருந்த சந்தோஷத்தைப் பார்த்து அனைவரும் நிறைவு கொண்டனர். வீடே களை கட்டியிருக்க, சந்தியாவுக்குத் தான் களை இழந்து காணப் பட்டது.

சந்தியா தன் கோபத்தை எல்லாம் கணவனிடம் காட்டினாள். ''நான் தான் முன்னாடியே சொன்னேனே அசோக் ப்ரியாவை விரும்பறார்ன்னு. மாமா உங்ககிட்டே கேட்டப்போ உங்களுக்கு இஷ்டமில்லைன்னு சொல்லி இருக்க வேண்டியதுதானே?'' என வெடித்தாள்.

''சந்தியா, நான் எப்படி இஷ்டமில்லைன்னு சொல்ல முடியும். நீயே யோசிச்சுப் பாரு. இங்கே அசோக் மட்டும் தான் விரும்பறார். ஆனா, அவங்க விஷயத்துல ரெண்டு பேரும் விரும்பறாங்க. ப்ரியாவோட விருப்பமும் முக்கியம் இல்லையா?'' என ஒரு அண்ணனாக மனைவியிடம் உண்மை நிலவரத்தைக் கூற முயன்றான்.

''இப்போ நான் அசோக்குக்கு என்ன பதில் சொல்லறது?'' என்றவளிடம், ''கொஞ்ச நாள் ஆனா அசோக் சரியாயிடுவார். நீ கவலைப்படாத'' என மனைவியைச் சமாதானப்படுத்தினான். சமாதானமடைவதற்கு பதிலாக சந்தியாவின் வெறுப்பு அனைத்தும் கவிமதியின் பால் திரும்பியது.



# 18



இரண்டு வாரங்கள் கழித்துத் தன் அண்ணனை அழைத்துக் கொண்டு அவந்திகாவை பார்க்கச் சென்றாள் கவிமதி.

செல்லும் வழியில் தன் அண்ணனிடம், ''அண்ணா, வர வர வேலை வேலைன்னு ரொம்ப அலையறீங்களா? ஏன் இப்படி இளைச்சுப் போயிருக்கீங்க?'' என்றாள் கவலையுடன்.

''என்ன பண்ணறது கவி? நீ சமைச்சதை சாப்பிட்டு ரொம்ப நாள் ஆச்சே அதான்'' என எப்பொழுதும் போல தங்கைக்கு சுடச் சுட ஐஸ் வைத்தான்.

''நீங்க சொன்னதை அம்மா கேட்டாங்கன்னா, உங்களுக்கு இப்போ கிடைக்கிற சாப்பாடும் கிடைக்காது. இருங்க... அம்மாகிட்டே வத்தி வைக்கிறேன்'' என அண்ணனை வம்புக்கு இழுத்தாள் தங்கை.

''அய்யோ கவி! அப்படி மட்டும் பண்ணிடாதே'' எனப் பொய்யாக அலறியவன், ''அது வேற ஒண்ணுமில்ல கவி... வந்து... நான் கொஞ்ச நாளா ஜாக்கிங் போறேன்'' என்றான் வழிந்தவாறே.

தன் அண்ணனிடம் அவள் பல தடவை சொல்லிப் பார்த்தும் கேட்காதவன், தற்பொழுது மாறியிருப்பதை எண்ணி வியந்தாள். அதையே வினோத்திடமும் தெரிவித்தாள்.

''ஏண்ணா! எத்தனை தடவை நான் சொல்லி இருப்பேன். அப்போவெல்லாம் கேட்டீங்களா? இப்போ எப்படி வந்தது இந்த ஞானோதயம்'' எனச் சிரித்தவாறே கேட்டுக் கொண்டிருந்தவளிடம், ''அதுவா! செங்கல்பட்டில்...'' எனக் கூறி அசடு வழிந்தான்.

அவந்திகாவிற்காகத் தான் இவ்வாறு மெனக் கெடுகிறான் எனப் புரிந்தவுடன் பீறிட்டு வந்த சிரிப்பை அடக்க முடியாமல் விழுந்து விழுந்து சிரித்தாள் கவிமதி.

''அண்ணா, நீங்க கல்யாணத்துக்கு அப்புறம் உடம்பு இளைக்கறதுக்கு ரொம்பவும் மெனக்கெட வேண்டாம். ஏன்னா அவந்திகாவுக்கு சமைக்கவே தெரியாது'' என அவன் தலையில் இடியை இறக்கினாள். அப்படித்தான் நினைத்தாள்!

வினோத்தோ, ''அவந்திகாவுக்குத் தெரியலைன்னா என்ன? அதான் என் தங்கைக்கு நல்லாத் தெரியுமே. அவளோட வீட்டில் இருந்து டெய்லியும் எடுப்பு சாப்பாடு எடுத்துக்குவோம். அண்ணனுக்கும் தோழிக்கும் இதைக் கூட பண்ண மாட்டாளா என் தங்கை?'' என எளிதாக ஒரு யோசனை சொல்லிச் சிரித்தான்.

''பயங்கரமான ஆளுண்ணா நீங்க. பொழச்சுக்குவீங்க! அதெல்லாம் அவ நல்லா சமைப்பா'' எனக் கூறிய தங்கையிடம் தன் பற்கள் அனைத்தையும் காட்டினான் அண்ணன். பேசியவாறே அவந்திகாவின் வீட்டை அடைந்தார்கள்.

தன் தோழியிடம் சுற்றி வளைத்து நேரத்தை வீணாக்காமல் நேரடியாக விஷயத்துக்கு வந்த கவிமதி, அவளை திருமணம் செய்ய ஒருத்தர் விரும்புவதாகவும், அவரைப் பார்க்கத் தற்பொழுது செல்வதாகவும் கூறி அவளைக் கிளம்ப வைத்தாள்.



செல்லும் வழியில், யாரைப் பார்க்க அழைத்துச் செல்கிறாள் இவள்? யாராக இருக்கும் என்று அறியும் ஆவல் அவந்திகாவிற்கு இருக்கத்தான் செய்தது... எத்தனை நாட்கள் தான் வீணாப் போன காதலனை நினைத்து மனதை வருத்திக் கொள்வது.

இது மாதிரி இருக்கும் ஆண்களை நினைத்துத் தான் நிறையப் பெண்கள் தங்கள் வாழ்வை கெடுத்துக் கொள்கிறார்கள். அதே போல தானும் இருக்கக் கூடாது என்ற முடிவுக்கு ஏற்கனவே வந்திருந்தாள். ஆனால் செயல்படுத்தத் தான் அவளுக்கு தயக்கமாக இருந்தது.

தன் நிலையைப் புரிந்து கொண்ட, மனதை அறிந்து கொண்ட ஒருவன் தான் தன் வாழ்க்கைத் துணையாக வரவேண்டும் என யோசித்து வைத்திருந்தாள். இன்று தன் தோழி அவளிடம் அதைப் பற்றி பேசவும் சரி என ஒத்துக்கொண்டு அவர்களுடன் வெளியே கிளம்பினாள்.

தன் சிந்தனையில் உழன்று கொண்டிருந்தவளை வினோத் ஒரு குலுங்கலுடன் நிறுத்திய காரின் அசைவுகள் நினைவுலகத்திற்கு மீட்டு வந்தது. ஒரு புத்தகக் கடையின் முன் கவிமதி மட்டும் இறங்கிக் கொண்டு வினோத்திடம் இருந்து விடைபெற்றாள்.

வினோத்தும், ''இன்னும் அரை மணி நேரத்துல வரேன் கவி!'' எனக் கூறியவன், அவந்திகா காரில் இருந்து இறங்கும் முன் காரை அங்கிருந்து கிளப்பினான். அதற்கு மேல் வினோத் ஒரு வார்த்தை பேசாமலேயே அவளுக்கு அனைத்துமே விளங்கியது.

விளங்கியவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவளின் உணர்வுகளை அவளாலேயே புரிந்து கொள்ள முடியவில்லை. வினோத் தன் காதலை அவளிடம் சொல்லிய

பொழுதும் ஒன்றும் சொல்லத் தோன்றாமல் அமர்ந்திருந்தாள்.

அவந்திகா பேச நினைத்து வந்ததை எதுவுமே அவனிடம் பேசவில்லை. என்ன பேசுவது? வினோத்துக்குத் தான் அனைத்து விஷயங்களும் தெரியுமே என நினைத்து அமைதியாக இருந்தாள்.

அரைமணி நேரம் கழித்து கவிமதியை இறக்கி விட்ட அதே புத்தகக் கடைக்கு வந்த வினோத், தன் தங்கையைத் தேடிக் கண்டுபிடித்து அவளிடம் சென்றான். அவன் முகத்தில் இருந்து ஒன்றையும் கண்டு பிடிக்க முடியாமல், ''அவந்திகா என்ன சொன்னா? அவ எங்கே?'' என்றாள் பரபரப்புடன்.

''யோசிச்சு சொல்லறேன்னு சொல்லி ஆட்டோ பிடிச்சு வீட்டுக்குப் போயிட்டா. நீ வா நாம கிளம்பலாம்'' என்றான்.

அவனுடன் நடந்தவாறே, ''அண்ணா, நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க. அவள் சரின்னுதான் சொல்லுவா. இல்லைன்னா அவளை விட்டுடுவேனா?'' எனத் தன் அண்ணனுக்கு தைரியமளித்தாள்.

அவள் சொன்னதைக் கேட்டாலும் ஒன்றும் பேசாமல் ஒரு விரக்திப் புன்னகையை மட்டும் சிந்தியவனிடம், ''நீங்க வருத்தப்படாதீங்க. என் அண்ணனுக்கு என்ன குறைச்சல்ன்னு யோசிச்சு பதில் சொல்லறதா சொல்லிட்டுப் போயிருக்கேன்னு இப்பவே போன் பண்ணறேன்'' என அவள் அவந்திகாவின் எண்ணை அழுத்தி முடிக்கும் முன், அதற்கு மேல் தாங்க முடியாமல் வினோத் சிரித்து விட்டான்.

அத்தனை நேரமும் அருகில் பதுங்கியிருந்த அவந்திகா, ''போன் பண்ணி மினிட்ஸ் எல்லாம் வேஸ்ட்



பண்ணாதே. நேர்லயே வந்துட்டேன்'' என்றவாறே ஓடி வந்தாள்.

அவர்கள் இருவரும் நடத்திய நாடகம் புரிய, ஆளுக்கு நான்கு அடிகள் முதுகில் கொடுத்துவிட்டு தான் மறு வேலையைப் பார்த்தாள் கவிமதி.

''உங்க ரெண்டு பேரையும் சேர்த்து வச்சா எனக்கு ஆப்பு வைக்கறீங்களா? சரியான கேடிங்க ரெண்டு பேரும்'' எனத் திட்டவும் மறக்கவில்லை.

இருவரின் முகத்தில் இருந்த மலர்ச்சியைப் பார்த்து சந்தோஷப்பட்டவள் அருகில் வந்து நின்ற கணவனைப் பார்த்து வியந்தாள். ''நீங்க எங்க வந்தீங்க?'' என சந்தோஷை அங்கு எதிர்பார்க்காமல் கேட்டாள்.

''நான் தான் கவி வரச் சொன்னேன். என்னோட வருங்கால மனைவியை அவன் பார்க்க வேண்டாமா?'' என வினோத் சொல்ல,

நமுட்டுச் சிரிப்புடன், ''மதி அவன் சொல்லறதை அப்படியே நம்பிடாதே. நீ சொன்ன மாதிரி அவன் பக்கா கேடி தான். இவங்க ரெண்டு பேரும் ஜாலியா ஊர் சுத்தலாம்ன்னு பிளான் பண்ணி, உன்னைக் கழட்டி விடத் தான் என்னை வரச் சொன்னான்'' என மனைவியிடம் விளக்கினான் சந்தோஷ்.

பின் நண்பனிடம், ''டேய்... நாங்களும் இதை எல்லாம் கடந்து தான் வந்திருக்கோம். என்னையா ஏமாத்தப் பார்க்கிறே?'' என்றான் கேலியாக சந்தோஷ்.

வினோத்தோ, உனக்கு சளைத்தவனா நான் என சவால் விடுவது போல, ''அடடா! இதுல இப்படி வேற விஷயம் இருக்கா? இந்த ஐடியா எனக்குத் தோணாமப் போயிடுச்சே'' என வருத்தப்பட்டுக் கொண்டான், போலியாக.

பின்னர், ''இதுக்குத் தான் உன்னை மாதிரி பிரெண்ட் கூட இருக்கணும். இப்போ ஐடியா கொடுத்திட்டே இல்ல... இன்னும் எதுக்கு இங்க நின்னு டைமை வேஸ்ட் பண்ணற? சீக்கிரம் உன்னோட வைஃப்பைக் கூட்டிட்டுக் கிளம்பு, கிளம்பு...'' எனத் தன் நண்பனை விரட்டினான, ஜாலியாக.

அவர்கள் ஒருவரை ஒருவர் கிண்டல் கேலி போன்ற வகையறாக்களை முடித்துவிட்டு அங்கிருந்து கிளம்பி அவந்திகாவின் பெற்றோர்களிடம் சென்று பேசினார். அவர்களுக்கோ சந்தோஷத்தின் அளவு பிடிபடவில்லை. அந்த வார இறுதியில் பெரியவர்களை அழைத்துக் கொண்டு வருவதாகக் கூறி மூவரும் விடை பெற்றனர்.

வீட்டிற்குச் சென்ற சந்தோஷ் தன் மனைவியை ஆசையுடன் பார்த்தவன், ''மதி, பேசாம நீ காதலர்களை சேர்த்து வைக்கிற ஏஜென்சி ஆரம்பிச்சுடு. நிறையப் புண்ணியம் சேரும். அதோட காசும் மழையாக் கொட்டும் நமக்கு'' என அவளைச் சீண்டினான்.

''வேறே வேலை இல்ல. இன்னும் கொஞ்ச நாள்ல உங்களுக்கு ப்ரொமோஷன் கிடைச்சுடும். அப்புறம் நம்ம குழந்தையைப் பார்த்துக்கறதுக்கே நேரம் கிடைக்கறது கஷ்டம்'' என்றாள்.

''ஆமாம் மதி. நீ சொல்லறது கரெக்ட் தான். ஆனா, உன்கிட்டே ஒண்ணு கேட்கணும்...'' எனத் தயங்க, ''எதுவா இருந்தாலும் சொல்லுங்க சந்து!'' என ஊக்கினாள் மனைவி.

''வ... வந்து... வேலைக்குப் போகாம வீட்ல இருக்கறது கஷ்டமா இல்லையா? என்னால தானே நீ வேலைக்குப் போகாம இருக்க?'' என நினைத்ததை ஒருவாறாகக் கேட்டு முடித்தான்.



''வேலைக்குப் போகாததுக்கு காரணம் நீங்க இல்ல. நான் பார்ட் டைம் வேலைக்கு அப்பவே அப்ளிகேசன் போட்டு வச்சிருந்தேன்'' என அவள் முடிக்கும் முன், ''என் மேலே இருந்த கோபத்துல தானே போட்ட?'' என்றான் கவலையாக.

அவன் கேட்டதுக்கு பதில் கூறாமல், ''போட்டு வச்சிருக்கேன். வேலை கிடைச்சா போறேன். குழந்தை பிறந்ததுக்கு அப்புறம் கொஞ்ச நாள் கழிச்சு ஃபுல் டைம் ஜாப் என் ஃபீல்ட்லேயே பார்த்துக்கறேன். அத்தை - மாமாகிட்டேயும் எதையாவது சொல்லி சமாளிச்சுக்கறேன்'' என முடிவாகச் சொல்லி அவனைச் சம்மதிக்க வைத்தாள்.

* * *

இரண்டு வாரங்கள் கழித்து, இரவு உணவின்போது, விக்னேஷ் அனைவரிடமும் சந்தியா கர்ப்பமான விஷயத்தைக் கூற, சந்தியா எதிர்பார்த்தபடியே அனைவரும் மகிழ்ச்சியுடன் அவளைக் கொண்டாடினர். ஆனால், அவள் எதிர்பாராத வேறொன்றும் நடந்தது.

மதியழகன், ''கவி நம்ம வீட்டுக்கு வந்தவுடனே மடமடன்னு நிறைய நல்ல விஷயங்கள் கடகடன்னு நடக்குது'' எனக் கூறி சந்தியாவின் சந்தோஷத்தைப் பொசுக்கினார்.

அவர் கவிமதி வீட்டிற்கு வரும் முன் சந்தியாவைப் பற்றியும் இவ்வாறு தான் புகழ்ந்தார். இன்னும் அவ்வாறு தான் அவளைப் பல விஷயங்களுக்குப் புகழ்வார். அதை எல்லாம் அப்பொழுது மறந்த சந்தியாவிற்கு எரிச்சல் தான் நிரம்பி வழிந்தது.

அதைப் பற்றி எல்லாம் யாருமே கவலைப்படாமல் சந்தோஷத்தை நுகர்ந்தவாறே உணவை ஒரு கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

அன்று அலுவலகத்தில் நடந்த விஷயத்துக்குப் பின் சில காலம் கவிமதியுடன் சரிவர பேசாமல் இருந்த விக்னேஷ், பின்னர் என்ன நினைத்தானோ, இப்பொழுதெல்லாம் முன் போல கவிமதியுடன் பேச ஆரம்பித்திருந்தான். இதைப் பார்த்து சந்தோஷும் நிம்மதியடைந்தான்.

ஆனால், சந்தியா தான் இன்னுமே கவிமதியிடம் ஒதுக்கத்துடன் நடந்து கொண்டாள். அலுவலகத்தில் நடந்ததை அவ்வப்பொழுது சந்தோஷுக்கு ஞாபகப்படுத்தி, அதனால தான் சகஜமாகப் பழக முடியவில்லை என்று வேறு கூறினாள்.

உண்மையை அறியாமல் இருந்திருந்தால் சந்தோஷும் இவள் சொல்வதை உண்மை என்று தான் நினைத்திருப்பான். ஆனால், அவன் கைகள் கட்டப்பட்ட நிலையில் ஒன்றும் சொல்ல இயலாமல் சந்தியா சொன்னதை ஒரு தலையசைப்புடன் கேட்டுக் கொண்டான்.

அவனின் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டல்லவா? அடிக்கடி கவிமதியைப் பற்றிய சந்தியாவின் குத்தல் பேச்சைப் பொறுக்க முடியாமல் ஒரு நாள் சந்தியாவை வேறு விதமாக எதிர் கொண்டான் சந்தோஷ்.

ஒரு மாதம் கழித்து, அனைவரும் அமர்ந்து இரவு உணவை உட்கொண்டிருந்தனர். அப்பொழுது சந்தோஷ், சந்தியாவிடம் ''அண்ணி, உங்க புது வைரக் கம்மலை எங்க வாங்கினீங்க?'' எனக் கேட்டு, சந்தியாவையும் கவிமதியையும் ஒரு சேர திகைக்க வைத்தான்.

சாப்பிட்டுக் கொண்டிருந்த சந்தியாவுக்கு புரை ஏற, தலையைத் தட்டி, தண்ணீர் குடித்து சிறிது நேரம் சமாளித்த பின்பே, ''அண்ணியா? இது என்ன புதுசா



இருக்கு, சந்தோஷ்? கிண்டல் பண்ணறியா?'' என்றாள் சாதாரணமாக வரவழைத்துக் கொண்ட குரலில்.

''கிண்டல் எல்லாம் பண்ணலை அண்ணி! இனிமேல் அப்படித்தான் உங்களைக் கூப்பிடுவேன். பார்க்கிற எல்லோருக்கும் நாம விளக்கிட்டு இருக்க முடியுமா?''

''அண்ணியா! இத்தனை நாளா நாங்க சொல்லிக் கேட்கவே மாட்டேன்னுட்ட. இப்போ கவி வந்து சொல்லித் தான் உன் புத்தியில ஏறுச்சா? மருமக வந்தாலும் வந்தா உன்னை நல்லபடியா மாத்திட்டா. ப்ரியா கூட இப்போவெல்லாம் உன்னை அண்ணான்னு தான் சொல்லறா போல'' எனத் தன் சின்ன மருமகளின் பெருமை பாடத் தொடங்கினார் மதியழகன்.

தந்தையைப் பார்த்துச் சிரித்தவன், ''அண்ணி, நான் கேட்டதுக்கு எங்கே பதிலைக் காணோம்? சொல்லுங்க. எந்தக் கடையில வாங்கினது?'' என காரியத்தில் கண்ணானான்.

''நீ எதைப் பத்தி கேட்கிறேன்னு எனக்குத் தெரியலை'' என சமாளித்துவிட்டு, ''சந்தோஷ், இப்போ நீ எதுக்கு என்னை அண்ணின்னு கூப்பிடறே? எப்போதும் போல ஒழுங்கா சந்தியான்னு கூப்பிடு.

அப்புறம் நீ அண்ணின்னு கூப்பட்டா வேற யாரையோ கூப்பிடறேன்னு நினைச்சுக்குவேன்'' என ஜோக் சொல்லிவிட்டதாக நினைத்துச் சிரித்தாள் சந்தியா.

'இவன் இந்தப் பேச்சை விடமாட்டானா' என நினைத்துக் கொண்டிருந்த சந்தியாவை விடாமல் கேள்விகள் கேட்டு, திகைக்க வைத்தான் சந்தோஷ்.

''இல்லைங்க அண்ணி! அவங்கவங்களுக்குக் கொடுக்கிற மரியாதையை கொடுத்துத் தானே ஆகணும். ஆனா,

நீங்க இன்னும் எனக்கு பதிலே சொல்லலை. உங்களுக்கு ஞாபகமில்லையா? நீங்க அசோக்கைப் பார்க்க 'ரெசிடென்சி'க்குப் போனப்போ போட்டுட்டுப் போனீங்களே. அது...'' என்றான் அவனும் விடாமல்.

'நான் அசோக்கைப் பார்க்கப் போனது இவனுக்கு எப்படித் தெரியும்? ஒரு வேளை விக்னேஷ் சொல்லி இருப்பாரோ? விக்னேஷ் கிட்டே அசோக் வாங்கிக் கொடுத்ததா இல்லை சொல்லி வச்சிருக்கேன்' எனக் குழம்பித் தவித்தவள், அவனுக்கு பதிலளிக்காமல் இருக்கவே,

''என்னம்மா, மறந்துடுச்சா? நாம எப்போதும் வாங்குற கடையில தான் இருக்கும்'' என இளைய மகனின் உள்குத்து அறியாமலேயே சந்தியாவுக்கு உதவிக்கரம் நீட்டினார் மதியழகன்.

அதைப் பிடித்துக் கொண்டவள், ''ஆமாம் மாமா! நாம எப்பவுமே அங்கே தானே வாங்குவோம்'' என்றாள், அந்தப் பேச்சை விட்டால் போதும் என்ற எண்ணத்துடன்.

சந்தோஷோ, விடாமல், ''உங்களுக்கு டைம் கிடைக்கும் போது என்னோட வாங்க அண்ணி. அதை எடுத்துட்டுப் போய் அதே மாதிரி கவிக்கும், ப்ரியாக்கும் செய்யச் சொல்லலாம்'' என்றான்.

''ச... சரி சந்தோஷ்'' என்றாள் சந்தியா தடுமாற்றத்துடன்.

'ம்ம்ஹூம்... விட்டா சந்தியா அக்காக்கு ஹார்ட் அட்டாக் வர வைச்சாலும் வர வைச்சுடுவார்' என எண்ணிய கவிமதி, பேச்சை மாற்றும் விதமாக, ''மாமா, உங்களுக்குத் தெரியுமா? டேனிக்கு சென்னைக்கு மாற்றல் கிடைச்சிருக்கு. ப்ரியா சொன்னாளா?'' எனக் கேட்டு, சந்தோஷை திசை திருப்பினாள்.



''அப்படியா? சொல்லவே இல்ல ப்ரியா'' என மகளைப் பிடித்துக் கொண்டார் மதியழகன்.

அவளோ, ''மறந்துட்டேன்ப்பா சாரி!'' எனத் தந்தையிடம் மன்னிப்புக் கேட்டவள், 'இப்படி போட்டுக் கொடுத்துட்டீங்களே அண்ணி' என கவிமதியிடம் ஒரு பார்வையை வீசினாள்.

'ஆகா! இதேதுடா வம்பாகி விட்டது' என நினைத்த கவிமதி, ப்ரியங்காவிடம் கண்களால் மன்னிப்பு கோரி விட்டு,

''மாமா, அப்புறம் வினோத் அண்ணாக்கு ஒரு மாசத்துல கல்யாணம் வச்சுக்கறதா பேசியிருக்காங்க'' என வேறு பேச்சிற்குத் தாவினாள். அதன் பின் சந்தோஷ் அந்தக் கம்மலைப் பற்றிய பேச்சை எடுக்காமல் போகவே நிம்மதியடைந்தாள் கவிமதி.

## 19



உணவு முடிந்து இரவு அறைக்கு வந்த சந்தோஷிடம், ''சந்து, என்ன நினைச்சுட்டு இருக்கீங்க? எதுக்கு சந்தியா அக்காகிட்டே அப்படி நடந்துகிட்டீங்க? அதுவும் அவங்க பிரெக்னன்ட்டா இருக்கும்போது'' என்றாள் கவிமதி.

''நம்ம ரெண்டு பேருக்கு நடுவுல எவ்வளவு பிரச்சனை பண்ணி, கஷ்டப்படுத்தினா. அதை எல்லாம் மறந்துட்டு இருந்தா, என்கிட்டேயே வந்து திரும்பத் திரும்ப நீதான் பணத்தை எடுத்தேன்னு சொல்லறதை ஜீரணிக்க

முடியலை மதி'' என்றான் கண்களிலும் குரலிலும் கோபத்துடன்.

''சந்து, அவங்களைப் பத்தி உங்க அண்ணனுக்குத் தெரிஞ்சு, அதனால அவர் மனசுல தன் மனைவியைப் பத்தி ஒரு நெருடல் வந்ததுன்னா அவங்க குடும்ப வாழ்க்கை பாதிக்காதா? அதுதான் உங்களுக்கு வேணுமா சந்து?''

''அ... அது... அப்படி இல்ல. எனக்கும் விஷயம் தெரியும்ன்னு, அவளுக்குத் தெரிஞ்சிருக்கறது நல்லது தானே. அதான்...'' என்றான் திக்கித் திணறி, அவளுக்குப் புரிய வைக்க முடியாமல்.

''அவங்களுக்கு முக்கியமா நாம பிரியணும். ஆனா, நீங்களும் நானும் ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுகிட்டா, நமக்கு நடுவுல யார் வந்தாலும் நம்மை ஒண்ணும் பண்ண முடியாது. அதை புரிஞ்சுக்கோங்க முதல்ல.

அதை சந்தியா அக்காவே இன்னும் சில நாட்கள்ல புரிஞ்சுகிட்டு, அப்புறம் ஒதுங்கிடுவாங்க. ப்ளீஸ்... சந்து! நான் சொல்லறதைக் கேளுங்க. நமக்குத் தெரிஞ்சிடுச்சுன்னு அவங்களுக்குத் தெரிஞ்சா என்ன? தெரியலைன்னா என்ன?''

அவள் சொல்வதைக் கேட்டவனின் முகமும் அகமும் ஒருசேரக் கனிந்தது. அவளுக்கு அருகில் சென்று அவள் முகத்தை கைகளில் ஏந்தியவாறே, ''மதி, நீ கிடைச்சது எனக்கு எவ்வளவு பெரிய வரம் தெரியுமா? உனக்குக் கெடுதல் நினைச்சவங்களுக்குக் கூட நல்லது நினைக்கற உன்னைப் போய், என்னவெல்லாம் சொல்லிட்டேன். ச்சே!'' என்றான் கலங்கிய குரலில்.

''அந்த சமயத்துல, உங்களுக்கு என்னைவிட உங்க பிரெண்ட் பொய் சொல்ல மாட்டாங்க என்ற நம்பிக்கையில அப்படி நடந்துகிட்டீங்க. நம்ம ரெண்டு பேரும் இனி



அந்த விஷயத்தைப் பத்தி மறந்துடலாம். எப்பவுமே அதைப் பத்தி பேச வேண்டாம். சரியா?'' என்றாள்.

''அத்தோட, உங்களை மட்டும் நான் வார்த்தைக்கு வார்த்தை என்னைப் புரிஞ்சுக்கலையேன்னு சொன்னேனே தவிர நானும் அப்படித் தானே இருந்திருக்கிறேன். உங்களோட அவசர புத்தியைப் பத்தி நானும் உணர்ந்திருந்தா அப்படி ஒரு கடிதம் எழுதி இருக்க மாட்டேன்'' எனத் தன் கணவனை சமாதானப்படுத்தினாள்.

''நான் பண்ணின தப்பைக் கூட உன் மேலே எடுத்துப் போட்டுப் பார்க்கிற மதி. இனிமேல் நான் உன்னை என் மூச்சு இருக்கிற வரைக்கும் திட்ட மாட்டேன் மதி!'' என அவசரமாகக் கணவன் வாக்களிக்க,

''மை டியர் புருஷா! இப்படி எல்லாம் அவசரப்பட்டு வாக்குக் கொடுத்துட்டு அப்புறம் கடைசியில மாட்டிகிட்டு முழிக்காதீங்க, சொல்லிட்டேன்'' என எச்சரித்தாள் ஆசை மனைவி.

கவிமதி அவனை அழைத்த விதத்திலேயே அவனுக்கு மகிழ்ச்சியும் நிம்மதியும் ஒருங்கே கிடைக்க, ''உன்கிட்டே மாட்டிட்டு முழிக்க மாட்டேன். உன்னைத் தான் முழிக்க வைப்பேன் மதி என் மந்தி!'' என்றான் அவனும் உல்லாசமாக.

அவனுடன் இணைந்து சிரித்தவள், அவன் மார்பில் வசதியாக சாய்ந்து கொண்டாள். அவளாக வந்து சாய்ந்து கொண்டதில் பேரானந்தம் அடைந்த கணவன், அவளை, அவளுக்குச் சொந்தமான இடத்தில், இறுக்கி, அணைத்துப் பாதுகாப்பாக வைத்துக் கொண்டான்!

இனியும், வாழ்க்கை முழுவதும் வைத்துக் கொள்வான்! இப்பொழுது அதற்கு வேண்டிய பொறுமையும் அவனுக்கு நிறையவே இருந்தது.

* * *

மேலும் இரண்டு வாரங்கள் ஓடி இருக்க, கவிமதி தன் அண்ணனின் திருமணத்திற்காகப் பிறந்த வீட்டிற்குச் சென்றிருந்தாள்.

கவிமதி தன் தோழி அவந்திகாவிற்கு துணி எடுப்பதற்கு, நகை வாங்குவதற்கு என அவளுடன் சுற்றிக் கொண்டிருந்தாள். இவர்களுடன் ப்ரியங்காவும் சேர்ந்துக் கொள்ள, சந்தியாவுக்கு தான் நினைத்தது எதுவுமே நடக்கவில்லை என்ற இயலாமையினால் எரிச்சல் வந்தது.

டேனியல் முன்பு தெரிவித்திருந்தபடியே தன் பணியை மாற்றிக் கொண்டு சென்னை வந்துவிட, அவன் வந்த விவரத்தை கவிமதியை அழைத்து, தெரியப்படுத்தினான். அவனைப் பார்க்கச் செல்லலாம் என்று முடிவு செய்து தன் தோழி அவந்திகாவையும் அழைத்தாள்.

அவளோ, ''எனக்கு முக்கியமா வேற வேலை இருக்கு. நீங்க மட்டும் இப்போ மீட் பண்ணுங்க. நான் அப்புறமா அவரைப் பார்க்கறேன். எப்படியும் இனி சென்னைல தானே இருக்கப் போறாங்க'' என்றாள்.

அவள் சொல்வதில் இருந்த நியாயத்தைப் புரிந்து கொண்டு அவள் மட்டும் கிளம்பினாள். ஆனால் ப்ரியங்காவும் அவளை வால் போல தொடர்ந்து சென்றாள்.

அவளின் செயலைப் பார்த்துப் புன்னகைத்த கவிமதி, ''ப்ரியா, உனக்கு வேறே வேலை இல்லையா? எதுக்கு இப்படி என்னோட சுத்திட்டு இருக்க?'' என்றாள் ஒரு விஷமச் சிரிப்புடன்.

''என்ன பண்ணறதுன்னு நீங்களே சொல்லுங்க. டேனியைப் பார்க்கறதுக்கு எனக்கு இதை விட்டா வேற வழியே இல்ல. டேனியை தனியா மீட் பண்ணலாம்ன்னு நினைச்சு அவர்கிட்டே சொன்னா என்ன சொன்னார் தெரியுமா?



'ரியா, நம்மைப் பத்தின விஷயம் வெளில இன்னும் யாருக்கும் தெரியாது. அதனால வீணா மத்தவங்க கண்ணுல பட்டு நம்ம பெத்தவங்களைக் கஷ்டப்படுத்த வேண்டாம்'ன்னு சொல்லறார். அதான்...'' எனச் சிரித்தாள்.

இருவரும் டேனியலைப் பார்த்து சிறிது நேரம் பேசிய பின் சினிமாவிற்குச் செல்லலாம் என முடிவு செய்தனர். கவிமதி தன் கணவனை அழைத்து விஷயத்தைத் தெரியப்படுத்தி விட்டு அங்கிருந்து தியேட்டருக்குக் கிளம்பினாள்.

கவிமதியுடன், ப்ரியங்காவும் டேனியலும் தியேட்டர் உள்ளே அமர்ந்து பேசிக் கொண்டிருக்க, மூன்று வரிசைகளுக்கு முன்னால் தன் அண்ணன் மற்றும் அவந்திகாவைப் பார்த்த கவிமதிக்குத் தன் தோழி சொன்ன முக்கியமான வேலை நினைவில் வந்து சிரிப்பை வரவழைத்தது.

மெல்ல நகர்ந்து அவர்களுக்கு முன் சென்று இடுப்பில் கை வைத்து நின்று கொண்டு, ''இது தான் நீங்க முக்கியமான வேலை செய்யற லட்சணமா?'' என்றாள்.

கவிமதியை அந்நேரத்தில் அங்கே எதிர்பார்க்காத இருவரும் அசடு வழிந்தனர். ''கவி, நீ இங்க வரதா சொல்லவேயில்ல'' என அவள் வந்ததுதான் அதிசயம் போல கேள்வி கேட்டான் அண்ணன்.

''அண்ணா, நான் வந்தது பெரிய விஷயம் இல்ல. வீட்ல சும்மா தான் இருக்கேன். ஆமா, நீங்க ரெண்டு பேரும் இங்க என்ன பண்ணிட்டு இருக்கீங்க?'' எனக் கேள்வி கேட்டாள் தங்கை.

''எத்தனையோ தியேட்டர் இருக்கற ஊர்ல இந்தத் தியேட்டருக்குத் தான் நீயும் வரணுமா? அதுவும் நாங்க உட்காரும் அதே இடத்துல' தான் வந்து உட்காரணுமா?

ரொம்பச் சின்ன உலகம்டா சாமி இது...'' எனச் சொன்னவன்,

''கவி, இப்படியா வந்து எங்களை அசடு வழிய வைப்ப. போம்மா... போய் வேலையைப் பாரு'' எனத் தங்கையைத் துரத்தினான் அண்ணன்.

''எல்லாம் நேரம். காரியம் ஆகும் வரை என்னைக் கூட்டு சேர்த்துக்குவீங்க. இப்போ என்னை துரத்தறீங்களா களவாணிங்க? கல்யாணம் ஆகட்டும் அப்புறம் வீட்டுக்கு வந்துதானே ஆகணும் அப்போ வச்சுக்கிறேன்டி உன்னை'' அவள் அண்ணனை விடுத்து, அவந்திகாவைப் பார்த்து போலியாக மிரட்டிவிட்டுச் சென்றாள்.

இவர்கள் சந்தோஷமாக பேசிக் கொண்டிருந்த அதே வேளையில் சந்தோஷ் ஒரு கட்டடம் பற்றிய விவரத்தை அறிய வேண்டி தன் அண்ணனின் அறைக்குள் சென்றான்.

அங்கே சென்ற பொழுது விக்னேஷ் அங்கே இல்லாமல் போக, அவன் பதினோரு மணியளவில் விக்னேஷை சந்திப்பதாகத் தெரிவித்திருந்ததால், அங்கிருந்த சோபாவில் அமர்ந்து தன் கைப்பேசியில் கவிமதிக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பிக் கொண்டிருந்தான்.

கவிமதி கேட்டதைப் போல இப்பொழுது எல்லாம் அவன் சந்தியாவிடம் முகம் திருப்புவதில்லை. முடிந்த வரைக்கும் சந்தியாவிடம் இயல்பாகப் பேச முயன்றான். தன் மனைவி ஒன்றைக் கேட்டு இல்லை என்று சொல்ல அவனால் முடியுமா என்ன?

சந்தோஷ் மும்முரமாக எஸ்.எம்.எஸ். அனுப்பிக் கொண்டிருந்த சமயத்தில் படாரென்று கதவைத் திறந்து கொண்டு, ''சந்தியா, உனக்கும் சந்தோஷுக்கும் எத்தனை வருஷமா பழக்கம்?'' என்றவாறே உள்ளே வந்தான் விக்னேஷ்.



விக்னேஷின் அறையில் போடப்பட்டிருந்த சோபா இவர்களின் பார்வையில் இருந்து மறைவாக இருந்ததால் சந்தோஷ் இருப்பதை இருவரும் கவனிக்கவில்லை. அவன் அங்கிருப்பதாகத் தெரிவிக்க வாயைத் திறந்தவன் அப்படியே மூடிக் கொண்டான். பேச்சு தன்னை சம்மந்தப்படுத்தி அல்லவா?

''என்ன விக்னேஷ், தெரியாத மாதிரி கேட்கறீங்க?'' - பதில் சொல்லாமல் அவனைப் பார்த்துச் சிரித்தாள் சந்தியா.

''கேட்டதுக்கு பதில் சொல்லு?'' என அவன் கடினமாக வினவ, ''பதினைஞ்சு வருஷப் பழக்கம். ஏன் கேட்கறீங்க?'' என்றாள்.

அவள் கேட்டதுக்கு பதில் சொல்லாமல், ''நீ நம்ம வீட்டுக்கு வந்து எவ்வளவு நாளாச்சு?'' என மீண்டும் கேள்வி கேட்டான்.

சந்தோஷிற்கே குழப்பமாக இருந்தது. 'இந்த அண்ணன் ஏன் இப்படிக் கேட்கிறார். முதல்ல நான் இங்க இருக்கறதைச் சொல்லிடலாம்' என அவன் யோசித்துக் கொண்டிருக்கும் பொழுதே, சந்தியா, ''அஞ்சு வருஷம் ஆச்சு'' என பதில் தந்தாள்.

''உனக்கு இங்க வீட்ல யாராவது ஏதாவது குறை வச்சாங்களா? இல்லை, நான் தான் ஏதாவது குறை வச்சேனா?'' எனக் கேட்டான் விக்னேஷ்.

''விக்னேஷ், என்ன ஆச்சு உங்களுக்கு? ஏன் இப்படி எல்லாம் கேட்கறீங்க? யாருமே எனக்குக் குறை வைக்கலை. நான் நினைச்சதை விட ரொம்ப நல்லா வச்சுக்கறீங்க'' என பதிலளித்தவளிடம்,

''அப்போ எதற்கு இப்படி ஒரு கீழ்த்தரமான வேலையை செஞ்சு வச்சிருக்க?'' எனக் கேட்டு அவளை அதிர்ச்சி அடைய வைத்தான்.

''விக்னேஷ், என்ன சொல்லறீங்க?'' என்றாள் திகைப்பு மாறாமலேயே.

''அசோக் வாங்கிக் கொடுத்ததா சொன்ன கம்மல் பற்றி சந்தோஷ் கேட்டப்போ நீ பதில் சொல்லத் தடுமாறினியே அப்போவே எனக்கு உறுத்தலா இருந்தது. அத்தோட இப்போ தான் நம்ம பேங்க் மேனேஜரை ஏதேச்சையா வெளில பார்த்துப் பேசிட்டு வரேன்.

'நல்ல வேளை சந்தியா மேடம் முன்னமே கூப்பிட்டு இது மாதிரி ஆயுடுச்சுன்னா தகவல் தெரிவிக்க சொன்னாங்க. என்னோட இடத்துல வேற யாராவது இருந்திருந்தா இந்நேரம் என்ன ஆயிருக்கும்' என பேச்சு வாக்கில சொன்னார். இதுக்கு என்ன அர்த்தம்னு நீயே சொல்லு?'' என்றான்.

அவனை மருட்சியுடன் பார்த்த சந்தியாவுக்கு என்ன சொல்வது என யோசிக்க முடியாமல் மூளை வேலை நிறுத்தம் செய்தது.

''சந்தியா, நீ என்னோட மனைவி. நீ என்ன தப்பு பண்ணிட்டு வந்தாலும் அதற்காக உன்னை வெறுத்திட மாட்டேன். தைரியமாச் சொல்லு. சந்தோஷ்கிட்டேயும் ஒண்ணும் சொல்ல மாட்டேன்.

அவன் எப்படியும் கவியை நல்லா வச்சுக்குவான். சொல்லு? நீ தான் என்னை மூணு பேருக்கும் செக் எழுதி கொடுக்கச் சொன்ன. நானா யூகம் பண்ணித் தெரிஞ்சுக்கறதைவிட உன்னோட வாயாலேயே எல்லாத்தையும் சொல்லிட்டா நல்லது.''

அதன் பிறகு மறைக்க முடியாமல் தன் கணவனிடம் அனைத்தையும் கூறினாள். சந்தோஷ் அவளிடம் முன் போல பேசவில்லை என்பதால் வந்த வருத்தத்திலும், அசோக்கின் காதலுக்காகவும் சேர்த்து யோசிக்காமல் அவ்வாறு செய்ததாகச் சொல்லி முடித்தாள்.



பல வருடங்களாகத் தொழில் செய்பவனுக்கு அவளுக்கு கவிமதியின் மேல் பொறாமை இருப்பது தெரியாமல் இருக்குமா? இருந்தும் அதைப் பற்றி அவளிடம் ஒன்றும் கேட்காமல்,

''இனிமேல் இது மாதிரி நடக்காம பார்த்துக்கோ. நீ உன்னோட அண்ணன் மேலே இருக்கிற பாசத்துல கொஞ்சம் தடுமாறிட்ட. பரவாயில்ல. அசோக்கோட சந்தோஷத்தைப் பத்தி நினைச்ச நீ, சந்தோஷ், ப்ரியாவோட சந்தோஷமும் அதுல அடங்கி இருக்குதுங்கறதை மறந்துட்டியே?

இனிமேல் ஞாபகத்துக்கு வரும்ன்னு நினைக்கிறேன். நீ இந்த மாதிரி நேரத்துல ரொம்பக் கவலைப்படாத. இத்தோட இந்தப் பேச்சை விட்டுடலாம்.

ஆனா, நீ ஒண்ணு மட்டும் எப்போதுமே நினைவில வச்சுக்கோ. உன் அண்ணனுக்கு பிஸினெஸ்ல லாஸ்ன்னு நீ வந்து சொன்னப்போ, அம்மாவோட குணம் தெரிஞ்சு, சந்தோஷ் தான் அம்மாகிட்டே எதுவும் சொல்ல வேண்டாம்ன்னு முடிவு பண்ணி இதுவரைக்குமே அதைக் காப்பாத்திட்டு வர்றான்.

அத்தோட, உன் அண்ணனோட பிஸினெஸ் அப்புறம் எப்படி டெவலப் ஆச்சுன்னு நினைக்கிற? சந்தோஷ் தான் அதற்காக மெனக் கெட்டான். அது உங்க யாருக்குமே தெரியாது. அவன் மட்டும் இப்படி யாருக்குமே தெரியாத உதவி செய்யலைன்னா உன் அண்ணன் இன்னும் பழைய நிலைமைல தான் இருந்திருக்கணும். அதையும் நீ தெரிஞ்சுக்கோ'' என மேலும் சில விவரங்

களைச் சொல்லி அத்தோடு பேச்சை முடித்துக் கொண்டான்.

விக்னேஷ் சொன்னதைக் கேட்ட சந்தியாவிற்கு இப்படி ஆகிவிட்டதே என சுயபச்சாதாபத்தால் அழுகை பீறிட்டது. கண்களில் கண்ணீர் கோர்க்க விசும்பியவாறே அங்கிருந்து வெளியேறினாள்.

அவள் அங்கேயே நின்று ஏதாவது பேசுவாள் என்று பார்த்தால் இப்படி ஒன்றும் சொல்லாமல் அறையை விட்டு வெளியேறியதும் விக்னேஷுக்குப் பதட்டமாக இருந்தது. அதுவும் அவள் இப்பொழுது ஈருயிராக வேறு இருக்கிறாள்!

உடனே, ''சந்தியா, இரும்மா...'' என அழைத்தவாறே அவளைத் தொடர்ந்து வெளியேறினான்.

அதுவரையிலும் நடந்ததைக் கேட்டுக் கொண்டிருந்த சந்தோஷ் ஒன்றும் செய்யத் தோன்றாமல் தன் அண்ணனைப் பற்றிய சிந்தனையில் அமர்ந்திருந்தான். கவிமதி அனுப்பிய எஸ்.எம்.எஸ். சத்தத்தைக் கேட்டு இவ்வுலகிற்கு வந்தவன், மறுபடியும் தன் அண்ணன் வரும் முன் அங்கிருந்து வெளியேறினான்.

தன் அறைக்குச் சென்றவனுக்கு, விக்னேஷ், சந்தியா மேலே வைத்திருக்கும் அன்பு எத்தகையது எனப் புரிந்தது.

'ச்சே! நானும் இது மாதிரி பொறுமையா இருந்திருக்கலாம். சந்தியா தப்பு பண்ணியும் அண்ணன் எவ்வளவு பொறுமையா நடந்துகிட்டார். எனக்கு அந்தப் பொறுமை இல்லாமப் போச்சே? அப்படின்னா நான் மதியைக் காதலிச்சது பொய்யா?' என்று புதிதாக ஒரு கவலை அவன் மனதில் குடியேறியது.



படம் பார்த்துக் கொண்டிருந்த கவிமதியை உடனே அழைத்தான் சந்தோஷ். கைப்பேசியை அணைத்திருந்தவள் எப்படி அறிவாள் கணவன் அழைப்பதை? எவ்வாறு பேசுவாள்?

பொறுமையில்லாமல் காத்துக் கொண்டிருந்த சந்தோஷ், முடிக்க வேண்டிய முக்கியமான வேலைகளை மட்டும் முடித்து, தன் அண்ணனிடம் இன்று பேச முடியாது என ஒரு குறிப்பை அனுப்பிவிட்டு, மீண்டும் தன் மனைவியை அழைத்தான்.

இம்முறை அவனுக்குப் பதிலளித்த மனைவியிடம், ''மதி, எனக்கு உன் மேலே இருக்கும் அன்புனால தானே உன்னைத் திட்டினேன். நீ என்னோட காதலைப் புரிஞ்சுக்கட்டியா? உனக்கு என் மேலே எந்த சந்தேகமும் இல்லையே?'' என அவன் தன் அண்ணனின் செயலை நினைத்து, உணர்ச்சிப் பெருக்கில், தான் அப்படி நடந்து கொள்ளவில்லையே எனப் புளுங்கிப் புளுங்கி ஒரு சிறு குழந்தையைப் போல அவளிடம் விசாரித்தான்.

இவன் ஏன் சிறு குழந்தைப் போல நடந்து கொள்கிறான் என்றிருந்தது மனைவிக்கு.

''என்ன ஆச்சு உங்களுக்கு? ஏன் இப்படி சம்மந்தம் இல்லாம கேள்வி கேட்டுட்டு இருக்கீங்க? நான் தான் அன்னைக்கே சொன்னேனே நடந்ததை மறந்துடலாம்ன்னு. இப்போ வேலை செய்யற நேரத்துல என்ன சிந்தனை உங்களுக்கு?''

''இல்ல மதி! உன்கிட்டே முக்கியமான ஒண்ணு சொல்லணும். ஆனா, இப்போ என்னால அதை போன்ல சொல்ல முடியாது. நீயும் நிறைய நேரம் போன்ல பேச வேண்டாம். நைட் நான் அங்கே வரேன். சரியா?'' என்றான்.

அதற்குள் கவிமதியிடம் இருந்து கைப்பேசியைப் பிடுங்கிய ப்ரியங்கா, ''அண்ணா, அண்ணிகூட ஒரு நாள் டைம் ஸ்பென்ட் பண்ணிக்கிறேனே. இப்போ வேலை பார்க்கறதை விட்டுட்டு என்ன வெட்டிப் பேச்சு வேண்டிக் கிடக்கு உங்களுக்கு?'' எனத் தன் அண்ணனை மிரட்டினாள்.

தங்கையிடம் சிறிது நேரம் பேசிய பின் பேசியை வைத்த சந்தோஷ், மீதமிருந்த வேலைகளை முடித்துவிட்டு விரைவிலேயே வினோத்தின் வீட்டிற்குக் கிளம்பினான்.

வினோத் வீட்டில், கவிமதியுடன் கிடைத்த தனிமையில் விக்னேஷ் சந்தியாவைப் பற்றிய உண்மை தெரிந்த பின்பும் அவள் மேல் கோபம் கொள்ளாமல் எவ்வளவு நிதானமாக சூழ்நிலையைக் கையாண்டான் என்பதைக் கூறினான்.

பின்னர், ''நானும் அண்ணன் மாதிரி அவசரப்படாம பொறுமையா இருந்திருக்கணும் மதி! இனிமேல் உனக்காக கண்டிப்பா நான் பொறுமையா இருக்கேன்'' என்றான்.

''இதை இத்தோட மறந்துடுங்க. நமக்கு இனி நிறைய வேலை இருக்கு. பிறக்கப் போகிற நம்ம குழந்தையை எப்படி வளர்க்கலாம்னு யோசிங்க மை டியர் புருஷா!'' எனக் கணவனை கட்டிக் கொண்டு சமாதானப்படுத்தினாள் மனைவி.

தன்னை சமாதானப்படுத்தத் தான் அவள் அப்படிச் சொல்கிறாள் என்று அவனுக்குத் தெரியாதா? 'அவள் சொல்வதைப் போல இந்தப் பொன்னான தருணத்தை ஏன் கண்டதைப் பற்றி யோசித்து, கெடுத்துக் கொள்ள வேண்டும்? ஏற்கனவே இந்த விஷயத்தினால் தானே மதி கர்ப்பமான விஷயத்தைத் தன்னோடு பகிரும் சமயத்தில் திட்டிக் கெடுத்துக் கொண்டது.



அது போதாது என்று இனியும் அதைப் பற்றியே நினைத்து, இருக்கும் சந்தோஷத்தையும் பறி கொடுக்க வேண்டுமா? இனி இதை ஒரு மூலையில் ஒதுக்கிவிட்டு, வரும் நம் புது வரவைப் பத்தி யோசிக்க வேண்டும்.'

இவையனைத்தும் மனதில் ஓடிக் கொண்டிருக்க ஒன்றும் பேசாமல் அவள் சொல்வதை ஆமோதிப்பவனாக தன் மனைவியை மென்மையாக அணைத்துக் கொண்டான் சந்தோஷ்.

* * *

இரண்டு நாட்கள் கழித்து விக்னேஷ் தன் தம்பியிடம், ''சந்தோஷ், நான் நல்லா யோசிச்சுப் பார்த்தேன். நான் கவியைப் பத்தி உன்கிட்டேயே தப்புத் தப்பா சொன்னது கொஞ்சமும் சரியில்ல.

நம்ம வீட்டுப் பொண்ணைப் பத்தி நானே அப்படிச் சொல்லலாமா? அதுவுமில்லாம பிசினெஸ் பண்ணற நான் எதையும் ஆராய்ச்சிப் பண்ணிப் பார்க்காம பேசினது ரொம்பத் தப்பு. அதை நீ மனசுல வச்சுக்காதடா. என்னை மன்னிச்சுடு'' என மன்னிப்பை வேண்டினான்.

விக்னேஷின் இந்த மாற்றத்திற்கான காரணம் சந்தோஷுக்குத் தெரியாதா என்ன? விக்னேஷ் சொன்னதைக் கேட்டவன், ''அண்ணா, அதைப் பத்தியெல்லாம் மறந்துட்டேன். ஏதோ கோபத்துல சொன்னீங்கன்னு நினைச்சுக்கிட்டேன்'' எனச் சமாதானப்படுத்தினான்.

# 20



இரண்டு வாரம் கழித்து அவந்திகா - வினோத்தின் திருமணம் பெரியவர்களின் ஆசிகளோடு சிறப்பாக நடைபெற்றது. திருமணப் பரபரப்பு முடிந்து கவிமதியை பிரசவத்துக்கான பிறந்த வீட்டிற்கு அழைத்து வந்தனர்.

பிறந்த வீட்டில், நேரம் பந்தயக் குதிரையின் வேகத்தை விஞ்சும் அளவிற்கு வேகமாகச் செல்ல, இடையில் இருந்த பதினோரு வாரங்களும் கழிந்து கவிமதிக்கு வலி எடுக்க மருத்துவமனையில் சேர்த்தனர். அதிக நேரம் காக்க வைக்காமலும், தன் தாய்க்கு அதிக துன்பம் தராமலும் இவ்வுலகை எட்டிப் பார்த்தாள் கவிமதி மற்றும் சந்தோஷின் செல்லப் பெண்.

வீட்டின் முதல் வாரிசை வீடே கொண்டாடியது. ப்ரியங்கா தன் அண்ணியிடம், விரைவில் திருமணம் முடிந்து சென்று விடுவதால் அவளுடன் அதிக நேரம் கழிக்க இயலாது என அவளை வற்புறுத்தி தங்களின் வீட்டிற்கு கூடிய விரைவில் வரச் சொன்னாள்.

''அண்ணி, கல்யாணத்துக்கு அப்புறம் உங்க கூட நிறைய டைம் ஸ்பென்ட் பண்ண முடியாது. அதனால சீக்கிரமா நம்ம வீட்டுக்கு வாங்க அண்ணி'' என ஆசையாக அழைத்தாள் ப்ரியங்கா.

''ப்ரியா, நீ என்ன சொல்ல வர்ற? கல்யாணம் ஆயிடுச்சுன்னா என்னோட டைம் ஸ்பென்ட் பண்ண



மாட்டியா? ஏன் உனக்கு டேனியோட டைம் ஸ்பென்ட் பண்ணறதுக்கே சரியா இருக்குமா? அதானா?'' எனக் கிண்டலடித்து அவள் காலை கவிமதி வார,

''அண்ணி!'' எனச் சிணுங்கியவள், ''சும்மா வம்பு பண்ணாதீங்க. சீக்கிரமா வீட்டுக்கு வாங்க. உங்களோடேயும் இந்தக் குட்டி மான்ஸ்டரோடேயும் நிறைய நேரம் பேசணும், கொஞ்சி விளையாடணும்'' என்றாள்.

அவர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த சந்தோஷ், ''ப்ரியா, ரொம்பத் தான் டேனி உன்னை மாத்திட்டார் போலே. அதுக்குள்ளே இப்படி எல்லாம் பேச கத்துக்கிட்டியே? கல்யாணத்துக்கு அப்புறம் வீட்டுக்கு வருவியா, இல்ல, நாங்க தான் உன்னை வந்து பார்க்கணுமா?'' என அவன் பங்கிற்குத் தன் தங்கையைக் கலாய்த்தான்.

''உங்களுக்கு வேற வேலை இல்ல... போங்க அண்ணி!'' எனத் தங்கை சிணுங்க.

''ஆமா! அது என்ன என் பெண்ணை குட்டி மான்ஸ்டர்ன்னு சொல்லற? அப்போ பெரிய மான்ஸ்டர் யாரு? அண்ணியைச் சொல்லறியா?'' என மீண்டும் தங்கையை வாரினான்.

''உங்களை யாரு இப்போ இங்க வரச் சொன்னது. எங்களுக்கு நடுவுல சண்டை மூட்டி விடறதே வேலையாப் போச்சு உங்களுக்கு. இதுக்கு வேற யாராவது இருப்பாங்க போய் அவங்ககிட்டே உங்க வித்தையைக் காண்பிங்க'' - சிணுங்கல் எல்லாம் வேலை செய்யாமல் இருக்க, இம்முறை அவனுக்குச் சரிக்குச் சரி பதில் கொடுத்தாள் தங்கை.

''ரொம்ப நல்லாப் பேச பழகிட்ட ப்ரியா. எல்லாம் டேனியோட வேலையா?'' என அதற்கும் அவன் வம்பிழுக்க, கவிமதி தான் அவளைக் காப்பாற்றினாள்.

என்ன தான் ப்ரியங்காவை வம்பிற்கு இழுத்தாலும் கவிமதி நினைத்ததை விட விரைவிலேயே புகுந்த வீட்டிற்கு வந்து விட்டாள். அதை அறிந்த சந்தோஷின் மகிழ்ச்சியைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா?

சந்தோஷ் முன் போல வெளியூர்களுக்குச் செல்லாமல் சென்னையிலேயே இருப்பதைப் போல பார்த்துக் கொண்டான். விக்னேஷும் அவன் என்ன முடிவு செய் தாலும் அதில் தலையிடவில்லை. முன்பு போல அவனை வெளியூருக்கும் செல்லச் சொல்லவில்லை.

சந்தியாவிடம் முன் போல சந்தோஷ் பேசினாலும் அவன் பேச்சில் முன்பிருந்த கிண்டலையும் கேலியையும் அவளிடத்தில் காண்பிக்கவில்லை. இதை உணர்ந்த சந்தியாவோ அதற்குக் காரணம் அவன் தன் மனைவி மற்றும் குழந்தையுடன் வெகு நேரம் செலவழிப்பதால் என நினைத்துக் கொண்டாள்.

சந்தியாவிற்கு மனம் பொருமினாலும் ஒன்றும் செய்ய இயலாமல் வேடிக்கை மட்டும் பார்த்துக் கொண்டிருந் தாள். தன் கணவனுக்கு வேறு உண்மை தெரியுமே. 'இனி என்ன செய்தாலும் அவன் கண்டு கொள்வான்' என நினைத்து மனத்திற்குள் மட்டும் கவிமதியை நிந்தித்துக் கொண்டிருந்தாள்.

மேலும் மூன்று மாதங்கள் வேகமாக ஓடிவிட, சந்தியா விற்கு ஒரு மகன் பிறந்தான். ஏற்கனவே கவிமதியின் மகளுக்கு பெயர் வைத்திருந்தாலும், சந்தியாவின் குழந்தை பிறந்த பின்னர் பெயர் சூட்டும் விழாவை சிறப்பாக வைத்துக் கொள்ளலாம் என முடிவு செய்தனர்.

சந்தோஷ் - கவிமதியின் புதல்வி ஓவியம் போல இருந்ததால் அவளுக்கு ஓவியா என்றும் சந்தியா -



விக்னேஷின் புதல்வனுக்கு ஸ்ரீஹரி என்றும் பெயரிட்டுக் கொண்டாடினர் மதியழகன் வீட்டினர்.

* * *

அடுத்து வந்த மூன்று மாதங்களும் எந்தவிதப் பிரச்சனையுமில்லாமல் சென்றது. ஓவியாவிற்கு ஆறு மாதங்கள் முடிய, ஸ்ரீ ஹரிக்கு மூன்று மாதங்கள் ஆனது.

அவர்கள் முன்பு பேசியதைப் போல டேனியலுக்கும் ப்ரியங்காவிற்கும் திருமண ஏற்பாடுகளை செய்து வந் தனர். அடுத்து வந்த மாதத்தில் அவர்களுக்குப் பெரிய வர்களின் முன்னிலையில், அவர்கள் மனம் குளிரும் வகையில் திருமணம் நடந்தேறியது.

டேனியலும், ப்ரியங்காவும் கவிமதிக்கு பலமுறை வார்த்தைகளினாலும், சிலமுறை செயல்களினாலும் நன்றி தெரிவித்தார்கள். திருமணம் முடிந்து ப்ரியங்கா புகுந்த வீட்டிற்குச் சென்று ஒரு மாதமும் ஓடி விட்டது.

சந்தியாவுக்கு கவிமதியைத் தாக்க முடியாமல் அவ மானப்பட்டது தான் மிச்சம். அந்த அவமானம் அவளால் தான் வந்தது என்பதை எப்படியாவது அவளுக்கு உணர்த்திவிட எண்ணிய சந்தியாவுக்கு ஒரு காரணமும் கிடைத்தது!

வீட்டில் தனியாக குழந்தையை கவனித்துக் கொண் டிருந்த கவிமதியைத் தாக்க இது தான் தக்க சமயம் என்று நினைத்த சந்தியா தன் வேலையை ஆரம்பித்தாள்.

''நீ தான் முதல்ல இந்த வீட்டுக்கு வாரிசு கொண்டு வந்துட்டேன்னு எல்லோரும் உன்னைக் கொண்டாட றாங்க. என்னதான் இருந்தாலும் அவள் பெண் ஆச்சே. வேற வீட்டுக்குப் போறவ தானே. அதனால என் பையன் தான் இந்த வீட்டிற்கு உண்மையான வாரிசு'' என கவிமதியிடம் தனித்திருக்கும் சமயத்தில் கூறினாள்.

சந்தியா வேண்டும் என்றே தன்னைக் காயப்படுத்த வென்று தான் அவ்வாறு கூறுகிறாள் என்று கவிமதிக்கு புரியாமல் இல்லை. ஆனால் குழந்தைகளில் ஆணாக இருந்தால் என்ன, பெண்ணாக இருந்தால் என்ன? எப்பொழுது தான் இது மாதிரி சிந்தனைகளை எல்லாம் ஓரம் காட்டுவார்களோ என்று இருந்தது கவிமதிக்கு.

கவிமதி இதை எல்லாம் காதில் போட்டுக் கொண் டாலும் ஒன்றும் பேசாமல் இருந்தாள். ஆனால், சந்தியா தன் மகனைத் தூக்கி வைத்து செல்லம் கொஞ்சிக் கொண்டாடியவள் யாரும் இல்லாத சமயத்தில் ஓவி யாவைப் பற்றி ஏதோ ஒன்று கவிமதியின் மனம் புண் படுமாறு சொல்லிக் கொண்டே தான் இருந்தாள்.

ஒரு நாள் சந்தியா தான் இருக்கிறாளே என்று ஓவி யாவைத் தனியாக விட்டுவிட்டு சமையலறைக்குள் சென்ற கவிமதி, குழந்தை வீறிட்டு அழும் சத்தம் கேட்டு ஓடி வந்தாள். சந்தியா அங்கே இருந்த சுவடே இல்லை.

ஒருவரையும் காணாமல் தான் ஓவியா அப்படி அழு திருக்கிறாள் என உணர்ந்து தன் பெண்ணை சமாதானப் படுத்தினாள்.

அப்பொழுது தன் மகனை கைகளில் ஏந்தியவாறே அங்கே வந்த சந்தியா, ''நீ ரொம்ப சமத்து. மத்தவங்களை மாதிரி அழ மாட்டேங்கிறியே'' எனக் கொஞ்சிக் கொண் டிருந்தாள்.

மற்றவர்கள் கேட்டாலும் அவள் கையில் குழந்தை இருந்ததால் ஓவியாவைத் தூக்க முடியவில்லை என சொல்லிக் கொள்ளலாம் அல்லவா!

'தன்னை எதுவோ சொல்லிக் கொண்டு போகட்டும். ஆனால், குழந்தைகள் மனதில் சிறு வயதில் இருந்தே



வேற்றுமையை வளர்ப்பது சரியில்லையே. இது ஆரோக் கியமானதும் அல்லவே' என கவிமதி நினைத்தாள்.

இதை எல்லாம் பொறுத்துப் பார்த்த கவிமதி, ஒரு கட்டத்துக்கு மேல் தாங்க முடியாமல் ஒரு முடிவுடன் தன் கணவனிடம் சென்று தான் நினைத்ததைக் கூறினாள்.

''சந்து, ஓவியா இப்போ கொஞ்சம், வளர்ந்துட்டா. அவ தூங்கற நேரத்துல போய் எங்காவது பார்ட் டைம் வேலை செய்யட்டுமா?''

''மதி, நீ நம்ம கம்பெனிக்கே...'' என அவன் முடிக்கும் முன்னர், ''வேண்டாம் சந்து! அதைப் பத்தி பேசாதீங்க. நான் ஏற்கனவே சொன்ன மாதிரி வேற எங்காவது வேலைக்குப் போறேன். ப்ளீஸ்...'' என இடைமறித்தாள் மனைவி.

''சரிம்மா! ஆனா, நீ முன்னாடி நடந்ததை மறக்கறதா இல்லையா?''

''நான் எப்பவோ அதை மறந்துட்டேன். திரும்பவும் அதை ஞாபகப்படுத்த வேண்டாமேன்னு தான் சொல்ல றேன். ப்ளீஸ் புரிஞ்சுக்கோங்க! இதுல எனக்கு உங்க மேல எந்த வருத்தமோ கோபமோ இல்ல'' எனத் தன் கணவனுக்கு எடுத்துச் சொல்ல, ''அப்பா ஏன்னு கேட் பாரே மதி...'' எனக் கலங்கினான் சந்தோஷ்.

''மாமாகிட்டே நானே பேசிக்கறேன். நீங்க என்ன சொல்லறீங்க. உங்களுக்குச் சம்மதமா?''

''நான் ஏற்கனவே சொன்னது தான். உனக்கு எது சந் தோசம் கொடுக்குதோ அதைப் பண்ணு மதி! என் கிட்டே கேட்கணும்ன்னு இல்ல'' என்றான்.

''நான் வேலைக்குப் போற நேரத்துல ஓவியாவை அப்பா - அம்மாகிட்டே விட்டுட்டுப் போறேன்.

அவங்களுக்கும் பேத்தியோட இருந்த மாதிரி இருக்கும் இல்ல'' என முடித்துக் கொண்டாள் கவிமதி.

தன் கணவனிடம் தெரிவித்ததைப் போலவே மறுநாள் மதியழகனிடம் சென்றவள், ''மாமா, கொஞ்ச நாளைக்கு முன்னாடி தான் போஸ்ட் - பார்ட்டம் டிப்ரசன் பத்தி ஒரு ஆர்டிகல் படிச்சேன். குழந்தை பிறந்தவுடனே நிறையப் பெண்களுக்குக் காரணமே இல்லாம மன அழுத்தம் வருமாம்.

எனக்கும் வீட்டுக்குள்ளேயே இருக்கறதுக்கு ஒரு மாதிரி இருக்கு. அதான் பார்ட் டைம் வேலைக்குப் போனா கொஞ்சம் மனசு தெளிஞ்ச மாதிரி இருக்கும்னு நினைக்கிறேன். நீங்க என்ன நினைக்கறீங்க மாமா?'' எனப் பதமாக எடுத்துச் சொன்னாள்.

''நீ வேலைக்குப் போகணும்னு நினைச்சா தாராளமா போம்மா. சந்தோஷ்கிட்டே சொல்லி நாளைக்கே நம்ம ஆபீஸுக்குக் கிளம்பு'' என அவர் சொல்ல,

''மாமா, வந்து... தப்பா நினைச்சுக்காதீங்க. என் ஃபீல்ட்லேயே வேலை செய்யலாம்னு இருக்கேன். நம்ம கம்பெனிக்குப் போனா இன்னும் நிறைய கத்துக்க வேண்டி இருக்கு. அரை குறையா விட்டுட்டு வர முடியாது. அதுக்கு எல்லாம் இப்போ டைம் இருக்குமான்னு தெரியலை. அதான்...'' எனத் திட்டமிட்டவாறே சொல்லி முடித்தாள்.

சற்று நேரம் யோசித்தவர், ''உன் இஷ்டம்'' என்றார். கவிமதி, தான் சொன்னதைப் போல மகளை தன் பெற்றோர்களிடம் விட்டு விட்டு தினமும் நான்கு மணி நேரம் வேலைக்குச் சென்று வந்தாள்.

சந்தியா என்ன தான் ஒவியாவை மட்டம் தட்டிப் பேசினாலும், கவிமதி ஸ்ரீஹரியை ஒரு போதும்



ஒதுக்கியதில்லை. அவனையும் தன் மகளைப் போலவே பார்த்துக் கொண்டாள்.

கவிமதிக்கு வாழ்க்கை தெளிந்த நீரோடை போல போய்க் கொண்டிருந்தது. சந்தோஷ் தன் மனைவியிடம் எப்பொழுதும் காட்டும் பொறுமையை விட மிக அதிக மாக, எப்பொழுதும் காதலிப்பதைவிட அதிகமாக என எல்லாவற்றையும் மிகவும் அதிகமாகக் காட்டினான்.

இனிக்க இனிக்க காதலித்து, மணக்க மணக்க மணந்து, குமுறக் குமுற சண்டையிட்டு, ததும்பத் ததும்ப சமா தானப்படுத்தி, வாழ்க்கையைத் திகட்டத் திகட்ட தன்ன வளுடன் தன் செல்வத்துடனும் வாழ்ந்தான் சந்தோஷ்.

* * *

இரண்டு வருடங்கள் உருண்டோட, கவிமதியின் வீட்டை இரண்டு மழலைச் செல்வங்களின் சத்தம் நிறைக்க, வீடே குதூகலமாக இருந்தது. ப்ரியங்காவும் பிரசவத்திற்காகத் தன் பிறந்த வீட்டிற்கு வந்திருந்தாள்.

இரண்டரை வருடங்கள் ஆகியும் சந்தியா மற்றும் விக்னேஷின் மகனுக்கு சரிவர பேச்சு வராமல் இருந்தது. ஆண் பிள்ளை என்பதால் சிறிது காலம் கழித்துத்தான் பேசுவான் என நினைத்தனர். ஆனால், நாட்கள் ஓட ஓட அவனின் செயல்களைக் குறித்து கவலைப்பட ஆரம்பித் தனர்.

கவலைப்பட்டு தீர்வு காண முடியாது என்பதை உணர்ந்து ஸ்ரீ ஹரியை ஒரு குழந்தை நல மருத்துவரிடம் அழைத்துக் கொண்டு சென்றனர் பெற்றோர்கள்.

''டாக்டர், இவனுக்கு இரண்டரை வயசாச்சு. இன்னும் ஒழுங்கா பேசவே மாட்டேங்கிறான். சில சமயம் செஞ்ச தையே திருப்பித் திருப்பி செஞ்சுட்டு இருக்கான். வீட்ல

என்னோட தம்பிப் பொண்ணு இருக்கா. அவளோட விளையாடறதுக்கும் அதிக ஆர்வம் காட்ட மாட்டேங்கிறான்'' எனத் தன் கவலைகளைப் பட்டியலிட்டான் விக்னேஷ்.

அவன் சொல்லுவதைக் கேட்டு ஸ்ரீஹரியை பரிசோதித்தவர் மேலும் சில பரிசோதனைகளை அடுத்து வந்த நாட்களில் செய்து முடித்தார். பரிசோதனைகளின் முடிவில் மருத்துவர் சொன்ன பதிலைக் கேட்டு விக்னேஷும் சந்தியாவும் ஆடிப் போனார்கள்.

ஸ்ரீஹரிக்கு ஆட்டிசம் (Autism) இருப்பதாக மருத்துவர் தெரிவித்தார். அதுதான் அவனின் இத்தகைய நடவடிக்கைக்குக் காரணம் எனக் கூறினார். இதை சிறு வயதிலேயே கண்டு பிடித்து விட்டதனால் அவனைக் கூடிய விரைவிலேயே மாற்றவும் முடியும் என்றார்.

அதைக் கேட்ட சந்தியாவுக்குக் கட்டுக்கடங்காமல் கண்ணீர் வழிந்தது. அங்கேயே விக்னேஷின் மார்பில் புதைந்து ஆழ ஆரம்பித்தாள். தன் மனைவியை சமாதானப்படுத்தி வீட்டிற்கு அழைத்து வந்த விக்னேஷ். அனைவரிடமும் விஷயத்தைக் கூற அனைவரும் திகைத்தனர்.

முதலில் சுதாகரித்துக் கொண்டது கவிமதி தான். "இது மாதிரி ஆட்டிசம் இருக்கிற நிறைய பேர் உலக அளவில் புகழடைஞ்சிருக்காங்க. விஞ்ஞானிகளா, நடிகர்களா, இவ்வளவு ஏன் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்க்கு கூட இது இருந்ததாச் சொல்லறாங்க'' எனத் தனக்குத் தெரிந்ததை எடுத்துக் கூறி அனைவரையும் தைரியப்படுத்தினாள்.

சந்தியா எதையோ பறிகொடுத்ததைப் போல திரிந்து கொண்டிருக்க, அடுத்து வந்து மாதத்தில் கவிமதி



தற்பொழுது சென்று கொண்டிருக்கும் வேலையை விட்டுவிட்டு வீட்டில் இருந்து கொண்டே இரண்டு குழந்தைகளையும் கவனிக்க ஆரம்பித்தாள்.

கவிமதி தன்னால் முடிந்த மட்டும் நிறைய விஷயங்களைப் படித்து அதற்கு ஏற்ப ஸ்ரீஹரிக்குப் பயிற்சியும் கொடுத்தாள். அது மட்டும் போதாது எனப் பலரிடம் விசாரித்து, இதுபோல இருக்கும் குழந்தைகளுக்குப் பயிற்சி கொடுக்கும் பள்ளிக்கும் அழைத்துச் சென்றாள்.

கிடைக்கும் சந்தர்ப்பத்தில் எல்லாம் கவிமதி ஆட்டிசம் பற்றிப் படித்ததை சந்தியாவிடமும் சொல்லி அவளைத் தேற்ற முயன்றாள்.

கவிமதியின் இச்செயலைப் பார்த்து மனம் உடைந்த சந்தியா அவளிடம், ''கவி, எனக்கு மட்டும் ஏன் கவி இப்படி எல்லாம் நடக்குது. நான் என்ன பாவம் பண்ணினேன்?'' என அழுதாள்.

''அக்கா, ஹரி நம்ம வீட்ல பிறந்தது நமக்குக் கிடைச்ச வரம். உங்களுக்குத் தான் உலகத்துலேயே பெஸ்ட் பையன் கிடைச்சிருக்கான்'' என அவளுக்குப் பிடித்த விதமாகப் பேசினாள்.

சந்தியா அவள் சொன்னதைக் கேட்டு யோசனையில் மூழ்க, கவிமதி மேலும் தொடர்ந்தாள். ''நம்ம ஹரியை நீங்க கவனிக்கற மாதிரி வேற யாராலேயும் கவனிக்க முடியாது. அதான் நம்ம வீட்ல, அதுவும் உங்களுக்கு வந்து பிறந்திருக்கான். நம்ம எல்லோரும் இவனை அன்பா, ஆசையா வச்சுக்கலாம்'' என அவளை உற்சாகப்படுத்த முயன்றாள்.

இவளின் பேச்சைக் கேட்டு கவிமதியிடம் ஏதோ சொல்ல சந்தியா வாயைத் திறக்க, சில வருடங்களுக்கு

முன் கவிமதி தான் எழுதிய தாய்மை பற்றிய கவிதையை அவளிடம் தந்து படிக்கச் சொன்னாள்.

"அகம் மயங்கிய
தருணத்தில் உருவானாய்!
என்னை சரி பாதியாய் கொண்டு
என்னில் கருவானாய்!
பெருகி வளர்ந்து,
கவலைகள் அனைத்தையும்
அண்டவிடாமல் அகற்றினாய்!
அசைந்து, உருண்டு
மனம் நிறைய பரவசத்தை
தடையில்லாமல் புகட்டினாய்!
உதைத்து, விளையாடி,
தெவிட்டாத இன்பத்தை
அளவில்லாமல் ஊட்டினாய்!
சுகமான வலி கொண்டு
இதமான விழி நீர் திரண்டு
என் தாய்மைக்கு வழி வகுத்தாய்!
கண்களில் வெள்ளம் புரள
நெஞ்சம் மொத்தமாய் கரைய
என் பெண்மையை ஒளிர வைத்தாய்'
என் பெண்மைக்கு மெ(மே)ன்மை சேர்த்தாய்!"

பின்னர், "அக்கா, தாய்மைங்கிறது ஒரு உன்னதமான உணர்வு! அது கிடைக்க நிறையப் பேர் தவம் இருக்கிறாங்க... கிடைக்காம தவிக்கிறாங்க. ஆனா, உங்களுக்கு வரமே கிடைச்சிருக்கு. அதற்காக நீங்க ஹரிக்குத் தான்



தேங்க்ஸ் சொல்லணும்" என மனதுக்கு இதமாக எடுத்துச் சொன்னாள் கவிமதி.

கவிமதியின் தோழி மூலம், டெம்பிள் கிரேண்டின் (Temple Grandin) என்ற தொலைக்காட்சிப் படத்தை அமெரிக்காவில் இருந்து வரவழைத்து சந்தியாவைப் பார்க்க வைத்தாள்.

அந்தப் படம் ஆட்டிசமினால் பாதிக்கப்பட்ட பெண் டெம்பிள் கிரேண்டின் என்பவரின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. ஆட்டிசம் இருந்தும் அவர் எப்படிப் படித்து, பெரிய ஆளாக வளர்ந்து, பிராணிகள் வளர்ப்புத் துறையில் அனைவரும் போற்றும் ஒரு பெரிய ஆராய்ச்சி யாளராக முன்னேறினார் என்பதை அழகாகச் சொல்லி இருந்தார்கள்.

கவிமதியின் பேச்சிலும், செயலிலும் மனம் தெளிந்த சந்தியா எதையும் எதிர்கொள்ளும் நோக்குடன் திடம் பெற்றாள். ஆனால், அவள் செய்த சின்னத்தனமான செயல் களுக்கு கவிமதியிடமும் சந்தோஷிடமும் மன்னிப்புக் கோர வேண்டுமே?

இறுதியில், தாங்க மாட்டாமல் கவிமதிக்குத் தான் செய்ததைப் பற்றிச் சொல்லிக் கட்டுப்பாட்டை இழந்து அழுதாள் சந்தியா. அந்தக் கண்ணீராலேயே அவள் புகழின் போதையைக் கழுவி, அழகாகத் துடைத்து, அந்த மயக்கத்தில் இருந்து மீண்டு தெளிந்து விட்டாள்.

சந்தியா பேச ஆரம்பித்தவுடனே அங்கே வந்த சந்தோஷுக்குத் தன் தோழிகளைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.

கவிமதி ஒன்றும் பேசாமல் சந்தியாவின் தலையை ஆதரவாக வருடிக் கொடுக்க, சந்தியாவோ, "உனக்கு இதைக் கேட்டு கோபம் வரலையா கவி?" என்றாள்.

சிறு புன்னகையுடன் கவிமதி பதிலளிக்கும் முன், ''சந்தியா, எங்களுக்கு இதைப் பத்தி முன்னாடியே தெரியும். உன் அண்ணன் எல்லாத்தையும் சொன்னார்'' என மனைவிக்கு பதிலாக சந்தோஷ் பேசினான்.

சந்தியாவுக்கு, சந்தோஷின் வித்தியாசமான நடவடிக்கைகள் அனைத்திற்குமே பொருள் விளங்கியது. கண்களில் கண்ணீர் மல்க, ''சந்தோஷ், என்னை மன்னிச்சுடுடா! மதி மேல இருக்கிற பொறாமையில தேவையில்லாம என்னென்னவோ பண்ணிட்டேன்.

மகாபாரதத்துல குந்திதேவி முதல் இளவரசனை பெத்துட்டான்னு காந்தாரிக்கு எப்படிப் பொறுமையில்லாமப் போச்சோ அது மாதிரி தான் நானும் நம்ம கவியைப் பார்த்து குழந்தை பெத்துக்கறதுலகூட பொறாமைப்பட்டேன்.

இப்போ என்னோட செயலை நினைச்சா எனக்கே வெக்கமா இருக்கு. நான் பண்ணின தப்புக்குத் தான் ஆண்டவன் ஹரிக்கு நல்லா தண்டனை கொடுத்துட்டான்'' என அரற்றினாள்.

''அக்கா, இதை ஏன் நீங்க தண்டனைன்னு நினைக்கறீங்க? அத்தோட ஏன் மறுபடியும் உங்களையே குற்றம் சொல்லி உங்களையே கஷ்டப்படுத்தறீங்க? இந்த மாதிரி குழந்தை வர்றதுக்கு பெற்றோர்கள் செய்யும் காரியங்களோ செயல்களோ காரணங்கள் இல்லன்னு உங்களுக்குத் தெரியாததா?

நம்ம குடும்பத்துல, இல்ல, உங்க குடும்பத்துல யாருக்காவது இருந்திருக்கலாம். ஹெரிடிட்டி (மரபுவழி) காரணமா இருக்கலாம், இல்ல, சுற்றுசூழல்ல இருக்கிற நச்சுத் தன்மையால இருக்கலாம்.



ஆனா, வந்ததுக்கு அப்புறம் காரணத்தை எல்லாம் ஆராய்ச்சி பண்ணறதை விட்டுட்டு அந்த டைமை ஹரியை கவனிக்கறதுல செலவிடலாமே'' என அவளின் அரற்றலைப் பொறுக்க மாட்டாமல் தேற்றினாள் கவிமதி.

தொடர்ந்து, ''சந்தோஷ் மேல இருந்த நட்பு காரணமாத் தானே ஏதேதோ பண்ணிட்டீங்க. அவர் உங்களுக்கு எப்பவுமே ஒரு நல்ல பிரெண்ட் தான். உங்க நட்பு கடைசி வரையுமே தொடரும். என்னால அதற்கு ஒரு போதும் தடங்கல் வராது'' என்றவள், தன் கணவனுக்கு, 'ஏதாவது பேசி அவளைச் சமாதானம் செய்' என கண்களால் செய்தி வாசித்தாள்.

''சந்தியா, நடந்ததை எல்லாம் மறந்துடலாம். முதல்ல ஹரியை திரும்பவும் டாக்டர்கிட்டே கூட்டிட்டுப் போகலாம். எவ்வளவு சிவியரா இருக்குன்னு தெரிஞ்சுட்டு அதன்படி அவனுக்குப் பயிற்சிக் கொடுக்கலாம்'' என்றான் சந்தோஷ்.

''கவிமதிக்கு பாடம் நடத்த நினைச்ச எனக்கு வாழ்க்கை பாடம் நடத்திடுச்சு. இப்போ தான் புரியுது புகழோ, பொறாமையோ, போட்டி போடறதோ இது எதுவுமே நமக்குத் தேவையில்லாதது. அதை வச்சு வாழ்க்கையில ஒண்ணுமே சாதிக்கவும் முடியாது.

அன்பு ஒண்ணு தான் எப்போதுமே நிலையானதுன்னு இப்போ எனக்குப் புரிஞ்சுடுச்சு. இத்தனை நாளும் நான் மத்தவங்ககிட்டே சும்மா தான் பேசிட்டு இருந்திருக்கேன். இனிமேல் நம்ம கவி மாதிரி அன்பு என்கிற மொழியில தான் பேசப் போறேன். அப்பத்தான் எல்லோருக்குமே தெளிவா புரியும்'' என்றாள் சந்தியா கண்கள் கலங்கியவாறு.

"யேய் லூசு! எப்போயிருந்து இப்படித் தத்துவமெல்லாம் பேச ஆரம்பிச்ச?" எனப் பல நாட்கள் கழித்து கிண்டலாகப் பேசி, தன் தோழியை பழைய நிலைக்குக் கொண்டு வர முயற்சித்தான் நண்பன்.

அதற்கு அடுத்து வந்த மாதங்களில் கவிமதி தன் தோழிகளுடன் கலந்தாலோசித்து ஆட்டிசம் வந்த குழந்தைகளுக்கு, 'நந்தவனம்' என்ற பள்ளியை சந்தியாவுடன் சேர்ந்து தொடங்கினாள்.

அவளின் மருத்துவம் பயின்ற நண்பர்களும் மற்ற தோழர்-தோழியர்களும் நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் பள்ளிக்குச் சென்று தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து வந்தனர். ப்ரியங்காவுக்குக் குழந்தை பிறந்த பின் அவளும் தன் அண்ணிகளுடன் சேர்ந்து கொண்டாள்.

ஸ்ரீஹரியைப் போன்ற பிஞ்சு மலர்களை பலரும் வந்து அந்த நந்தவனத்தில் நட்டு வைத்தனர். பல நல் உள்ளங்கள் ஒன்று சேர்ந்து இருக்கும் இடத்தில் அன்புக்கா பஞ்சம்?

இத்தகையவர்களின் கையில் கிடைத்த அம்மலர்கள், இவர்கள் பேசும் அன்பென்ற மொழியை உணர்ந்து கனிவார்கள். அதற்குரிய சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் ஏதுவாக இருந்தது அந்தத் தோட்டத்தில், கூடிய விரைவில் மாற்றங்களையும் சந்திப்பார்கள் என நம்புவோமாக!

✱அன்பு மொழி புரிந்தது✱